# பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம்

# (PRIDE)

## பெரியார் பல்கலைக்கழகம்

### சேலம் – 636 011.

### இளங்கலை ஜோதிடவியல்

### இரண்டாமாண்டு

### தாள் – 4 : ஜோதிட பலன் காணும் முறைகள்

புத்தகம் எழுதியவர் :

**தி. வித்யாசாகரமூர்த்தி, M.A, M.Sc.**

ASTROLOGY

Jalakandapuram

Salem Dt.

**இளங்கலை ஜோதிடவியல்**

**இரண்டாமாண்டு**

**தாள் – 4 : ஜோதிட பலன் காணும் முறைகள்**

| | **ஜோதிட பலன்கள் காணும் முறை** |
|---|---|
| **கூறு – 1** | **இலக்னம், பாவகம், பாவகாதிபதிகள் பலன்கள்** |
| | மேஷம் முதல் கன்னி வரை இலக்ன பலன்கள் |
| | துலாம் முதல் மீனம் வரை இலக்ன பலன்கள் |
| | 1ம் பாவகம் முதல் 6ம் பாவகம் வரை பலன்கள் |
| | 7ம் பாவகம் முதல் 12ம் பாவகம் வரை பலன்கள் |
| | பாவகாதிபதிகள் மாறி நின்ற பலன்கள் |
| **கூறு – 2** | **கோள்கள், ராசியில் நிற்கும் பலன்கள்** |
| | சூரியன், சந்திரன், செவ்வாய் பலன்கள் |
| | புதன், குரு, சுக்ரன் பலன்கள் |
| | சனி, ராகு, கேது பலன்கள் |
| | யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ பலன்கள் |
| **கூறு – 3** | **கோள்கள், பாவகத்தில் நிற்கும் பலன்கள்** |
| | சூரியன், சந்திரன் செவ்வாய் பலன்கள் |
| | புதன், குரு, சுக்ரன் பலன்கள் |
| | சனி, ராகு, கேது பலன்கள் |
| | யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ பலன்கள் |

| | |
|---|---|
| **கூறு – 4** | **நட்சத்திரப்பலன்கள்** |
| | முதல் ஒன்பது நட்சத்திர பலன்கள் ( 1 To 9) |
| | இரண்டாவது ஒன்பது நட்சத்திர பலன்கள் ( 10 To 18) |
| | மூன்றாவது ஒன்பது நட்சத்திர பலன்கள் ( 19 To 27 ) |
| | (1 To 36 ) பாதங்களின் பலன்கள் |
| | (37 To 72 ) பாதங்களின் பலன்கள் |
| | (73 To 108 ) பாதங்களின் பலன்கள் |
| **கூறு – 5** | **கிரகங்களின் பார்வை மற்றும் சேர்க்கை பலன்கள்** |
| | கிரக பார்வை பலன்கள் |
| | இரண்டு கிரக சேர்க்கை பலன்கள் |
| | மூன்று கிரக சேர்க்கை பலன்கள் |
| | நான்கு கிரக சேர்க்கை பலன்கள் |
| | ஐந்து கிரக சேர்க்கை பலன்கள் |
| | பொதுவான பலன்கள் |

## கூறு – 1

## இலக்னம், பாவகம், பாவகாதிபதிகள் பலன்கள்

### 1.மேஷம் முதல் கன்னி வரை இலக்ன பலன்கள்

**மேஷ லக்னம்**

மேலான குறிக்கோள், திடமான செயல், தற்பெருமை, உணர்ச்சி வயப்படுதல், வெளியில் அலைதல், சுய சிந்தனை, ஆலோசனையை மறுத்தல், வேகமாக உண்ணுதல், சூடான உணவை விரும்புதல், கல்வியுடையவர், வீரமானவர், உண்மையாக இருத்தல், செயல்முறை அனுபவத்தை ஏற்றுக் கொள்ளல், தவறான பேச்சு, நீரில் அச்சம், சில நேரங்களில் குழம்பிய எண்ணம், திடீரென உணர்ச்சி வயப்படுதல், முகஸ்துதி மற்றும் நயமான வார்த்தைகளை விரும்புதல், போரில் முன்னணியில் இருத்தல், அழகு, கலை போன்றவற்றை ரசித்தல், சரியோ தவறோ தனது சொந்த அறிவில் செயல்படுதல், வெளியில் வேகத்தை காட்டுதல், உடலில் காயப்படுதல், கோபமுடைய தன்மை கொண்டவர், வீரமும், சுறுசுறுப்பும், தன்னிச்சையான போக்கும். எதையும் முன்யோசனையின்றி செய்பவராகவும். இலாப நஷ்டத்தைப் பொருட்படுத்தாது, பல வகையான தொழில்களைச் செய்து பார்ப்பவராகவும் இருப்பார்கள். எதையும் வெளிப்படையாகவும் பயமின்றியும் பேசுவார்கள். நன்றாக சம்பாதிப்பார்கள். நன்றாக செலவு செய்வார்கள்.

மேஷ லக்கினக்காரர்கள் நடுத்தர உயரமும், நடுத்தர பருமனும், வலுவான உடற்கட்டும் கொண்டிருப்பார்கள், நீண்ட கழுத்து கொண்டிருப்பார்கள், நெற்றி அகன்றிருக்கும், முகத்தில் தழும்பு அல்லது ஏதாவதொரு சின்னம் இருக்கும், அம்மை, ஜுரம், தசைகளில் பிடிப்பு ஆகியவவை ஏற்படும்.

**ரிஷப லக்னம்**

எண்ணியதை செயல்படுத்துவார்கள், மகிழ்ச்சி மிக்கவர், அழகு, கலைகள், இசையில் நாட்டம், உண்மையான பாசத்துடன் கூடியவர்கள், கவர்ச்சியுடையவர்கள், புகழ், பெருமையுடையவர்கள், வியாபாரத் திறமை, முதியவரை மதித்தல், அன்புடைமை, பெண்களுக்காக தியாகம் செய்தல், நன்னடத்தை, விளையாட்டு குணம், மிதமான கோபம், சிறந்த ஞாபக சக்தியுடையவர்கள், புதியவர்களால் புரிந்து கொள்ள முடியாமை, நிலையான தன்மை, காளையைப் போல் செயல்படுதல், சுயநல விரும்பியாக இருப்பார்கள். அமைதியானவராகவும், பொறுமையானவராகவும், லட்சியத்தில் உறுதியானவராகவும், உழைக்க அஞ்சாதவராகவும் நேர்மையானவராகவும், பிடிவாத குணமுடையவராகவும் இருப்பார்கள்.

ரிஷப லக்கினக்காரர்கள் நடுத்தர உயரம், தடித்த கழுத்து, பெருந்தோள்கள், கொண்டிருப்பார்கள். கண் நோய், உடல் பலவீனம், கருப்பையில் நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு.

இரும்பு, எள், எண்ணெய், புண்ணாக்கு, கம்பளி, சைக்கிள் கடை, சினிமா, சங்கீதம், ஷாப்கடை, ஜவுளிக்கடை, ஸ்வீட் ஸ்டால் போன்ற தொழில்கள் ஏற்றது.

**மிதுன லக்னம்**

இனிமையான பேச்சு, சிறந்த கல்வியாளர், நகைச்சுவை பேச்சாற்றல் மிக்கவர், இலக்கியத் திறன் கொண்டவர், சுறு சுறுப்பான வேலையாள், பரபரப்பானவர். எழுதுவதற்கும், படிப்பதற்கும் விருப்பம் அதிகம் உள்ளவர், மேதைத் தன்மை, புத்தி கூர்மை, மாறக் கூடிய சிந்தனை, வெளியில் சென்று செய்யும் தொழில்களில் சிறப்பானவர்கள். சுய கட்டுப்பாடு மிக்கவர். தந்திரக்காரர்கள் ஏமாறுதல் மற்றும் பிறரை ஏமாற்றும் தன்மையுடையவர்கள். கூர்மையான அறிவுடையவராகவும், அதிகம் உணர்ச்சி வசப்படுபவராகவும், அபார அறிவாற்றலையும், ஆராய்ச்சி மனோபாவத்தையும் கொண்டிருப்பார்கள். எதையும் சுலபமாய் புரிந்து கொள்வார்கள். படிப்பில் முதன்மையாயிருப்பார்கள். எதையும் துருவித் துருவி ஆராய்வார்கள். அவசர புத்தியும், பதட்ட குணமும் கொண்டிருப்பார்கள். நடைமுறைக்கு ஒவ்வாத கற்பனைத் திட்டங்களில் மிதப்பவராதலால் பொருளாதார, வியாபார விஷயங்களில் பெரும் முன்னேற்றங்களை அடையமாட்டார்கள். ஒரு ஊரிலோ அல்லது ஒரு தொழிலிலோ நிலையாக இருக்கமாட்டார்கள்.

மனிதனையும், சூழ்நிலைகளையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவராயினும், கூடுதலான அறிவாற்றலும், சோம்பேறித்தனமும், இவர் முன்னேற்றத்திற்கு தடைகளாயிருப்பவை. யாராவது முட்டாள்தனமாக பேசினால் திட்டுவார்கள். உணர்ச்சி வசப்பட்டு ஆத்திரமாகப் பேசுவார்கள்.

மிதுன லக்கினகாரர்கள் உயரமாயிருப்பார்கள். கை, கால், விரல்கள் நீண்டதாயிருக்கும், நீண்ட மூக்கையும் துருதுருப்பான கண்களையும் கொண்டிருப்பார்கள்.

மூளை சம்பந்தப்பட்ட நோய்களும், நரம்பு சம்பந்தமான நோய்களும் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு.

**கடக லக்னம்**

வேகமான நடையுடையவர்கள். ஆனால் நேராக நடக்கமாட்டார்கள், புத்திசாலி, ஜோதிடத்தில் ஆர்வம். ஜோதிடர், இயற்கை உள்ளுணர்வு உடையவர்கள், கற்பனை வளம் மிக்கவர்கள், நல்ல உழைப்பாளிகள், சிக்கனமானவர்கள், இரக்க குணம், கோழைத் தனம், இன்பத்தில் நாட்டம், அமானுஷ்ய சக்தி, குழந்தைகளிடம் பற்று மிக்கவர், புகழ் அடைபவர்கள், பரபரப்பானவர்கள், சூழ்நிலைக்கேற்றாற் போல் செயல்படுதல், வணிகம் மற்றும் தயாரிப்புகளில் நாட்டமுடையவர்கள், எச்சரிக்கையானவர்கள் உடைமைகளில் நாட்டம் உள்ளவர், ஏற்ற இறக்கம் கொண்ட தொழில் அமையும், அதிகமாக பேசக் கூடியவர்கள், தற்காப்பு, நேர்மை, வளைந்து கொடுக்காத தன்மை, நீர் நிலைகளில்

விருப்பம், நண்பர்கள் அதிகம், பேச்சுக்கும், புகழுக்கும் மயங்குபவர்கள், நீதி நேர்மையை கடைபிடிப்பவர் என்று பெயரெடுப்பவர்கள். சிறந்த கற்பனையாற்றல், பேச்சாற்றல் இருக்கும். எதற்கும் அதிக உணர்ச்சிவசப்படுவார்கள். விரும்பினாலும் ஒரேடியாக விரும்புவார்கள், வெறுத்தாலும் ஒரேடியாக வெறுத்து விடுவார்கள். அடிக்கடி மாறும் குணம் உடையவராக இருப்பார்கள். சூழ்நிலைகளுக்கேற்ப தங்களை மாற்றிக் கொள்வதில் வல்லவர்கள். உணர்ச்சிகரமாகப் பேசி மற்றவர்களைக் கவர்ந்து விடுவார்கள். பிரயாணங்கள் செய்வதில் ஆர்வமாய் இருப்பார்கள். சந்திரன் கெடாதிருப்பின் மதம், அரசியல் போன்ற பொது வாழ்க்கைத் துறைகளில் ஈடுபடலாம். சிலரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு, பெண்கள் முக்கிய காரணமாக அமைந்து விடுவார்கள்.

கடக லக்னக்காரருக்கு உடற்பகுதி தடித்திருக்கும். கால் பகுதி மெலிந்திருக்கும், மார்பு அகன்று காணப்படும்.

மனோவியாதிகள், ஜீரன வியாதிகள், இருதய நோய்கள், ஆஸ்துமா முதலானவற்றால் பாதிக்கப்படுவார்கள். சிலர் குடிப்பழக்கத்துக்கு ஆளாவார்கள்.

**சிம்ம லக்னம்**

கர்வம், பேராசை, இன்முக வரவேற்பு, தியாக எண்ணம், வீரம், மரியாதை குணம், எந்த சூழ்நிலையிலும் நிலை தவறாமை, கலை, சங்கீத ஆர்வம், புத்துணர்ச்சியுடைமை, சிந்திக்காமல் உடனுக்குடன் செயல்படுதல், நிலையான கொள்கை, முன்கோபமுடையவர்கள், அதை உடன் மறந்துவிடுவார்கள், உண்மையானவர்கள், நம்பிக்கையானவர்கள், பகையுடையவர்கள், சுயசிந்தனை, பழைமை விரும்பி, சமயப் பற்றாளர், அனைத்து சமயக் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளுதல், மேலதிகாரிகளின் தவறான பார்வைக்கு உட்படுதல், பெண்களுடைய கருத்துக்களுக்கு ஒத்துப்போவர், காடு, மலைகள், குகை நாட்டம், வீர தீரமுடையவர்கள், கட்டளை சொல் உள்ளவர்கள், இலக்கியம் மற்றும் தத்துவ அறிவுள்ளவர்கள். கம்பீரமும், பெருந்தன்மையும் கவுரவமும், அதிகார மிடுக்கும், தயாள குணமும் கொண்டு விளங்குவார்கள். புகழ், பெருமை ஏற்படும் வண்ணம் கன்னியமாக நடந்து கொள்வார்கள். பொது மக்களிடம் மதிப்பும் மரியாதையும் பெற்றவர்களாக விளங்குவார்கள். கஷ்டப்படுகிறவர்களுக்கு மனமார உதவி செய்வார்கள். எத்துறையிலாவது புகழ்பெற வேண்டும் என்று உந்துதல் இயற்கையாகவே இருக்கும். தம்மைப் பற்றி பெருமையாகப் பேசிக்கொள்வார்கள். பெருமைப் படத்தக்க செயல்களையே செய்வார்கள்.

சிம்ம லக்னக்காரர்கள் அகன்ற தோள்களையும், அதிகாரமிடுக்கான பார்வையையும், கம்பீரமான தோற்றத்தையும் கொண்டிருப்பார்கள். ஏராளமாய்ச் சம்பாதிக்கும் ஆற்றலும், யோகமும் உள்ளவர்கள்.

இருதயம், முதுகுத் தண்டு போன்ற பகுதிகளில் நோய்கள் ஏற்படும், முழங்காலில் சுளுக்கு, பிடிப்பு போன்ற பாதிப்புகளுக்கும் ஆளாவார்கள்.

**கன்னி லக்னம்**

சாந்தமானவர்கள், உண்மையானவர்கள், அறிவும், நினைவாற்றலும் உடையவர்கள், கலை மற்றும் கைத் தொழில் ஆர்வம். பெண்களுடன் இணைந்து செயல்படுதல், கல்வியாளர்கள், பார்த்தவுடன் செய்திகளை விளக்கும் தன்மையுடையவர்கள், மதிப்பீடு செய்தல், ராஜ தந்திரி, சிக்கனம், கொடுக்கல், வாங்கல் தன்மை, நுண் கலைப்பிரியர்கள், இசையில் ஆர்வம் உள்ளவர்கள், பிரசித்தி பெற்றவர்கள், செல்வாக்குடையவர்கள்.

அபார அறிவாற்றல், சிந்தனையாற்றல், ஆராய்ச்சி மனம், எதையும் விரைவாகப் புரிந்து கொள்ளும் ஆற்றல், திறமையாகப் பேசும் ஆற்றல், எழுதும் ஆற்றல், தொழில் மற்றும் வியாபாரங்களில் நூதனமாகவும் சாமர்த்தியமாகவும் செயல்படுவார்கள்.

கன்னி லக்னக்காரர்கள் உயரமாக இருப்பார்கள். விரைவாக நடக்கும் இயல்புடையவராக இருப்பார்கள். மூக்கு நேராக இருக்கும். சிலருக்கு இளம் வயதிலேயே வழுக்கை ஏற்பட்டுவிடும்.

அர்த்தமற்ற மனக்கவலைகள், மனக்குழப்பம், நரம்பு சம்பந்தமான வியாதிகள், ஜுரம் சம்பந்தமான வியாதிகள் இவர்களை தாக்கக் கூடும்.

## 2.துலாம் முதல் மீனம் வரை இலக்ன பலன்கள்

### துலா லக்னம்

உயர்ந்த குறிகோள் உள்ளவர்கள், சமயோசித புத்தி உள்ளவர்கள், பழிவாங்கும் தன்மை கொண்டவர்கள், வேகமுடையவர்கள், மனித நேயத்தை புரிந்து கொள்பவர்கள், காமமுடையவர்கள். எதிர்கால முடிவுகளை தனது சிந்தனையின் மூலம் அறிந்து கொள்ளுதல், நீதி, அமைதி, ஒழுக்கம் போன்றவையில் நாட்டம், அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுதல் அறிவு, தூய்மை, சுறு சுறுப்பு, கடவுள் மற்றம் அந்தணர்களிடம் மரியாதை, பேராசை, தீர்க்கமான எண்ணமுடையவர்கள், அற்ப சிந்தனைக்கு இடம் கொடாமை, மற்றவர் மேல் இரக்க சிந்தனை, கற்பனையில் வாழ்பவர்கள், பொருட்களை வாங்க, விற்க திறமையானவர்கள், மத்தியஸ்தம் செய்பவர்கள், மற்றவர்களின் குறையான பேச்சுகளை பொருட்படுத்தாமை, அரசியல்வாதியாகவும், சமய சீர்திருத்தவாதியாகவும் இருந்து மிகப் பெரிய தாக்கத்தை மக்கள் முன்னிலையில் உருவாக்குபவர்கள், பிறர்மேல் தனது கருத்தை திணித்து அதனால் ஏற்படும் தீய விளைவுகளை அனுபவித்தல், நேர்மைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் தனது வாழ்வை அர்ப்பணித்தல், இசையில் ஆர்வம், நம்பிக்கை மற்றும் நேர்மையில் நாட்டமுடையவர்கள். இனிய சுபாவங்களைக் கொண்டிருப்பார்கள். பழகுவதற்கு அருமையானவர்கள். அறிவாற்றல் நிரம்பப் பெற்றவர்கள். நியாய உணர்ச்சி மிகுதியாக உள்ளவர்கள். சுகபோக உல்லாச வாழ்க்கையை அனுபவிக்க விரும்புவார்கள். பல தொழில்களைச் செய்து சம்பாதிக்க வேண்டுமென ஆசைப்படுவார்கள். பலவகைகளிலும் பணத்தை தாராளமாகச் செலவு செய்வார்கள். தொழில் மற்றும் வியாபாரத்தை அடிக்கடி மாற்ற முயல்வார்கள்.

### விருச்சிக லக்னம்

கேலிப்பேச்சு, கருமியாக இருப்பார்கள், வார்த்தைகளை அளந்து பேசுபவர்கள் அமைதி, மேன்மை, பழைமையை தள்ளிவிடுபவர்கள், அற்ப புத்தி உடையவர்கள், கேளிக்கை நாட்டம், நட்பை வரவேற்பவர்கள், செய்தித் தொடர்பில் வல்லவர்கள், நுன்கலை, நடனத்தில் ஆர்வம் உள்ளவர்கள், மற்றவர்கள் கருத்துகளை மதிப்பவர்கள், காமத்தில் விருப்பம், இருந்தாலும் அதில் முறைப்படி செயல்படுபவர்கள், சுய எண்ணத்தின் மேல் நம்பிக்கை, இளமையான தோற்றம், சிலர் பெருந்தன்மையாக செயல்படுபவர்கள், மறைமுக கலையில் நாட்டம், புத்தி கூர்மை, துன்பங்களை அனுபவித்தல், குரூர தன்மை, கடின உழைப்பு, போராட்டத்தில் ஆர்வம் கொண்டவர்கள். கூர்ந்து நோக்குபவராகவும், பிறரது இரகசியங்களை அறிந்து கொள்வதில் ஆர்வமுள்ளவராகவும் இருப்பார்கள். வீரமும், பிடிவாத குணமும், முரட்டுத் தனமும் உடையவராவார்கள். ஊக்கத்துடன் செயல்பட்டு வாழ்க்கையில் முன்னேறி விடுவார்கள். பழிவாங்கும் குணமுள்ளவராகவும், கலகம் செய்பவராகவும், எதையும் அழிக்கும் குணமுள்ளவராகவும் இருப்பார்கள்.

விருச்சிக லக்னக்காரர்கள் சுருள் முடியும், தடித்த புருவமும் கொண்டிருப்பார்கள், உயரமாயும் வளமான உடற்கட்டும் கொண்டிருப்பார்கள்.

இன உறுப்பு சம்பந்தமான நோய்களுக்கும், தலை, முகம் ஆகிய உறுப்புகளில் தோன்றக்கூடிய நோய்களுக்கும் ஆளாவார்கள்.

**தனுசு லக்னம்**

தத்துவத்தில் ஆர்வம் உள்ளவர்கள், மறைமுக கலை பயில்தல் இவற்றில் புலமை பெறுதல், வேகமாக பேசுதல், மற்றவர்களின் தவறுதலான புரிதலுக்கு ஆளாகுதல், மற்றவர் வளர்ச்சியை தடுக்காமல் இருத்தல், வெளிப்புற பகட்டை வெறுப்பார்கள், கடவுள் பக்தி, நேர்மை, பணிவு உடையவர்கள், போலித் தன்மை இல்லாதிருத்தல், உணவிலும், குடிக்கும் பானத்திலும் மற்றும் எதிர் பாலினத்தவரிடம் கவனமாக இருத்தல், அறிவாளிகள், கவர்ச்சியானவர்கள், எளிதில் பழகக் கூடியவர், தூய இதயமுடையவர்கள், உரையாடலில் நாட்டம் உடையவர்கள், பழமையான விஷயங்களை கடை பிடிப்பவர்கள், சரியான நேரத்தில் காரியங்களை செய்து முடித்தல், அதிக எதிர் பார்ப்புடன் பரபரப்புடன் இருத்தல், மனித நேயம், கடின உழைப்பு இரக்கம், அன்புடைமை, தொலை நோக்குச் சிந்தனை உடையவர்கள், பேச்சாற்றல், சமயப் பற்றுள்ளவர்கள், மற்றவர்களுக்காக தியாகம் செய்தல், உறவினர் பகை ஆகியவற்றிற்கு ஆளாவார்கள். இவர்களை யாரும் கட்டாயப் படுத்தி காரியம் செய்யவைக்க முடியாது. எதிரிகளை வீழ்த்துவார்கள். அஞ்சா நெஞ்சமும், உயர்ந்த லட்சியமும் உடையவராவார்கள். தயங்காது உண்மை பேசும் இயல்புடையவர்கள். இரக்கம், தயாள குணம், பெருந்தன்மை, நேர்மை, நாணயம், நம்பிக்கை ஆகிய பண்புகளை உடையவர்கள். தலைமை தாங்கும் தகுதி படைத்தவராக இருப்பார்கள். நன்கு திட்டமிட்டு செயல்பட்டு வாழ்க்கையில் முன்னேறுவார்கள். வாழ்க்கையில் எவ்வகையான தடைகள் ஏற்பட்டாலும் அதைத் தகர்த்து விடுவார்கள்.

தனசு லக்னத்தில் பிறந்தவர்கள் உயரமாயும் பருமனாயும் இருப்பார்கள். நீண்ட முகம் கொண்டிருப்பர். முன் நெற்றி வழுக்கை விழுந்திருக்கும்.

**மகர லக்னம்**

சமயப் பற்று அற்றவர். சுய சிந்தனைஅற்றவர், கமுக்கம், தந்திரம், தீவிரச் சிந்தனை, சூழ்நிலைக் கேற்றவாறு மாறிக்கொள்வார்கள், இரக்கமின்மை, மக்களுக்கு சேவை செய்தல், அரட்டை குணம், நாவடக்கமின்மை, உழைப்பு, திடமான முடிவு, பணிவு, தான் தோன்றித்தனம், பழிவாங்கும் குணம், மற்ற ஊழியர்களை பகைத்தல், பங்காளியைப் பகைத்தல், கொடூரத் தனம் போன்ற குணாதிசயங்களை உடையவாராயிருப்பார்கள். வெட்கமறியாதவர், கவிதை எழுதல், தன்னம்பிக்கையின்மை, தவறு செய்தல் அதிக ஆசைகள், அதிக செலவுடையவர், துன்பப்படுதல், இலக்கிய ஆர்வம், பிறர் ஆலோசனையை கேட்பது, வணிகத்தில் நேர்மை, சுக, துக்கங்களை ஒன்றாக கருதுதல்,

விஞ்ஞானம் மற்றும் கல்வியில் ஆர்வம், மூடத்தனமான வெறிக்குணம், சில சமயங்களில் திடமற்ற எண்ணம் இருக்கும். நஷ்டத்தைத் தவிர்க்க எதையும் செய்யக்கூடியவராகவும், சிலர் பழிவாங்கும் குணம், குரோதம், கலக புத்தி, திருட்டுத் தனம் முதலான செயல்களை உடையவராகவும், கட்டுபாடுகள் மிக்கவராகவும், இரகசியவாதியாகவும், கடுகடுப்பானவராவும், சந்தேக குணமும் உள்ளவராகவும், தயக்கம் உடையவராகவும் இருப்பார்கள்.

மகர லக்னக்காரர்கள் இறுகிய உதடுகள், நீண்ட மூக்கு, மெலிந்த உடல், ஒட்டிய முகம் ஆகியவற்றைக் கொண்டிருப்பார்கள். முழங்காலில் பிடிப்பு, சுளுக்கு போன்றவைகள் ஏற்படும்.

**கும்ப லக்னம்**

கடின உழைப்பு செய்தல், கஷ்டப் பட்டு பிரயாணம் செய்பவர், ஆசிரியர், பேராசிரியர், மற்றும் எழுத்தாளர்கள், பேரறிவாளர்கள், எளிதல் வெல்லக் கூடிய தன்மை, வித்தியாசமான தன்மையினால் பலரை ஈர்ப்பவர்கள், இவர்களை மற்றவர்கள் சுலபமாக தவறாக புரிந்து கொள்வார்கள். கோபமுடையவர்கள் குடும்ப வாழ்க்கையில் போதுமான மகிழ்ச்சியின்மை, நம்பிக்கையினால் யாரையும் காப்பாற்றுவார்கள், பங்குதாரரிடம் அதிக பற்று, எளிதில் நண்பர் உடையவர், மற்றவரை எதிர்ப்பதில் வல்லவர்கள், வாழ்வில் மகிழ்ச்சியின்மை, தூய இதயமுள்ளவர், மற்றவருக்கு உதவி செய்தல், பணிவு, கோழைத்தனம், மற்றவருக்காக பாபச் செயல்கள் செய்வர், தன்னுடைய திறமைகளை புதிய இடங்களில் வெளிப்படுத்த தயங்குவர், ஆனால், இவர்களுடைய பேச்சு இனிமையாகவும், கருத்துள்ளதாகவும் இருக்கும், ஜோதிடத்தில் சிறப்பாக இருத்தல், வாசனை பொருட்கள் ஆர்வம், சுயமாக இருப்பர், தாராள குணம், இரக்கம், சிறந்த நினைவாற்றல் தனது திறமைகளை அறியாதவர்கள், உள்ளுணர்வு மிக்கவர்கள், மற்றவரை எடைபோடுவதில் வல்லவர்கள், ஒருங்கிணைப்பு தன்மை உள்ளவர்கள். எதையும் நூதனமான வழியில் செய்து புகழ் பெறக் கூடியவர்கள். தெய்வீக மாந்திரீக விஷயங்களில் நாட்டம் உடையவர்கள். எதிர்கால நிகழ்ச்சிகள் மனதில் புரியும். கணுக்கால், கெண்டைக்கால் தசை பகுதிகள் பாதிப்பு ஏற்படும்.

கும்ப லக்னக்காரர்கள் உயரமானவராயும் அழகான முகம், உடையவராயும் இருப்பார்கள். ஆராய்ச்சி நோக்குடையவர்கள், கூர்மையான மதியுடையவர்கள், உள்ளுணர்வு மிக்கவர்கள்.

**மீன லக்னம்**

உடையில் நாட்டம், தன்னம்பிக்கை, நேர்மையை கடைப்பிடித்தல், உண்மையாக இருத்தல், மனைவி பேச்சை கேட்டல், மற்றவரை சார்ந்திருத்தல், சுய சிந்தனை, பழமையை கடைப்பிடித்தல், தீவிரமுடையவர், எதிரிகளை வெல்வர், கல்வியாளர், நன்றியுடைமை, திடீரென்று தவறாக முடிவெடுத்தல், கடவுள் பக்தி,

அதிகமாக நீர் அருந்துபவர், தனது கல்வியை பெரிதும் பேசுபவர், மற்றவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்துதல், பரபரப்பு, திடமாக இருத்தல், பணிவுடைமை போன்ற குணங்களை கொண்டவர்கள். வரலாறு, புராணங்களை நம்புபவர், பணத்தை செலவழித்தல். கஷ்டத்தில் உள்ளவர்களுக்கு உளமாற உதவி புரிந்திடும் கருணையாளர்கள், இரக்க சிந்தையும், பெருந்தன்மையான போக்கும் உடையவர்கள். சிறந்த கற்பனையாற்றல் இருக்கும். தத்துவ வேதாந்த விசாரணைகளில் ஈடுபடுவார்கள். உணர்ச்சிகரமானவராக இருப்பார்கள். புதுமையான சிந்தனை உள்ளவர்கள்.

மீன லக்னக்காரர்கள் குள்ளமானவராய் இருப்பார். உடல் சற்று தடித்து காணப்படும். கைகால் மற்றும் விரல்கள் குட்டையாய் இருக்கும்.

இருதய நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. பாதம், கணுக்கால் ஆகிய உறுப்புகள் உபாதைகளை உண்டாக்கும். பலவகையான தொழில்களையும் செய்து சம்பாதிப்பார்கள். தடையற்ற செல்வ சேர்க்கை ஏற்படும்.

## பன்னிரு இலக்கினங்களுக்கும் நவகிரகங்கள் தரும் பலன்கள்

### மேஷம்

**சூரியன் :** பஞ்சம திரிகோண ஆதிபத்தியம் பெற்ற சூரியன் பலத்துடன் நின்றால் ஐந்தாம் பாவம் குறிக்கும் சுபபலன்களான வம்சவிருத்தி, தேர்வில் வெற்றி, அரசு மூலம் லாபம் மற்றும் சூதாட்டம், லாட்டரி, ரேஸ் போன்றவற்றின் மூலம் லாபம் உண்டாகும்.

**சந்திரன்:** சதுர்த்த கேந்திரத்திற்கு ஆதிபத்தியம் பெற்ற சந்திரன், பலத்துடன் நின்றால் மன அமைதி, சந்தோஷம், வீடு, வாழ்க்கை, வசதி போன்ற சுப பலன்களும், சந்திரன் பலமற்றிருந்தால் நான்காம் பாவ ரீதியான அசுப பலன்களும் நடைபெறும். மேலும் நான்காம் பாவம் தகப்பன் ஸ்தானத்திற்கு ஆயுள் ஸ்தானமாக வருவதால் தகப்பனாருக்கு கண்டத்திற்கு இணையான தீமைகள் ஏற்படும்.

**செவ்வாய்:** லக்னாதிபதி செவ்வாய் பலம் பெற்றிருந்தால் செல்வம், நல்ல உடல் நலம், புகழ் போன்றவற்றை அளிக்கும். செவ்வாய் பலம் குறைந்திருந்தால் ஆயுள் கண்டம், மூலம், பித்தநோய், வாய்வுநோய் முதலியவற்றை கொடுக்கும்.

**புதன் :** மூன்று மற்றும் ஆறாம் ஆதிபத்தியம் பெற்ற புதன், அசுபராவார். புதன் பலம் பெற்றிருப்பது சிறப்பல்ல. புதன் பலத்துடன் நின்றால் பொருளாதார சிக்கல் ஏற்படும். பலமில்லாவிட்டால் சகோதரர்களுக்கு உடல் நலக்குறைவு, செல்வ வளம் முதலியன ஏற்படும். புதன், குரு – சந்திரன் – செவ்வாய் ஆகிய கிரகங்களுடன் தொடர்பு பெற்றால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பிற கிரகங்களுடன் உள்ள தொடர்புக்குத் தக்கவாறு புதன் பலன் கொடுக்கும்.

**குரு:** பாக்ய திரிகோணத்திற்கும், விரய ஸ்தானத்திற்கும் ஆதிபத்தியம் பெறும் குரு பலம் பெற்றால், ஆசிரியர் தொழில் பெரியோரிடமிருந்து பாராட்டு, தந்தைக்கு வசதி வாய்ப்புகள் பெருக்கம் ஏற்படும். குரு பலம் குறைந்தால் அரசினர் தொந்தரவு, குரு, தந்தை ஆகியோரின் எதிர்ப்பு, மததுவேஷம், வாழ்க்கையில் பின்னடைவு ஏற்படும்.

**சுக்ரன்:**இரண்டு மற்றும் ஏழாம் ஆதிபத்தியம் பெறும் சுபரான சுக்கிரன் சுக்கிரன் பலம் பெறின் பொருளாதார வளர்ச்சியும் பலவீனமானால் உடல் நலக் குறைவும் ஏற்படும்.

**சனி :** பத்து மற்றும் பதினொன்றாம் ஆதிபத்தியங்கள் பெறும் சனி பலம் பெறின் உழைப்புக்குத் தகுந்த பொருளாதார வளர்ச்சியையும், பலவீனமானால் குறைந்த வருமானமும், உடல் நல குறைவும் தரும்.

## ரிஷபம்

**சூரியன்:** இயற்கை அசுபராகிய சூரியன். சதுர்த்த கேந்திர ஆதிபத்தியம் பெறுவதால் அசுபத் தன்மை நீங்கி சுபபலன் தருவார். சூரியன் பலம் பெற்று நின்றால் வசதி வாய்ப்புகள், வசிப்பிடம் போன்ற சுப பலன் தருவார். பலமில்லாவிட்டால் மனநிம்மதி குறைதல், நோய், அனைவரிடமும் பகைமை, அரசு மூலம் தொந்தரவு, உறவினர்களுடன் உறவு நிலை கெடுதல் போன்றவற்றைத் தருவார்.

**சந்திரன்:** மூன்றாம் ஆதிபத்தியம் பெற்றிருந்தாலும் மிகுந்த கெட்ட பலன்களைத் தரமாட்டார். சந்திரன் பலம் பெற்றால் சுப பலன்களை தருவார்.

**செவ்வாய்:** சப்தம கேந்திரம் மற்றும் விரய ஸ்தானம் ஆகிய ஆதிபத்தியங்கள் பெறும் செவ்வாய் இயற்கை அசுபராகி கேந்திராதிபத்தியம் பெறுவதால் அசுபத் தன்மை நீங்கி சுபபலன் கொடுப்பார். செவ்வாய் பலத்துடன் நின்று சுபர்பார்வை பெற்றிருந்தால், வியாபாரம், மனைவி வழியில் நன்மை, அரசு அனுகூலம் போன்ற சுப பலன்கள் கிடைக்கும். செவ்வாய் பலன் குறைந்திருந்தால் மேற்கண்ட வகைகளில் அசுப பலன்களும், குறிப்பாக உடல் நிலை சரியற்ற நிலையும் ஏற்படும்.

**புதன்:** பஞ்சம திரிகோண ஆதிபத்தியம் பெறும் புதன் பொதுவாக சுப பலன்களையே அளிப்பார். புதன் பலம் பெற்றிருப்பின் அனைத்து தேர்வுகளிலும் வெற்றியையும், திட்டமிட்டு வெற்றி பெறுதல், எழுத்து வன்மை, குழந்தைச்செல்வம், போன்ற சுப பலன்களை அளிக்கும். புதன் பலம் குறைந்திருந்தால் மேற்கண்ட வகைகளில் அசுப பலன்களை அளிக்கும். பொதுவாக ரிஷப லக்ன யோக காரகனாகிய சனி அல்லது லக்னாதிபதி சுக்ரனின் தொடர்பு புதனுக்கு ஏற்பட்டால் பொருளாதார ரீதியாக சுப பலன்களையே புதன் கொடுப்பார்.

**குரு :** எட்டு மற்றும் பதினொன்று ஆகிய அசுப ஆதிபத்தியம் பெறும் குரு பொதுவாக அசுப பலன்களையே தருவார். குரு பலம் குறைந்தால் உடல் நலம் சிறப்பாக இருக்கும், செல்வவளம் குறையும். குரு பலம் பெற்றிருந்தால் வருமானம், செல்வ வளம் பெருகும். உடல் நலம் சீர்கெடும், மூத்த சகோதரத்திற்கு மதிப்பு மரியாதை கிடைக்கும்.

**சுக்ரன்:** லக்ன மற்றும் ஆறாம் ஆதிபத்தியம் பெறுவதால் லக்கினாதிபதி கொடுக்க வேண்டிய சுப பலன்களும், நோய், வம்பு, வழக்கு போன்றவற்றையும் சுக்ரன் தருவார். பலம் பெற்றிருந்தால் பொருளாதார வளர்ச்சியும் பலம் குறைந்திருந்தால் உடல் நலக் குறைவும் தரும்.

**சனி :** பாக்ய கோண, தசமகேந்திர ஆதிபத்தியம் பெறும் சனி பலம் பெற்றால் வெற்றி, பொருளாதார வளர்ச்சி, அரசு அனுகூலம், தந்தைக்கு சுப பலன்களைக்

கொடுப்பார். சனி பலமிழந்தால் மேற்கூறியவைகளில் அசுப பலன்களே நடைபெறும்.

## மிதுனம்

**சூரியன்:** மூன்றாம் அசுப ஆதிபத்தியம் பெறுவதால் பொதுவாக சுப பலன்களைத் தரமாட்டார். எனவே பொருளாதார ரீதியாக அசுப பலன்களே நடைபெறும்.

**சந்திரன்:** தன ஸ்தான ஆதிபத்தியம் பெறும் சந்திரன் பலமாக நின்றிருந்தால் சிறந்த பொருளாதார நிலை, வசதி வாய்ப்புகள், வாக்கு, குடும்ப வாழ்க்கை, கல்வி முதலியன சிறந்த முறையில் அமையும். பலம் குறைந்திருந்தால் மேற்கண்டவைகளில் அசுப பலன்களே நடைபெறும்.

**செவ்வாய்:** ரோக மற்றும் லாபஆதிபத்தியம் பெறும் செவ்வாய் மிகவும் அசுபராகிறார். மேலும் செவ்வாய் விபத்து காரகனாவதால், செவ்வாய் லக்னத்தையோ, லக்னாதிபதியையோ பார்த்தால் அல்லது சேர்ந்தால் விபத்து, காயம், முதலியவை ஏற்படும். செவ்வாய் கெட்டிருந்தால் வருமானமும், நஷ்டமும் மாறி மாறி கொடுக்கும்.

**புதன்:** லக்னம் மற்றும் சதுர்த்த கேந்திர ஆதிபத்தியம் பெறும் புதன் பொதுவாக சிறந்த செல்வம், உடல் நலம், நீண்ட ஆயுள் ஆகியவற்றை அளிப்பார். புதன் கெட்டிருந்தால் எளிதில் கோபம், உணர்ச்சி வசப்படும் தன்மையும், செல்வ இழப்பு, உறவினருடன் பகைமை, அனைவரிடமும் சரியற்ற உறவு நிலை அமையும்.

**குரு:** சப்தம, தசம கேந்திராதிபதி குரு, கேந்திராதிபத்திய தோஷம் பெறுவதால் மாரக ஸ்தானங்களில் அமர்ந்திருந்தால் உடல் ஆரோக்கியம் குறையும். குரு பலம் பெற்றிருந்து சுபஸ்தானங்களில் அமர்ந்திருந்தால் நல்ல மனைவி, அரசு அனுகூலம், வியாபாரம், தொழில் லாபம் முதலியவை கொடுக்கும். பலம் குறைந்திருந்தால் மேற்கண்டவைகளில் அசுப பலன்களே நடைபெறும்.

**சுக்ரன்:** பஞ்சம திரிகோண மற்றும் விரய ஆதிபத்தியம் பெற்ற சுக்ரன் பலம் பெற்றிருந்தால் தன் துறை சார்ந்த தேர்வுகளில் வெற்றியையும், குழந்தைச் செல்வம், செல்வ சேர்க்கை தரும். பலம் குறைந்திருந்தால் மேற்கண்டவைகளில் மாறுபட்ட பலன்களே நடைபெறும்.

**சனி:** ஆயுள் மற்றும் பாக்ய ஆதிபத்தியம் பெறும் சனி சம பலன்களையே அளிப்பார். சனி பலம் பெற்றிருந்தால் அதிர்ஷ்டம், பொருளாதார வளர்ச்சி, தொழில் மேன்மை முதலியவை ஜாதகருக்கும், அவரது தந்தைக்கும் கொடுக்கும் பலவீனமானால் மேற்கண்ட வகைகளில் மாறுபட்ட பலன்களையே கொடுக்கும்.

## கடகம்

**சூரியன் :** தன ஸ்தான ஆதிபத்தயம் பெறும் சூரியன் பலம் அடைந்திருந்தால் பொருளாதார வளர்ச்சி, அரசு அனுகூலம், மதிப்பு, மரியாதை, கௌரவம் கிடைக்கும். பலம் குறைந்திருந்தால் பொருளாதாரச் சிக்கல், அரசு தொந்தரவு, கண் நோய், குடும்பத்தில் குழப்பம், குடும்பத்தை விட்டுப் பிரிதல் போன்ற அசுப பலன்கள் நடைபெறும்.

**சந்திரன்:** லக்னாதிபதி சந்திரன் சுபர் பார்வை பெற்று சுப ஸ்தானத்தில் அமர்ந்திருந்து பலம் பெற்றிருந்தால் செல்வச் சேர்க்கை, சொத்து, மரியாதை கிடைக்கும். பலம் குறைந்தால், உடல் நலக் குறைவு, மார்பு நோய், ரத்தம் சம்பந்தப்பட்ட நோய், மதிப்பு, மரியாதை குறைதல் ஏற்படும்.

**செவ்வாய்:** கேந்திர, திரிகோண ஆதிபத்தியம் பெறும் செவ்வாய் சுப ஸ்தானங்களில் அமர்ந்திருப்பின் மிக்க சுப பலனைத் தருவார். செவ்வாய் பலம் பெற்றிருந்தால் செல்வம், நல்ல உடல் நலம், புகழ் போன்றவற்றை அளிக்கும். செவ்வாய் பலம் குறைந்திருந்தால் நோய், மூலம், பித்தநோய், வாய்வுநோய் முதலியவற்றை கொடுக்கும். செவ்வாய் பலவீனமடைவது சிறப்பல்ல.

**புதன் :** மூன்று மற்றும் பன்னிரெண்டு ஆகிய அசுப ஆதிபத்தியம் பெறும் புதன் கடக லக்னத்திற்கு மிகக் கொடிய பாவியாவார். புதன் திரிகோணங்களில் அதாவது விருச்சிகம், மீனத்தில் அமர்வது சுபபலன்தரும். மேற்கண்ட ஸ்தானங்களில் புதன் அமர்ந்து, சந்திரன் நட்பு கிரகங்களின் பார்வை, சேர்க்கை பெறுவது சிறப்பு. மனக்குழப்பம், அலைச்சல், வீண் விரயங்கள் போன்றவை புதனால் ஏற்படும் அசுப பலன்களாகும்.

**சுக்ரன்:** சுக, லாபஸ்தான ஆதிபத்தியம் பெறும் சுக்ரன் கேந்திராதிபத்திய தோஷம் பெறுவதால் உடல் நலக்குறைவு கொடுத்தாலும் பொருளாதார பாதிப்பு தரமாட்டார். சுக்ரன் பலம் குறைந்தால் பொருளாதார பாதிப்பு ஏற்படும்.

**குரு** : சத்ரு ஸ்தானம் மற்றும் பாக்கியஸ்தான ஆதிபத்தியம் பெறும் குருவால் சுப பலன்கள் விளைந்தாலும், உடல் நலத்தில் சற்று அசுப பலன்களையே கொடுப்பார்.

**சனி:** சப்தம, அஷ்டம ஆதிபத்தியம் பெறும் சனி பலம் பெற்றால் நீண்ட ஆயுள் தருவார். குடும்பம் சிறப்பாக அமையாது, ஏழ்மையையும் கொடுப்பார்.

## சிம்மம்

**சூரியன்:** நவ கிரகங்களில் முதன்மையான சூரியன் லக்ன ஆதிபத்தியம் பெறுவதால் யோக காரகர் ஆகிறார். பலம் பெற்று நின்றால் சிறந்த உடல் நலம், செல்வச் செழிப்பு, பெயர், புகழ், ஆளுமை சக்தி அளிக்கும். பலமற்ற சூரியன் குறைந்த அளவு செல்வமும், கெட்ட பெயரும் ஏற்படுத்தும்.

**சந்திரன்:** விரய ஆதிபத்தியம் பெறும் சந்திரன் பலம் பெற்று சுப ஸ்தானங்களில், சுபர் பார்வையுடன் இருந்தால் செல்வ வளம் கொடுக்கும் பலம் குன்றி அசுபர் பார்வை பெற்று கெட்டிருந்தால் பொருளாதார சிக்கலும், கண் நோயும் கொடுக்கும்.

**செவ்வாய்:** யோக காரகன் செவ்வாய் பலம் பெற்றிருந்தால், சக்தி, செல்வாக்கு சொத்துக்கள், அதிர்ஷ்டம் போன்றவை மிக அதிக அளவில் கிடைக்கும். பலம் குறைந்திருந்தால் மேற்கண்ட பலன்கள் மிக குறைந்த அளவில் கொடுக்கும்.

**புதன்:** குடும்ப, லாப ஆதிபத்தியம் பெறும் புதன் உடல் நலக்குறைவு கொடுக்கும், பலமான புதன் லாபம் கொடுக்கத் தவறுவதில்லை. பலம் குறைந்த புதனால் செல்வம், கல்வி, பேச்சு முதலியவைகளில் குறைவும், மூத்த சகோதரம் மற்றும் தாய்க்கு தொந்தரவு கஷ்ட நஷ்டங்கள் கொடுக்கும்.

**குரு:** குரு பலம் மிக்கவராக இருந்தால் செல்வ வளம், தேர்வுகளில் வெற்றி, குழந்தைச் செல்வம் கொடுக்கும். பலமில்லாவிட்டால் குழந்தை பாக்கியமின்மை அல்லது குழந்தைகளுக்குக் கஷ்டம், தந்தைக்கு நஷ்டம், துரதிர்ஷ்டம் கொடுக்கும்.

**சுக்ரன்:** மூன்றாம் மற்றும் பத்தாம் ஆதிபத்தியம் பெறும் சுக்ரன் லக்ன அசுபர் ஆகிறார். எனவே சுக்ரன் பலம் குறைவது சிறப்பு, பலம் பெற்ற சுக்ரன், தொழிலில் சிறப்பு, செல்வ வளம் அளித்தாலும் நண்பர்கள், இளைய சகோதரர்களுக்கு தொந்தரவு கொடுக்கும்.

**சனி:** ஆறு மற்றும் ஏழாம் ஆதிபத்தியம் பெறும் சனி உடல் நலக்குறைவு, நஷ்டம், கடன் போன்ற அசுப பலன்களையே தரும். எனவே சனி பலம் குறைவது சிறப்பு.

## கன்னி

**சூரியன்:** விரய ஆதிபத்தியம் பெற்ற சூரியன் சுப ஸ்தானங்களில் சுபர்களின் பார்வை பெற்று பலத்துடன் நின்றால் அரசு அனுகூலம், பெரியோர் தொடர்பு, செல்வ வளம் கிடைக்கும். பலம் இல்லாவிடில் கண் நோய், அரசு அபராதம், அதிக செலவுகள் ஏற்படுத்தும்.

**சந்திரன்:** லாபஸ்தான ஆதிபத்தியம் பெறும் சந்திரன் செல்வச் சேர்க்கை தரும். பலம் குறைந்தால் உடல் நலக்குறைவு தரும்.

**செவ்வாய்:** மூன்று மற்றும் எட்டு ஆகிய அசுப ஆதிபத்தியம் பெறும் செவ்வாய் பலம் பெற்றால் நீண்ட ஆயுளும், ஏழ்மையையும் கொடுக்கும். பலம் குறைந்த செவ்வாய் செல்வ வளம் கொடுத்தாலும் மத்திம ஆயுளையே தரும்.

**புதன்:** லக்னாதிபதி புதன் அனைத்து வகையிலும் சுப பலன்களை தரும். பலமிழந்தால் கெட்ட பலன் தரும். தொழிலில் சிறப்பின்மை, பின்னடைவு தரும்.

**குரு :** சதுர்த்த, சப்தம கேந்திர ஆதிபத்தியம் பெறும் குரு, அசுப பலன்களையே தரும், சுபஸ்தானங்களில் அமர்ந்திருந்தால் செல்வ வளம், மதிப்பு, மரியாதை, கௌரவம், அரசு அனுகூலம் போன்ற சுப பலன்களைத் தரும்.

**சுக்ரன்**: குடும்ப, பாக்கியஸ்தான ஆதிபத்தியம் பெறும் சுக்ரன் சகலவித சந்தோஷங்களையும், செல்வச் சேர்க்கை, அரசு அனுகூலம் தரும். பலமற்ற சுக்ரன் செல்வ நஷ்டம், தொழில் பின்னடைவு, அரசு தொந்தரவு போன்ற அசுப பலன்களைத் தரும்.

**சனி:** ஐந்து மற்றும் ஆறு ஆகிய ஆதிபத்தியம் பெறும் சனி சுப ஸ்தானங்களில் இருந்தால் சுப பலன்களும். பலமில்லாவிட்டால் கடன், பகைமை முதலியவற்றை உருவாக்கும்.

## துலாம்

**சூரியன்:** லாப ஸ்தான ஆதிபத்தியம் பெறும் சூரியன் பாதகாதிபதியும் ஆகிறார். எனவே உடல் நல பாதிப்புகளும், பொருளாதார சிக்கலும் தருவார். சூரியன் சுப ஸ்தானங்களில் சுபர்பார்வையுடன் இருந்தால் செல்வ வளம் தருவார். பலம் குறைந்தால் குறைந்த வருமானம், நஷ்டம் மற்றும் நோய் உபாதைகளைத் தருவார்.

**சந்திரன்:** ஜீவன அதிபதியாகும் சந்திரன் கேந்திராதிபத்திய தோஷம் பெறுவதால் அசுப பலன்களைத் தருவார். சந்திரன் சுப ஸ்தானங்களில் நின்றால் பொருளாதார வளர்ச்சி கொடுப்பார்.

**செவ்வாய் :** மாரக (2,7) ஆதிபத்தியம் பெறும் செவ்வாய் சுபஸ்தானங்களில் நின்றால் தொழில், வருமானத்திற்கு சிறந்ததாகும். பலம் குறைந்தால் கடும் உடல் நல பாதிப்புகளையும், ஆயுள் பங்கமும் தருவார்.

**புதன் :** ஒன்பது மற்றும் பன்னிரெண்டாம் ஆதிபத்தியங்களைப் பெறும் புதன் பொதுவாக சுப பலன்களையே அளிப்பார். தொழில், அரசு அனுகூலம் அதிர்ஷ்டம் மிக சிறப்பாக இருக்கும். பலம் குறைந்தால் மேற்கண்டவைகளில் திடீரென பின்னடைவு ஏற்படும்.

**குரு:** மூன்று மற்றும் ஆறு ஆகிய அசுப ஆதிபத்தியம் பெறும் குரு பொதுவாக அசுப பலன்களையே தருவார். சுப ஸ்தானங்களில் அமர்ந்தால் செல்வ வளம் ஓரளவுக்கு கொடுப்பார்.

**சுக்ரன்:** லக்னாதிபதி சுக்ரன் பலத்துடன் நிற்பது நீண்ட ஆயுள், கௌரவம், சொத்துக்கள் போன்ற பலவகை சுப பலன்களைத் தருவார். பலம் குறைந்தால் மத்திம ஆயுள், நோய், தூரதேச சஞ்சாரம் கொடுப்பார்.

**சனி:** கேந்திர கோண ஆதிபத்தியம் பெறும சனி, பொதுவாக சுப பலன்களையே தருவார். சனி பலம் குறைவது இந்த லக்னத்திற்கு சிறப்பல்ல.

## விருச்சிகம்

**சூரியன் :** தசம ஆதிபத்தியம் பெறும் சூரியன் பலம் பெற்று இருந்தால் மதிப்பு, மரியாதை, தொழில்வகை ஒப்பந்தம், உயர்தரமான தொழில்கள், ஆளுமை சக்தி முதலியவை அளிக்கும். பலம் குறைந்திருந்தால் அவமரியாதை, அரசு தண்டனை, செல்வ இழப்பு, கவலை, தந்தைக்கு நஷ்டம் ஆகியவை ஏற்படும்.

**சந்திரன்:** நவம திரிகோண ஆதிபத்தியம் பெறும் சந்திரன் பலம் பெற்றிருந்தால் தொழில் வகை சிறப்பு, செல்வம், சொத்துகள் அளிக்கும் பலம் குறைந்திருப்பின் தொழில் நஷ்டம், செல்வ இழப்பு, தந்தைக்கு ஆயுள் பங்கம் முதலியவை ஏற்படும்.

**செவ்வாய்:** லக்னாதிபதி செவ்வாய் பலம் பெற்றிருப்பின் சுப பலன்களும், பலம் குறைந்திருப்பின் அசுப பலன்களும் கொடுப்பார்.

**புதன் :** எட்டு மற்றும் பதினொன்று ஆதிபத்தியம் பெறும் புதன் சுபஸ்தானங்களில் இருந்தால் தன வரவுகள் கொடுத்தாலும் உடல் நல பாதிப்புகளும் கொடுக்கும் பொதுவாக புதன் பலமற்று இருந்தால் வருமான இழப்பும், நஷ்டமும் தருவார்.

**குரு :** இரண்டு மற்றும் ஐந்து ஆதிபத்தியம் பெறும் குரு பலம் பெற்றிருந்தால் குழந்தைச்செல்வம், செல்வசெழிப்பு, அதிர்ஷ்டம் தந்தைக்கு அதிர்ஷ்டம் ஆகிய சுப பலன்களை கொடுப்பார். பலம் குறைந்திருந்தால் குழந்தைகளால் செல்வ இழப்பு, சூதாட்டத்தில் பண நஷ்டம் ஆகிய அசுப பலன்களைத் தருவார்.

**சுக்ரன்:** களத்திர, விரய ஆதிபத்தியம் பெறும் சுக்ரன் கேந்திராதிபத்திய தோஷம் பெறுவதால் பொதுவாக அசுப பலன்களையே தருவார் பலம் பெற்று இருந்தால் உடல் இன்பம் அதிகம் அனுபவிக்கும் நிலை ஏற்படும்.

**சனி :** மூன்று மற்றும் நான்காம் ஆதிபத்தியம் பெறும் சனி பொதுவாக அசுப பலன்களேயே தருவார். சனி பலம் குறைவது சிறப்பு. சுப ஸ்தானங்களில் நின்றால் சொத்துக்கள் சேரும்.

## தனுசு

**சூரியன்:** நவம திரிகோண ஆதிபத்தியம் பெறும் சூரியன் பொதுவாக சுப பலன்களையே தரும். சூரியன் பலம் பெற்றால் உயர்தரமான தொழில், அரசு உத்தியோகம், அரசு அனுகூலம் மிக பலமாக இருந்தால் அரசியலில் மந்திரி போன்ற பதவியும் கிடைக்கும். பலம் குறைந்தால் தொழிலில் பின்னடைவு, நஷ்டம், அரசு தொந்தரவு, தந்தைக்கு நஷ்டம் முதலிய அசுப பலன்கள் நடைபெறும்.

**சந்திரன்:** அஷ்டமாதிபத்திய அசுப பலன்களை பொதுவாக சந்திரன் கொடுக்காது. சந்திரன் பலம் பெற்றிருந்தால் நீண்ட ஆயுள், அதிக சொத்துக்கள் மன அமைதியான வாழ்க்கை கிடைக்கும். பலவீனமானால் மத்திம ஆயுள், அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும்.

**செவ்வாய் :** பஞ்சம திரிகோண ஆதிபத்தியமும், விரய ஆதிபத்தியமும் பெறும் செவ்வாய் பொதுவாக சுப பலன்களையே தரும். செவ்வாய் பலம் பெற்றால் வம்ச விருத்தி, செல்வ சேர்க்கை, தந்தைக்கு அதிர்ஷ்டம், சூதாட்டம், லாட்டரி வகை லாபம் ஏற்படும்.

**புதன் :** ஏழு மற்றும் பத்துக்கு அதிபதியாகி கேந்திராதிபத்திய தோஷம் பெறும் புதன் பொதுவாக அசுப பலனே தருவார். சுப ஸ்தானங்களில் அமர்ந்திருந்தால் அரசுவகை அனுகூலம் கிடைக்கும். புதன் தான் சம்பந்தப்படும் கிரகத்திற்கு ஏற்ப பலன்களைத் தரும்.

**குரு :** லக்ன சுகஸ்தான ஆதிபத்தியம் பெறும் குரு பொதுவாக சுப பலன்களையே தருவார். குரு பலம் பெற்றிருந்தால் சொத்து சேர்க்கை, வசதி, சுகம், அனைவரிடமிருந்தும் மதிப்பு, மரியாதை, கௌரவம், மன அமைதி, புத்தி கூர்மை கொடுக்கும். குரு பலம் குறைந்திருந்தால் சொத்து, வசதி, சுகம் இழப்பு, தலை மறைவு வாழ்க்கை வாழ நேரிடுதல் போன்ற அசுப பலன்கள் அளிக்கும்.

**சுக்ரன்** : ஆறு மற்றும் பதினொன்றாம் ஆதிபத்தியம் பெறும் சுக்ரன் பொதுவாக உடல் உபாதைகளைத் தருவார். சுபஸ்தானங்களில் இருந்தால் நல்ல லாபம் கிடைக்கும்.

**சனி :** இரண்டு மற்றும் மூன்றாம் ஆதிபத்தியம் பெறும் சனியால் நல்ல சம்பத்து வகைகள் கிடைக்காது. நீண்ட ஆயுள் உண்டு.

### மகரம்

**சூரியன்** : அஷ்டமாதிபத்திய தோஷம் சூரியன் ஏற்படுத்தமாட்டார். எனவே சூரியன் பலம் பெற்று இருந்தால் நீண்ட ஆயுள், அரசு அனுகூலம் கிடைக்கும். பலம் குறைந்திருந்தால் மேற்கண்ட வகைகளில் அசுப பலன்கள் நடைபெறும்.

**சந்திரன்:** கேந்திராதிபத்திய தோஷம் பெறும் சந்திரன் வலுபெறுவது சிறப்பு இல்லை. சந்திரன் சுப ஸ்தானங்களில் நிற்பது பொருளாதார மேன்மை தரும்.

**செவ்வாய்:** சுக, லாபஸ்தான ஆதிபத்தியம் பெறும் செவ்வாய் பொருளாதார லாபமும், உடல் உபாதைகளும் தரும். பலமிழந்த செவ்வாய் குறைந்த வருமானம், தொழிலில் நஷ்டம் தரும்.

**புதன்:** ஆறு மற்றும் ஒன்பதாம் ஆதிபத்தியம் பெறும் புதன் பொதுவாக சுப பலன்களையே தரும். பலமிக்க புதன் வாழ்க்கையில் உயர்ந்த நிலை, பதவி உயர்வு, தொழில் லாபம், அரசு அனுகூலம் போன்ற சுப பலன்களை தரும். பலமிழந்த புதன் எதிரிகளாலும் மாமன் வகையாலும் நஷ்டம் ஏற்படுவதை குறிக்கும்.

**குரு:** மூன்று மற்றும் பன்னிரெண்டு ஆகிய அசுப ஆதிபத்தியம் பெறும் குரு சுப பலன்களை தருவதில்லை. குரு பலவீனமடைவது சிறப்பு, பொருளாதார சிறப்பு ஏற்படும்.

**சுக்ரன்:** கேந்திர, கோண ஆதிபத்தியம் பெறும் சுக்ரன் பொதுவாக சுப பலன்களையே தருவார். சுக்ரன் பலம் இழந்தால் குழந்தைகளால் அவமரியாதை, செல்வ நஷ்டம் ஏற்படும் மேலும் குல நாசம் ஏற்படும்.

**சனி :** லக்ன, தனஸ்தான ஆதிபத்தியம் பெறும் சனி பொதுவாக சுப பலன்களையே தருவார். சனி பலம் பெற்றால் நீண்ட ஆயுள், சொத்து சுகம், கௌரவம் கிடைக்கும். சனிபலம் குறைந்தால் மத்திம ஆயுள், பொருள் நஷ்டம், பெயர் கெடுதல் ஆகிய அசுப பலன்களையே தருவார்.

இந்த லக்னத்திற்கு மாரகாதிபத்தியமும் பெறுவதால் மாரகத்திற்கு இணையான கெடுதல்கள் கொடுக்கவும் தயங்குவதில்லை.

## கும்பம்

**சூரியன்:** சப்தம கேந்திர ஆதிபத்தியம் பெறும் சூரியன் சுப ஸ்தானங்களில் சுபபார்வையுடன் பலமாக இருந்தால் பெரிய வகை வியாபாரம், தொழில் கூட்டாளிகள், நல்ல குடும்பத்திலிருந்து அழகிய மனைவியை கொடுக்கும். பலம் குறைந்திருந்தால் மேற்கண்ட வகைகளில் எதிர்மறையான பலன்களும், அரசுவகைத் தொந்தரவுகளும் கொடுக்கும்.

**சந்திரன்:** ருண, ரோக, சத்ரு ஆதிபத்தியம் பெறும் சந்திரன் பொதுவாக வம்பு, வழக்கு, கடன் தொல்லை போன்ற அசுப பலன்களையே தரும்.

**செவ்வாய்:** மூன்று மற்றும் பத்தாம் ஆதிபத்தியம் பெறும் செவ்வாய் பொதுவாக அசுப பலன்களையே தரும். பலமிழந்து, கெட்டிருக்கும் செவ்வாய் சகோதர, தொழில் வகை அசுப பலன்களைத் தரும்.

**புதன் :** ஐந்து மற்றும் எட்டால் ஆதிபத்தியம் பெறுத் புதன் பொதுவாக சுப பலன்களைத் தருவார். புதன் தன்னுடன் சேர்ந்திருக்கும், மற்றும் பார்க்கும் கிரகங்களின் தன்மையைப் பெற்று சுப, அசுப பலன்களைக் கொடுக்கும்.

**குரு :** இரண்டு மற்றும் பதினொன்றாம் ஆதிபத்தியம் பெறும் குரு பலம் பெற்று நின்றிருந்தால் பொருளாதார வகையில் சிறந்த பலன்களைக் கொடுப்பார். குரு பலம் குறைந்திருந்தால் ஏழ்மை குடும்ப வாழ்க்கையில் சிக்கல், மூத்த சகோதரருக்கு தீய பலன்கள் ஏற்படும்.

**சுக்ரன்:** கேந்திர கோண ஆதிபத்தியம் பெறும் சுக்ரன் பொதுவாக சுப பலன்களையே அளிப்பார். சுக்ரன் பலம் பெற்று நின்றால் வண்டி, வாகன சுகம், சொத்து சேர்க்கை தரும். பலம் குறைந்தால் வீடு, வாகன இழப்பு, தொழிலில் பின்னடைவு, அனைவரிடமும் பகைமை போன்ற அசுப பலன்கள் ஏற்படும்.

**சனி :** லக்னம் மற்றும் விரய ஆதிபத்தியம் பெறும் சனி, நீண்ட ஆயுள், பொருளாதார வளர்ச்சி, கௌரவம் கொடுக்கும். சனி பலம் குறைந்திருந்தால் மேற்கண்ட வகைகளில் அசுப பலன்களையே தரும்.

## மீனம்

**சூரியன்:** சூரியன் ஆறாம் ஆதிபத்தியம் பெறினும் பொதுவாக அசுப பலன் அளிப்பதில்லை. பலம் பெற்ற சூரியன் எதிரிகளை வெல்லும் திறனைக் கொடுப்பார்.

**சந்திரன்** : பஞ்சம திரிகோண ஆதிபத்தியம் பெறும் சந்திரன் பலமாக இருந்தால் புத்தி கூர்மை, சொத்து சேர்க்கை, அதிர்ஷ்டம் அளிக்கும். பலமிழந்த சந்திரன் நஷ்டம் ஞாபக சக்தி குறைவு, சொத்து மற்றும் வம்ச நாசம் போன்ற அசுப பலனைத்தரும்.

**செவ்வாய்:** தன, பாக்ய ஆதிபத்தியம் பெறும் செவ்வாய் நல்ல அதிர்ஷ்டம், சொத்துக்கள் சேர்க்கை, அரசு அனுகூலம் ஆகிய சுப பலன்களைத் தரும். பலமிழந்த செவ்வாய் தொழில் முடக்கம், தந்தையால் சொத்து நஷ்டம் போன்ற அசுப பலன்களைத் தரும்.

**புதன்:** கேந்திராதிபத்திய தோஷம் பெறும் புதன் பொதுவாக அசுப பலன்களையே தரும். சுபஸ்தானங்களில் அமர்ந்து, சூரியன், சந்திரன், செவ்வாய், குரு தொடர்பு ஏற்பட்டால் சுப பலன் தரும்.

**குரு:** லக்னாதிபதி மற்றும் தசமாதிபதி குரு கேந்திராதிபத்திய தோஷம் தருவதில்லை, சுப பலன்களையே தருவார். பலமான குரு அரசு கௌரவம், நீண்ட ஆயுள், நன்னடத்தை சுயமுயற்சியால் சொத்து சேர்க்கை மற்றும் உன்னத நிலையை அடைவதை அளிக்கும். குரு பலம் குறைந்தால் அரசு தொந்தரவு, பொருளாதார நஷ்டம், கௌரவ குறைவு ஏற்படும்.

**சுக்ரன்:** மூன்று மற்றும் எட்டு ஆகிய அசுப ஆதிபத்தியம் பெரும் சுக்ரன் பொதுவாக சுபபலன் தருவதில்லை. சுக்ரன் பலமாக இருந்தால் நீண்ட ஆயுள் அளித்தாலும், பொருளாதார வீழ்ச்சியையே அளிக்கும். சுக்ரன் பலமடைவது பொருளாதார, சுகம், வாகனம் போன்றவைகளுக்கு சிறப்பில்லை.

**சனி:** லாப, விரய ஸ்தான ஆதிபத்தியம் பெறும் சனி, சுபஸ்தானங்களில் பலமாக இருந்தால் நல்ல வருமானமும், லாபமும் தரும். பலமற்ற சனி நஷ்டங்களையும், உடல் உபாதைகளையும் தரும்.

## பாவக பலன்கள்

## 1ம் பாவகம் முதல் 6ம் பாவகம் வரை பலன்கள்

### லக்னம் அல்லது முதல் பாவக பலன்கள்

1. இலக்கினாதிபதி கேந்திரம், அல்லது திரிகோணத்தில் நின்றிருந்தால் ஜாதகர் வாழ்நாள் முழுவதும் சிறந்த உடல் நலத்துடன் சுகமாக இருப்பார்.
2. இலக்கினாதிபதி அசுபர்களுடன் சேர்ந்திருந்தாலோ, துர் ஸ்தானங்களான 6, 8, 12ல் இருந்தாலோ ஜாதகர் உடல் ஆரோக்கியம் குறைந்தவராகவும், சுகமற்றவராகவும் இருப்பார். மேலும் இலக்கினாதிபதி நீசம், அஸ்தமனம், பகை பெற்று நின்றிருந்தால் ஜாதகர் எப்பொழுதும் நோயுற்றவராக இருப்பார். சுபர்கள் கேந்திரம் அல்லது கோணங்களில் நின்றிருந்தால், அனைத்து நோய்களும் நீங்கி சுகமாக வாழ்வார்.
3. இலக்கினம், அல்லது சந்திரன் அசுபர்கள் சம்பந்தம் பெறாமல், சுபர்கள் சம்பந்தம் பெற்று நின்றிருந்தால் ஜாதகர் உடல் ஆரோக்யம் மற்றும் சுகம் நிறைந்தவராக இருப்பார்.
4. இலக்கினத்தில் சுபர்கள் நின்றிருந்தால் ஜாதகர் அழகு மற்றும், கவர்ச்சி மிக்க தோற்றம் உள்ளவராக இருப்பார். இலக்கினத்தில் அசுபர்கள் நின்றிருந்தால் ஜாதகர் அவலட்சனமாக இருப்பார். இலக்கினத்தில் சுபர்கள் நின்றிருந்தாலோ அல்லது பார்த்தாலோ ஜாதகர் சிறந்த உடல் நலத்துடன் சுகமாக இருப்பார்.
5. இலக்கினாதிபதி புதன், குரு, சுக்கிரன் ஆகியோர் கேந்திரம் அல்லது திரிகோணத்தில் நின்றிருந்தால் ஜாதகர் புத்தி கூர்மை மிக்கவராகவும், செல்வந்தராகவும், தீர்க்காயுள் உள்ளவராகவும், அரசு ஆதரவு பெற்றவராகவும் இருப்பார்.
6. இலக்கினாதிபதி சர ராசியில் நின்றிருந்து சுபர்கள் பார்வை பெற்றிருந்தால் ஜாதகர் புகழ் மிக்கவராகவும், செல்வந்தராகவும், மகிழ்ச்சி, சந்தோஷம் மிக்கவராகவும், சுக போகங்களுடன் வாழ்வார்.
7. புதன், குரு, சுக்கிரன், சந்திரன் ஆகிய நான்கு சுபர்களும் சேர்க்கை பெற்று இலக்கினத்திலோ அல்லது கேந்திரத்திலோ நின்றிருந்தால் ஜாதகர் ராஜலட்சணம் பொருந்தியவராக இருப்பார்.
8. மேஷம், சிம்மம், துலாம் இலக்கினமாகி அதில் செவ்வாய் அல்லது சனி நின்றிருந்தால் குழந்தை தொப்புள் கொடி சுற்றிப்பிறக்கும். நவாம்ச இலக்கினத்தின் இராசிக்கு தக்கவாறு உடல் அமைப்பு இருக்கும்.
9. சூரியன் நான்கு கால் இராசியில் நிற்கவும், மற்ற கிரகங்கள் அனைத்தும் உபய ராசியில் பலம் பெற்று நிற்கவும் பிறந்தவர், இரட்டைக் குழந்தைகளில் ஒருவராக இருப்பார்.

10. சூரியனும், சந்திரனும் ஒரே இராசி மற்றும் நவாம்சத்தில் சேர்க்கை பெற்று நிற்க பிறந்தவர் மூன்று மாதம் வரை மூன்று தாயார்களால் பராமரிக்கப்படுவார். பிறகு தந்தை மற்றும் சகோதரர்களால் வளர்க்கப்படுவார்.

11. ஜன்ம இலக்கினத்தை அடிப்படையாகக் கொண்டு பலன் அறிவதைப் போன்றே, சந்திரன் நிற்கும் ஸ்தானத்தையும் இலக்கினமாகக் கொண்டு பலன் உரைக்க வேண்டும்.

12. இலக்கினம், முதல் திரேக்காணத்தில் அமைந்தால், முதல் பாவம் தலையையும், பன்னிரண்டாம் பாவம் கண்களையும், பதினொன்றாம் பாவம் காதுகளையும், பத்தாம் பாவம் மூக்கையும், ஒன்பதாம் பாவம் கன்னத்தையும், எட்டாம் பாவம் முகவாயையும், ஏழாம் பாவம் முகத்தையும் குறிப்பிடும்.

13. இலக்கினம், இரண்டாவது திரேக்காணத்தில் அமைந்தால், முதல்பாவம் கழுத்தையும், பன்னிரண்டாம் பாவம் தோள்களையும், பதினொன்றாம் பாவம் பாவம் புஜங்களையும், பத்தாம் பாவம் உடலின் வலது, இடது ஆகிய இரண்டு பக்கங்களையும், ஒன்பதாம் பாவம் இதயத்தையும், எட்டாம் பாவம் வயிற்றையும், ஏழாம் பாவம் தொப்புளையும் குறிக்கும்.

14. இலக்கினம், மூன்றாம் திரேக்காணத்தில் அமைந்தால், முதல்பாவம் அடிவயிற்றையும், பன்னிரெண்டாம் பாவம் குதத்தையும், பாலினக் குறியையும், பதினொன்றாம் பாவம் நிதம்பத்தையும், பத்தாம் பாவம் தொடைகளையும் ஒன்பதாம் பாவம் முழங்கால்களையும், எட்டாம் பாவம் கணுக்கால்களையும், ஏழாம் பாவம் பாதங்களையும் குறிக்கும்.

    ஜென்ம இலக்கினம் உதயமாவதற்கு முன்பாகவே உதித்துவிட்ட பாவங்களான 12, 11, 10, 9, 8, 7 ஆகிய பாவங்கள் மேலே குறிப்பிட்ட உடல் பாகங்களின் இடது புறத்தையும் ஜன்ம இலக்கினத்திற்கு பிறகு உள்ள 1, 2, 3, 4, 5, 6 ஆகிய பாவங்கள் மேலே குறிப்பிட்ட உடல் பாகங்களின் வலது புறத்தையும் குறிக்கும்.

15. அசுப கிரகங்கள் அமைந்துள்ள பாவங்கள் குறிப்பிடும் உடலின் பாகங்களில் காயங்கள் அல்லது தழும்புகளும் ஏற்படும். அசுப கிரகங்களுடன் புதன் சேர்க்கை பெற்று நின்றிருந்தால் உறுதியாக காயங்களும், தழும்புகளும் ஏற்படும். அசுபகிரகங்கள், சுபகிரகங்களின் பார்வை பெற்றால் மச்சம் உண்டாகும். காயம், தழும்பு ஏற்படாது.

## இரண்டாம் பாவக பலன்கள்

1. தன ஸ்தானாதிபதி தன ஸ்தானத்திலேயே நின்றால் அல்லது கேந்திர, திரிகோணங்களில் நின்றால் செல்வத்தை விருத்தி செய்வார். தனஸ்தானாதிபதி துர் ஸ்தானங்களில் நின்றால் பண நஷ்டத்தை உண்டாக்குவார். இரண்டாம் பாவத்தில் சுபர்கள் நின்றால் செல்வத்தை விருத்தி செய்வார்கள், இரண்டாம் பாவத்தில் அசுபர்கள் நின்றால் செல்வத்தை அழித்து விடுவார்கள்.

2. இரண்டாம் பாவத்தில் குரு நின்றால் ஜாதகர் செல்வந்தர், செவ்வாயும் சேர்ந்து நின்றால் நிச்சயம் செல்வந்தராகி விடுவார்.

3. தன ஸ்தானாதிபதியும், இலாபாதிபதியும் பரிவர்த்தனை பெற்றாலும், இருவரும் சேர்ந்து கேந்திர, கோணங்களில் நின்றாலும் தன யோகம் ஏற்படும், ஜாதகர் செல்வந்தர் ஆகிவிடுவார்.

4. தன ஸ்தானாதிபதி கேந்திரத்தில் நின்று, அதற்கு திரிகோணத்தில் இலாபாதிபதி நின்றால் ஜாதகர் அதிகமான சம்பாத்தியம் உடையவர்.

5. தன ஸ்தானாதிபதியும், இலாபாதிபதியும் சேர்ந்து ஆறாம் பாவத்தில் நிற்க, இரண்டு மற்றும் பதினொன்றாம் பாவங்களில் அசுபர்கள் நின்றால் ஜாதகர் ஏழை.

6. தன ஸ்தானாதியும், இலாபாதிபதியும் சேர்ந்து அஸ்தமனடைந்து அசுபர்களுடன் சேர்ந்து நின்றால் உண்பதற்கு உணவு கிடைக்காது.

7. தன ஸ்தானாதிபதியும், இலாபாதிபதியும் சேர்ந்து துர் ஸ்தானங்களில் நிற்க, செவ்வாய் பதினொன்றிலும், ராகு இரண்டிலும் நின்றால் ஜாதகர் அரசு தண்டனைக்கு ஆளாகி செல்வத்தை இழப்பார்.

8. இலாப ஸ்தானத்தில் குரு, தன ஸ்தானத்தில் சுக்கிரன் தன ஸ்தானாதிபதி சுபர்களுடன் சேர்க்கை, பன்னிரெண்டில் ஒரு சுபர் நின்றால் ஜாதகர் ஆன்மீக சம்பந்தமாக செலவு செய்வார்.

9. இலாப ஸ்தானாதிபதி ஆட்சி, உச்சம் பெற்று பலமாக நின்றால் ஜாதகர் அனைவரையும் ஆதரிப்பார், அதனால் பெயரும் புகழும் அடைவார்.

10. தன ஸ்தானாதிபதி, சுபர்களுடன் சேர்ந்து நின்று பர்வதாம்சம் பெற்றால் பெயரும், புகழும் எல்லாவித செல்வங்களும், பெரும் முயற்சிகள் செய்யாமலேயே பெறுவார். தசவர்க்கத்தில் ஆறுவர்க்கங்களில் சுபவர்க்கம் பெறுவது பர்வதாம்சம் ஆகும்.

11. இரண்டாம் பாவாதிபதி சுபபலம் பெற்றிருந்தால் ஜாதகர் அழகான கண்களை பெற்றிருப்பார். துர்ஸ்தானங்களில் நின்றிருந்தால் கண்களில் நோய் ஏற்படும்.

12. இரண்டாம் பாவத்தில் அசுபர்கள் நின்றிருந்து, இரண்டாம் பாவாதிபதி அசுபர்களுடன் சேர்க்கை பெற்றிருந்தால் ஜாதகர் பொய் பேசுபவராகவும், புறம் பேசுபவராகவும் இருப்பார். வாய்வு சம்பந்தமான நோய் உடையவராக இருப்பார்.

13. இரண்டாம் பாவாதிபதி ஆட்சி, உச்சம் பெற்றிருந்து, குருவின் சேர்க்கை, பார்வை பெற்றிருந்தால் ஜாதகர், மதிப்பு, மரியாதை, செல்வாக்கு மிக்கவர்.

14. இரண்டாம் பாவாதிபதி சுக்கிரனுடன் சேர்ந்து நின்று, நவாம்சத்தில் உச்சம் பெற்றாலும், சுக்கிரனுடைய வீட்டில் நின்று இலக்கினாதிபதியின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றாலும் ஜாதகர் மாறுகண் உடையவர்.

15. இரண்டாம் பாவத்தில் சூரியன் மற்றும் சந்திரன் சேர்க்கை பெற்றிருந்தால் ஜாதகருக்கு மாலைக்கண் நோய் ஏற்படும். இரண்டாம் அதிபதி, சூரியன், இலக்கினாதிபதி மூவரும் சேர்க்கை பெற்றிருந்தால் பிறவிக் குருடன் ஆவார். இவற்றுடன் பத்தாம் அதிபதி சேர்ந்தால் தந்தை கண்பார்வை இழந்து விடுவார். நான்காம் அதிபதி சேர்ந்தால் தாய் கண்பார்வை இழந்துவிடுவார்.

16. அசுப பலன் தரவேண்டிய கிரகம் பலம் பெற்று நின்றிருந்தால் கெடுபலன் குறைந்துவிடும், துர்ஸ்தானங்களில் நின்றால் கெடுபலன்கள் அதிகம் நடைபெறும்.

17. இரண்டாம் பாவாதிபதியும் குருவும் சேர்ந்து துர்ஸ்தானங்களில் நின்றால் ஜாதகர் ஊமை. இவர்களுடன் தந்தை ஸ்தானதிபதி சேர்க்கை பெற்றால் தந்தை ஊமை, தாய் ஸ்தானதிபதி சேர்க்கை பெற்றால் தாய் ஊமை.

## மூன்றாம் பாவக பலன்கள்

1. சகோதர ஸ்தானம், தைரிய, வீரிய, காம ஸ்தானம் எனப்படும் மூன்றாம் பாவத்தில் சுபர்கள் நின்றாலும், பார்த்தாலும் ஜாதகர் ஆண்மை மிக்கவராக, தைரியசாலியாக, இளைய சகோதரர்கள் உடையவராக இருப்பார்.

2. மூன்றாம் பாவத்தில், மூன்றாம் பாவாதிபதியும், சகோதர காரகர் செவ்வாயும் சேர்க்கை பெற்று நின்றாலும் மூன்றாம் பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகருக்கு நிச்சயமாக இளைய சகோதரம் உண்டு.

3. மூன்றாம் பாவாதிபதியும், காரகர் செவ்வாயும் சேர்க்கை பெற்று நின்று, அசுபர் சம்பந்தம் பெற்றால் அல்லது இருவரும் சேர்ந்து துர்ஸ்தானங்களில் நின்றால் ஜாதகரின் சகோதரங்களுக்கு அசுப பலன்களே நடைபெறும்.

4. மூன்றாம் பாவாதிபதி ஆண் கிரகமாக இருந்து, பாவத்தில் ஆண் கிரகங்கள் நின்றால் சகோதரர்களும், மூன்றாம் பாவாதிபதி, பெண் கிரகமாக இருந்து, மூன்றாம் பாவத்தில் பெண் கிரகங்கள் நின்றால் சகோதரிகளும் ஜாதகருக்கு உண்டு. மூன்றாம் பாவத்தில் ஆண் கிரகங்களும், பெண் கிரகங்களும் இருந்தால், இருக்கும் கிரகங்களின் பலத்தை பொருத்து ஜாதகருக்கு சகோதரர்கள் அல்லது சகோதரிகள் உண்டு.

5. மூன்றாம் பாவாதிபதியும், சகோதர காரகர் செவ்வாயும் ஆட்சி, உச்சம் பெற்றாலும் இருவரும் சேர்ந்து கேந்திர, கோணங்களில் நின்றாலும் ஜாதகரின் சகோதரர்களுக்கு சுபபலன்களே நடைபெறும். இருவரும் சேர்ந்து எட்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகரின் சகோதரர்களுக்கு அசுப பலன்களே நடைபெறும்.

6. மூன்றாம் பாவத்தில் புதனும், மூன்றாம் பாவாதிபதி சந்திரனுடன் சேர்க்கை பெற்றும், செவ்வாய் சனியுடன் சேர்க்கை பெற்றும் நின்றால், ஜாதகருக்கு ஒரு மூத்த சகோதரியும், ஒரு இளைய சகோதரனும் உண்டு, அதன் பிறகு ஒரு இளைய சகோதரர் பிறந்து அற்பாயுளில் இறந்து விடுவார்.

7. மூன்றாம் பாவாதிபதி நீசம் பெற்றும், காரகர் செவ்வாய் ராகுவுடன் சேர்க்கை பெற்று நின்றாலும் ஜாதகரின் இளைய சகோதரர்கள் இறந்து விடுவார்கள்.

8. மூன்றாம் பாவாதிபதி கேந்திரத்திலும், அதற்கு திரிகோணத்தில் செவ்வாய் உச்சம் பெற்று குருவுடன் சேர்ந்து நின்றால் ஜாதகருக்கு அதிக சகோதரர்கள் உண்டு. இதில் இரண்டு மூத்த சகோதரர்களும் ஜாதகருக்கு பின் பிறந்த ஏழாவது, ஒன்பதாவது, பன்னிரெண்டாவது இளைய சகோதரர்கள் இறந்து விடுவார்கள். மற்ற அனைவரும் தீர்க்காயுளுடன் இருப்பார்கள்.

9. சகோதரகாரகர் செவ்வாய் பன்னிரெண்டாம் பாவத்திலும், மூன்றாம் பாவத்தில் குருவும், சந்திரனும் சேர்க்கை பெற்று நின்றால் ஜாதகருக்கு சகோதர, சகோதரிகள் இருப்பார்கள்.

10. மூன்றாம் பாவத்தில் சந்திரன் நின்று ஆண் கிரகங்கள் மட்டும் பார்த்தால் இளைய சகோதரர் மட்டும் உண்டு.

11. மூன்றாம் பாவத்தில் சந்திரன் நின்று, சுக்கிரன் சேர்ந்தாலோ அல்லது பார்த்தாலோ இளைய சகோதரி மட்டும் உண்டு.

12. மூன்றாம் பாவத்தில் சூரியன் நின்றால் மூத்த சகோதரருக்கும், சனி நின்றால் இளைய சகோதரருக்கும், செவ்வாய் நின்றால் மூத்த மற்றும் இளைய சகோதரர்களுக்கும் அசுபபலன்களே நடைபெறும்.

## நான்காம் பாவக பலன்கள்

1. நான்காம் பாவாதிபதியும் இலக்கினாதிபதியும் சேர்ந்து சுபர்களின் பார்வை பெற்று நான்காம் பாவத்தில் நின்றால், நான்காம் பாவ பலன்கள் முழுவதையும் ஜாதகர் பெறுவார்.
2. நான்காம் பாவாதிபதி ஆட்சி பெற்றோ, உச்சம் பெற்றோ அல்லது நவாம்சத்தில் ஆட்சி பெற்று நின்றால் ஜாதகர், வீடு, நிலம், வாகனங்கள், கால்நடைகள், இசைக் கருவிகள் உடையவராக இருப்பார்.
3. நான்காம் பாவாதிபதியும் பத்தாம் பாவாதிபதியும் சேர்ந்து கேந்திர கோணங்களில் நின்றால் ஜாதகரின் வீட்டு மதில் சுவர் பலமாகவும், வினோதமான கலவையால் அலங்கரிக்கப்பட்டும் இருக்கும்.
4. நான்காம் பாவாதிபதி சுபராகி, இன்னொரு சுபரால் பார்க்கப்பட வேண்டும், மேலும் புதன் இலக்கினத்தில் நிற்க வேண்டும். இந்த கிரக அமைப்புள்ள ஜாதகர் சுற்றத்தாரால் அன்போடும், மரியாதையோடும் மதிக்கப்படுவார்.
5. நான்காம் பாவம் தாயாரைக் குறிக்கும். நான்காம் பாவத்தில் ஒரு சுபர் நிற்க, நான்காம் அதிபதி உச்சம் பெற்றும், காரகர் சந்திரன் பலம் பெற்றும் நின்றால் ஜாதகரின் தாயார் நீண்ட ஆயுள் உடையவராக இருப்பார்.
6. நான்காம் பாவாதிபதியும், சுக்கிரனும் சேர்ந்து, கேந்திரம், அல்லது கோணத்தில் நின்று, புதன் உச்சம் பெற்று நின்றால் ஜாதகரின் தாயார் மிகுந்த மன மகிழ்ச்சியுடன் இருப்பார்.
7. நான்காம் பாவத்தில் சூரியனும், ஒன்பதாம் பாவத்தில் சந்திரனும், சனியும், பதினோராம் பாவத்தில் செவ்வாயும் நின்றால் ஜாதகர், பசு, எருமை போன்ற கால்நடைகள் அதிகமாகப் பெற்றிருப்பார்.
8. நான்காம் பாவம் சர ராசியாக அமைந்து, நான்காம் அதிபதியும், செவ்வாயும் சேர்ந்து ஆறு அல்லது பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் இளமையாக இருப்பார்.
9. நான்காம் பாவத்தில் சூரியனும், நான்காம் பாவாதிபதி சுக்கிரனுடன் சேர்ந்து உச்சம் பெற்று நிற்க ஜாதகர் தன் 32வது வயதில் வாகன யோகம் பெறுவார்.
10. நான்காம் பாவாதிபதியும், பத்தாம் அதிபதியும், சேர்க்கை பெற்று நிற்க, நான்காம் பாவாதிபதி நவாம்சத்தில் உச்சம் பெற்றால் ஜாதகர் தன் 42வது வயதில் வாகன யோகம் பெறுவார்.
11. நான்காம் பாவாதிபதி பதினொன்றாம் அதிபதியும் பரிவர்த்தனை பெற்று நின்றால் ஜாதகர் தன் 12வது வயதில் வாகன யோகம் பெறுவார்.
12. நான்காம் பாவம் சுபர் சம்பந்தம் பெற்றால், நான்காம் பாவ பலன்கள் சுபமாகவும் அசுபர் சம்பந்தம் பெற்றால் அசுபமாகவும் நடைபெறும்.

## ஐந்தாம் பாவக பலன்கள்

1. இலக்கினாதிபதியும் ஐந்தாம் பாவாதிபதியும் சேர்ந்து கேந்திரம், கோணங்களில் நின்றால் ஜாதகர், புத்திரர்களால், மகிழ்ச்சியும், முழுமையான குறைவற்ற சுகத்தை அடைவார்.
2. ஐந்தாம் பாவாதிபதி 6, 8, 12 ஆகிய துர் ஸ்தானங்களில் நின்றால் ஜாதகருக்கு புத்திர சுகம் குறைவு.
3. ஐந்தாம் பாவாதிபதி அஸ்தமனம் அடைந்திருந்தாலோ, அசுபர்களின் சேர்க்கை பெற்றிருந்தாலோ, மிகவும் பலம் குறைந்திருந்தாலோ ஜாதகருக்கு புத்திரபாக்கியம் இல்லை, குழந்தைகள் பிறந்தாலும் குழந்தைக்கு அற்ப ஆயுள் ஆகும்.
4. ஐந்தாம் அதிபதி ஆறில் நின்றும், இலக்கினாதிபதி செவ்வாயுடன் சேர்ந்து நின்றாலும் ஜாதகருக்கு ஒரு குழந்தை பிறந்து அற்பாயுளில் இறந்துவிடும்.
5. ஐந்தாம் பாவாதிபதி நீசமடைந்து 6, 8, 12 ஆகிய துர் ஸ்தானங்களில் நின்று ஐந்தாம் பாவத்தில் புதன் நின்றாலும் ஜாதகரின் மனைவி புத்ர தோஷத்தை அடைவார்.
6. சனியும், புதனும் ஐந்தாம் பாவத்தில் அமர்ந்திருக்க, ஐந்தாம் அதிபதி தன் பாவத்தைப் பார்க்காவிட்டாலோ அல்லது நீசமடைந்தாலோ ஜாதகரின் மனைவி புத்ர தோஷத்தை அடைவார்.
7. ஒன்பதாம் அதிபதி ஐந்தில் நிற்கவும், ஐந்தாம் அதிபதி நீசமடைந்து நிற்கவும் ஐந்தாம் பாவத்தில் புதனும் கேதுவும் நிற்கும் கிரக நிலை கொண்ட ஜாதகருக்கு மிகுந்த முயற்சியினால் குழந்தை பிறக்கும்.
8. ஐந்தாம் பாவாதிபதி நீசம் பெற்று 6, 8, 12ல் அல்லது பகைபெற்று நிற்கவும், ஐந்தாம் பாவத்தில் அசுபகிரகங்கள் நிற்கும் ஜாதகருக்கு மிகுந்த பிரயாசையினால் குழந்தை பிறக்கும்.
9. ஐந்தாம் பாவம், புதன் அல்லது சனியின் வீடாக அமைந்து அதில் சனி அல்லது மாந்தி நின்றாலோ அல்லது பார்த்தாலோ ஜாதகர் ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்வார்.
10. சூரியனும், சந்திரனும் ஒரே இராசி, ஔரை, நவாம்சத்தில் நிற்கப் பிறக்கும் குழந்தை மூன்று தாயார்களால் அல்லது இரண்டு தந்தையால் வளர்க்கப்படும்.
11. ஐந்தாம் பாவத்தில் ஆறு கிரகங்கள் நிற்கவும், ஐந்தாம் அதிபதி பன்னிரெண்டில் நிற்கவும் இக்கினாதிபதியும் சந்திரனும் பலம் பெற்று நின்றால் ஜாதகர் ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்வார்.

12. ஐந்தாம் பாவத்தை பலம் பெற்ற புதன், குரு, சுக்கிரன் பார்க்கவும் ஐந்தாம் அதிபதி பலம் பெற்றும் இருந்தால் ஜாதகருக்கு பல குழந்தைகள் பிறப்பார்கள்.

13. ஐந்தாம் பாவாதிபதி சந்திரனுடன் சேர்ந்து நின்றும் சந்திரனுடைய திரேகாணத்தில் நின்றும் இருந்தால் ஜாதகருக்கு பெண் குழந்தைகள் மட்டுமே பிறப்பார்கள்.

14. ஐந்தாம் பாவாதிபதி 1, 2, 3, 5, 9 ஆகிய பாவங்களில் உச்சம் பெற்று, குரு சம்பந்தம் பெற்ற நின்றால் ஜாதகருக்கு கண்டிப்பாக புத்திர பாக்கியம் உண்டு.

15. ஐந்தாம் பாவத்தில் மூன்று அல்லது நான்கு அசுபர்கள், சுபர் சம்பந்தம் பெறாமல் நிற்கவும், ஐந்தாம் அதிபதி நீசம் பெற்றும் நின்றால் ஜாதகர் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுவார். கீழ்த்தரமான தொழில் அமையும்.

16. ஐந்தாம் பாவத்தில் குரு நிற்கவும், ஐந்தாம் அதிபதி சுக்கிரனுடன் சேர்ந்து நின்றாலும் ஜாதகருக்கு 32 அல்லது 33வது வயதில் குழந்தை பிறக்கும்.

17. ஐந்தாம் பாவாதிபதியும், காரகர் குருவும் சேர்ந்து கேந்திரத்தில் நின்று இருந்தால் ஜாதகருக்கு 30 அல்லது 36வது வயதில் குழந்தை பிறக்கும்.

18. குரு ஒன்பதாம் பாவத்தில் நிற்கவும், சுக்கிரன் குருவிற்கு ஒன்பதில் நின்றாலோ அல்லது இலக்கினாதிபதியுடன் சேர்ந்து நின்றாலோ ஜாதகருக்கு 40வது வயதில் குழந்தை பிறக்கும்.

19. ஐந்தாம் பாவத்தில் ராகு நிற்கவும், ஐந்தாம் அதிபதி அசுபருடன் சேர்ந்து நிற்கவும், குரு நீசம் பெற்று நிற்கவும், ஜாதகரின் 32வது வயதில் ஜாதகரின் குழந்தை இறந்துவிடும்.

20. இலக்கினம் அல்லது குருவிற்கு ஐந்தாம் பாவத்தில் அசுபர்கள் நின்றால் ஜாதகர் தனது 33 அல்லது 36வது வயதில் தன் குழந்தையை இழந்து விடுவார்.

21. இலக்கினத்தில் மாந்தி நிற்கவும் இலக்கினாதிபதி நீசம் பெற்றும் நின்றால் ஜாதகர் தன் 56வது வயதில் புத்திரனை இழந்து வருத்தத்திற்கு ஆளாவார்.

22. நான்கு மற்றும் ஆறாம் பாவத்தில் அசுபர்கள் நிற்கவும், ஐந்தாம் அதிபதி இலக்கினத்தில் உச்சம் பெற்று நிற்கவும், ஐந்தாம் பாவ காரகர் சுபர்களுடன் சேர்ந்து நின்றால் ஜாதகருக்கு பத்து குழந்தைகள் பிறப்பார்கள்.

23. குரு உச்சம் பெற்று நிற்கவும், இரண்டாம் பாவாதிபதி இராகுவுடன் சேர்ந்து நிற்கவும் ஒன்பதாம் அதிபதி ஆட்சி பெற்று நின்றால் ஜாதகருக்கு ஒன்பது குழந்தைகள்.

24. குரு ஐந்து அல்லது ஒன்பதாம் பாவத்தில் நிற்கவும் ஐந்தாம் அதிபதி பலம் பெற்று நிற்கவும், இரண்டாம் அதிபதி பத்தில் நின்றாலும் ஜாதகருக்கு எட்டு குழந்தைகள் பிறப்பார்கள்.

25. ஒன்பதாம் பாவத்தில் சனி நிற்கவும், ஐந்தாம் அதிபதி ஆட்சி பெற்று நின்றாலும் ஜாதகருக்கு ஏழு குழந்தைகள் பிறப்பார்கள். அதில் இருவர் இரட்டையர் ஆவார்கள்.

26. இரண்டாம் அதிபதி ஆறிலும், ஐந்தாம் அதிபதி ஆட்சி பெற்றும் நின்றால் ஜாதகருக்கு ஆறு குழந்தைகள் பிறக்கும். அவற்றில் மூன்று குழந்தைகள் இறந்து விடும்.

27. சனிக்கு ஐந்தில் குரு நிற்கவும் அல்லது குருவிற்கு ஐந்தில் சனி நிற்கவும் ஐந்தாம் பாவத்தில் அசுபர்கள் நின்றால் ஜாதகருக்கு ஒரு குழந்தை மட்டும் உண்டு.

28. ஐந்தாம் பாவத்தில் அசுப கிரகங்கள் நிற்கவும், குருவுக்கு ஐந்தில் சனி நிற்கவும், இலக்கினாதிபதி இரண்டில் நிற்கவும், ஐந்தாம் அதிபதி செவ்வாயுடன் சேர்ந்து நிற்கவும் பிறந்த ஜாதகர் நீண்ட ஆயுளுடன் இருப்பார். ஆனால் அவருக்கு பிறக்கும் குழந்தைகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாக பிறந்து இறப்பார்கள்.

## ஆறாம் பாவக பலன்கள்

1. ஆறாம் பாவம் மூலமாக நோய்கள், தடைகள், சண்டையிடுதல், உடலில் சில பகுதிகளில் கட்டிகள் ஏற்படுதல், கீழ்ப்பிடித்த கட்டிகள், வெட்டுக் காயங்கள், எதிரிகள், பகைமை, கடன், நஷ்டம், காச நோய், மன கவலைகள், குழப்பங்கள், தீராத கண் நோய்கள், விஷத்தால் பாதிக்கப்படுதல், வயிற்றுவலி, சிறுநீர்க்குழாயில் ஏற்படும் வியாதிகள் வயிற்று போக்கு போன்ற நோய்களை குறிக்கும். குறிப்பாக ஆறாம் பாவம் நோய்கள் பற்றி குறிப்பிடும்.

2. ஆறாம் பாவாதிபதி நோய் மற்றும் காயங்களை உருவாக்குவார். ஆறாம் பாவம் குறிக்கும் உறுப்புகளிலும் ஆறாம் பாவாதிபதியுடன் சம்பந்தப்படும் கிரகங்கள் குறிக்கும் உறுப்புகளிலும் ஆறாம் பாவாதிபதி பார்க்கும் கிரகம் குறிப்பிடும் உறுப்புகளிலும் நோய் உண்டாகும்.

3. ஆறாம் பாவாதிபதி ஆட்சி பெற்று நின்றால் அல்லது லக்கினத்திலேயோ அல்லது எட்டாம் பாவத்திலேயோ நின்றால் ஜாதகருக்குக் காயங்கள் ஏற்படும். ஆறாம் பாவம் குறிப்பிடும் இராசி குறிப்பிடும் உறுப்புகளில் காயங்கள் ஏற்படும்.

4. ஜாதகரின் உறவினர்களைக் குறிப்பிடும் காரக கிரகங்கள் ஆறாம் அதிபதியுடன் சேர்ந்து ஆறு அல்லது எட்டாம் பாவத்தில் நின்றால், சம்பந்தப்பட்ட உறவினர்களுக்கு காயங்கள் ஏற்படும்.

5. ஆறாம் பாவாதிபதி சூரியனாக இருந்தால் உறவினரின் தலையில் காயங்கள், கட்டிகள், வீக்கம் ஏற்படும்.

   ஆறாம் பாவாதிபதி சந்திரனாக இருந்தால் உறவினரின் வாயில் நோய் ஏற்படும்.

   ஆறாம் பாவாதிபதி செவ்வாயாக இருந்தால் உறவினருக்கு கழுத்தில் நோய் உண்டாகும்.

   ஆறாம் பாவாதிபதி புதனாக இருந்தால் உறவினரின் தொப்புளில் நோய் உண்டாகும்.

   ஆறாம் பாவாதிபதி குருவானால் உறவினரின் மூக்கில் நோய் ஏற்படும்.

   ஆறாம் பாவாதிபதி சுக்கிரனானால் உறவினரின் கண்களில் நோய் ஏற்படும். ஆறாம் பாவாதிபதி சனியானால் உறவினரின் கால்களில் (பாதம்) நோய் ஏற்படும்.

6. இலக்கினாதிபதி, செவ்வாயின் வீடுகளாகிய மேஷம், விருச்சிகத்தில் அல்லதுபுதன் வீடுகளாகிய மிதுனம், கன்னியில் நின்று புதனின் பார்வையைப் பெற்றால் முகத்தில் கட்டிகள், காயங்கள், வீக்கம் முதலியவை உண்டாகும்.

7. செவ்வாய் அல்லது புதன் இலக்கினாதிபதியாகி, சந்திரன், ராகு மற்றும் சனியுடன் சேர்க்கை பெற்றால் ஜாதகருக்கு குஷ்டம் உண்டாகும்.

8. இலக்கினாதிபதி இலக்கினத்தில் நிற்காமல், சந்திரன், ராகு இலக்கினத்தில் நின்றால் ஜாதகருக்கு வெண்குஷ்டம் தோன்றும்.

9. இலக்கினத்தில் இலக்கினாதிபதி நிற்காமல், சனி, ராகு இலக்கினத்தில் நின்றால் ஜாதகருக்கு கருங்குஷ்டம் ஏற்படும்.

10. இலக்கினத்தில் இலக்கினாதிபதி நிற்காமல், செவ்வாய், இராகு நின்றால் ஜாதகருக்கு சிவப்பு நிற குஷ்டம் ஏற்படும்.

11. இலக்கினத்தில் ஆறாம் அதிபதி எட்டாம் அதிபதி, சூரியன் சேர்க்கை பெற்றிருந்தால் கடுமையான காய்ச்சலால் ஜாதகர் பாதிக்கப்படுவார்.

12. இலக்கினத்தில் ஆறாம் அதிபதி, எட்டாம் அதிபதி செவ்வாய் சேர்க்கை பெற்று இருந்தால் ஜாதகருக்கு கட்டிகள் அல்லது ஆயுதத்தால் காயங்கள் ஏற்படும். இலக்கினத்தில் ஆறாம் அதிபதி எட்டாம் அதிபதி, புதன் சேர்க்கை பெற்று நின்றால் ஜாதகருக்கு பித்த சம்பந்தமான நோய் ஏற்படும்.

இலக்கினத்தில் ஆறாம் அதிபதி எட்டாம் அதிபதி, குரு சேர்க்கை பெற்றிருப்பின் ஜாதகருக்கு எந்த நோயும் ஏற்படுவதில்லை.

இலக்கினத்தில் ஆறாம் அதிபதி எட்டாம் அதிபதி, சுக்கிரன் சேர்க்கை பெற்றிருந்தால் ஜாதகருக்கு பெண்கள் தொடர்பால் நோய்கள் ஏற்படும். இலக்கினத்தில் ஆறாம் அதிபதி எட்டாம் அதிபதி, சனி சேர்க்கை பெற்றிருந்தால் ஜாதகர் வாய்வு சம்பந்தமான வியாதிகளால் அல்லல் படுவார்.

இலக்கினத்தில் ஆறாம் அதிபதி எட்டாம் அதிபதி, இராகு சேர்க்கை பெற்றிருந்தால் ஜாதகருக்கு மூர்க்க குணமுள்ள கீழ்ஜாதி மக்களால் வெட்டுக்காயம் ஏற்படும்.

இலக்கினத்தில் ஆறாம் அதிபதி எட்டாம் அதிபதி, கேது சேர்க்கை பெற்றிருந்தால் ஜாதகருக்கு வயிறு, தொப்புள், சம்பந்தமான வியாதிகள் ஏற்படும்.

இலக்கினத்தில் ஆறாம் அதிபதி எட்டாம் அதிபதி சந்திரன் சேர்க்கை பெற்றிருந்தால் ஜாதகருக்கு கபம் சம்பந்தப்பட்ட நோய் ஏற்படும்.

13. ஆறாம் பாவத்தில் ஒரு அசுபர் நிற்கவும், ஆறாம் பாவாதிபதி அசுபருடன் சேர்ந்து நிற்கவும், சனியும், ராகுவும் சேர்ந்து நின்றால் ஜாதகர் ஆயுள் முழுதும் நோயால் பாதிக்கப்படுவார்.

14. ஆறாம் பாவத்தில் செவ்வாய் நின்று, ஆறாம் அதிபதி எட்டில் நின்றால் ஜாதகர் தனது ஆறாம் வயதிலும் பன்னிரெண்டாம் வயதிலும் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்படுவார்.

15. ஆறாம் பாவத்தில் குரு நிற்கவும் குருவின் வீடுகளான தனுசு, மீனத்தில் சந்திரன் நின்றால் ஜாதகர் தனது இளம் வயதில் அல்லது 22ம் வயதில் தொழுநோயால் பாதிக்கப்படுவார்.

16. ஆறாம் பாவத்தில் இராகு நிற்கவும், கேந்திரத்தில் மாந்தி நிற்கவும், இலக்கினாதிபதி எட்டாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் தனது 26வது வயதில் காசநோயால் பாதிக்கப்படுவார்.

17. பன்னிரெண்டாம் பாவாதிபதி ஆறாம் பாவத்திலும், ஆறாம் அதிபதி பன்னிரெண்டாம் பாவத்திலும் நின்றால் மண்ணீரல் நோயால் ஜாதகர் தன்னுடைய 29 அல்லது 30ம் வயதில் பாதிக்கப்படுவார்.

18. ஆறாம் பாவத்தில் சந்திரனும், செவ்வாயும் சேர்க்கை பெற்று நின்றால் ஜாதகர் ரத்த சோகை நோயால் பாதிக்கப்படுவார்.

19. இலக்கினாதிபதி இலக்கினத்தில் இருந்து, சனி பகை வீட்டில் இருந்தால் ஜாதகர் முடக்கு வாதம் போன்ற வாய்வு சம்பந்தப்பட்ட நோயால் தனது 39வது வயதில் பாதிக்கப்படுவார்.

20. எட்டாம் அதிபதி ஆறில் நிற்கவும், பன்னிரெண்டாம் அதிபதி இலக்கினத்தில் நிற்கவும், சந்திரன் ஆறாம் பாவாதிபதியுடன் சேர்ந்து நின்றால் ஜாதகருக்கு தன்னுடைய எட்டாவது வயதில் மிருகங்களால் தொல்லைகள் ஏற்படும்.

21. இராகு ஆறு அல்லது எட்டாம் பாவத்தில் நிற்கவும், ராகுவுக்கு எட்டில் சனி நிற்கவும் பிறந்த ஜாதகரின் 1½க்கு அல்லது 2வது வயதில் நெருப்பினால் விபத்தும், 3வது வயதில் பறவைகளால் விபத்துகளும் ஏற்படும்.

22. சூரியன் ஆறு அல்லது எட்டாம் பாவத்தில் நிற்கவும், சூரியனுக்கு பன்னிரெண்டில் சந்திரன் நிற்கவும் பிறந்த ஜாதகருக்கு 5 அல்லது 9வது வயதில் நீரில் கண்டம் ஏற்படும்.

23. எட்டாம் பாவத்தில் சனி நிற்கவும் சனிக்கு பன்னிரெண்டில் செவ்வாய் நிற்கவும் ஜாதகர் தனது 10 அல்லது 30வது வயதில் கட்டி கொப்ளம் நோயால் பாதிக்கப்படுவார்.

24. எட்டாம் அதிபதி இராகுவுடன் சேர்க்கை நாலாம் பாவத்தில் ஆட்சி பெற்று நிற்கவும், இந்த சேர்க்கையானது எட்டாம் பாவத்துக்கு ஐந்து அல்லது ஒன்பதாம் பாவமாக இருந்தால் ஜாதகர் தனது 18 அல்லது 22வது வயதில் ரத்த குழாய்களில் கட்டிகள், வீக்கம் மற்றும் சிறுநீரக குழாய்களில் நோய்கள் ஏற்பட்டு பாதிக்கப்படுவார்.

25. பதினொன்றாம் அதிபதி ஆறாம் பாவத்திலும் ஆறாம் அதிபதி பதினொன்றாம் பாவத்திலும் நின்றால் ஜாதகர் தனது 31வது வயதில் எதிரிகளால் தன் சொத்துக்களை இழப்பார்.

26. ஐந்தாம் அதிபதி ஆறில் நிற்கவும், ஆறாம் அதிபதி குருவுடன் சேர்ந்து நிற்கவும், பன்னிரெண்டாம் அதிபதி இலக்கினத்திலும் நின்றால் ஜாதகரின் மகனே அவருக்கு எதிரி ஆவார்.

27. இலக்கினாதிபதி ஆறாம் பாவத்திலும் ஆறாம் அதிபதி இலக்கினத்திலும் பரிவர்த்தனை பெற்று நின்றால் ஜாதகர் தனது 10 மற்றும் 19வது வயதுகளில் நாய்கள் மூலம் விபத்து உண்டாகும்.

## 7ம் பாவகம் முதல் 12ம் பாவகம் வரை பலன்கள்

### ஏழாம் பாவக பலன்கள்

1. ஏழாம் பாவாதிபதி ஆட்சி அல்லது உச்சம் பெற்று நின்றிருந்தால் ஜாதகர் தன் மனைவி மூலம் முழுமையான இல்லற சுகம் பெறுவார்.
2. ஏழாம் பாவாதிபதி துர்ஸ்தானங்களான 6, 8, 12 ஆகிய ஸ்தானங்களில் நின்றிருந்தால் ஜாதகரின் மனைவி நோயாளியாக இருப்பார்.
3. ஏழாம் பாவத்தில் சுக்கிரன் நின்றிருந்தால், ஜாதகர் மனைவியிடம் அதிகமான பாசம் உள்ளவர். சுக்கிரன் அசுப கிரகத்துடன் சேர்ந்து எந்த பாவத்தில் நின்றாலும் மனைவியின் ஆயுள் குறைவு ஆகும்.
4. ஏழாம் பாவாதிபதி பலம் பெற்று, சுபர்களின் சம்பந்தமும் பெற்றிருந்தால் ஜாதகர் செல்வந்தராகவும், மதிக்கத்தக்கவராகவும், மகிழ்ச்சி மிக்கவராகவும், அதிர்ஷ்டம் மிக்கவராகவும் இருப்பார்.
5. ஏழாம் பாவாதிபதி நீசம், பகை, அஸ்தமனம் பெற்று பலம் குறைந்து நின்றிருந்தால் ஜாதகரின் மனைவி நோயாளியாக இருப்பார்.
6. ஆறாம் பாவத்திலும், பன்னிரண்டாம் பாவத்திலும் அசுபர்கள் நிற்கவும் பட்ச பலம் குறைந்த அல்லது தேய்பிறை சந்திரன் ஐந்தாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் தன் மனைவிக்கு அடங்கி நடப்பவராக இருப்பார், மேலும் தன் உறவினர்களிடம் பகைமை கொண்டவராகவும் இருப்பார்.
7. ஏழாம் பாவாதிபதி உச்சம் பெற்று நிற்கவும், ஏழாம் பாவத்தில் ஒரு சுபர் நிற்கவும் இலக்கினாதிபதி பலம் பெற்று ஏழாம் பாவத்தில் நின்றிருந்தால் ஜாதகரின் மனைவி நற்குணங்கள் மிக்கவராகவும், புத்திரர்கள், பேரன்கள் பெற்று வம்சத்தை விருத்தி செய்பவராகவும் இருப்பார்.
8. ஏழாம் பாவத்தில் அசுபர்கள் நிற்கவும், ஏழாம் அதிபதி அசுபர்களுடன் சேர்ந்து நிற்கவும். குறிப்பாக ஏழாம் பாவமும், ஏழாம் அதிபதியும், பலம் குறைந்தால் ஜாதகர் தன் மனைவியை இழப்பார்.
9. ஏழாம் பாவாதிபதி பலம் குறைந்து 6, 8, 12 ஆகிய துர்ஸ்தானங்களில் நின்றிருந்தால் ஜாதகர் தன் மனைவியை இழப்பார்.
10. ஏழாம் பாவத்தில் சந்திரன் இருக்கவும் ஏழாம் அதிபதி பன்னிரெண்டாம் பாவத்தில் நிற்கவும், களத்திர காரகன் சுக்கிரன் பலம் குறைந்து இருந்தால் ஜாதகர் தன் மனைவி மூலம் எந்த சுகத்தையும், மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் பெறமாட்டார்.
11. எட்டாம் பாவத்துக்கு ஏழாம் பாவத்தில் அதாவது இரண்டாம் பாவத்தில் சுக்கிரன் நிற்க இரண்டாம் அதிபதி செவ்வாயுடன் சேர்க்கை பெற்று நின்றிருந்தால் ஜாதகருக்கு 22 அல்லது 27 வது வயதில் திருமணம் நடைபெறும்.

12. இலக்கினாதிபதி, ஏழாம் அதிபதியின் நவாம்சத்தில் நின்றிருந்து ஏழாம் அதிபதி பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றிருந்தால் ஜாதகருக்கு 23 அல்லது 26ல் திருமணம் நடைபெறும்.

13. எட்டாம் அதிபதி ஏழாம் பாவத்தில் நிற்கவும் நவாம்ச லக்கினத்தில் சுக்கிரன் நிற்கவும், ஜாதகருக்கு 25 அல்லது 33வது வயதில் திருமணம் நடைபெறும்.

14. சுக்கிரன் ஒன்பதாம் பாவத்துக்கு ஒன்பதாம் பாவத்தில் அதாவது ஐந்தாம் பாவத்தில் நிற்க, ஐந்து அல்லது ஒன்பதாம் பாவத்தில் இராகு நிற்கவும் 31 அல்லது 33வது வயதில் திருமணம் நடைபெறும்.

15. ஒன்பதாம் பாவத்துக்கு ஏழாம் பாவத்தில் சுக்கிரன் நிற்கவும் சுக்கிரனுக்கு ஏழில் ஏழாம் அதிபதி நிற்கவும், ஜாதகருக்கு 27 அல்லது 30வது வயதில் திருமணம் நடைபெறும்.

16. ஏழாம் அதிபதி நீசம் பெற்று நிற்கவும், சுக்கிரன் ஆறு அல்லது எட்டாம் பாவத்தில் நின்றால், ஜாதகரின் 18 அல்லது 33 வது வயதில் ஜாதகரின் மனைவி மாரகம் அடைவார்.

17. ஏழாம் அதிபதி எட்டாம் பாவத்திலும், பன்னிரெண்டாம் அதிபதி ஏழாம் பாவத்திலும் நின்றால் ஜாதகரின் 19வது வயதில் ஜாதகரது மனைவி மாரகம் அடைவார்.

18. செவ்வாய் ஆறாம் பாவத்திலும், இராகு ஏழாம் பாவத்திலும், சனி எட்டாம் பாவத்திலும் நின்றால் ஜாதகரின் மனைவிக்கு அற்பு ஆயுள் ஆகும்.

## எட்டாம் பாவக பலன்கள்

1. எட்டாம் பாவாதிபதி கேந்திரம், அல்லது திரிகோணத்தில் நின்றால் ஜாதகர் நீண்ட ஆயுள் உடையவராக இருப்பார்.

2. எட்டாம் பாவாதிபதியும், இலக்கினாதிபதியும், ஒரு அசுப கிரகத்துடன் சேர்க்கை பெற்று எட்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் குறைந்த ஆயுள் உடையவராக இருப்பார்.

3. ஆறாம் பாவாதிபதி ஆறாம் பாவத்திலேயே நிற்கவும் அல்லது பன்னிரண்டாம் அதிபதி பன்னிரெண்டிலேயே நிற்கவும் அல்லது இருவரும் சேர்ந்து இலக்கினத்திலோ அல்லது எட்டாம் பாவத்திலோ நின்றால் ஜாதகர் தீர்க்காயுள் உடையவராக இருப்பார்.

4. ஐந்தாம் அதிபதி, இலக்கினாதிபதி மற்றும் எட்டாம் அதிபதி ஆகிய மூவரும் ஆட்சிபெற்று, அல்லது சுய நவாம்சம் பெற்று அல்லது நட்பு பெற்று நின்றால் ஜாதகர் நீண்ட ஆயுள் உடையவராக இருப்பார்.

5. இலக்கினாதிபதி, ஆயுள் ஸ்தானாதிபதி, தசம ஸ்தானாதிபதி மற்றும் ஆயுள் காரகர் சனி ஆகிய நால்வரும் கேந்திரம், திரிகோணம் அல்லது பதினொன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் நீண்ட ஆயுள் உடையவராக இருப்பார்.

6. ஆயுளை நிர்ணயிப்பதற்கு பலவிதமான கிரக சேர்க்கைகள், யோகங்கள் இருந்த போதிலும், அவற்றில் பலம் மிக்க கிரக அமைப்புகள், யோகங்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு ஆயுள் நிர்ணயம் செய்ய வேண்டும்.

7. எட்டாம் அதிபதி கேந்திரத்தில் நிற்கவும், இலக்கினாதிபதி பலம் குறைந்தும் இருந்தால், ஜாதகரது ஆயுள் இருபது முதல் முப்பத்தி இரண்டு வரை இருக்கும்.

8. எட்டாம் பாவாதிபதி நீசம் பெற்று நிற்கவும், எட்டாம் பாவத்தில் ஒரு அசுபகிரகம் நிற்கவும், இலக்கினாதிபதியும் பலம் குறைந்து நின்றால் ஜாதகர் குறைந்த ஆயுள் உடையவராக இருப்பார்.

9. எட்டாம் பாவாதிபதி ஒரு அசுபருடன் சேர்ந்திருக்க, எட்டிலும், பன்னிரெண்டிலும் அசுபர்கள் நின்றால் ஜாதகர் குறைந்த ஆயுள் உடையவராவார்.

10. அசுப கிரகங்கள் கேந்திர கோணங்களில் நிற்கவும், சுப கிரகங்கள் ஆறு அல்லது எட்டாம் பாவத்தில் நிற்கவும், எட்டாம் பாவாதிபதி இலக்கினத்தில் நீசம் பெற்று நிற்க ஜாதகர் குறைந்த ஆயுள் உடையவராக இருப்பார்.

11. ஐந்தாம் பாவத்திலும், எட்டாம் பாவத்திலும் அசுபர்கள் நிற்க எட்டாம் அதிபதியும் அசுபருடன் சேர்ந்து நின்றால் ஜாதகர் மிகவும் குறைந்த ஆயுள் உடையவராக இருப்பார்.

12. எட்டாம் பாவாதிபதி எட்டாம் பாவத்தில் ஆட்சி பெற்று நிற்கவும், சந்திரன் அசுப கிரகத்துடன் சேர்க்கை பெற்று சுபர் சம்பந்தம் பெறாமல் நின்றால், ஜாதகர் பிறந்த ஒரு மாதத்திற்குள் இறந்து விடுவார்.

13. இலக்கினாதிபதி உச்சம் பெற்று நிற்கவும், சந்திரன் பதினொன்றாம் பாவத்தில் நிற்கவும், எட்டாம் பாவத்தில் குரு நின்றால் ஜாதகர் நீண்ட ஆயுள் உடையவராக இருப்பார்.

14. இலக்கினம் மிகவும் பலம் பெற்று இருக்கவும், ஒரு கேந்திரத்திலிருந்து சுபர் இலக்கினத்தைப் பார்த்தால் ஜாதகர், நற்குணங்கள் அமையப் பெற்றவராகவும், செல்வம் மிக்கவராகவும், நீண்ட ஆயுள் உடையவராகவும் இருப்பார்.

## ஒன்பதாம் பாவக பலன்கள்

1. ஒன்பதாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் பலம் பெற்று நின்றிருந்தால் ஜாதகர் அதிர்ஷ்டசாலியாக இருப்பார்.
2. குரு ஒன்பதாம் பாவத்தில் நிற்கவும், ஒன்பதாம் அதிபதி கேந்திரத்தில் நிற்கவும், இலக்கினாதிபதி பலம் பெற்று நின்றிருந்தால் ஜாதகர் மிகுந்த அதிர்ஷ்டசாலியாவார்.
3. ஒன்பதாம் பாவாதிபதி பலம் பெற்று நிற்கவும், ஒன்பதாம் பாவத்தில் சுக்கிரன் நிற்கவும், குரு கேந்திரத்தில் நின்றிருந்தால் ஜாதகரின் தந்தை அதிர்ஷ்டசாலியாக இருப்பார்.
4. ஒன்பதாம் பாவத்திற்கு இரண்டாம் பாவத்தில் அல்லது நான்காம் பாவத்தில் செவ்வாய் நிற்கவும், ஒன்பதாம் அதிபதி நீசம் பெற்று நின்றிருந்தால் ஜாதகரின் தந்தை ஏழையாக இருப்பார்.
5. ஒன்பதாம் பாவாதிபதி உச்சம் பெற்று நிற்கவும், சுக்கிரன் கேந்திரத்தில் நிற்கவும், நவாம்சத்தில் ஒன்பதாம் பாவத்தில் குரு நின்றிருந்தால் ஜாதகரின் தந்தை நீண்ட ஆயுளுடன் இருப்பார்.
6. ஒன்பதாம் பாவாதிபதி குருவின் பார்வை பெற்று கேந்திரத்தில் நின்றிருந்தால் ஜாதகரின் தந்தை அதிகமான வாகனங்களை உடையவராகவோ, அரசராகவோ இருப்பார் அல்லது அரசருக்கு சமமானவராகவோ வாழ்வார்.
7. ஒன்பதாம் பாவாதிபதியும், பத்தாம் பாவாதிபதியும் பரிவர்த்தனை பெற்று, சுபகிரகத்தின் பார்வை பெற்றிருந்தால் ஜாதகரின் தந்தை செல்வந்தராகவும், புகழ்மிக்கவராகவும் இருப்பார்.
8. சூரியன் உச்சம் பெற்று நிற்க, ஒன்பதாம் பாவாதிபதி லாபஸ்தானத்தில் நின்றிருந்தால் ஜாதகர் ஆன்மீக நாட்டம் மிக்கவராகவும், அரசு ஆதரவு பெற்றவராகவும், தந்தையிடம் மிகவும் மதிப்பு, மரியாதை உடையவராகவும் இருப்பார்.
9. சூரியன் திரிகோணத்தில் நிற்கவும், ஒன்பதாம் பாவாதிபதி குருவின் சம்பந்தம் பெற்று ஏழாம் பாவத்தில் நின்றிருந்தால் ஜாதகர் தன் தந்தையிடம் மிகவும் மதிப்பு, மரியாதை உள்ளவராக இருப்பார்.
10. இரண்டாம் பாவாதிபதியும், ஒன்பதாம் பாவாதிபதியும் பரிவர்த்தனை பெற்றிருந்தால் ஜாதகர் அதிர்ஷ்டசாலியாயும், தன்னுடைய 32வது வயதில் வாகன வசதிகள், புகழ் பெறுபவராகவும் இருப்பார்.
11. இலக்கினாதிபதியும், ஆறாம் பாவாதிபதியும் சேர்க்கை பெற்று ஒன்பதாம் பாவத்தில் நின்றால் தந்தையும், மகனும் ஒருவருக்கொருவர் எதிரிகளாக

இருப்பார்கள். மேலும் ஜாதகரின் தந்தை பிறரால் இகழப்படுபவராகவும், நிந்தனை செய்யப்படுபவராகவும் இருப்பார்.

12. ஒன்பதாம் பாவாதிபதியும் மூன்றாம் பாவாதிபதியும் பலமில்லாமல் நிற்கவும், ஒன்பதாம் பாவாதிபதி நீசம் பெற்று அல்லது அஸ்தமனம் அடைந்து நின்றிருந்தால் ஜாதகர் தன்னுடைய உணவிற்கே பிச்சை எடுக்கும் நிலையில் இருப்பார்.

13. சூரியன் 6, 8, 12 ஆகிய துர்ஸ்தானங்களில் ஒன்றில் நிற்கவும், அஷ்டமாதிபதி ஒன்பதாம் பாவத்தில் நிற்கவும், பன்னிரெண்டாம் பாவாதிபதி இலக்கினத்தில் நிற்கவும், ஆறாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் நின்றிருந்தால் ஜாதகர் பிறப்பதற்கு முன்பே ஜாதகரின் தந்தை இறந்திருப்பார்.

14. சூரியன் எட்டாம் பாவத்திலும், எட்டாம் பாவாதிபதி, ஒன்பதாம் பாவத்திலும் நின்றிருந்தால் ஜாதகர் தன்னுடைய ஒரு வயதிற்குள் தந்தையை இழப்பார்.

15. பன்னிரெண்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் நிற்கவும், ஒன்பதாம் பாவாதிபதி நீசம் பெற்றும் இருந்தால் ஜாதகர் தன்னுடைய 3வது அல்லது 16வது வயதில் தன்னுடைய தந்தையை இழப்பார்.

16. இலக்கினாதிபதியும், சூரியனும் சேர்க்கை பெற்று எட்டாம் பாவத்தில் நின்றிருந்தால் ஜாதகர் தன்னுடைய 2 அல்லது 12வது வயதில் தந்தையை இழப்பார்.

17. ஒன்பதாம் பாவத்திற்கு எட்டாம் பாவத்தில் அதாவது இலக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் இராகு நிற்கவும், ஒன்பதாம் பாவத்திற்கு ஒன்பதாம் அதாவது இலக்கினத்திற்கு ஐந்தில் சூரியன் நின்றிருந்தால் ஜாதகர் தன்னுடைய 16வது அல்லது 18வது வயதில் தந்தையை இழப்பார்.

18. சூரியனும் இராகுவும் சேர்க்கை பெற்றிருக்கவும், சந்திரனுக்கு ஒன்பதாம் பாவத்தில் சனி நின்றிருந்தால் ஜாதகர் தன்னுடைய 7 அல்லது 19வது வயதில் தந்தையை இழப்பார்.

19. ஒன்பதாம் பாவாதிபதியும், பன்னிரெண்டாம் பாவாதிபதியும் பரிவர்த்தனை பெற்றிருந்தால் ஜாதகர் தன்னுடைய 44வது வயதில் தனது தந்தையை இழப்பார்.

20. இலக்கினாதிபதி எட்டில் நிற்கவும், சந்திரன் சூரியனின் நவாம்சத்தில் நின்றிருக்க ஜாதகர் தனது 35 அல்லது 41வது வயதில் தந்தையை இழப்பார்.

21. சூரியன் ஒன்பதாம் பாவாதிபதியாகி சனி மற்றும் செவ்வாயுடன் சேர்க்கை பெற்று நின்றால், ஜாதகர் தன் 50 வயதில் தந்தையை இழப்பார்.

22. ஏழாம் பாவத்திற்கு ஒன்பதாம் பாவத்தில் (இலக்கினத்திற்கு மூன்றாம் பாவத்தில்) சூரியன் நிற்கவும், ஏழாம் பாவத்திற்கு மூன்றாம் பாவத்தில் (இலக்கினத்திற்கு ஒன்பதாம் பாவத்தில்) இராகு நின்றிருந்தால் ஜாதகர் தனது 6 அல்லது 25வது வயதில் தனது தந்தையை இழப்பார்.

23. எட்டாம் பாவத்திற்கு ஏழாம் பாவத்தில் (இலக்கினத்திற்கு இரண்டில்) சனி நிற்க சனிக்கு ஏழில் சூரியன் இருக்கப் பிறந்த ஜாதகர் தனது 21 அல்லது 26வது வயதில் தந்தையை இழப்பார்.

24. ஒன்பதாம் பாவாதிபதி நீசம் பெற்று நிற்கவும், அந்த ராசிக்கு அதிபதி ஒன்பதாம் பாவத்தில் நிற்கவும் ஜாதகர் தனது 26 அல்லது 33வது வியதில் தந்தையை இழப்பார்.

25. சுக்கிரன் உச்சம் பெற்று நிற்கவும், ஒன்பதாம் பாவாதிபதி சுக்கிரனுடன் சேர்ந்து நிற்கவும், சனி மூன்றாம் பாவத்தில் நிற்கவும் பிறந்த ஜாதகர் பல வகைகளில் அதிர்ஷ்டம் பெற்றவராக இருப்பார்.

26. ஒன்பதாம் பாவத்தில் குரு நிற்கவும், ஒன்பதாம் பாவாதிபதி கேந்திரத்தில் நிற்கவும் பிறந்த ஜாதகர் மிக அதிகமான செல்வச் சேர்க்கை பெற்றிருப்பார்.

27. புதன் உச்சம் பெற்று நிற்கவும், ஒன்பதாம் பாவாதிபதி ஆட்சி பெற்ற நிற்கவும் பிறந்த ஜாதகர் தன்னுடைய 36வது வயதிற்குப் பிறகு மிக அதிகமான செல்வச் சேர்க்கையை பெறுவார்.

28. இலக்கினாதிபதியும், ஒன்பதாம் பாவாதிபதியும் பரிவர்த்தனை பெற்று நிற்கவும், ஏழாம் பாவத்தில் குரு நிற்கவும் பிறந்த ஜாதகர் அதிகமான செல்வ வளங்களு வாகன வசதிகளும் பெற்றிருப்பார்.

29. ஒன்பதாம் பாவத்திற்கு ஒன்பதாம் பாவத்தில் (இலக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில்) ராகு நிற்கவும், ஐந்தாம் பாவாதிபதி எட்டாம் பாவத்தில் நிற்கவும், ஒன்பதாம் பாவாதிபதி நீசம் பெற்று நிற்கவும் பிறந்த ஜாதகர் அதிர்ஷ்டம் அற்றவராக இருப்பார்.

30. சந்திரனும், சனியும் சேர்ந்து ஒன்பதாம் பாவத்தில் நிற்கவும இலக்கினாதிபதி நீசம் பெற்று நிற்கவும் பிறந்த ஜாதகர் தான் உண்ணும் உணவிற்கும் கூட பிச்சை எடுக்க வேண்டிய நிலையில் இருப்பார்.

## பத்தாம் பாவக பலன்கள்

1. பத்தாம் பாவாதிபதி இராசி அல்லது நவாம்சத்தில் ஆட்சி அல்லது உச்சம் பெற்று பலத்துடன் இருக்க புகழும், நற்பெயரும் மிக்கவர். பெற்றோரால் கிடைக்கக் கூடிய அனைத்து மகிழ்ச்சியையும் அனுபவிப்பார்.
2. பத்தாம் அதிபதி பலம் குறைந்தால் தன் தொழிலில் கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படும் பத்தாம் அதிபதிக்கு கேந்திரம், திரிகோணத்தில் இராகு இருந்தால், யாகம், ஹோமம் செய்யும் தொழிலில் ஈடுபடுவார்.
3. பத்தாம் அதிபதி சுபர்களுடன் சேர்ந்து சுபர் இராசியில் அமர்ந்து இருந்தால் ஜாதகருக்கு எப்பொழுதும் தொழிலில் சிறந்த ஆதரவும், அரசு ஆதரவும் கிடைக்கும். மாறுபட்டு இருந்தால் மாறுபட்ட பலனே நடைபெறும்.
4. பத்தாம் பாவத்திலும் பதினொன்றாம் பாவத்திலும் அசுபர்கள் அமர்ந்திருந்தால் ஜாதகர் தீய காரியங்களைச் செய்வார். அதனால் கெட்ட பெயர் ஏற்படும்.
5. பத்தாம அதிபதி இராகுவுடன் சேர்ந்து எட்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகர் பெரியமுட்டாளாக இருப்பார். மக்களால் வெறுக்கப்படுவார். தீய காரியங்களை செய்வார்.
6. பத்தாம் அதிபதி செவ்வாய் மற்றும் சனியுடன் சேர்ந்து எழில் இருந்து ஏழாம் அதிபதி அசுபருடன் சேர்ந்து இருந்தால் ஜாதகர் தன் உணவுக்காக தீயகாரியங்கள், சட்ட விரோதச் செயல்கள் செய்வார்.
7. பத்தாம் அதிபதி குருவுடன் சேர்ந்து தன் உச்ச ராசியில் அமர்ந்திருக்க ஒன்பதாம் அதிபதி பத்தில் இருந்தால் ஜாதகர் மதிப்பு, மரியாதை, கௌரவம், செல்வம், புகழ், தைரியம் மிக்கவர்.
8. பதினொன்றாம் அதிபதி பத்தாம் பாவத்திலும், பத்தாம் அதிபதி இலக்கினத்திலும் அல்லது இருவரும் சேர்ந்து கேந்திரத்தில் நின்றால் ஜாதகர் மிகவும் மகிழ்ச்சி உள்ளவர்.
9. பத்தாம் அதிபதி மீனத்தில் குருவோடு சேர்ந்திருந்தால் ஜாதகர் விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்களுடன் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்.
10. சூரியன், செவ்வாய், சனி, இராகு பதினொன்றாம் பாவத்தில் இருந்தால் ஜாதகர் தன்னுடைய செயல்கள் அனைத்திலும் தோல்வியடைவார்.
11. குருவும், சுக்கிரனும் சேர்ந்து மீனத்தில் நிற்கவும், இலக்கினாதிபதி பலம் பெற்று இருக்கவும், சந்திரன் உச்சம் பெற்று நிற்கவும், இந்த கிரக நிலை அமைந்த ஜாதகர் நன்கு கற்றவராகவும், செல்வந்தராகவும், மகிழ்ச்சி மிக்கவராகவும் இருப்பார்.

12. பத்தாம் அதிபதி பதினொன்றிலும், பதினொன்றாம் அதிபதி இலக்கினத்திலும், சுக்கிரன் பத்திலும் இருந்தால் ஜாதகர் மதிப்பு மிக்க நவரத்தினக் கற்களை உடைமையாகப் பெற்றிருப்பார்.

13. பத்தாம் அதிபதி கேந்திர, திரிகோணத்தில், உச்ச நிலையில், குரு சம்மந்தம் பெற்று அமர்ந்திருந்தால், ஜாதகர் அனைவராலும் புகழத் தக்க செயல்கள் புரிவார்.

14. பத்தாம் அதிபதி இலக்கினாதிபதியுடன் சேர்ந்து இலக்கினத்திலும், சந்திரன் கேந்திர, கோணங்களில் நின்றிருந்தால் ஜாதகர் நற்செயல்களை செய்வதில் ஆர்வம் மிக்கவராவார்.

15. சனி பத்தாம் பாவத்தில் நீசம் பெற்ற கிரகத்துடன் அமர்ந்திருக்க, நவாம்ச இலக்கினத்திற்கு பத்தாம் பாவத்தில் குரு அசுப கிரகத்துடன் சேர்ந்து நின்றிருந்தால் ஜாதகர் செயலற்றவர் ஆவார்.

16. பத்தாம் அதிபதி எட்டாம் பாவத்திலும், எட்டாம் பாவாதிபதி அசுபருடன் சேர்ந்து பத்தாம் பாவத்திலும் சேர்க்கை பெற்றிருந்தால், ஜாதகர் தீய செயல்களை செய்வார்.

17. பத்தாம் பாவாதிபதி நீசம் பெற்றிருக்க, பத்தாம் பாவத்திற்கு பத்தாம் பாவமான இலக்கினத்திற்கு ஏழாம் பாவத்திலும் அசுபர்கள் இருந்தால் ஜாதகர் தனது எல்லா செயல்களிலும், ஜீவன வகைகளிலும் கஷ்டப் படுவார்.

18. பத்தாம் பாவத்தில் சந்திரன் நிற்க, பத்தாம் பாவத்திற்கு திரிகோணத்தில் அல்லது இலக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில், பத்தாம் அதிபதி இருந்தால் ஜாதகர் புகழ் பெற்றவர் ஆவார்.

19. பதினொன்றாம் அதிபதி பத்தாம் பாவத்தில் நிற்கவும் பத்தாம் அதிபதி பலத்துடன் நிற்கவும், இருவரையும் குரு பார்த்தால் ஜாதகர் புகழ் பெற்றவர் ஆவார்.

20. பத்தாம் அதிபதி ஒன்பதாம் பாவத்திலும், இலக்கினாதிபதி பத்தாம் பாவத்திலும், இலக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சந்திரன் நின்றிருந்தால், ஜாதகர் தன் குலத்திற்கு குல விளக்காக திகழ்வார்.

## பதினொன்றாம் பாவக பலன்கள்

1. பதினொன்றாம் பாவாதிபதி பதினொன்றாம் பாவத்திலேயே ஆட்சி பெற்றிருந்தாலோ அல்லது கேந்திர கோணங்களில் நின்றிருந்தாலோ அல்லது உச்சம் பெற்றிருந்தாலோ, அஸ்தமனம் ஆகியிருந்தாலும் ஜாதகருக்கு பலவிதமான லாபங்களைக் கொடுக்கும்.

2. பதினொன்றாம் பாவாதிபதி தனஸ்தானத்திலும், தனஸ்தானாதிபதி கேந்திரத்திலும் குரு பதினொன்றாம் பாவத்திலும் அமர்ந்திருந்தால் மிக அதிகமாக செல்வ சேர்க்கை, லாபம் ஏற்படும்.

3. பதினொன்றாம் பாவாதிபதி மூன்றாம் பாவத்திலும், பதினொன்றாம் பாவத்தில் சுபர்கள் அமர்ந்திருந்தால் ஜாதகர் தன்னுடைய 36வது வயதில் அதிக லாபம் பெறுவார்.

4. பதினொன்றாம் பாவாதிபதி ஒரு சுபகிரகத்துடன் சேர்ந்து கேந்திர, திரிகோணங்களில் அமர்ந்திருந்தால் ஜாதகர் தன்னுடைய 40வது வயதில் அதிக லாபம் பெறுவார்.

5. பதினொன்றாம் பாவத்தில் குருவும் இரண்டாம் பாவத்தில் சந்திரனும், ஒன்பதாம் பாவத்தில் சுக்கிரனும் இருந்தால் ஜாதகர் அதிக லாபம் பெற்று இருப்பார்.

6. பதினொன்றாம் பாவத்திற்கு பதினொன்றாம் பாவமான லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவத்தில் சந்திரன், புதன், குரு சேர்க்கை பெற்றிருந்தால் ஜாதகர் மிக்க அதிர்ஷ்டசாலி, மேலும் பலவித செல்வங்கள், தானியங்கள், விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள், வைரங்கள் ஆகியவற்றை அன்பளிப்பாகப் பெறுவார்.

7. பதினொன்றாம் அதபதியும், இலக்கினாதிபதியும் பரிவர்த்தனை பெற்று இருப்பின், ஜாதகர் தன்னுடைய 33வது வயதில் அதிக லாபம் பெறுவார்.

8. இரண்டாம் அதிபதியும், மூன்றாம் அதிபதியும் பரிவர்த்தனை பெற்று இருந்தால் ஜாதகர் திருமணத்திற்குப்பின் மிக்க அதிர்ஷ்டத்தால் வாழ்க்கையில் வளர்ச்சி பெறுவார்.

9. பதினொன்றாம் அதிபதியும், மூன்றாம் அதிபதியும் பரிவர்த்தனை பெற்றிருந்தால் ஜாதகர் தன்னுடைய சகோதரர்கள் மூலம் மிகுந்த லாபம் அடைவார். மேலும் விலை உயர்ந்த ஆடை ஆபரணங்கள் பெற்றிருப்பார்.

10. பதினொன்றாம் அதிபதி நீசம், அஸ்தமனம் பெற்றிருந்தாலோ அல்லது 6, 8, 12 ஆகிய ஸ்தானங்களில் அசுபருடன் கூடி இருந்தாலோ ஜாதகர் கடுமையான முயற்சி செய்தாலும் எந்தவித இலாபமும் பெறமாட்டார்.

## பன்னிரெண்டாம் பாவ பலன்கள்

1. பன்னிரெண்டாம் பாவாதிபதி சுபகிரக சேர்க்கை பெற்றோ அல்லது ஆட்சி, உச்சம் பெற்றோ நின்றால் ஜாதகர் நற்செயல்களுக்காக அதிகம் செலவு செய்வார்.

2. சந்திரன் பன்னிரெண்டாம் அதிபதியாகி ஒன்பது, பதினொன்று அல்லது ஐந்தாம் பாவத்தில் அல்லது ஆட்சி, உச்சம் பெற்று, அல்லது நவாம்சத்தில்

ஆட்சியோ ஐந்து, ஒன்பது, பதினொன்றாம் பாவத்தில் நின்றாலோ ஜாதகர் அழகான வீடு, சிறந்த வீட்டு வசதிப் பொருட்கள் பெற்றவராக இருப்பார்.

3. மேற்கண்ட கிரக அமைப்பு உள்ள ஜாதகர் அதிக வசதிகளுடனும் விலை உயர்ந்த, அழகிய ஆடை ஆபரணங்கள் போன்றவற்றையும் பெற்றிருப்பார். மேலும் நன்கு கற்றவர்களிடமிருந்தும், செல்வந்தர்களிடமிருந்தும், அரசு உத்யோகத்தில் இருப்பவர்களிடமிருந்தும் பரிசுப் பொருட்களைப் பெறுவார்.

4. பன்னிரெண்டாம் அதிபதி நவாம்சத்தில் பகை, நீசம் அல்லது ஆறு, எட்டு, பன்னிரெண்டில் நின்றால் மனைவி மூலம் எந்தவிதமான மகிழ்ச்சி, சுகம் அனுபவிக்கமாட்டார். அதிகமான செலவை மனைவிக்காக செலவளிக்கும் நிலை ஏற்படும். ஆனால் சிறிதளவும் சந்தோஷம் கிட்டாது.

5. பன்னிரெண்டாம் அதிபதி கேந்திர, கோணங்களில் இருந்தால் ஜாதகர் தன் மனைவி மூலம் மகிழ்ச்சி, சந்தோஷங்களைப் பெறுவார்.

6. இராகு, சூரியன், செவ்வாய், சனி ஆகிய கிரகங்கள் சேர்க்கை பெற்று பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் இறந்தபின் நரகத்திற்குப் போவார். பன்னிரெண்டாம் அதிபதியும் சூரியனும் சம்பந்தப்பட்டால் ஜாதகர் நரகத்திற்கு போவார்.

7. பன்னிரெண்டாம் பாவத்தில் சுபர்கள் இருந்தும், பன்னிரெண்டாம் அதிபதி ஆட்சி, உச்சம் பெற்றோ அல்லது சுபர் சம்பந்தம் பெற்றிருந்தாலும், ஜாதகருக்கு அவருடைய இறுதிச் சடங்குகள் மிகச் சிறப்பாக நடைபெறும்.

8. பன்னிரெண்டாம் அதிபதி அசுபர் சம்பந்தம் பெற்றிருந்தாலும், பன்னிரெண்டாம் பாவம் அசுபர் சம்பந்தம் பெற்றிருந்தாலும் நாடு விட்டு நாடு அலையும் நிலை ஏற்படும்.

9. பன்னிரெண்டாம் பாவம் மற்றும் அதன் அதிபதி சுபர் சம்பந்தம் பெற்றிருந்தால், ஜாதகர் தன் சொந்த நாட்டிலேயே, அடிக்கடி பிரயாணம் மேற்கொள்ளும் நிலை ஏற்படும்.

10. செவ்வாயும், சனியும் பன்னிரெண்டாம் பாவத்தில் சேர்க்கை பெற்று, சுபர் சம்பந்தம் பெறாவிடில் ஜாதகர் தீய வழிகளில் செலவு செய்பவராவார்.

11. இலக்கினாதிபதி பன்னிரெண்டாம் பாவத்திலும், பன்னிரெண்டாம் அதிபதி சுக்கிரனுடன் சேர்ந்து இலக்கினத்தில் இருந்தால், ஆன்மீக வகைகளில் செலவு செய்வார்.

## 5.பாவகாதிபதிகள் மாறி நின்ற பலன்கள்

### இலக்கினாதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

இலக்கினாதிபதி இலக்கினத்தில் இருந்தால் ஜாதகர் தேகதிடமும், தேக ஆரோக்கியமும் பெற்றவராகவும், புத்திசாலியாகவும், சஞ்சல புத்தியை உடையவராகவும் இருப்பார்.

இலக்கினாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகர் அதிக இலாபம் உடையவராகவும், செல்வந்தராகவும் கல்வி கற்றவராகவும், மகிழ்ச்சியுள்ளவராகவும், நன்னடத்தை உடையவராகவும், ஆன்மீக உணர்வு உள்ளவராகவும், மரியாதைக்குரியவராகவும், நல்ல குணங்கள் பெற்றவராகவும் இருப்பார்.

இலக்கினாதிபதி மூன்றாம் பாவத்தில் நின்றால் சிங்கத்திற்கு நிகரான பராக்கிரமம் பெற்றவராகவும், எல்லா வகையான செல்வங்களைப் பெற்றவராகவும், மதிக்கத்தக்கவராகவும், சஞ்சல மனம் உடையவராகவும், புத்திசாலியாகவும், மகிழ்ச்சி உள்ளவராகவுமிருப்பார்.

இலக்கினாதிபதி சுகஸ்தானமான நான்காம் பாவத்தில் நின்றால் பெற்றோர் மூலம் பெறும் மகிழ்ச்சியை முழுமையாக அடைவார். அநேக சகோதரர்கள் இருப்பார்கள். நல்ல குணம் உடையவராகவும், கவர்ச்சியான தோற்றம் உடையவராகவும் இருப்பார். ஜாதகர் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை வாழ்வார். மேலும் தர்ம ஸ்தாபனங்கள் செய்யும் சேவையில் பங்கு கொள்பவராகவும் இருப்பார்.

இலக்கினாதிபதி ஐந்தாம் பாவத்தில் நின்றால் குழந்தைகளால் ஜாதகர் மத்திமமான பலன்களையே அனுபவிக்க முடியும். முதலில் பிறக்கும் குழந்தைக்கு ஆயுள் குறைவு. மதிக்கத்தக்கவராக இருப்பார். கோபக்காரராக இருப்பார். அரசாங்க ஆதரவு பெறுபவராக இருப்பார். பிறருக்கு சேவை செய்யும் மனப்பான்மை உடையவராக இருப்பார்.

இலக்கினாதிபதி இயற்கைப் பாவியாகி ஏழாம் பாவத்தில் நின்றால் ஜாதகரின் மனைவிக்கு ஆயுள் குறைவு. இலக்கினாதிபதி இயற்கை சுபராகி ஏழாம் பாவத்தில் நின்றால் அதிர்ஷ்டம் குறைந்தவராகவும், ஏழையாகவும் இருப்பார். இலக்கினாதிபதி ஏழாம் பாவத்தில் பலம் பெற்றால் அரசனாவார்.

இலக்கினாதிபதி எட்டாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் மந்திரம் கற்றவராகவும், வியாதியஸ்தராகவும், திருடராகவும், மிக்க கோபக்காரராகவும், துரதிர்ஷ்டசாலியாகவும், சூதாடியாகவும் இருப்பார். மணவாழ்க்கை துன்பம் தரத்தக்கதாகவே இருக்கும்.

இலக்கினாதிபதி ஒன்பதாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் அதிர்ஷ்டம் உடையவராகவும், மக்களால் விரும்பப்படுபவராகவும், பிரபலமானவராகவும்,

சிறந்த பேச்சாளராகவும், விஷ்ணுபக்தராகவும், மனைவி, மக்களுடன், மகிழ்ச்சியாக வாழ்பவராகவும், செல்வந்தராகவும் இருப்பார்.

இலக்கினாதிபதி பத்தாம் பாவத்தில் நின்றால் தகப்பனாரின் மூலம் அடையத்தக்க எல்லா இன்பங்களையும் அடைவார். அரசாங்க ஆதரவை பெற்றவராகவும் மக்களிடையே பிரபலமானவராகவும், மதிக்கத்தக்கவராகவும் சுயமாக சம்பாதித்து பணக்காரராகவும் ஆவார்.

இலக்கினாதிபதி லாபஸ்தானமான பதினொன்றாம் பாவத்தில் நின்றால் எதிலும் லாபம் பெறுபவராக இருப்பார். நற்குணங்கள் பெற்றவராகவும், பெயர், புகழ் பெறுபவராகவும் இருப்பார்.

இலக்கினாதிபதி விரய ஸ்தானமான பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால் உடல் நலம் இல்லாதவராகவும், துரதிர்ஷ்டம் உள்ளவராகவும், மிக்க கோபக்காரராகவும் மிகுந்த செலவாளியாகவும் இருப்பார்.

**இரண்டாம் அதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்**

தனஸ்தானாதிபதி இலக்கினத்தில் நின்றால் ஜாதகருக்கு புத்திரபாக்கியம் சிறப்பு, செல்வந்தராக இருப்பார். ஆனால் தன் குடும்பத்திற்கு பகைவராக இருப்பார். கொடிய மனம் உள்ளவராக இருப்பார், பிறருடைய காரியங்களை செய்பவராக இருப்பார்.

தனஸ்தானாதிபதி தனஸ்தானத்தில் நின்றால் ஜாதகர் பெரும் செல்வந்தராக இருப்பார். கர்வம் உள்ளவராக இருப்பார். புத்திர பாக்கியம் குறைந்து இருக்கும்.

தனஸ்தானாதிபதி மூன்றாம் பாவத்தில் நின்றால் சுபர்கள் சம்பந்தம் பெற்று நின்றால் ஜாதகர் ஆண்மைமிக்கவராகவும், புத்திசாலியாகவும், நல்ல குணம் உடையவராகவும், கஞ்சனாகவும் இருப்பார். இரண்டாம் அதிபதி மூன்றில் அசுபர் சம்பந்தம் பெற்றிருந்தால் தெய்வநிந்தனை செய்பவராக அதாவது நாத்திகராகவும் இருப்பார்.

தனஸ்தானதிபதி சுக ஸ்தானம் எனும் நான்கில் இருந்தால் எல்லாவிதமான செல்வங்களையும் பெற்றவராக இருப்பார். இரண்டாம் அதிபதி நான்கில் உச்சம் பெற்று அல்லது குருவுடன் சேர்ந்து நின்றால் அரசருக்கு நிகரான செல்வந்தராக இருப்பார்.

தனஸ்தானாதிபதி புத்திர ஸ்தானமான ஐந்தில் நின்றால் ஜாதகர் செல்வந்தராக இருப்பார், ஜாதகரும் அவரின் புத்திரர்களும் ஒன்று சேர்ந்து தனம் சம்பாதிப்பவர்களாக இருப்பார்கள். இரண்டாம் இடம் என்பது புத்திர ஸ்தானத்திற்கு பத்தாமிடமாகும். எனவே இரண்டாம் அதிபதி ஐந்தில் இருப்பது மகன்களுடன் சேர்ந்து பணம் சம்பாதிக்கும் அமைப்பு ஏற்படுகிறது.

தனஸ்தானதிபதி சுபர்களுடன் சேர்ந்து ஆறாம் பாவத்தில் நின்றால் பகைவர்களுடைய செல்வத்தைப் பெறுவார். இரண்டாம் அதிபதி அசுபர்களுடன் சேர்ந்து ஆறாம் பாவத்தில் நின்றால் பகைவர்களால் செல்வத்தை இழப்பார். பலவீனமான தொடைகளை உடையவர்.

தனஸ்தானாதிபதி களத்திர ஸ்தானம் என்னும் ஏழாம் இடத்தில் நின்றால் நின்றால் ஜாதகர் மருத்துவராக இருப்பார், இரண்டாம் அதிபதி ஏழில் அசுபர்களுடன் சேர்ந்து நின்றால் அல்லது அசுபர்களால் பார்க்கப்பட்டால், ஜாதகரின் மனைவி தீய எண்ணம் கொண்டவர் ஆவார்.

தனஸ்தானதிபதி எட்டில் நின்றால் நிறைய பூமியை ஆஸ்தியாகப் பெற்றிருப்பார். மூத்த சகோதர்களால் சுகம் இல்லை.

தனஸ்தானதிபதி, பாக்கிய, தர்ம ஸ்தானமென்றும் சொல்லப்படும் ஒன்பதாம் இடத்தில் நின்றால் ஜாதகர் செல்வந்தராகவும், புத்திசாலியாகவும், சாமர்த்தியம் மிக்கவராகவும், புனிதயாத்திரை மேற்கொள்பவராகவும், தான தர்மங்கள் செய்பவராகவும், ஆன்மீகவாதியாகவும், விரதங்களை அனுஷ்டிப்பவராகவும் இருப்பார், இளம் வயதில் நோயாளியாகவும், பிற்காலத்தில் சுகம் அனுபவிப்பராகவும் இருப்பார்.

தனஸ்தானதிபதி கர்ம ஸ்தானம் எனும் பத்தில் நின்றால் ஜாதகர் மதிக்க தக்கவராகவும், கல்வியில் சிறந்தவராகவும் இருப்பார். குழந்தைகளால் பெறக்கூடிய இன்பத்தைச் சிறிதும் பெறாதவராக இருப்பார்.

தனஸ்தானாதிபதி லாப ஸ்தானம் என்னும் பதினொன்றாம் இடத்தில் நின்றால் எல்லாவிதமான செல்வங்களையும், லாபங்களையும் பெறுவார். தாம் செய்யும் பணியில் ஊக்கமும், கவனமும், சுறுசுறுப்பும் உள்ளவராக இருப்பார். மதிக்க தக்கவராக இருப்பார். பெயரும், புகழும் உடையவராக இருப்பார்.

தனஸ்தானதிபதி விரைய ஸ்தானமான பன்னிரெண்டில் நின்றால் ஜாதகர் துணிச்சல் மிக்கவராக இருப்பார். ஆனால் செல்வம் குறைந்தவராக இருப்பார். மற்றவர்களைச் சார்ந்து வாழ்பவராக இருப்பார். மூத்த மகனால் எந்தவித பயனும் இல்லை.

**மூன்றாம் அதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்**

மூன்றாம் பாவாதிபதி இலக்கினத்தில் இருந்தால், ஜாதகர் தன் உழைப்பால் சம்பாதிப்பார். சேவை மனப்பான்மை உடையவர். தைரியம், வீரம் உள்ளவராக இருப்பார். படிப்பறிவு இல்லாதவராக இருந்தாலும் புத்திசாலியாக இருப்பார்.

மூன்றாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்தால், ஜாதகர் உடல் பருத்தவராக இருப்பார், வீரம் அற்றவராக இருப்பார், தானாக எந்த காரியத்தையும் செய்யமாட்டார். மற்றவர்கள் தூண்டுதலின் பெயரிலேயே எந்தக் காரியத்தையும்

செய்வார். மகிழ்ச்சி அற்றவராக இருப்பார். பிறர் செல்வத்தை அபகரிக்க நினைப்பார்.

மூன்றாம் பாவாதிபதி மூன்றாம் இடத்தில் ஆட்சி பெற்று நின்றால், ஜாதகர் உடன் பிறந்த சகோதரர்கள் மூலம் சந்தோஷம் பெறுவார். செல்வந்தராகவும், புத்திரபாக்கியங்கள் சிறப்பாக உடையவராகவும், மிகுந்த மகிழ்ச்சி உடையவராகவும் இருப்பார்.

மூன்றாம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் நின்றால், ஜாதகர் மிகுந்த சுகம் உள்ளவராகவும், செல்வந்தராகவும், புத்திக்கூர்மை உடையவராகவும் இருப்பார்.

மூன்றாம் பாவாதிபதி ஐந்தாம் இடத்தில் நின்றால் ஜாதகர் புத்திரபாக்கியம் அதிகம் உடையவர், நற்குணம் உடையவர், அசுபர்களின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்பட்டால் ஜாதகரின் மனைவி கொடூர எண்ணம் கொண்டவளாக இருப்பாள்.

மூன்றாம் பாவாதிபதி ஆறாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் சகோதரருக்கு பகையாவார், தாய் மாமனிடமும் பகையாவர், செல்வந்தராக இருப்பார், தாய் மாமனிடம் பகையாக இருந்தாலும், தாய்வழி சகோதரிகளிடம் அன்பாக இருப்பார்.

மூன்றாம் பாவாதிபதி ஏழாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் அரசாங்கம் தொடர்புள்ள வேலையில் ஈடுபடுவார். இளம் வயதில் சந்தோஷம் இல்லை, முதுமை காலத்தில் சந்தோஷமாக இருப்பார்.

மூன்றாம் பாவாதிபதி எட்டில் நின்றால், ஜாதகர் திருடனாக இருப்பார். மற்றவர்களுக்காக உழைத்து பிறருக்கு அடிபணிந்து ஜீவனம் செய்வார். அரசாங்கத்தால் மரண தண்டனை விதிக்கப்படுவதற்கும் வாய்ப்பு உண்டு.

மூன்றாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் நின்றால், தந்தையாரிடமிருந்து கிடைக்க வேண்டிய சந்தோஷம், சுகங்கள் கிடைக்காது. தன் மனைவியின் மூலம் அதிர்ஷ்டம் உண்டாகும். புத்திரர்களாலும் சந்தோஷம் சுகம் உண்டு.

மூன்றாம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் எல்லாவிதமான சுகங்களையும் அனுபவிப்பார். சுயமாக சம்பாதிப்பார். கெட்ட பெண்களிடம் நட்பு கொள்வார்.

மூன்றாம் பாவாதிபதி பதினொன்றாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் வியாபாரத்தில் எப்பொழுதும், இலாபம் அதிகம் உடையவராவார். கல்வி அறிவு இல்லாவிட்டாலும் புத்திசாலியாக இருப்பார். வீர, தீரச் செயல்கள் செய்பவராக இருப்பார். பொதுநல சேவை செய்பவராக இருப்பார்.

மூன்றாம் பாவாதிபதி பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகரின் தகப்பனார் கொடுமைக்காரராக இருப்பார். ஜாதகர் தீயவழிகளில் பணத்தைச் செலவு செய்பவராக இருப்பார். ஜாதகருக்கு மனைவியின் மூலம் அதிர்ஷ்டம் உண்டாகும்.

**நான்காம் அதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்**

சுக ஸ்தானம் என்று சொல்லப்படும் நான்காம் பாவாதிபதி இலக்கினத்தில் நின்றால், ஜாதகர் சிறந்த கல்வி, நற்குணங்கள், விலையுயர்ந்த ஆபரணங்கள், நிலபுலன்கள், வாகனங்கள் கிடைக்கப் பெற்றவராகவும், தாயாரின் மூலம் கிடைக்க வேண்டிய அனைத்து சுகங்களையும் பெறுபவராகவும் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி இரண்டாம் இடத்தில் நின்றால் ஜாதகர் அனைத்து சுகங்களையும் அனுபவிப்பவராகவும், எல்லாவிதமான செல்வங்களையும் பெற்றவராகவும், நல்ல குடும்ப வாழ்க்கை, மரியாதை, தைரியம் மிக்கவராகவும், வீரதீரச் செயல்களில் ஈடுபடுபவராகவும் இருப்பார். ஆனால், தந்திரமுள்ளவராகவும் பிறரை ஏமாற்றுபவராகவும் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி மூன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் வீர தீர பராக்கிரமம் உடையவராகவும், அதிகமான வேலையாட்களை உடையவராகவும், ஈகை குணம் உள்ளவராகவும், நல்ல குணம் பெற்றவராகவும், தர்மம் செய்பவராகவும், தன் சுயமுயற்சி மற்றும் உழைப்பால் சம்பாதித்த சொத்துக்கள் உடையவராகவும், நோய், நொடி அற்றவராகவும் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி ஆட்சி பெற்று சுகஸ்தானத்திலேயே நின்றால் ஜாதகருக்கு மந்திரி போன்ற உயர்பதவிகள் கிடைக்கும். எல்லாவிதமான செல்வங்களையும் பெற்றவராக இருப்பார். திறமை மிக்கவராகவும், மதிக்கத்தக்கவராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், நன்கு கற்றவராகவும், மகிழ்ச்சி மிக்கவராகவும், தன் மனைவியை நேசிப்பவராகவும் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி புத்திர ஸ்தானமான ஐந்தாம் இடத்தில் நின்றால் மகிழ்ச்சியுள்ளவராகவும், அனைவராலும் நேசிக்கப்படுபவராகவும், விஷ்ணு பக்தராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், மதிக்கத்தக்கவராகவும், தன் சுய முயற்சி உழைப்பால் சம்பாதித்த சொத்துக்களை உடையவராகவும் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி ருண, ரோக, சத்ருஸ்தானமான ஆறாம் இடத்தில் நின்றால், தாயாரால் பெறத்தக்க சுகங்கள் அற்றவராகவும், முன்கோபியாகவும், திருடனாகவும், நன்னடத்தை அற்றவராகவும், மனோ பயம், மனோ வியாதி உடையவராயும், இழிவான செயல்களில் ஈடுபடுபவராகவும் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி களத்திர ஸ்தானமான ஏழாம் பாவத்தில் நின்றால் பல விதமான துறைகளில் கல்வி அறிவு பெற்றவராகவும், பிதுரார்ஜித சொத்துக்களை விட்டுக் கொடுப்பவராகவும் இருப்பார். கற்றோர் நிறைந்த சபையில் ஊமைபோல் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி ஆயுள் பாவமான எட்டாம் இடத்தில் நிற்கும் போது, குடும்ப சுகம் இல்லாதவராகவும், பிற சுகங்களும் இல்லாதவராகவும், பெற்றோரால் கிடைக்கும் சுகம் இல்லாதவராகவும், அலித் தன்மை உள்ளவராகவும் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி பாக்கிய ஸ்தானம் என்னும் ஒன்பதாம் வீட்டில் நின்றால் ஜாதகர் அனைவராலும் நேசிக்கப்படுவார். கடவுள் பக்தி அதிகம் உடையவராகவும் நற்குணங்கள் மிக்கவராகவும், அனைவராலும் மதிக்கப்படுபவராகவும், அனைத்து விதமான மகிழ்ச்சி, சந்தோஷம், சுகங்கள் பெற்றவராகவும் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி கர்ம ஸ்தானமான பத்தாம் பாவத்தில் இருந்தால் அரசாங்க மரியாதை பெறுபவராகவும், ரசவாதம் கற்றவராகவும், மிகுந்த மன நிம்மதி, மகிழ்ச்சி உடையவராகவும், அனைத்து சுகங்களும் உடையவராகவும் ஐம்புலன்களையும் அடக்குபவராகவும் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி லாபஸ்தானமான பதினொன்றாம் பாவத்தில் இருந்தால், ரகசிய நோய்களால் பாதிக்கப்படுவதாக பயப்படுவார், தாராள மனப்பான்மை உடையவர். நற்குணங்கள் மிக்கவராகவும், தர்ம சிந்தனை உடையவராகவும், பிறருக்கு உதவுபவராகவும் இருப்பார்.

நான்காம் பாவாதிபதி விரய ஸ்தானமான பன்னிரெண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகர் குடும்ப சுகம் அற்றவர், பிற சுகங்கள் அற்றவர், நன்னடத்தை அற்றவர், முட்டாளாகவும், சோம்பேறியாகவும் இருப்பார்.

**ஐந்தாம் அதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்**

ஐந்தாம் பாவாதிபதி இலக்கினத்தில் இருந்தால், ஜாதகர் நன்கு கல்வி கற்றவராகவும், குழந்தைகளால் ஏற்படக்கூடிய சந்தோஷங்களை அனுபவிப்பவராகவும், கருமியாகவும், நேர்மையற்றவராகவும், வக்கிரபுத்தி உடையவராகவும், பிறர் சொத்தை அபகரிப்பவராகவும் இருப்பார்.

ஐந்தாம் பாவாதிபதி தனஸ்தானம் என்னும் இரண்டாமிடத்தில் நின்றால் ஜாதகர் பல புத்திரர்களைப் பெற்றவராகவும், செல்வந்தராகவும், குடும்பத்திற்கு ஆதரவாகவும், குடும்பத்தைப் போற்றி காப்பவராகவும், அனைவராலும் மதிக்கத்தக்கவராகவும், மனைவியிடம் பாசம் உள்ளவராகவும், உலகப் புகழ் பெறுபவராகவும் இருப்பார்.

ஐந்தாம் பாவாதிபதி மூன்றாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் தன் சகோதரர்களை நேசிப்பவராகவும், புறம் பேசுபவராகவும் கஞ்சனாகவும், எப்பொழுதும் தன்னுடைய சுய வேலையில் கவனம் உள்ளவராகவும் இருப்பார்.

ஐந்தாம் பாவாதிபதி நான்காம் இடத்தில் நின்றால், ஜாதகர் மகிழ்ச்சிமிக்கவர், தாய் மூலம் பெறத் தக்க அனைத்து மகிழ்ச்சியையும் பெறுவார். செல்வந்தராகவும், புத்திக் கூர்மையுள்ளவராகவும் இருப்பார். அரசராகவோ, மந்திரியாகவோ, குருவாகவோ (ஆசான்) இருப்பார்.

ஐந்தாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் சுபர்களுடன் சேர்ந்து நின்றால், ஜாதகர் புத்திர பாக்கியம் மிக்கவராக இருப்பார். பாவர்களுடன் சேர்ந்து நின்றால்

புத்திர பாக்கியம் அற்றவராக இருப்பார். இருப்பினும் நற்குணம் மிக்கவராகவும், நண்பர்களால் நேசிக்கப்படுபவராகவும் இருப்பார்.

ஐந்தாம் பாவாதிபதி ஆறாம் வீட்டில் நின்றால் ஜாதகருக்கு பகைவருக்குச் சமமான புத்திரர்கள் பிறப்பார்கள். அல்லது புத்திரர்கள் இறந்து விடுவார்கள் அல்லது தத்து புத்திரன் உடையவராகவோ அல்லது விலைக்கு வாங்கப்பட்ட புத்திரனை உடையவராகவோ இருப்பார்.

ஐந்தாம் பாவாதிபதி ஏழில் இருந்தால் மதிக்கத்தக்கவராகவும், அனைத்து மதங்களையும் நேசிப்பவராகவும் இருப்பார். ஆன்மீக நாட்டம் அதிகம் உடையவர். குழந்தைகளால் மகிழ்ச்சி உடையவராகவும் பிறருக்கு உதவுபவராகவும் இருப்பார்.

ஐந்தாம் பாவாதிபதி எட்டில் நின்றால் குழந்தைகளால் மகிழ்ச்சி குறைவு, ஜாதகர் இருமல் மற்றும் காச நோயாலும் நுரையீரல் சம்பந்தப்பட்ட சுவாச நோயாலும் பாதிக்கப்படுவார். முன்கோபம் உடையவராகவும், மகிழ்ச்சி அற்றவராகவும் இருப்பார்.

ஐந்தாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் நின்றால் ஜாதகரின் புத்திரன் இளவரசனாகவோ அல்லது இளவரசனுக்கு சமமானவராகவோ இருப்பார். ஜாதகர் பிரபல எழுத்தாளராகவும் இருப்பார் மேலும் ஜாதகர் குல விளக்காகத் திகழ்வார்.

ஐந்தாம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் இராஜ யோகங்களை அனுபவிப்பார். (அரசு ஆதரவு) மேலும் அனைத்து சந்தோஷங்களையும் அனுபவிப்பார். புகழ்மிக்கவராக இருப்பார்.

ஐந்தாம் பாவாதிபதி பதினொன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் நன்கு கல்வி கற்றவர். அனைவராலும் நேசிக்கப்படுபவர். புகழ் வாய்ந்த எழுத்தாளராகவும், திறமைசாலியாகவும், அதிக குழந்தைகளை உடையவராகவும், செல்வந்தராகவும் இருப்பார்.

ஐந்தாம் பாவாதிபதி பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் சொந்தக் குழந்தைகளால் சுகம் பெறமாட்டார். ஜாதகர் தத்து புத்திரர் அல்லது விலைக்கு வாங்கப்பட்ட புத்திரரை உடையவராக இருப்பார்.

**ஆறாம்அதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்**

ஆறாம் பாவாதிபதி இலக்கினத்தில், நின்றால் ஜாதகர் நோயுள்ளவராகவும், புகழ் பெற்றவராகவும், உறவினர்களுக்கு விரோதியாகவும், நற்குணங்கள் அமையப் பெற்றவராகவும், வீரதீரச் செயல்கள் புரிபவராகவும் இருப்பார்.

ஆறாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் வீரதீரம் மிக்கவராகவும், குலத்திற்கே விளக்குப் போன்றவராகவும், வெளிநாட்டில் வசிப்பவராகவும் மகிழ்ச்சி மிக்கவராகவும், நல்ல பேச்சுத்திறன்

கொண்டவராகவும், எப்பொழுதும் தன் சுய வேலையில் கவனம் அதிகம் உடையவராகவும் இருப்பார்.

ஆறாம் பாவாதிபதி மூன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் கோபம் மிக்கவராகவும், தைரியம் அற்றவராகவும், சகோதரர்களுக்கு பகைவர் ஆகவும் இருப்பார். ஜாதகருடைய பணியாட்கள் அவருக்கு கீழ்ப்படியமாட்டார்கள்.

ஆறாம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் நின்றால் ஜாதகர் தாயால் பெறத்தக்க சுகம், மகிழ்ச்சியைப் பெற முடியாதவராக இருப்பார். புத்திசாலியாகவும் புறம் கூறுபவராகவும், பொறாமை மிக்கவராகவும், திடசித்தம் இல்லாதவராகவும், சஞ்சலபுத்தி உடையவராகவும், செல்வந்தராகவும் இருப்பர்.

ஆறாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் நின்றால் ஜாதகரின் செல்வநிலை ஏற்றத்தாழ்வு மிக்கதாக இருக்கும். நண்பர்கள் மற்றும் புத்திரர்களுடன் பகைமை, விரோதம் கொள்பவராகவும், இரக்கம் உடையவராகவும், சுயநலமிக்கவராகவும், மகிழ்ச்சி உடையவராகவும் இருப்பார்.

ஆறம் பாவாதிபதி ஆறில் ஆட்சி பெற்று நின்றால் ஜாதகர் உறவினர்களுடன் பகைமை பாராட்டுவார். மற்றவர்களுடன் நட்பு கொள்ளுவார். தன வகைகளில் மத்திம மகிழ்ச்சி உடையவராக இருப்பார்.

ஆறாம் பாவாதிபதி ஏழாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் மணவாழ்க்கையில் இல்லற சுகம் அற்றவராகவும், புகழ் பெற்றவராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், மதிக்கத்தக்கவராகவும், தைரியம், வீரம் உடையவராகவும், செல்வந்தராகவும் இருப்பார்.

ஆறாம் பாவாதிபதி எட்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் நோய் மிக்கவர், நன்கு கற்றவர்களிடமும், ஞானிகளிடமும் பகைமை உடையவராவார். பிறர் சொத்தை அபகரிக்க நினைப்பவராகவும், நேர்மை அற்றவராகவும் இருப்பார்.

ஆறாம் அதிபதி ஒன்பதாம் பாவத்தில் நின்றால் ஜாதகர், மரம், விறகு மற்றும் கற்கள், பாறை, போன்றவற்றை வியாபாரம் செய்வார். வியாபாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். நிலையான லாபமோ, நிலையான நஷ்டமோ இருக்காது.

ஆறாம் அதிபதி பத்தாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் குலத்திற்கே விளக்குப் போன்றவர். தந்தையின் அன்பில்லாதவராக இருப்பார். நல்ல பேச்சாளராக இருப்பார். வெளிநாட்டில் சந்தோஷமாக வாழ்பவராக இருப்பார்.

ஆறாம் அதிபதி பதினொன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் எதிரிகளிமிருந்து இலாபம் பெறுவார். நற்குணம் உள்ளவராகவும், தைரியம், வீரம் மிக்கவராகவும், மதிக்கத்தக்கவராகவும் இருப்பார். ஆனால் புத்திரர்களால் மகிழ்ச்சி இல்லாதவராக இருப்பார்.

ஆறாம் அதிபதி பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் எப்பொழுதும் கெட்ட காரியங்களில் பணத்தைச் செலவளிப்பார். கற்றவர்களைப்

பகைத்துக்கொள்வார். ஜீவகாருண்யம் இல்லாதவராகவும், பிராணிகளைக் கொடுமைப்படுத்துபவராகவும் இருப்பார்.

**ஏழாம் அதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்**

ஏழாம் பாவாதிபதி இலக்கினத்தில் இருந்தால் ஜாதகர் பிறர் மனைவியை விரும்புவார். துஷ்டராக இருப்பார், திறமைசாலி, எதிர்ப்பை எதிர்கொள்ளும் மனவலிமை அற்றவர், வாய்வு சம்பந்தமான நோய்களுக்கு ஆட்பட்டவராக இருப்பார்.

ஏழாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகர் மனைவி மூலம் செல்வங்கள் பெறுவார். தீர்க்க தரிசனம் உடையவர் அதாவது எதிர்காலத்தில் நடக்கப்போவதை முன்பே அறியும் திறன் பெற்றவர்.

ஏழாம் பாவாதிபதி மூன்றாம் பாவத்தில் இருந்தால், ஜாதகரது குழந்தைகள் இளம் வயதிலேயே இறந்து விடுவர். ஒரு பெண் குழந்தை பிறந்து உயிர் வாழலாம், பின்னர் பிறக்கும் ஆண் குழந்தை கடும் பிரயாசைக்குப்பின் உயிர் தப்ப நேரிடும்.

ஏழாம் அதிபதி சுக ஸ்தானம் என்னும் நான்காம் பாவத்தில் நின்றால் ஜாதகரின் மனைவி, ஜாதகரின் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. ஜாதகர் நேர்மையானவராகவும், புத்திகூர்மை உடையவராகவும், ஆன்மீக உணர்வு உள்ளவராகவும் இருப்பார். ஜாதகருக்கு பல் நோய் ஏற்படும்.

ஏழாம் அதிபதி புத்திரஸ்தானமெனும் ஐந்தாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் மதிக்கத்தக்கவர். எல்லாவிதமான நற்குணங்களையும், அனைத்து விதமான செல்வங்களையும் பெற்றவராகவும், எப்போதும் மகிழ்ச்சி உடையவராகவும் இருப்பார்.

ஏழாம் அதிபதி ருண, ரோக, சத்ரு ஸ்தானமான ஆறாம் பாவத்தில் இருந்தால் ஜாதகரின் மனைவி நோயுள்ளவர் அல்லது ஜாதகர் தன் மனைவியுடன் பகைமை கொள்பவராக இருப்பார். ஜாதகர் முன்கோபியாகவும், மகிழ்ச்சி அற்றவராகவும் இருப்பார்.

ஏழாம் அதிபதி ஆட்சி பெற்று களத்திரஸ்தானத்திலேயே இருந்தால் ஜாதகர் மனைவி மூலம் பெறத்தக்க, அனைத்து சுகங்களையும், சந்தோஷங்களையும் பெறுவார், தைரியம் மிக்கவர், திறமைசாலி, புத்திசாலியாகவும் இருப்பார். வாத நோயால், வாயு சம்பந்தப்பட்ட நோயால் பாதிக்கப்படுவார்.

ஏழாம் அதிபதி அஷ்டம ஸ்தானமான எட்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் மண வாழ்வில் பெற வேண்டிய சந்தோஷங்களைப் பெற இயலாது. ஜாதகரின் மனைவி நோயாளி மேலும் ஜாதகரின் மனைவி தீய குணம் உள்ளவராக இருப்பார். ஜாதகருக்கு அடங்கி இருக்கமாட்டார்.

ஏழாம் அதிபதி பாக்கிய ஸ்தானமான ஒன்பதாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் தன் மனைவியை நல்ல விதமாக நடத்துபவராகவும், மனைவி மீது

அன்புமிக்கவராகவும் இருப்பார். புது புது காரியங்களைத் துவக்கி அதில வெற்றியும் பெறுவார்.

ஏழாம் அதிபதி கர்ம ஸ்தானமென்னும் பத்தாம் பாவத்தில் நின்றால் ஜாதகரின் மனைவி, ஜாதகரின் கட்டுப்பாட்டில் இருப்பது இல்லை. ஜாதகர் தார்மீக கடமைகளில் ஈடுபடுபவராகவும் செல்வந்தராகவும், புத்திர பாக்கியங்களைப் பெற்றவராகவும் இருப்பார்.

ஏழாம் பாவாதிபதி லாப ஸ்தானமெனும் பதினொன்றாம் பாவத்தில் இருக்கப் பிறந்தவர் மனைவி மூலம் தன லாபங்களைப் பெறுவார். புத்திரர்களால் மிகக் குறைந்த மகிழ்ச்சியே பெறுவார். பெண் குழந்தைகளை அதிகம் பெற்றவராக இருப்பார்.

ஏழாம் அதிபதி விரய ஸ்தானமெனும் பன்னிரெண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகர் ஏழையாக இருப்பார். கவலைமிக்கவராக இருப்பார். ஜாதகரின் மனைவி வீண் செலவுகள் செய்பவராக இருப்பார். ஜாதகர் ஜவுளி வியாபாரத்தில் ஈடுபட்டு சம்பாதிப்பவராக இருப்பார்.

**எட்டாம் அதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்**

எட்டாம் பாவாதிபதி இலக்கினத்தில் நின்றால் ஜாதகர் உடல் நலம், ஆரோக்கியம் குறைவு உள்ளவராகவும், தெய்வ நிந்தனை, குரு நிந்தனை செய்பவராகவும் இருப்பார். உடலில் காயத்தால் ஏற்பட்ட தழும்புகளை உடையவராக இருப்பார்.

எட்டாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகருக்கு உடல் வலிமை குறைவாக இருக்கும். சிறிதளவே செல்வம் இருக்கும். இழந்த செல்வம் திரும்பக் கிடைக்காது.

எட்டாம் அதிபதி மூன்றாம் பாவத்தில் நின்றால் சகோதரர்களால் சந்தோஷம் இல்லை. சுறுசுறுப்பு அற்றவராகவும், உழைத்து வாழ வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவராகவும், நல்ல வேலைக்காரர்கள் அமையப் பெறாதவராகவும், உடல்பலம் அற்றவராகவும் இருப்பார்.

எட்டாம் அதிபதி நான்காம் வீட்டில் நின்றால் ஜாதகர் தாயாரால் அடைய வேண்டிய சுகங்களை அடையமாட்டார். நிலம், வீடு, மகிழ்ச்சி, சுகம், அற்றவராகவும், நண்பர்களை ஏமாற்றுபவராகவும் இருப்பார்.

எட்டாம் பாவாதிபதி ஐந்தாம் வீட்டில் நின்றால், ஜாதகருக்கு புத்திக் கூர்மை குறைந்தும், மூடத் தனம் அதிகமாகவும் இருக்கும். குறைந்த அளவு குழந்தைகள் தான் பிறப்பர். ஜாதகருக்கு நீண்ட ஆயுள் இருக்கும், செல்வந்தராய் இருப்பார்.

எட்டாம் பாவாதிபதி ஆறாம் வீட்டில் நின்றால், ஜாதகர் தன் எதிரிகளை வெல்வார், அடிக்கடி, நோய்வாய்படுவார், சிறுவயதில் சர்ப்பங்களாலோ, விசத்தாலோ, அல்லது நீராலோ கண்டம் ஏற்படும்.

எட்டாம் பாவாதிபதி ஏழாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் மன சலனம் மிக்கவர், அசுபர் சம்பந்தம் ஏற்பட்டால், வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படும்.

எட்டாம் பாவாதிபதி எட்டாம் வீட்டில் நின்றால், ஜாதகருக்கு தீர்க்காயுள், எட்டாம் அதிபதி எட்டில் பலம் குறைந்து நின்றால் மத்திம ஆயுள், ஜாதகர் திருடனாகவும், பிறரால் நிந்தனை, குற்றம் குறை கூறப்படுபவராகவும், பிறரை நிந்தனை செய்பவராகவும் இருப்பார்.

எட்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் தன் மதத்தையே துவேஷிப்பவராகவும், நாஸ்தீகராகவும் இருப்பார். துஷ்ட்டத்தனம் மிக்க மனைவிக்கு கணவராக இருப்பார். பிறர் சொத்தை அபகரிப்பார்.

எட்டாம் அதிபதி பத்தாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் தன் தந்தையால் கிடைக்க வேண்டிய சுகங்களை பெறாதவராக இருப்பார். புறம் பேசித் திரிபவராக இருப்பார். நல்ல ஜீவன வசதிகள், தொழில் அமையாது, சுபர் சம்பந்தம் ஏற்பட்டால் அசுப பலன் குறையும்.

எட்டாம் பாவாதிபதி பதினொன்றாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் செல்வம் அற்றவர். சிறுவயதில் துன்பப்படுபவராக இருப்பார். ஆனால் பிற்காலத்தில் மகிழ்ச்சிமிக்கவராக இருப்பார். சுபர் சம்பந்தம் பெற்றால் ஜாதகருக்கு தீர்க்காயுள் உண்டு.

எட்டாம் பாவாதிபதி பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் தவறான வழிகளில், தீய காரியங்களுக்காக வீணாக செல்வத்தை செலவழிப்பார். மேலும் அசுபர்கள் சம்பந்தம் ஏற்படில் அற்ப ஆயுள் உடையவராக இருப்பார்.

**ஒன்பதாம் அதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்**

ஒன்பதாம் பாவாதிபதி இலக்கினத்தில் நின்றால் ஜாதகர் அதிர்ஷ்டம் மிக்கவர். அரசர்களால் போற்றத்தக்கவர், அரசியல்வாதிகளால் மதிக்கப்படுவார், சிறப்பான குணநலன்கள் உடையவர். நல்ல கவர்ச்சிகரமான தோற்றம் உள்ளவராகவும். நன்கு கல்வி கற்றவராகவும் அனைவராலும் மதிக்கத்தக்கவராகவும் இருப்பார்.

ஒன்பதாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர், நன்கு கற்ற பண்டிதராகவும், புகழ் பெற்றவராகவும், செல்வந்தராகவும், காம உணர்வு மிக்கவராகவும் இருப்பார், மனைவியாலும், புத்திரர்களாலும் மகிழ்ச்சி, சந்தோஷம் உடையவராக இருப்பார்.

ஒன்பதாம் பாவாதிபதி மூன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் சகோதரர்களால் மகிழ்ச்சியும் சுகமும் பெறுவார். செல்வந்தராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், கவர்ச்சிகரமான தோற்றம் உடையவராகவும் இருப்பார்.

ஒன்பதாம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் நின்றால் ஜாதகர், வீடு, வாகனங்களால் சுகத்தைப் பெற்றவராகவும் எல்லாவித செல்வங்களையும் பெற்றவராகவும், தாயாரிடம் பக்தி உள்ளவராகவும் இருப்பார்.

ஒன்பதாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் நின்றால் ஜாதகர், புத்திர பாக்கியம் சிறப்பாக உடையவராகவும், அதிர்ஷ்டம் மிக்கவராகவும், பெரியவர்களை மதிப்பவராகவும், குரு பக்தி மிக்கவராகவும், மனோ தைரியம் மிக்கவராகவும், ஆன்மீக உணர்வு உள்ளவராகவும், தான தர்மம் செய்பவராகவும், நன்கு கற்ற பண்டிதராகவும் இருப்பார்.

ஒன்பதாம் அதிபதி ஆறாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் அதிர்ஷ்டம் குறைந்தவராக இருப்பார், தாயாரின் உடன் பிறந்தவர்களால் சந்தோஷம் இல்லாதவராக இருப்பார் எப்போதும் எதிரிகளால் துன்பம் அடைபவராக இருப்பார்.

ஒன்பதாம் அதிபதி ஏழாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் தன் மனைவியால் அனைத்து வித நல்ல பலன்களும் கிடைக்கப் பெறுவார். நற்குணம் உள்ளவராகவும் புகழ் பெற்றவராகவும் இருப்பார்.

ஒன்பதாம் அதிபதி எட்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகர் அதிர்ஷ்டம் இல்லாதவராக இருப்பார், மூத்த சகோதரரால் கிடைக்கக் கூடிய சந்தோஷம் கிடைக்கப்பெறாதவராக இருப்பார்.

ஒன்பதாம் அதிபதி ஒன்பதாம் பாவத்தில் ஆட்சி பெற்றால் ஜாதகர் மிகுந்த அதிர்ஷ்டசாலியாக இருப்பார். நற்குணங்கள் மிக்கவராகவும், அழகிய தோற்றம் கொண்டவராகவும், தன் சகோதரர்களால் மகிழ்ச்சி, சந்தோஷம் பெறுபவராகவும் இருப்பார்.

ஒன்பதாம் அதிபதி பத்தாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் அரசராகவோ அல்லது அரசருக்கு சமமான அந்தஸ்து உள்ளவராகவோ இருப்பார் அல்லது மந்திரியாகவோ, சேனாதிபதியாகவோ இருப்பார், நற்குணம் உள்ளவராகவும், அனைவராலும் மதித்துப் போற்றத் தக்கவராகவும் இருப்பார்.

ஒன்பதாம் அதிபதி பதினொன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகரின் தனலாபம் நாளுக்கு நாள் அபிவிருத்தி அடையும் குருவிடம் பக்தி மிக்கவராகவும் நற்குணங்கள் மிக்கவராகவும், தான தர்மங்கள் செய்பவராகவும் இருப்பார்.

ஒன்பதாம் அதிபதி பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் தன் அதிர்ஷ்டத்தை இழப்பார். சுபகாரியங்கள், தர்மகாரியங்களுக்கு பணத்தைச் செலவழிப்பார். விருந்தாளிகளுக்கு விருந்து கொடுத்து ஏழையாவார்.

### பத்தாம் அதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்

பத்தாம் அதிபதி இலக்கினத்திலிருந்தால் ஜாதகர் நன்கு கற்றவராகவும், புகழ் பெற்றவராகவும், கவிஞராகவும் இருப்பார். இளம் வயதில் நோய்வாய்படுவார். பிற்காலத்தில் மகிழ்ச்சியாக இருப்பார். ஜாதகரின் செல்வம் நாளுக்குநாள் அதிகரிக்கும்.

பத்தாம் அதிபதி இரண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் செல்வந்தராகவும், நற்குணம் மிக்கவராகவும், அரசாங்கத்தால்

கௌரவிக்கப்படுபவராகவும், தானதர்மம் செய்பவராகவும், தந்தையிடமிருந்து பெறத்தக்க அனைத்து சுகங்களையும் பெறுபவராகவும் இருப்பார்.

பத்தாம் அதிபதி மூன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் தன் சகோதரர்கள் மற்றும் பணியாளர்கள் மூலம் பெறத் தக்க அனைத்து சுகங்களையும் பெறுவார். நல்ல பணியாளர்கள் அமைவர். தைரியம் மிக்கவராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், சரளமாகப் பேசுபவராகவும், சத்தியத்தைக் கடைப்பிடிப்பவராகவும் இருப்பார்.

பத்தாம் அதிபதி நான்காம் பாவத்தில் நின்றால் ஜாதகர் மிகுந்த மகிழ்ச்சி உள்ளவர். தாயிடம் அன்பும், மரியாதையும் மிக்கவராகவும், தாயின் நல்வாழ்க்கையில் சிரத்தை உடையவராகவும் வாகனங்கள், நிலம், வீடு உடையவராகவும், செல்வந்தராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும் இருப்பார்.

பத்தாம் அதிபதி ஐந்தாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் எல்லாவிதமான கல்விகளையும் கற்பதில் ஆர்வம் மிக்கவராக இருப்பார் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பார். செல்வந்தராகவும், புத்திரபாக்கியம் மிக்கவராகவும் இருப்பார்.

பத்தாம் அதிபதி ஆறாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் தந்தையிடமிருந்து பெறத்தக்க சந்தோஷத்தை பெறாதவராக இருப்பார். ஜாதகர் செல்வம் அற்றவராகவும், திறமை மிக்கவராக இருந்தாலும், செல்வம் சேர்க்க இயலாதவராகவும் இருப்பார். எதிரிகளால் அதிகமாகத் துன்பப்படுவார்.

பத்தாம் அதிபதி ஏழாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் புத்திக் கூர்மை மிக்கவர், நற்குணம் மிக்கவர், சிறந்த சரளமான பேச்சாளராகவும், சத்தியத்தைக் கடைப்பிடிப்பவராகவும் மத சம்பிரதாயங்களில் ஈடுபாடு உடையவராகவும் இருப்பார். மனைவி மூலம் கிடைக்கக் கூடிய அனைத்து விதமான சந்தோஷங்களையும் கிடைக்கப் பெறுவார்.

பத்தாம் அதிபதி எட்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் நன்னடத்தை அற்றவர். நீண்ட ஆயுள் உடையவர். மற்றவர்களை நிந்திப்பவராக இருப்பார்.

பத்தாம் அதிபதி ஒன்பதாம் பாவத்தில் நின்றால், ஜாதகர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருந்தால் அரசனாவார், சாதாரண குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அரசனுக்கு நிகராக வாழ்க்கையில் வளர்ச்சி அடைவார். செல்வந்தராகவும், புத்திர பாக்கியம், மகிழ்ச்சி மிக்கவர் ஆகவும் இருப்பார்.

பத்தாம் அதிபதி பத்தாம் பாவத்தில் ஆட்சி பெற்றால், ஜாதகர் அனைத்து வேலைகளிலும் திறமை மிக்கவர், தைரியசாலி, உண்மை பேசி, நேர்மையாக நடப்பார். ஆசிரியர்களிடமும், மூத்தவர்களிடமும் மரியாதை மிக்கவராக இருப்பார்.

பத்தாம் அதிபதி பதினொன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் செல்வந்தராகவும், புத்திர பாக்கியம் மிக்கவராகவும் இருப்பார், மகிழ்ச்சி

மிக்கவராகவும், உண்மை பேசி, நேர்மையாக நடப்பவராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், எப்போதும் மகிழ்ச்சியாகவும் சுகமுள்ளவராகவும் இருப்பார்.

பத்தாம் அதிபதி பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் அரசு வகைகளில், வழக்கு வகைகளுக்காக செல்வத்தை செலவழிப்பார். எதிரிகளால் பயம் இருக்கும். திறமை மிக்கவராக இருந்தாலும் எப்பொழுதும் கவலை உள்ளவராக இருப்பார்.

**பதினொன்றாம் அதிபதி பன்னிரு பாவகத்தில் நிற்பதால் ஏற்படும் பலன்,**

பதினொன்றாம் பாவாதிபதி இலக்கினத்தில் நின்றால் ஜாதகர் சாத்வீக குணம் கொண்டவராகவும், செல்வந்தராகவும் மகிழ்ச்சி மிக்கவராகவும், பாரபட்சமில்லாது அனைவரையும் ஒரே நிலையில் சமமாக மதிப்பவராகவும் கவிஞராகவும், சிறந்த பேச்சாளராகவும், எப்பொழுதும், அனைத்திலும் லாபம் பெறுபவராகவும் இருப்பார்.

பதினொன்றாம் அதிபதி இரண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் அனைத்து விதமான செல்வ வளங்களையும், வசதிகளையும், சுகங்களையும் பெற்றிருப்பார். தானதர்மம் செய்பவராகவும், ஆன்மீக வாதியாகவும், எப்போதும் மகிழ்ச்சி உள்ளவராகவும் இருப்பார்.

பதினொன்றாம் அதிபதி மூன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் அனைத்து காரியங்களிலும் திறமை மிக்கவராக இருப்பார். செல்வந்தராகவும், சகோதரர்களால் எல்லாவித மகிழ்ச்சி, சந்தோஷங்களுடனும், ஆதரவு மிக்கவராகவும் இருப்பார். கீழ்வாத நோயும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

பதினொன்றாம் அதிபதி நான்காம் பாவத்தில் நின்றால் ஜாதகர் தாய்வழி உறவினர்கள் மூலம் லாபங்கள் பெறுவார். புனித யாத்திரை மேற்கொள்வார். நில புலன், வீடுவாசல்களை பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வார்.

பதினொன்றாம் அதிபதி ஐந்தாம் பாவத்தில் நின்றால் ஜாதகரின் குழந்தைகள் நன்கு கல்வி கற்றவர்களாகவும், நற்குணங்கள் மிக்கவர்களாகவும், நன்னடத்தை உடையவர்களாகவும் மகிழ்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பார்கள். ஜாதகர் ஆன்மீக நாட்டம் கொண்டவராகவும், மகிழ்வுடன் வாழ்பவராகவும் இருப்பார்.

பதினொன்றாம் அதிபதி ஆறாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் பொதுவாக நோய் உள்ளவராகவோ இருப்பார். கொடூரகுணம் கொண்டவர். அயல்நாட்டில் வசிப்பார் மற்றும் எதிரிகளால் துன்பப்படுவார்.

பதினொன்றாம் அதிபதி ஏழாம் பாவத்தில் நின்றால் ஜாதகர், மனைவியின் உறவினர்கள் மூலம் எப்பொழுதும் லாபம் பெறுவார். தாராள மனம் கொண்டவராகவும், நற்குணம் மிக்கவராகவும், காம உணர்வுமிக்கவராகவும், மனைவியின் சொல்படி கட்டளைக்குப்பணிந்து நடப்பவராகவும் இருப்பார்.

பதினொன்றாம் அதிபதி எட்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் அனைத்து காரியங்களிலும் நஷ்டம் அடைவார். தீர்க்காயுளுடன் நீண்டகாலம் வாழ்வார். ஜாதகரின் மனைவி ஜாதகருக்கு முன் மரணமாகி விடுவார்.

பதினொன்றாம் அதிபதி ஒன்பதாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் அதிர்ஷ்டம் மிக்கவராகவும், திறமை மிக்கவராகவும் இருப்பார், நன்னடத்தை உடையவராகவும், ஆன்மீகவாதியாகவும் உண்மை பேசி நேர்மையாக நடப்பவராகவும், செல்வந்தராகவும், ஐம்புலன்களை வெல்லத்தக்கவராகவும் இருப்பார்.

பதினொன்றாம் அதிபதி பதினொன்றாம் பாவத்தில் ஆட்சிபெற்றால் ஜாதகர் எல்லா காரியங்களிலும் லாபம் பெறுவார். ஜாதகரின் கல்வி அறிவு மற்றும் மகிழ்ச்சி, சுகம் ஆகியவை நாளுக்கு நாள் விருத்தி அடையும்.

பதினொன்றாம் அதிபதி பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் நற்செயல்களுக்காக அதிகம் செலவு செய்வார். காம உணர்வு மிக்கவர். பொதுவாக தாழ்ந்த மக்களிடமும், பிறமத மற்றும் அயல்நாட்டு நண்பர்களுடனும் நட்புக் கொண்டிருப்பார்.

**12ம் அதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் பலன்கள்**

பன்னிரெண்டாம் பாவாதிபதி லக்கினத்தில் நின்றால் ஜாதகர் வீண் விரயங்கள் செய்பவராகவும், உடல் பலம், ஆரோக்கியம் குறைந்தவராகவும் இருப்பார். கபம் சம்பந்தப்பட்ட நோயால் பாதிக்கப்படுவார். கல்வி அறிவு மற்றும் செல்வம் இல்லாதவராகவும் இருப்பார்.

பன்னிரெண்டாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் நற்காரியங்களுக்காக பணத்தைச் செலவு செய்வார். ஆன்மீக உணர்வு உடையவராகவும் இனிமையாக பேசுபவராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், நன்னடத்தை உடையவராகவும் வாழ்க்கை வசதிகளைப் பெற்று மகிழ்ச்சியாக இருப்பார்.

பன்னிரெண்டாம் பாவாதிபதி மூன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர், சகோதரர்களால் எவ்வித மகிழ்ச்சி, சுகம் பெறாதவராக இருப்பார். அனைவரையும் வெறுப்பார். தன்தேக சுகத்தையே பெரிதும் விரும்புவார். சுயநலம் மிக்கவராக இருப்பார்.

பன்னிரெண்டாம் பாவாதிபதி நான்காம் பாவத்தில் நின்றால் ஜாதகர் தன் தாயிடமிருந்து பெற வேண்டிய சுகம் மற்றும் மகிழ்ச்சியை பெற முடியாதவராக இருப்பார். நிலம், வீடு மற்றும் வாகனங்கள் சம்பந்தமாக நாளுக்கு நாள் நஷ்டம், பொருள் இழக்கும் நிலை ஏற்படும்.

பன்னிரெண்டாம் அதிபதி ஐந்தாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் கல்வி அறிவு இல்லாதவராகவும், புத்திர பாக்கியங்கள் இல்லாதவராகவும் இருப்பார்.

புத்திரர்களைப் பெறுவதற்காக, புனித யாத்திரை மேற்கொள்வதில் பணத்தைச் செலவு செய்பவராக இருப்பார்.

பன்னிரெண்டாம் அதிபதி ஆறாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் உறவினர்களிடம் பகைமை பாராட்டுவார். கோபம் அதிகம் உள்ளவர் பாபச் செயல்கள் செய்வார். கவலைமிக்கவர், மற்றவர் மனைவிகளுடன் தொடர்பு கொள்வார்.

பன்னிரெண்டாம் அதிபதி ஏழாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் எப்பொழுதும் தன் மனைவிக்காக அதிகமாக செலவு செய்து கொண்டு இருப்பார். தாம்பத்ய வாழ்க்கை சிறப்பில்லை. மனைவியால் சுகமில்லை. கல்வி அறிவு அற்றவராகவும் உடல் பலம், ஆரோக்கியம் குறைந்தவராகவும் இருப்பார்.

பன்னிரெண்டாம் அதிபதி எட்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் எப்போதும் லாபங்களைப் பெறுவார். மத்திம ஆயுள் உடையவராக இருப்பார். இனிமையாகவும், மென்மையாகவும் பேசுவார். நற்குணங்கள் மிக்கவராகவும் இருப்பார்.

பன்னிரெண்டாம் அதிபதி ஒன்பதாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் தன்னுடைய ஆசிரியர் மற்றும் குருமார்களை மதிக்கமாட்டார். குரு துரோகியாக இருப்பார். தன் நண்பர்களுக்கே பகைவராவார். தன்னுடைய விருப்பப்படியே அனைத்தையும் செய்வார். சுயகாரியத்தில் கெட்டிக்காரராக இருப்பார்.

பன்னிரெண்டாம் அதிபதி பத்தாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் அரசு தொடர்புடையவர்களால் வாழ்க்கையில் உயர்வார். தகப்பனாரின் அன்பு பாசம் மற்றும் அவரிடமிருந்து கிடைக்கும் சுகம் குறைந்தவராகவே இருப்பார்.

பன்னிரெண்டாம் அதிபதி பதினொன்றாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் எப்பொழுதும் நஷ்டம் அடைவார். மற்றவர்களின் சொத்துக்கள் மூலம் சிலசமயம் சிறிதளவு லாபம் பெறுவார்.

பன்னிரெண்டாம் அதிபதி பன்னிரெண்டாம் பாவத்தில் நின்றால் ஜாதகர் அதிகமாக செலவு செய்பவராக இருப்பார். சுகம் அற்றவர் எளிதில் கோபம் அடைபவராகவும் குரோதம், வன்மம் உடையவராகவும் இருப்பார்.

## குறிப்பு

………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..
………………………………………………………………………………..

## கூறு – 2 கோள்கள், ராசியில் நிற்கும் பலன்கள் : –

### 1.சூரியன், சந்திரன், செவ்வாய் பலன்கள்

### சூரியன்

**சூரியன் மேஷத்தில்**

செயல்திறன், புகழ், யுக்தி, பணம், அதிகாரம், தலைமை, கம்பீரம் ஆகியவை ஜாதகர்களுக்கு அதிகமாக இருக்கும். ஆனால் முன்கோபம், முணுமுணுப்பு, கடுகடுப்பு அவசரம், ஆணவம் ஆகிய குணங்களும் இருக்கும்.

**சூரியன் ரிஷபத்தில்**

மந்த குணம், முகஸ்துதி, பெண்பகை ஆகியவைகளை ஏற்படுத்தும் இசை ஞானம், வாசனைத் திரவியத் தொழில், சுக வாழ்வு, சுக போஜனம், புத்தி கூர்மை, சமூக மதிப்பு, தந்திரம், சுயசிந்தனை, தன்னம்பிக்கை ஆகியவையும் சுபர் வீட்டில் ஏறியதால் தரும்.

**சூரியன் மிதுனத்தில்**

செல்வம், சாந்தம், கல்வி, சாஸ்திர ஞானம், கூச்சம், பேச்சாற்றல் ஆகியவைகளை ஜாதகருக்குத் தரும்.

**சூரியன் கடகத்தில்**

பயணம், மனோ பயம், மந்தம், சிறு நோய்கள், சுதந்திரம், விஞ்ஞான கல்வி, நுண்ணிய கலைகள், முன் கோபம் ஆகியவைகளை ஜாதகருக்குத் தரும்.

**சூரியன் சிம்மத்தில்**

மன உறுதி, திடமான முடிவு, அதிகாரம், தலைமை, புகழ், தைரியம், ஊக்கம், பேச்சாற்றல், கம்பீரம் ஆகியவைகளைத் தரும்.

**சூரியன் கன்னியில்**

புலமை, கணிதம், கலைஞானம், கல்வி, மத ஞானம், செல்வம், ஞாபக சக்தி, மென்தேகம், பெண் எண்ணம் ஆகியவைகளை ஜாதகருக்குத் தரும்.

**சூரியன் துலாத்தில்**

தீய பழக்கம், மதுபானத் தொழில், ஆடம்பரம், தேக வலி, தைரியக் குறைவு ஆகியவைகளை ஜாதகருக்குத் தரும்.

**சூரியன் விருச்சிகத்தில்**

விளையாட்டு, வனம், ராணுவம், போலீஸ் போன்ற துறைகளில் வீரச் செயல் புரிவர். தைரிய குணம், கொடூர குணம், முன் யோசனையின்மை, உணர்ச்சிவசப்படுதல் போன்ற குணநலன்கள் ஜாதகருக்கு ஏற்படும்.

### சூரியன் தனுசில்

தனவான், மதவாதி, இசைஞானி, பெரிய மனிதர், புகழுடையவர், திடீர் கோபமுள்ளவர் ஆகியோர்கள் தனுசில் சூரியன் நிற்கும் போது பிறந்தவர்கள் ஆவார்கள்.

### சூரியன் மகர, கும்பத்தில்

மகரம், கும்பத்தில் சதா துக்கம், சிரிப்பூட்டும் குணங்கள், பணக் குறைவு, அறிவுக்கூர்மையின்மை, அறியாமை போன்றவைகள் சூரியன் மகரம், கும்பத்தில் நிற்கும் போது ஏற்படும்.

### சூரியன் மீனத்தில்

நவரத்ன வியாபாரம், பெண்களால் முன்னேற்றம், நீர் சம்மந்தமான தொழில் முதலியன ஏற்படும் மதவாதி, மதகுரு, நீதிபதி, தர்மகர்த்தா, தக்கார் போன்றோர் சூரியன் மீனத்தில் நிற்கப் பிறந்தவர்கள் ஆவார்கள்.

## சந்திரன்

### சந்திரன் மேஷத்தில்

யாருக்கும் கட்டுப்படாத சுதந்திர எண்ணம் கொண்டவர்கள், வைராக்கியம் மிக்கவர்கள். தைரியம், வீர, தீர பராக்கிரமம் கொண்டவர்கள், எதிலும் துணிச்சலும் தான் நினைத்த காரியம் சாதிக்கின்ற ஆற்றலும் கொண்டவர்கள்.

### சந்திரன் ரிஷபத்தில்

பேச்சில் நளினம், பெண்கள் போன்ற இனிய சுபாவம், தன் காரியத்தை பிறரைக் கொண்டு சாதித்துக் கொள்ளும் சாமர்த்தியசாலிகள், நுட்பமாக பேசும் வல்லவர்கள். சில நப்பாசைகளுடன், சிலகாரியங்களில் இறங்கி, தனக்கு இடர் வரும் என்று தெரிந்தவுடன் தான் தப்பித்துக் கொள்ளும் திறன் படைத்தவர்கள், பயந்த சுபாவமும், தன் தந்திரத்தால் தன் பகையை முறியடிக்கும் திறமையும் கொண்டவர்கள். பொருள் சேர்ப்பதையே சிந்தனையாகக் கொண்டவர்கள், சுயபாதுகாப்பு, நிர்வாக பலம், சிக்கனம், அமைதி உள்ளவர்கள் ஆவார்கள்.

### சந்திரன் மிதுனத்தில்

இரட்டை சிந்தனை உடையவர்கள், தங்கள் செயல்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள பல வகையான யோசனைகளையும், தந்திரங்களையும் கையாள்வதில் சாமர்த்தியம் கொண்டவர்கள். வார்த்தைகளால் பிறரிடத்தில் தன் மதிப்பை காட்டிக் கொள்பவர்கள். கள்ளத் தனமும், போலி ஆடம்பரமுமின்றி நடந்து கொள்ளும் குணம் உடையவர்கள், உறுதியும், துணிவும் மிக்கவர்கள், புத்திசாலித்தனமும் திறமையும் மிக்கவர்கள், இரக்க உணர்வும், பிறருடன் இணங்கி போகும் குணமும் உடையவர்கள் ஆவார்கள்.

**சந்திரன் கடகத்தில்**

தான், தனது, தனக்கென்று ஒரு கொள்கையும் பிடிவாத குணமும், சாமர்த்தியமும், தைரியமும் உடையவர்கள். யார் எதைச் சொன்னாலும் அதை ஆய்ந்தறிந்து பலரிடத்தில் விபரம் கேட்டு தெரிந்து கொண்டாலும், முடிவில் தங்கள் எண்ணப்படியே நடந்து கொள்பவர்கள், எளிதில் எதையும் நம்பாதவர்கள், பிறர் தங்கள் ஆணைக்கு கீழ்படிய வேண்டும் என விரும்புவார்கள், தன் காரியத்தை சாதித்துக் கொள்ளும் வல்லமை படைத்தவர்கள், பிறரை எடை போட்டு ஆராய்பவர்கள், செல்வம் படைத்தவர்களுடன் பழகுபவர்கள், சிறந்த பொருட்கள் இருப்பினும் அதைவிட உயர்ந்த பொருளைத் தேடுபவர்கள், ஆணவம், தன்னலம் மிக்கவர்கள், எவரையும் மதிக்காதவர்கள் ஆவார்கள்.

**சந்திரன் சிம்மத்தில்**

தனக்கென்று தனிப் பாதையும், பிறர் தன்னை வணங்க வேண்டுமென்ற எண்ணமும் கொண்டவர்கள், வீண் கர்வம், முரட்டுப் பிடிவாதம், வாக்கு சாதுர்யம், கடின உழைப்பு, மனோ பலம் கொண்டவர்கள், அனைவராலும் விரும்பப்படுவார்கள், தன்னை எதிர்க்கும் எதிரிகளைத் தக்க சமயத்தில் வெற்றி கொள்பவர்கள், அலட்சிய சுபாவம், அனைத்தும் தெரிந்தவர்கள் போல் காட்டிக் கொள்வார்கள், தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பது போல் வரட்டுப் பிடிவாதம் கொண்டவர்கள், தன்னைப் பிறர் போற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். பிறருடைய முகஸ்துதிக்கு ஆளாகி அவர்கள் பேச்சில் ஏமாந்து விடுவர், தன் அகம்பாவத்தால் நஷ்டமடைவார்கள். ஆற்றல் மிக்கவர்களாக இருந்தாலும் ஆத்திரத்தால் நிதானம் இழப்பவர்கள் ஆவார்கள்.

**சந்திரன் கன்னியில்**

தோற்றத்தில் பொலிவும், சுபாவத்தில் கலகலப்பும், பெண்களின் சாயலும் கொண்டவர்கள், சிக்கனம் என்ற பெயரில் அளவுக்குமீறி செலவு செய்வார்கள், தன் காரியத்தை சாதித்துக் கொள்ள நயந்து, செலவின்றி தன் காரியத்தை முடித்துக் கொள்வார்கள். ஊக்கமும், உழைப்பும், சஞ்சல மனமும் கொண்டவர்கள். உயர்ந்த மனிதர்களுடன் நட்பு கொள்வார்கள், எந்த விஷயத்திலும் நம்பிக்கை இல்லாமல் தான் செய்ய வேண்டிய காரியத்தை பிறரிடம் கொடுத்து சோதித்துப் பார்ப்பார்கள். சலன புத்தி கொண்ட இவர்களின் பேராசை தன்மையை அறிந்து சில ஏமாற்றுகாரர்கள் இவர்களை புகழ்ந்து ஆசைகாட்டி இவர்களிடமிருந்து செல்வத்தை பறித்துச் செல்வார்கள். வஞ்சகர்களையும், ஏமாற்றுகாரர்களையும் நம்பும் இவர்கள், நாணயமானவர்களையும், தன் நலனைக் கருதாது உதவிபுரியும், உறவினரையும் நண்பர்களையும் முதலில் நம்பாமல் பிறகு நம்புவார்கள், பொருள் சேர்க்கும் ஆர்வம் மிக்கவர்கள் ஆவார்கள்.

**சந்திரன் துலாத்தில்**

எதிலும் நியாயம், நேர்மை, வாக்கு தவறாமை, சீராக நடக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள், வாக்குச் சாதுர்யம் மிக்கவர்கள், சில சமயங்களில் யோசிக்காமல், பிறர் கூறும் கருத்துக்களை எடுத்துக்கொள்ளாமல் அவசரத்தால் அபசகுனமாகப் பேசிவிடுவார்கள். செல்வம் படைத்தவர்கள் பக்கமே சாய்வார்கள், சிலரை சீண்டி பேசி வேடிக்கை பார்ப்பார்கள், பிறரைப் போற்றிப் பேசி தன் காரியத்தை சாதித்துக் கொள்வார்கள், நல்ல சுறுசுறுப்பும், தெளிவும் கொண்டவர்கள், ஆடம்பர வாழ்க்கையையும், கௌரவத்தையும் எதிர்பார்ப்பார்கள். அவசர வார்த்தைகளால் நண்பர்கள் மூலம் கிடைக்கக்கூடிய நன்மை, உதவி, காரிய வெற்றி ஆகியவற்றை இழந்து விடுவார்கள், பிறர் கூறும் கருத்தை கவனமாகக் கேட்பதுபோல் இருந்து, பின் தான் நினைத்தப்படியே நடப்பார்கள். கலைகளில் ஈடுபாடு, மனோ பலம், உடல்பலம், அதிக ஆற்றல் கொண்டவர்கள், எதிலும் துணிவாக செய்லபடுபவர்கள் ஆவார்கள்.

**சந்திரன் விருச்சிகத்தில்**

சகல விஷயங்களிலும் ஆர்வம் காட்டி, சுறுசுறுப்பாகவும் சிக்கனமாகவும் இருப்பார்கள், அனாவசிய செலவுகளை நீக்கி, அத்யாவசிய செலவுகளை மட்டும் செய்வார்கள். சாதனை படைக்கும் எண்ணம் கொண்டவர்கள், பேச்சில் உட்பொருள்வைத்து பேசுவார்கள், விளையாட்டாகவே பேசி பிறரின் குற்றம், குறைகளை எடுத்துக் காட்டுவார்கள், தான் செய்யும் தவறுகளுக்கெல்லாம் நியாயம் கற்பிப்பார்கள், சங்கடங்கள் வரும் பொழுது பவ்யமாக ஒதுங்கி விடுவார்கள், அதிக கோபமும், அதிக துணிவும், தன்னம்பிக்கையும் கொண்டவர்கள். சிறந்த கற்பனை குணமும், பிறருக்கு ஆலோசனை கூறும் தன்மையும் கொண்டவர்கள் ஆவார்கள்.

**சந்திரன் தனுசில்**

வைராக்கியம், திடசிந்தனை, பொன்மனம், நேர்மை, நல்லொழுக்கம் கொண்டிருப்பார்கள். தங்கள் பேச்சால் பிரச்சினைகளை வரவழைத்துக் கொள்வார்கள். விட்டுக் கொடுத்து வாழும் மனப்பான்மை உள்ளவர்கள். ஊருக்கு உபகாரம் செய்வார்கள், தன் குடும்பத்திற்கு ஆகாதவர்கள் ஆவார்கள். வாக்கு சாதுர்யம் மிக்கவர்கள், சிலசமயம் பொய் பேசி கௌரவத்தை கெடுத்துக் கொள்வார்கள். ஏட்டுக் கல்வியும், அனுபவக் கல்வியும், ஞானம், தெய்வீகத் தன்மை, தெய்வ அனுகிரகம் கொண்டவர்கள். மேலானவர்களின் நட்பு உடையவர்கள். சிறிது பொறாமையும் உடையவர்களாவர். மேலும் முன்னேற வேண்டுமென்ற ஆர்வத்தால் எதையும் செய்வார்கள். சஞ்சலமனம் கொண்டவர்கள், வேகமான செயல்பாடு உள்ளவர்கள் ஆவார்கள்.

**சந்திரன் மகரத்தில்**

எதையும் யோசித்துப் பார்க்கும் திறன் உள்ளவர்கள், பலவழிகளில் சாமார்த்தியம் காட்டி தன்னிடம் எல்லாமே இருப்பது போல் காட்டிக் கொள்வார்கள். பிறருடைய அபிப்பிராயத்தை கேட்பார்கள். தம்முடைய அபிப்பிராயம் சொல்ல மாட்டார்கள். தங்கள் எண்ணப்படி காரியம் செய்வார்கள். யார் எதைக் கேட்டாலும் ஆம், இல்லை என்று பதில் கூறமாட்டார்கள். சில பிரச்சனைகளுக்கு மனதில் போராட்டம் நடத்தி தாங்களே தீர்வு காண்பார்கள். மனதுக்குள்ளேயே பிறரை எடைபோடுவார்கள். தன் எண்ணங்களையோ, செயல்களையோ, வெளிப்படையாக சொல்லமாட்டார்கள். பிறரை அடிமைபோல் நடத்தும் எண்ணம் கொண்டவர்கள். செல்வம் அதிகமாக இருந்தால் யாரையும் மதிக்க மாட்டார்கள். பகையை மனதில் வைத்திருந்து எதிரியை வெல்வர். தேவையானால் பிறருடன் பழகுவார்கள், இல்லாவிடில் ஒதுக்கி விடுவார்கள். பொருள் சேர்க்கும் ஆர்வம் மிக்கவர்கள், எப்படியும் தன் காரியத்தை சாதித்துக் கொள்பவர்கள் ஆவார்கள்.

**சந்திரன் கும்பத்தில்**

தெய்வீக குணம் கொண்டவர்கள். தீர்க்கமான சிந்தனை, காரிய சாதனை, தர்ம சிந்தனை, சிரித்த முகம், குழந்தை உள்ளம் கொண்டவர்கள். நியாய தர்மங்களுக்குப் பயந்து நடப்பார்கள். பிறருடைய அன்புக்கு கட்டுப்பட்டவர்கள், ஆனால் அதிகாரத்திற்குக் கட்டுப்பட மாட்டார்கள். தக்க மரியாதைக்குரியவர்களை தவிர பிறருக்குத் தலை வணங்க மாட்டார்கள். மனைவி மேல் பாசம் மிக்கவர்கள். அதிகமான கல்வியும், அதிகமான அனுபவங்களும் கொண்டவர்கள். விளம்பரம், ஆடம்பரத்தை விரும்ப மாட்டார்கள். சகல விஷயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்கள். பல கலைகளைக் கற்பார்கள். தெய்வ அனுகிரகமும், இளகிய மனமும் கொண்டவர்கள், வெளிப்படையாக பேசி, எதார்த்த வாதிகளாகவும், பால் மனம் கொண்டவர்களாகவும் இருப்பர். அனைவருடைய குணாதியத்தையும் அறிந்து, சில சமயம் ஜாடையாக இடித்துப் பேசியும், கலகம் மூட்டிவிடும் குணமும் கொண்டவர்கள். துணிவும், ஆற்றலும் மிக்கவர்கள், அதிக மனோ பலமும் அதனால் ஆகக்கூடிய அனைத்து காரியங்களையும் திறம்பட செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்கள் ஆவார்கள்.

**சந்திரன் மீனத்தில்**

சில சமயம் சுறுசுறுப்பாகவும் சிலசமயம் மந்தமாகவும் செயல்படுவார்கள். அனைத்தையும் நேர்த்தியாகச் செய்வார்கள். மனத் தெளிவும் வாக்குச் சாதுர்யமும் உண்டு. பிறரிடம் நளினமாகப் பேசி, அவர்களை தங்கள் வசமாக்கி காரியத்தை சாதித்துக் கொள்வார்கள். பிறருடைய விருப்பத்திற்கும், எண்ணத்திற்கும் தக்கவாறு பேசுவார்கள். ஒரு இடத்தில் அதிக நேரம்

இருக்கமாட்டார்கள். வீண் பிடிவாதமும், வரட்டு கௌரவமும் கொண்ட இவர்கள் பிறருடன் நெருங்கிப் பழகமாட்டார்கள். சிறிது பொறாமை குணமும் தங்களுக்கு வேண்டாதவர்களை வசைபாடுவதில் வல்லமையும் உள்ளவர்கள், கல்வி அறிவுத்திறனும், அனுபவ அறிவு இருந்தாலும் சிறிது கூச்ச சுபாவமும், கஞ்சத்தனமும் உடையவர்கள். தனக்கு தெரிந்ததைத் தவிர வேறெதுவும் உலகத்தில் இல்லை என்று எண்ணிக் கொள்வார்கள், பிறர் சுட்டி காட்டினாலும் ஏற்க மாட்டார்கள், அசட்டுத் தைரியமும், பயந்த சுபாவமும் உள்ள இவர்கள் தன் காரியத்தில் கண்ணாய் இருப்பார்கள் கௌரவமும், தன்னடக்கமும் கற்பனை வளமும் உடையவர்கள் ஆவார்கள்.

## செவ்வாய்

### செவ்வாய் மேஷத்தில்

அதிகாரம், முன்கோபம், பூமி லாபம், உடல் காயம், கணித அறிவு, பிடிவாதம் நிர்வாகத்திறன், தரும குணம் போன்றவைகளைச் செவ்வாய் மேஷத்தில் ஏறினால் ஜாதகருக்குத் தருவார்.

### செவ்வாய் ரிஷபத்தில்

பெண் எண்ணம், மாந்திரீகக் கலை, விளையாட்டுக் கலை, உணர்ச்சி வேகம் போன்றவைகளைச் செவ்வாய் செய்வார்.

### செவ்வாய் மிதுனத்தில்

ரண வைத்தியம், குடும்ப ஈடுபாடு, விஞ்ஞான ஆய்வு, இசை ஞானம், புலனாய்வு, சதா துக்கம், துரித செயல், திறன் போன்றவைகளை மிதுனச் செவ்வாய் ஜாதகருக்குத் தரும்.

### செவ்வாய் கடகத்தில்

விவசாய அறிவு, மருத்துவ ஞானம், சஞ்சார பிரியம், புத்தி கூர்மை, உள்பயம், மனதுக்கம், யூகம், சகோதர தோஷம், எலும்பு நோய் போன்றவைகளைக் கடகச் செவ்வாய் செய்வார்.

### செவ்வாய் சிம்மத்தில்

எழுத்தாற்றல், கணித அறிவு, விஞ்ஞான அறிவு, ஆராய்ச்சி, அதிக எண்ணத்தால் மூளைநோய், தரும சிந்தனை போன்றவைகளை சிம்மச் செவ்வாய் தரும்.

### செவ்வாய் கன்னியில்

முத்தமிழ் அறிவு, ஆடம்பரம், வஞ்சக எண்ணம், இல்லறப் பிரச்சனை, தைரியம், மருத்துவத்துறை, பொறியியல் அறிவு, விஞ்ஞானக் கல்வி இவைகளைக் கன்னியில் நின்ற செவ்வாய் தரும்.

**செவ்வாய் துலாத்தில்**

பெண்களால் ஏமாற்றம், சேமிப்பு எண்ணம், குடும்ப ஈடுபாடு, சுய சம்பாத்தியம், வியாபார தந்திரம், முன் யோசனை ஆகியவைகளை துலா செவ்வாய் தரும்.

**செவ்வாய் விருச்சிகத்தில்**

ஆக்கிரமிப்பு எண்ணம், விளையாட்டுக் கலை, ராணுவ சேவை, ஞாபக சக்தி, ராஜதந்திரம், முன்யோசனை ஆகியவை விருச்சிகத்தில் செவ்வாய் இருந்தால் ஏற்படும்.

**செவ்வாய் தனுசில்**

அரசு பதவி, எதிர்ப்பில் வெற்றி, நியாய உணர்வு, நிர்வாகத்தில் திறமை, பள்ளி நிர்வாகம், கோவில் நிர்வாகம், புத்திர ஈடுபாடு, தீவிரவாதம், போட்டி மனப்பான்மை இவைகளை செவ்வாய் ஏற்படுத்தும்.

**செவ்வாய் மகரத்தில்**

தொழில் திறமை, பொறியியல் அறிவு, மெய்ஞானம், விஞ்ஞானக் கல்வி, அரசியல் பதவி, கப்பல் பொறியியல் திறன், மத ஈடுபாடு, அவசர குணம், முன் கோபம் ஆகியவைகளை மகரச் செவ்வாய் தரும்.

**செவ்வாய் கும்பத்தில்**

சஞ்சார பிரியம், மூர்க்க குணம், விவாத குணம், சுதந்திர வாழ்வு, விரயம், மரண கண்டம், மன துக்கம் ஆகியவைகளை கும்ப செவ்வாய் ஏற்படுத்தும்.

**செவ்வாய் மீனத்தில்**

அன்பால் ஏமாற்றம், அலைச்சல், உணர்ச்சி வேகம், கப்பல் பொறியியல் திறமை, கடற் தொழில் இவைகளை மீன செவ்வாய் தரும்.

## 2.புதன், குரு, சுக்ரன் பலன்கள்

### புதன்

**புதன் மேஷத்தில்**

யூக வியாபாரம், தீய லாபத் தொழில், சூட்சும புத்தி, கொள்கையின்மை, விஞ்ஞான அறிவு, அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம், மாந்திரீக தாந்திரீக அறிவு ஆகியவைகளை தரும்.

**புதன் ரிஷபத்தில்**

முத்தமிழ் ஞானம், பெண்களால் மேன்மை, கல்வி, பதவி, செல்வம் போன்ற சகல நன்மைகளையும் தரும்.

**புதன் மிதுனத்தில்**

பேச்சாற்றல், இசை ஞானம், சகல கலை ஞானம், பேர வியாபாரத்தில் லாபம், செயல்திறன், ஆய்வுத்திறன், ராசதந்திரம், யூக அறிவு இவைகளை தரும்.

**புதன் கடகத்தில்**

தாயன்பின்மை, மத நம்பிக்கை, சஞ்சலம், உறவினர்கள பகை, அமைதியின்மை, போதைப் பழக்கம், எழுத்தாற்றல், மன துக்கம் ஆகியவைகளை ஏற்படுத்தும்.

**புதன் சிம்மத்தில்**

அரசியல் ஆலோசனை, தாய்க்கு தோஷம், பயணத் தொழில், வாதத்திறன், உயர் வருமானத்தொழில்கள் மனக் கட்டுப்பாடு, தியானம், புகழ், கல்வி, செல்வம், தைரியம் இவைகளை தரும்.

**புதன் கன்னியில்**

கணிதம், தலைமை, கல்வி, எழுத்தாற்றல், ஜோதிடம், ஞானம், வணிகம், பேர வியாபாரத்தில் லாபம், ராஜதந்திரம் போன்றவைகளை தரும்.

**புதன் துலாத்தில்**

ரிஷப புதன் தரும் நற்பலனிலும் அதிகமாகவே துலாத்தில் புதன் செய்யும். ராஜயோகம் செய்யும்.

**புதன் விருச்சிகத்தில்**

முரட்டுப் பிடிவாத கொள்கை, உடல் தளர்வு, அசட்டுத் துணிச்சல் தீய யூகத்தொழில், ஜோதிடம், மருத்துவம், மாந்திரீகம், விஞ்ஞான அறிவு இவைகளை தரும்.

**புதன் தனுசில்**

சந்தேகம், மூட நம்பிக்கை, ஆய்வில் நாட்டம், அவசர புத்தி, சூட்சும புத்தி, ராஜ தந்திரம், யூக லாபம், சமூக தலைமை, அரசு பதவி ஆகியவைகளை புதன் தரும்.

**புதன் மகரத்தில்**

சுய லாபம், சிக்கனம், கடன் வசதி, வாதத் தன்மை, பொறியியற் கல்வி, ராஜதந்திரம், தோட்டக்கலை, கடல் லாபம், ஓய்வின்மை, சந்தேக புத்தி, புகழ் நாட்டம், தொழிலாளர் நிர்வாகம் போன்றவைகளை புதன் தரும்.

**புதன் கும்பத்தில்**

பொறியியற் கல்வி, ராஜதந்திரம், தோட்டக்கலை, கடல் லாபம், ஓய்வின்மை, சுய லாபம், சிக்கனம், கடன் வசதி, வாதத் தன்மை, சந்தேக புத்தி, புகழ் நாட்டம், தொழிலாளர் நிர்வாகம் போன்றவைகளை புதன் தரும்.

**புதன் மீனத்தில்**

சிறந்த ஆலோசனை, நல்ல வியாபார நுணுக்கம், தெய்வ பக்தி, திறந்த மனம், வழிகாட்டும் அறிவு, வங்கி நிர்வாகம், ஏமாளித் தனம், செல்வம். ஞானம் இவைகளைப் புதன் தரும்.

## குரு

**குரு மேஷத்தில்**

உயர் பதவி, நல்ல குடும்பம், அதிகாரம், புத்திர பாக்கியம், கருணை, அமைதி, செல்வம் இவைகளை குரு தரும்.

**குரு ரிஷபத்தில்**

கவுரவம், கல்வி, செல்வம், பிடிவாதம், சந்தேகம், நிர்வாகம், புத்திரசோகம், புகழ், குடும்ப சுகம், செயல் திறமை ஆகியவைகளை தரும்.

**குரு மிதுனத்தில்**

வாதத் திறமை, யுக்தி, ராஜதந்திரம், சுபச் செலவு, எழுத்தாற்றல், கல்வி, புத்திர தோசம், ஊக்கம் ஆகியவைகளைக் குரு தரும்.

**குரு கடகத்தில்**

சாஸ்திர அறிவு, சாதுரியம், கல்வி, செல்வம், நிர்வாகம், மமதை, புகழ், வசதியான வாழ்வு ஆகியவைகளை குரு தரும்.

**குரு சிம்மத்தில்**

அரச பதவி, அதிகாரம், எஸ்டேட் நிர்வாகம், பொது நிர்வாகம் புகழ், கருணை இவைகளை குரு தரும்.

**குரு கன்னியில்**

மிதுனத்தில் குரு நின்ற பலனும், நல்ல குடும்ப வாழ்வு அதிர்ஷ்டம், கருணை ஆகியவைகளையும் சேர்த்து குரு தரும்.

**குரு துலாத்தில்**

ஆடம்பர வாழ்வு, புகழ்ச்சி, மயக்கம், பெண் நாட்டம், மத நம்பிக்கை, கவர்ச்சி, அதிகச் செலவு ஆகியவைகளை குரு தரும்.

**குரு விருச்சிகத்தில்**

முன் கோபம், அவசர புத்தி, பெண்ணால் செலவு, வைபவ செலவு, குடும்பச் செலவு, எஸ்டேட் நிர்வாகம், அதிகார பதவி போன்றவைகளை தரும்.

**குரு தனுசில்**

பேச்சாற்றல், வாதத் திறமை, செல்வம், குருத்தன்மை, கருணை மனம், செயல் திறன், கலை ஞானம் எழுத்தாற்றல் ஆகியவைகளைக் குரு தரும்.

**குரு மகரத்தில்**

புத்திர சோகம், குடும்ப குழப்பம், தன நாசம், தத்துவ ஞானம், பகல் கனவு, கற்பனை வாழ்வு, புத்திரமின்மை, சிந்தனை தடுமாற்றம், மனித நேயம் ஆகியவைகளை குரு தரும்.

**குரு கும்பத்தில்**

புத்திர சோகம், குடும்ப குழப்பம், தன நாசம், தத்துவ ஞானம், பகல் கனவு, கற்பனை வாழ்வு, புத்திரமின்மை, சிந்தனை தடுமாற்றம், மனித நேயம் ஆகியவைகளை குரு தரும்.

**குரு மீனத்தில்**

உயர்பதவி, ராஜதந்திரம், மணவாழ்வில் சிக்கல், வாதத் திறமை, குருத் தன்மை, கருணை மனம் ஆகியவைகளை குரு தரும்.

## சுக்கிரன்

**சுக்கிரன் மேஷத்தில்**

அதிகச் செலவு, சித்திர சிற்பகலை கனவு, மதவாதம், பெண் நாட்டம், கலை ஞானம், குடும்ப குழப்பம், கட்டிடக் கலை, தோட்டக்கலை ஆகியவைகளைச் சுக்கிரன் தரும்.

**சுக்கிரன் ரிஷபத்தில்**

முத்தமிழ் ஞானம், கருணை, சந்தோஷம், கவர்ச்சி, செல்வம், வாகனத் தொழில், வாசனைத் தொழில், கட்டிடக் கலை, வர்ணத் தொழில் நவநாகரீகத் தொழில் ஆகியவைச் சுக்கிரன் தரும்.

**சுக்கிரன் மிதுனத்தில்**

கல்வி, செல்வம், கவித் தொழில், அலங்காரக் கலைஞானம், குடும்பப் பிரச்சனை, கருணை ஆகியவைகளைச் சுக்கிரன் தரும்.

**சுக்கிரன் கடகத்தில்**

பெண் புத்திர பாக்யம், குடும்பத்தில் குழப்பம், சபல புத்தி, உணர்ச்சி வேகம், பெண் நாட்டம், எழுத்தாற்றல், கவிதை, கற்பனை, கதை, கடற் தொழில் ஆகியவைகளை சுக்கிரன் தரும்.

**சுக்கிரன் சிம்மத்தில்**

பெண்ணால் லாபம், உணர்ச்சி வேகம், ஹோட்டல், உணவுப் பொருட்கள் தொழில், பெண் நாட்டம் ஆகியவைகளைச் சுக்கிரன் தரும்.

**சுக்கிரன் கன்னியில்**

காதல் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, பெண் சகோதர தோஷம், மனக் குழப்பம், தன லாபம், தோட்டத் தொழில் ஆகியவைகளை தரும்.

**சுக்கிரன் துலாத்தில்**

ராஜதந்திரம், குருத் தன்மை, ஞானம், கட்டிடக் கலை, கப்பல் தொழில், பயணத் தொழில், வாகனத் தொழில், பன்னாட்டு வணிகம், சுகபோக வாழ்வு, கவர்ச்சி, செல்வம் ஆகியவைகளைச் சுக்கிரன் தரும்.

**சுக்கிரன் விருச்சிகத்தில்**

காதல் தோல்வி, உணர்ச்சி வேகம், அதிகச் செலவு, கர்வம், வாதத் திறமை போன்றவைகளைச் சுக்கிரன் தரும்.

**சுக்கிரன் தனுசில்**

அதிகார பதவி, வங்கித் தொழில், நிர்வாகத் திறன், ஞானம், சுகம், கல்வி, செல்வம் ஆகியவைகளை சுக்கிரன் தரும்.

**சுக்கிரன் மகரத்தில்**

வாகனத் தொழில், பெண் நாட்டம், தியானம், ஞானம், குறிக்கோளின்மை, சுகபோகவாழ்வு, ஆகியவைகளை சுக்ரன்தரும்.

**சுக்கிரன் கும்பத்தில்**

**(**மகரத்தில் செய்யும் அனைத்து பலன்களையும் தரும்,**)** சுகபோகவாழ்வு, ஆகியவைகளை சுக்ரன்தரும்.

**சுக்ரன் மீனத்தில்**

முத்தமிழ் ஞானம், அலங்காரத் தொழில், ஆடம்பர பிரியம், வாகன சுகம், வங்கித் தொழில், செல்வம், புகழ், பெண்ணால் லாபம், ஆகியவைகளைச் சுக்கிரன் தரும்.

## 3.சனி, ராகு, கேது பலன்கள்

### சனி

**சனி மேஷத்தில்**

வாதத் திறமை, தீய பழக்கம், கண்டங்கள், சந்தேக குணம், அலைச்சல், மிருகத்தனம் ஆகியவைளைச் சனி தரும்.

**சனி ரிஷபத்தில்**

மனப் பிரச்சனை, கவலை, வாகன பொறியியல் அறிவு, வெற்றித் திறமை, பெண் நாட்டம், ஆகியவைகளைச் சனி தரும்.

**சனி மிதுனத்தில்**

பொறியியல் அறிவு, சூட்சுமப் புத்தி, யூக அறிவு, விமானத் தொடர்பு, விவசாய அறிவு ஆகியவைகளைச் சனி தரும்.

**சனி கடகத்தில்**

தாயிக்கு தோஷம், புத்திர தோஷம், அதிகச் செலவு, செல்வம், சோம்பல், நரம்பு நோய், மனக்குழப்பம் போன்றவைகளைத் தரும்.

**சனி சிம்மத்தில்**

கடின உழைப்பு, தியாக உணர்வு, தவ நோன்பு, வைராக்கியம், திடீர் நோய்கள், வாதத்திறமை ஆகியவைகளைச் சனி தரும்.

**சனி கன்னியில்**

பொது வாழ்வில் மேன்மை, பழங்கலை ஞானம், அதிகச் செலவு, விமானத் தொடர்பு, தீய பழக்கம், பொறியியல் அறிவு, நீதி நுணுக்கம், பின் யோகம் ஆகியவைகளைச் சனி தரும்.

**சனி துலாத்தில்**

வாகனத் தொழில், தலைமைப் பதவி, செல்வம், ஆணவம், அதிகாரம், சூட்சும அறிவு, நீதி நுணுக்கம், கருணை, ஞானம், தியானம், மணிமந்திரம் ஆகியவைகளைச் சனி தரும்.

**சனி விருச்சிகத்தில்**

முன் கோபம், அதிகார வேட்கை, வெட்டுக் காயம், விஷக்கடி, தீரச் செயல், கடின குணம், நரம்பு நோய், கவலை ஆகியவைகளைச் சனி தரும்.

**சனி தனுசில்**

புத்திர சுகம், மணவாழ்வில் பிணக்கு, புகழ், சாந்தம், சந்தோஷம், நிதி நிர்வாகம், விசுவாசம், கருணை, நடிப்புக் கலை ஆகியவைகளை சனி தரும்.

**சனி மகர, கும்பத்தில்**

ராஜ தந்திரம், சூட்சும புத்தி, தன் நலம், குடும்ப நாட்டம், பெண்ணால் லாபம், சந்தேக குணம், தத்துவ ஞானம் எதிரிகளால் முன்னேற்றம், பொறியியல் தொழில், தவம், தியானம், பின் யோகம் ஆகியவைகளை தரும்.

**சனி மீனத்தில்**

குடும்ப சுகம், புத்திர சுகம், செல்வம், யோகம், புகழ், கல்வி, அதிகாரம், கருணை சூட்சும புத்தி, நிதி நுணுக்கம், இயந்திர வியாபாரம் ஆகியவைகளைச் சனி தரும்.

## பாம்புகள் (இராகு, கேது)

இராகு கேது நிழல்கள் என்பதால் தனிக்குணம் மாறுபடுகிறது, சனியின் குணம் இராகுவுக்கும், செவ்வாயின் குணம் கேதுவுக்கும் உள்ளது என்றாலும் தான் நின்ற வீட்டு அதிபதியின் குணங்களையும் சேர்த்து தானே பலன்களைத் செய்யும்.

வெற்றி ஸ்தானங்களான 3, 6, 10, 11 ஆகிய வீடுகளில் கடின போட்டி & பேர லாபங்களை பாம்புகள் தருகின்றன.

கேந்திர, கோண, வீடுகளான 1, 4, 5, 7, 9, 10 ஆகிய பாவங்களில் அந்தந்த வீட்டின் ஆதிபத்தியங்களைக் கெடுத்து, தன் திசாபுத்தி காலங்களில் செல்வம் தருகின்றன. உதாரணமாக ஏழாமிடத்தில் நின்ற இராகு மண வாழ்வைக் கெடுத்து, பண வாழ்வைத் தரும், சொந்த வீடு இல்லாததால், எல்லா வீடுகளையும் சொந்த வீடாக ஆக்கிரமிக்கும் குணம் பாம்புகளுக்கு உண்டு.

பொதுவாக சூரியன், செவ்வாய், சனி, இராகு கேது போன்ற பாப கிரக திசைகள் தீயவழியில் செல்வத்தையும், அதிகாரத்தையும், புகழையும் தந்தாலும், உடல், குடும்பம், சுகம், நிம்மதி ஆகியவைகளைத் தருவதில்லை.

இளம் சிவப்பு நிறம் வாய்ந்தது செம்பாம்பு கேது. இது மலைப்பாம்பு போல் ஏழு கிரகங்களையும் வளைத்து செயல்பட விடாமல் மந்தமாக்கி தடுக்கும் காந்தச் சுழல். எனவே இராகு – கேதுக்களுடன் சேர்ந்த கிரகங்களின் காரகத்துவ ஆதிபத்திய பலன்கள் மாறுபடுகின்றன.

## 4.யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ பலன்கள்

## யுரேனஸ் இராசிகளில் இருக்கும் பலன்

**மேசத்தில் யுரேனஸ்**

சுதந்திரத்தன்மை, சக்தியானவர், பேராவல் முன்னேற்ற எண்ணம், துடிப்பானவர், வளமையானவர், சுற்றித்திரிபவர், ஏமாற்றம், வாக்குவாதம், மரியாதை இன்மை, மழுப்புதல் போன்ற குணங்கள் காணப்படும்.

**ரிசபத்தில் யுரேனஸ்**

முரண்டுபிடிப்பர், பிடிவாதம், ஐயமுறுதல், உறுதியுடையர், பொறாமை, நிலையில்லாத பணப்புழக்கம், எதிர்பாராத இழப்பு, புதியவர்கள் அல்லது பங்குதாரர் மூலமாக இலாபமடைதல்.

**மிதுனத்தில் யுரேனஸ்**

சோதிடர், விஞ்ஞான ஆய்வு, மாணுவித்தை, நண்பர்கள், ஏற்றுக்கொள்ளாத தன்மை, மின்சாரப்படிப்பு, பிராயான மகிழ்ச்சி, சகோதரிடம் நேர்மையில்லாமல் இருத்தல்.

**கடகத்தில் யுரேனஸ்**

உணர்ச்சிவயப்படுபவர், தனிமை, மனக்கிளர்ச்சி, சீரணக்கோளாறு, சொத்துக்களில் இழப்பு, ஓய்வின்மை, சிறிய இழப்புகள்.

**சிம்மத்தில் யுரேனஸ்**

பிடிவாதம், முரட்டுக்குணம், தீர்மானமாக இருத்தல், ஏற்றுக் கொள்ளாத தன்மை, தனிமை, புதுமைவிரும்பி, இயந்திரம், பத்திரிக்கையாளர், விளையாட்டு, மாறும் அன்புடையவர், புதிய நண்பர்களை விரும்புவர்.

**கன்னியில் யுரேனஸ்**

அறிவாளி, சுதந்திரம், அறிவியல் மற்றும் இயந்திர அறிவுடையவர், கற்பித்தல், மின் ஆற்றல், மின்அணு, இரசாயனம், கணிதம், அடிக்கடி வேலையாட்களை மாற்றிக்கொள்ளுதல்.

**துலாத்தில் யுரேனஸ்**

வழக்கத்திற்கு மாறாக செயல்படுதல், கலைத்தன்மை, மறைபொருள் அறிவியல் கண்டுபிடிப்பு, அழகான உடற்கட்டு, ஏராளமான கற்பனைவளம், கெட்டிருந்தால் இப்பலன்கள் மாறிச் செயல்படும்.

**விருச்சிகத்தில் யுரேனஸ்**

தீர்மானமாக இருத்தல், வேகமானவர், தியான நிலையில் மனதை ஒருநிலைப்படுத்துதல், தனிமை விரும்பி, கூர்மையான அறிவு, கமுக்கம், சுயமுன்னேற்றம்.

**தனுசில் யுரேனஸ்**

கற்பனை, களவு, மாணுடக்கலை, சமயத்தொடர்பு, சமூகத்தொடர்பு, உயர்கல்வி, முன்னேற்றம், வெளிநாட்டுத் தொடர்பு, கடல் கடந்த பிரயாணம், நீண்டதூரப் பிரயாணம்.

**மகரத்தில் யுரேனஸ்**

சரியாக உணர்தல், பேராவல், பொறுப்பு, உண்மை, நிர்வாகத்திறமை, சோதிடம், இயந்திரம், மின் ஆற்றல், வானொலி, போக்குவரத்து, நகராட்சி, மூத்தவர்களுக்கு ஆபத்து, தனிமை, எதிர்மாறாக திரும்புதல்,பொதுவாழ்வின் கருத்துக்கள்.

**கும்பத்தில் யுரேனஸ்**

உண்மை, சுயநலமின்மை, நட்பு, நேர்மை, இயந்திர அறிவு, சுதந்திர எண்ணம், அறிவியல் அறிவு, கூட்டுறவு, குழுக்கள், பொதுவாழ்வு, பெரிய நிறுவனங்கள், வானொலி, வான்வெளி.

**மீனத்தில் யுரேனஸ்**

மறைபொருள் வித்தைகள், திகைப்பூட்டுகிற ஆய்வுகள், கனவுகள் சரியாக நிரூபித்தல், நிலையில்லாமை, எதிரபாராத தீய விளைவு, தற்கொலை, எதிர்ப்பு, தடை அவமானம், ஒழுக்கம் தவறுதல்.

## நெப்டியூன் இராசிகளில் இருக்கும் பலன்

**மேசத்தில் நெப்டியூன்**

வேகமாக உணர்ச்சி வயப்படுபவர் சமய ஆர்வம், சக்திமயமான துணிவு, திகைப்பூட்டும் அனுபவம், கெட்டிருந்தால் சமூக எதிரிகளை சுட்டுக் கொலை செய்பவர்கள் மற்றும் படுகொலை, வெடி குண்டுகளை எறிதல், தைரியமாக ஆட்களை கடத்திச் செல்லுதல்.

**ரிசபத்தில் நெப்டியூன்**

வியாபாரம் மற்றும் சேமிப்புகளினால் வருமானப் பெருக்கம், அழகை இரசிக்கும் தன்மை, அன்பு, இயற்கை அழகை விரும்புதல், இசை நாட்டம், வாத்தியக் கருவியை பயன்படுத்துதல், நகைச்சுவை.

**மிதுனத்தில் நெப்டியூன்**

அதிகமான அறிவுத்திறன், எதிர்கால சிந்தனை, நல்ல பேச்சாளர், நடுநிலையாளர், தர்க்கவியல் சிந்தனை, முன்னேற்றமான சோதிடக்கலை.

**கடகத்தில் நெப்டியூன்**

அன்பு, அனுதாபப்படுதல், உள்ளுணர்வுடன் இருத்தல், மற்றவர்களுக்கு உதவி செய்தல், உயர்நிலை ஆன்மீகம், நடுநிலை, தாயார்மூலம் நன்மை, மகிழ்ச்சியான சூழ்நிலையுடன் வாழ்வு, அடிக்கடி வீட்டை மாற்றிக் கொள்ளுதல்.

**சிம்மத்தில் நெப்டியூன்**

செயல் திறன், இரக்க உணர்வு, அன்புடமை, சமூக பழக்கம், விளையாட்டு அனுபவம், கல்வி மேன்மை, இசை, ஓவியம், திரைப்படம், நாடகம், கவிதை, கெட்டிருந்தால் பலதுன்பங்களை சந்திக்க நேரிடும்.

**கன்னியில் நெப்டியூன்**

கூரிய அறிவு, தெய்வீகச் சிந்தனை, ஆன்மீக ஈடுபாடு, கடல்வழி பொறியியல், செவிலியர், கணிதவியல், வரவு, செலவு கணக்கு, மருத்துவ துறைகளில் எதிர்பாராத வெற்றி, கெட்டிருந்தால் அதிகமான உணர்ச்சி பெருக்குடன் காணப்படுவர்.

**துலாத்தில் நெப்டியூன்**

தெய்வீகச் சிந்தனை, கவிதை, நாட்டியம், இசை, ஓவியம் ஆகிய கலைகளில் முன்னேற்றம், நல்ல நட்பு, பங்காளி, மனைவி, இந்த உறவுடன் மகிழ்ச்சியாக இருத்தல், வளமான கற்பனை, அழகு மற்றும் எதிர் பாலினத்தவரை கவருதல்.

**தனுசில் நெப்டியூன்**

உண்மையான பக்தி, சமய ஈடுபாடு, சரியான சிந்தனை, நீண்ட பிரயாணம், திருப்திகரமான அமைப்பு, நல்ல கனவுகள், கெட்டிருந்தால் கெட்ட கனவுகள், அபாயமான முடிவுகள், ஓய்வின்மை, பிரயாணத்தில் விபத்து, அரசியல் தோல்வி.

**மகரத்தில் நெப்டியூன்**

பெரிய வியாபாரம், துப்பறிவாளர், மறைமுக கலைகள் ஆய்வு, இசை இவைகளினால் இலாபமடைதல், சூழ்ச்சி செய்தல், ஆழ்ந்த சிந்தனை.

**கும்பத்தில் நெப்டியூன்**

புதியன கண்டுபிடித்தல், அனுதாபம், மனிதாபிமானம், அறிவுபூர்வ வளர்ச்சி, சமூக வெற்றி, கற்பனைவாதி, குறிக்கோள், நண்பர்களினால் இலாபமடைதல், கெட்டிருந்தால் இழப்பு, துன்பம், மனவருத்தம் மற்றும் துயரம்.

**மீனத்தில் நெப்டியூன்**

நற்சிந்தனை, வளமையான கற்பனைத்திறன், அருட்தன்மை, கலை ஆர்வம், கெட்டிருந்தால் மறைமுக எதிரி, ஏமாற்றுதல், உணர்ச்சி வயப்படுவதால் ஏற்படும் துன்பம், சிறைவாச அபாயம், குடிப்பழக்கத்தினால் தீமை, நல்லவர்கள் பார்த்தால் கப்பல் ஏற்றுமதியால் இலாபம்.

## புளுட்டோ ராசிகளில் தரும் பலன்கள்

### மேஷத்தில் புளுட்டோ

உயரமானவராக, மெலிந்த உடல் வாகுடையவராக, கண்கள் நீல நிறமுடையவராக, உடல் உறுதியானவராகவும் இருப்பார்கள், முன்கோபம் அதிகமுடையவர்கள்.

### ரிஷபத்தில் புளுட்டோ

குட்டையானவராக, கருநிற முடியும், கண்களும், சற்று பருமனாகவும், வெளிர்நிறமுடையவராகவும் இருப்பார்கள் பழிவாங்கும் எண்ணமுடையவர்கள்.

### மிதுனத்தில் புளுட்டோ

ஒல்லியான உயரமுடையவர், பழுப்புநிற தலைமுடியும், பழுப்பு நிறமான கண்களையும், விரைவாக நடப்பவராகவும், செயல்வீரராகவும், விஞ்ஞான ஆற்றலுடையவராகவும் இருப்பார்கள், ஆராய்ச்சி செய்யும் மனப்பான்மை உடையவர்கள், வித்தியாசமான பழக்கமுடையவர்கள், எளிதில் முடிவெடுக்கும் திறமைசாலிகள், பெருந்தகையாளர்கள்.

### கடகத்தில் புளுட்டோ

குட்டையான, பருத்த உடல்வாகுடையவர்கள், கரு நிற முடியுடையவர், பழுப்பு நிற கண்களையும் கொண்டவர், மூர்க்கத்தனமுடையவர்கள், மதுவில் தீராத ஆசையுடையவர்கள்.

### சிம்மத்தில் புளுட்டோ

நீண்ட உயரமான உடல்வாகுடையவர், உறுதியான உடலும், பழுப்பும் நிற முடியும் கொண்டவர், வேகமாக நடப்பவர்கள், தற்பெருமை கொண்டவர், கட்டுப்பாடுடையவர்கள், மற்றவர்களிடம் கட்டுப்பாட்டை எதிர்பார்ப்பவர், தனித்தன்மை கொண்டவர்.

### கன்னியில் புளுட்டோ

கன்னியில் இருக்கம் பொழுது குட்டையான உருவத்தை தரும், கருநிற முடியும், ஒல்லியான உருவமும் கொண்டவர், புதுமை விரும்பிகள், நிலையான கொள்கைவாதி, விஞ்ஞான ஆராய்ச்சியாளர், அனுபவம் குறைவே.

### துலாத்தில் புளுட்டோ

உறுதியான உடல்வாகுடையவர், வட்ட முகம், பழுப்புநிற முடியும் கொண்டவர், விஞ்ஞான அறிவு பெற்றவர், அதில் தீராத ஆசையும் கொண்டவர், புதுமையான பழக்கமுடையவர்.

### விருச்சிகத்தில் புளுட்டோ

குட்டையான பருமனான உடல்வாகுடையவர். உருவத்திற்கேற்ப கை, கால்கள் அமையாது, கரு நிறமுடையவர், கருநிற முடியும், கண்ணும் கொண்டவர், மது, மாது இவைகளுக்கு அடிமையானவர், போதைப்பொருட்களை எப்பொழுது

பயன்படுத்துபவர், பழிவாங்கும் குணமும், பொறாமையும், யாரையும் மதிக்காத பண்பும் கொண்டவர், நினைத்ததை சாதிப்பவர், அறிந்தே மற்றவருக்கு தீமை செய்யும் குணமுடையவர்.

**தனுசில் புளூட்டோ**

உயரமான உருவமுடையவர். பழுப்புநிற முடியும், கண்ணுமுடையவர், அனைவரையும் கவர்ந்திடும் தோற்றமும், ரோஜா வண்ண நிறமும் கொண்டவர், பெருந்தகையாளர், விளையாட்டில் ஆர்வமுடையவர், இனிமையான பேச்சாற்றலும், சுறுசுறுப்பாக செயல்படும் திறமையும் உடையவர்,

**மகரத்தில் புளூட்டோ**

அளவான உயரமும், அதற்கேற்ற உடலுமுடையவர், உறுதியான உடல்வாகும் கொண்டவர், கருநிற முடியும், உருண்டையான கண்களும், நீண்ட நெற்றியும் பெற்றவர், தற்பெருமைவாதி.

**கும்பத்தில் புளூட்டோ**

மத்திமமான உயரமும், பழுப்பு நிற முடியும் கண்ணும், நீண்ட முகமும் கொண்டவர், விஞ்ஞான அறிவு பெற்றவர், எதையும் ஏன், எதற்கு என்று ஆராயும் மனப்பாங்குடையவர், பெருந்தன்மையுடையவர், நாவல் எழுதுவதில், படிப்பதில் ஆர்வமுள்ளவர்.

**மீனத்தில் புளூட்டோ**

குட்டையான உருவமுடையவர், சோகை நோயுடையவர், உடல் நிலையிலும் எப்பொழுதும் குறையுடையவர், கருநிற கூந்தலும், கண்ணும் கொண்டவர், உறுதியான கையும், காலும் பெற்றவர், தன்னைத்தானே நொந்துகொள்ளும் குணமுடையவர், சோம்பல் அதிகமுடையவர், சுறுசுறுப்பின்றியே செயல்படுபவர்கள், எப்பொழுதும் காரணமின்றியே கவலைப்படுவதால் உடலும், மனமும் பாதிக்கப்படும் நிலையுடையவர்.

**கிரகங்கள் தங்கள் நிலைக்கு தக்கவாறு கொடுக்கும் பலன்கள்**

**சூரியன்**

**உச்சம் பெற்றால்:** மகிழ்ச்சி, பிதுர் பாக்கியம், புகழ் மாலை பெறுதல்,தலைமை பதவி பெறுதல், நீண்ட ஆயுள், பட்டம் பதவி பெறுதல், எரிபொருள் வியாபாரம், இலக்கியம் அறிதல், தேவ பூஜை, தெய்வ கடாட்சம் பெறுதல்.

**ஆட்சி பெற்றால்:** ஆத்ம பலம், உத்தியோகம், தந்தையின் பொருள், அரசியல் பதவி, பாராட்டுகள், வழக்கு வெல்வது, தந்தைக்கு ஆயுள் விருத்தி.

**நட்பு பெற்றால்:** செல்வந்தர், விளையாட்டு வீரர், உடல் பலம் மிகுந்தவர்கள், உணர்ச்சி வசப்படுபவர்கள், தைரியம் மிக்கவர்கள் வீரச் செயல் புரிபவர்கள், பெரிய மனிதர்களின் நட்பு உள்ளவர்கள்.

**பகை பெற்றால் :** கபால நோய், நேத்திர வியாதி, நீர்கோவை, சிரங்கு, சொறி நோய்.

**நீசம் பெற்றால் :** ஏழ்மை, ஆத்ம பலம் குறைவு, அறிவு மங்குதல், தோல்வி, ஆசாரக் குறைவு, அவகீர்த்தி, பிதுர் மாரகம், உஷ்ணம், ஜுரம், பீடிதம், நரம்பு பாதிப்பு.

**சந்திரன்**

**உச்சம் பெற்றால் :** தாய்க்கு ஆயுள் விருத்தி வெண் சாமர சித்தி, முத்து, வெண்மணி சேர்க்கை, பட்டு பீதாம்பரம் அணிதல், பலவழி செல்வம் அனுபவித்தல், காம இச்சைமிகுதி , மிகு கர்வம், ஞாபக சக்தி அதிகரித்தல்.

**ஆட்சி பெற்றால் :** தாய், சுகம், நல்ல குணம், நாகரீக சீர் அமைத்தல் வாசனைப் பொருள் உபயோகம், கந்தம், வெண் தாமரை மலர் அனுபவித்தல், தருமம், தயாள சிந்தை, கணபதி ஆராதனை.

**நட்பு பெற்றால் :** தாய்க்கு மத்திம ஆயுள் உண்டாகுதல், தைரியம், தாம்பூல பிரியம், புகழ், பொய் பேசுதல், தற்பெருமை, தயாள சிந்தையும் உண்டாக்கும்.

**பகை பெற்றால்:** சதா சிந்தனை, தாய்க்கு துரோகி, தன்னம்பிக்கைக் குறைவு, சுயநலம், சோர்வு, சுகம் இல்லாமை, பகை உணர்வு, பழைய பொருட்கள் மீது மோகம், ஐஸ்வர்யம் இல்லாதவர்கள்.

**நீசம் பெற்றால் :** நம்பிக்கை மோசம், பைத்தியம், பகைமை குணம், முன் யோசனையின்மை, மூட நம்பிக்கை, முயற்சி இல்லாமை, முடமாகுதல். துரவரம், காம இச்சை குறைதல், இயலாமை, கள் உண்ணுதல், சீதள நோயால் பாதிப்பு, நீரில் மூழ்குதல்.

## செவ்வாய்

**உச்சம் பெற்றால்:** சகோதரரால் சிறந்த பலன், சத்கரும சீலர், காரிய சித்தி, யுத்தப்பிரியர், சேனைத் தலைமை பதவி பெறுதல், பலவகை கட்டிட சேர்க்கை, பகைவரை அழிக்கும் தன்மை, போக சுகம் தரும். பூமி பலிதம் உடையோர்.

**ஆட்சி பெற்றால்:** சேனை நடத்துகிறவன், காவல் துறையாளர், கவலைப்படாதவர்கள், தைரியசாலி, தீய பழக்கங்கள் உடையவர், சகோதரத்தால் நன்மை அனுபவிப்போர், ஆணவம், அகங்காரப் போக்கு உடையோர், அவசர புத்திக்காரர்கள். போக வெறியர், பொய் பேசுவோர், சிறந்த மாளிகை வாசம் உண்டாக்கும், பூமிப் பொருள் உடையவர்கள்.

**நட்பு பெற்றால்:** மிதமான தைரியம், பூமி பொருள் சேர்க்கை, தானியம் உணவுப் பொருள் வியாபாரம், அரசு உத்தியோகம், சிவந்த பொருட்களால் வருவாய்.

**பகை பெற்றால்:** பவைகர் தோன்றுவர், சகோதரர் தூஷணை, பொருள் இருந்தும் அனுபவிக்கமுடியாமை, புகழ் இழப்பு, பலவீனம்.

**நீசம் பெற்றால்:** இரத்த சோகை நோய் உண்டாகும், சகோதரயீனம், அச்சம், அவச்சொல், சொத்து, பூமி, வீடு பறிபோகுதல், போக இச்சை குறைதல், சத்ரு பயம், திறமை குறைவு, இழிவு மனப்பான்மை.

## புதன்

**உச்சம் பெற்றால்:** உலகறிய புகழ் பெருதல், மருந்து, திரவப் பொருள் மூலம் பெரும் தனம் சேர்க்கை, கலைத் தொழில் வருவாய், கவி புனைதல், கலை மூலம் வருவாய் உடையவர்கள், புத்தகம் வெளியிடுதல், பூ வியாபாரம் செய்தல்.

**ஆட்சி பெற்றால்:** புலமை, எழுத்துத் திறமை எதிலும் முற்போக்கான எண்ணம், கணிதம், கணக்கறிதல், சங்கீத ஞானம், சகலரும் பாராட்ட செயல்படுதல் கலைத் தொழில்

வருவாய், கவன மறதி இல்லாமை, மாமன்வழி மூலம் சுகம், மருத்துவம், பெண்மை, பெருமை பேச்சு பேசுதல்.

**நட்பு பெற்றால்:** சகல ஞானமும் உடையவர்கள், பல வழி வருவாய் பெறுவோர், பகைவர் குறைந்தவர்கள், சிறிய வியாபாரி, பாட்டு, பரதம் அறியக் கூடியவர்கள், தருமவான், தயாள சிந்தையுடையோர், மனதை ஒரு நிலைப் படுத்தாதவர்கள், அடிக்கடி பிரயாணம் செய்பவர்கள்.

**பகை பெற்றால்:** கலை ஞானம் குறைந்தவர், கணித அறிவு குறைந்தோர். காவிய ஞானம் இல்லாதவர், மாதுலர் வர்க்க பகையாளி, இல்லற சுகம் இழந்தவர்கள், எழுத்து, இலக்கிய அறிவு குறைந்தவர்கள். சோம்பல் நிறைந்தவர்கள், அடிக்கடி சோர்வு பெறுவோர். திக்கு வாயர், பொய் பேசுவோர்.

**நீசம் பெற்றால்:** எதிலும் விருப்பம் இல்லாமை, படுக்கை சுகம் குறைதல், பகைவரால் பழி சுமத்தல். குரல் பாதிப்பு, எழுத்தறிவு குறைந்தர்கள், கோழை, வியாபாரம் செய்து பின் அடிமைத் தொழில் செய்தல், முயற்சியில் தோல்வி, முயற்சி இல்லாமை, மூத்தவர், மாமன் வர்க தூஷணை உள்ளவர், குல விரோதி.

## குரு

**உச்சம் பெற்றால்:** உலகறிய வாழும் தன்மை, பிரபுக்கள் நேசம், ஆண்வர்க்கம் உற்பத்தி மிகுதல், அரசாங்கம், அரசியல் ஞானமுடையோர், செல்வம் சேர்ப்போர், விளையாட்டு வீரர்கள், மூளை பலம் உள்ளவர்கள், மூதாதையர் சொத்து சுகங்கள் மிகுந்தவர், சொர்ண லாபங்கள் சேரும். தாது பலம் உள்ளவர்.

**ஆட்சி பெற்றால்:** சத்தியம் கடைபிடித்தல், குரு பீடம், ஞானம் தத்துவம், ஆண் சந்தானங்கள் பெருதல், அரசர் நேசம், பிரபுத்துவம், சேனாதிபத்தியம், அரசியல் பதவி பெறுதல், அனைவருக்கும் வேண்டியவர், நிதானப் போக்கு உருவாக்குதல், நினைத்ததை முடிக்கும் தன்மை, நேர்மையான குணப்போக்கு, புத்தி, அறிவு விருத்தி புகழ் சேர்க்கும் தன்மை உடையோர்.

**நட்பு பெற்றால்:** சாதாரணமான சந்தானங்கள் உடையவர், சஞ்சல புத்தி இல்லாது செயல் படக்கூடியவர்கள், நடுத்தர, நல்ல சுக வாழ்க்கை உடையவர்கள், செம்பொன் உடையவர்கள், சிறப்பு பேச்சாளர்கள், அரசாங்க ஊழியர், அன்பு உள்ளம்,

தயாள சிந்தை உடையவர்களாக இருப்பர், தீய வழிகள் குறைந்தவர்கள், தெவிட்டாது பேசுவோர், கதை எழுதுவோர், கண்ணியம் பார்க்கத் தக்கவர்கள்.

**பகை பெற்றால்:** பண்பு இழப்பர், சதா அலைந்து திரிபவர், சஞ்சல புத்தி அதிகமாகும், அகால புத்திரம் உடையவர்கள், நேர்மைக்கு புறம்பானவர், இரும்பு இயந்திரத் தொழிலாளி, தூக்கம் குறைந்தவர், அரச சிந்தனை, அரசாங்க பகை உடையவர்களாக இருப்பார்கள்.

**நீசம் பெற்றால்:** சந்தான பலம் குறையும், சஞ்சலம் மிக உண்டாகும், பசும்பொன் சேர்க்கை இல்லாமை, சாஸ்திர ஞானம் இருக்காது, சன்மார்க்கம் குறைந்து, துற்மார்க்கம் பெருகும், மூளை நோய் உண்டாகும், மூதாதையர் பொருள் இழப்பர், உடல் அரிப்பு நோய் உண்டாகும்.

## சுக்கிரன்

**உச்சம் பெற்றால்:** காதல் வீரர்கள், வீராங்கனைகள், கலைப்பொருள் வியாபாரி, ஆபரணம் விற்போர், அந்நிய தேச வாசம் மிக்கவர்கள், பகையை வெல்ல கூடியவர்கள், நல்ல மனிதர்களின் நட்பையுடையவர்களாகும், சித்திர மாளிகை வாசம் உடையவர்கள்.

**ஆட்சி பெற்றால்:** இனிமையான வாக்கு உடையவர்கள், அழகானவர்கள் அன்புள்ளம் கொண்டவர்கள், காதல் கதைகள் கேட்க, எழுத ஞானம் உடையவர்கள், அழகை நுகர்வோர், பாலுணர்வு மிகுந்தோர், கனவு காண்பவர், கலை ஞானம், கலைத் துறை தொழில் மூலம் தன வருவாய் உடையவர்கள், உடல் அழகர், உள்ளத்தால் வெகு ஜனப்பிரியர்.

**நட்பு பெற்றால்:** சாத்வீக குணம் உடையவர்கள், சந்தோஷிகள், ரிஷிகள், குருமார்களின் உபதேசத்தை விரும்புவோர், அளவான பெண் குழந்தைகள் உடையவர், ஒரே புத்திரனைப் பெற்றடுப்பவர், உழைப்பால் உயர்ந்தவர்கள், சோர்வு இல்லாதவர்கள், பெரியோர் சபையில் மதிப்புப் பெறத்தக்கவர்கள், பெருமை, கௌரவ பேச்சு உடையவர்கள்.

**பகை பெற்றால்:** விரோதிகளை சேர்ப்பவர், வெளிவட்டார மனிதர்கள், கீழ் இனத்தவர் சேர்க்கை உடையவர்கள், சொல் கவர்ச்சி

இல்லாதவர்கள், பெண்களால் வெறுக்கப் படுகிறவர்கள், பெண் சந்தானமே மிக உடையவர்கள்.

**நீசம் பெற்றால்:** இனக்கவர்ச்சி இல்லாதவர்கள், முயற்சியில் தோல்வியைக் காணக்கூடியவர்கள், சோம்பல் நிறைந்தவர்கள், எதிலும் வெகு எளிதில் சோர்வுக் கொள்ளக் கூடியவர்கள், தாழ்ந்த மனப்பாண்மையினால் தன்னைக் குறைத்துக் கொள்ளக் கூடியவர்கள், தைரியம், தன் நம்பிக்கை இல்லாதவர்கள், நேர்மையற்ற வழிகளில் தனம் தேடக்கூடியவர்களாகும்.

**சனி**

**உச்சம் பெற்றால்:** ஊதாரி, தீய வழிகளில் புகழ் சேர்க்கத் தக்கவர்கள், பொன் புகழ் ஆசை, மிகுந்தவர்கள், இளம் குற்றவாளிகள், எழுத்தாளர்கள், இயல், இசை, நாடகம் அறிந்தவர்கள், கொடூர சங்கீதம் விருப்பம் உடையவர்கள், குல விரோதி, சிவ பூசையை விரும்புவோர், பல வழிகளில் தனம் சேர்ப்பவர்.

**ஆட்சி பெற்றால்:** ஆயுள் பலம் உடையவர்கள், அவசரபுத்தி உடையவர்கள். இயந்திரம் இரும்பு வியாபாரி, போர் வீரர், புகழ் விரும்பி, பொய் பேச்சாளர், இனிய வசனம் உடையவர்கள், பொறி இயல் வல்லுநர்கள், போட்டி, பந்தயம், சூதாட்டம் போன்ற வகை ஈடுபாடு மிகுந்தவர்கள், கொலை, களவு உடையோர் நட்பு பெற்றவர், தீய வழி, நல்வழி ஆகியவைகள் மூலம் வருவாய் உடையவர்கள், போக இச்சை மிகுந்தவர்.

**நட்பு பெற்றால்:** இருதய பலம் மிக்கவர்கள், உயிரின் தன்மை, ஆயுள் வேதம் அறிந்தவர்கள் இயந்திர சித்தியாளர், எழுத்து வேந்தர், இயற்கை வைத்தியர், சுகம் விரும்பி, சோர்வு இல்லாது உழைப்பவர்கள், சொல் வன்மையாளர்கள், செல்வம் சேர்ப்பவர், தொழிற்சாலை அதிபர், தொழில் நுட்பம் அறிந்தவர்கள்.

**பகை பெற்றால்:** தோல் வியாதி வரும், வீரம் குறையும், விவேகம் இருக்காது, வெளிதேச வாழ்க்கை நிலைக்கும், நாகரீக வாகனங்கள் குறைந்து போகும், நீச்சர், பெண்கள் நட்பு மிகுந்தவர்கள், இல்லறம் சிறக்காதவர்கள், எதிலும் பின்யோசனை உடையவர்கள்.

**நீசம் பெற்றால்:** ஆயுள் பலம் குறைந்தவர்கள், அறிவிலிகள், மந்த புத்திக்காரர், மற்றவர்களை மதிக்கத் தெரியாதவர்கள்,

தலை கனம், தற்பெருமை எதிலும் தாமத செயல் உடையவர்கள், சண்டை விரும்புவோர், வாகன நட்டம் உடையவர்கள். சாதாரண செல்வந்தர், பெரும் தீனி தின்பவர்கள், உஷ்ண தேகி, பாலுணர்வு குறைந்தவர்கள், உயர் மட்ட நட்பை விரும்பாதவர்கள்.

**ராகு**

**உச்சம் பெற்றால் :** தீய வழிகள் அத்தனையும் அறிந்தவர்கள், பொறுப்பற்றவர்கள், தற்பெருமை உடையோர், தயாள சிந்தையற்றவர்கள், கொலை, களவு புரிபவர்கள், குற்றவாளி, சிறை செல்பவர்கள், செயல் வீரர்கள், முரடர், முன் யோசனை குறைந்தவர்கள், முன் பிறவியின் ஞானம் உடையவர்கள்.

**நட்பு பெற்றால்:** தீய செயல்களை உடையவர்கள், நீச்ச செயலை உடையவர்கள், நேர்மை குறைந்தவர்கள் கடுமையான சித்தம் உடையவர்கள், தெய்வ நம்பிக்கை குறைந்தவர்கள், சுயநல வாதிகள், உழைப்பாளிகள்.

**பகை பெற்றால்:** பிச்சை எடுப்போர், எதிலும் நாட்டம் இல்லாதவர்கள், கந்தல், அழுக்கு, உடைகளை அணியக்கூடியவர்கள் நரம்பு, நாடிகளில் ரோகம் உடையவர்கள்.

**நீசம் பெற்றால்:** மெலிந்த உடலை உடையவர்கள், தேவதை பூசை இல்லாதவர்கள், தெளிவில்லாத மனத்தினர், அங்கயீனர்கள், ஆத்திரச் செயல் உடையவர்கள், அறிவிலிகள், ஆபத்திற்கு உதவாதவர்கள், அன்புள்ளம் இல்லாதவர்கள்.

**கேது**

**உச்சம் பெற்றால்:** வைத்தியர், வாய்பேச்சு திறமையாளர், ஞானம் உணர்ந்தவர், பெரிய நோக்கம், பெரும் நடத்தை உடையவர்கள், மருத்துவ அறிவு உடையவர்கள், மருந்து, விஷப்பொருட்கள் மூலம் தன வருவாய் உடையவர்கள், சந்தான பலம் மிக்கவர்கள், முன் கோபி, முயற்சி மிக உடையவர்கள், ஜோதிடம் அறிந்தவர்கள்.

**நட்பு பெற்றால்:** திட காத்திர தேகம் உடையோர், மந்திரம் அறிந்தோர், மற்றவருக்கு உபகாரி, மலை, வனாந்திர வாழ்க்கையை

விரும்புவோர், மரகதக்கல் வியாபாரி, தாதுப்பொருள் வருவாய் உள்ளவர்கள்.

**பகை பெற்றால்:** நல்ல பண்பு குறைந்தவர்கள், நீச கலையில் தேர்ச்சி உடையவர்கள், நன்றி இல்லா உள்ளத்தினர், தூக்கம் குறைந்தவர்கள், குறையுள்ள வாழ்க்கையை உடையவர்கள்.

**நீசம் பெற்றால்:** சிந்தனா சக்தி குறைந்தவர்கள், உன்மத்தம் உள்ளவர், முடக்கு வாதம் உடையோர், முயற்சி இல்லாதவர்கள், சோம்பேரிகள், பயம் அறியாதவர்கள், முட்டாள், மூளை பலம் இழந்தவர்கள்.

## குறிப்பு

……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..

## கூறு – 3 கோள்கள், பாவகத்தில் நிற்கும் பலன்கள் :–

### 1.சூரியன், சந்திரன், செவ்வாய், பலன்கள்.

### சூரியன்

**1.ல் சூரியன்:**

உடல் உஷ்ணமாக இருக்கும். உடல் நலம் குறைவாக இருக்கும். குறிக்கோளற்ற பிரயாணங்கள். மகிழ்ச்சிக் குறைவு. குறிக்கோளற்றதன்மை, குடும்பத்தை விட்டுபிரிதல், சிவந்த கண்கள், அதிக கோபம், வெளியூர் அல்லது வெளிதேசத்தில் வசித்தல், தலைமை தாங்கும் தகுதி, உடல்பலம், ஊக்கம், உத்வேகம், பெருமை, பிறரை அடிபணிய வைக்கும் கம்பீரம், கண்நோய், நீசமானால் ஏழ்மை.

**2.ல் சூரியன்:**

அரசாங்க வருமானம் உண்டு, நீசமானால் அரசு தொந்தரவுகளால் நஷ்டம் ஏற்படும், சிடுசிடுப்பான பேச்சு, முகத்தில்ரோகம் ஏற்படும், மிகக் கடுமையான உழைப்பால் செல்வம் சேர்க்க வேண்டிவரும். ராசியின் தன்மைக்கு ஏற்றவாறு வருமானம் வரும்.

**3.ல் சூரியன்:**

ஜாதகர் தைரியசாலி, அனைத்திலும் வெற்றி பெறுவார். சூரியன் கெட்டால் சகோதரர்களுக்கு கெடுதலான பலன் நடைபெறும். சமயோசித புத்தியும், அமைதியற்ற மனமும் கொண்டவர். மொட்டை கடிதத்தால் நற்பெயர் கெடும். உபஜெய ஸ்தானத்தில் சூரியன் இருப்பது ஜாதகருக் வலுவான அமைப்பை கொடுக்கும்.

**4.ல் சூரியன்:**

மகிழ்ச்சி குறைவு, கவலைகள் அதிகம், அலைச்சல், அதிகம், இரக்கமின்மை, சுயநலம், ஏமாற்றும் குணம், இரத்த அழுத்த நோய், வயிற்று நோய், துன்பம் நிறைந்த மணவாழ்வு. பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும், தத்துவார்த்த கல்வியைக் கற்பார். கெட்டால் அரசியலில் வெற்றிகிடைப்பது கடினம்.

**5.ல் சூரியன்:**

ஜாதகரின் புத்திரர்கள் செல்வந்தர்களாகவும் மகிழ்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பார்கள். மத்திம ஆயுள் பெற்றவர்கள். இதய நோய் தாக்கக்கூடும். அலைச்சல் அதிகம். புத்திரபாக்கியம் தாமதப்படும். புத்திக்கூர்மை, சமயோசிதபுத்தி, மூத்தோரிடம் மரியாதை மிக்கவர்.

**6.ல் சூரியன்:**

தைரியம் மிக்கவர்கள், உறவினர்களுடன் உறவு நிலை சிறப்பில்லை. கடுமையான உழைப்பினால் மேன்மை அடைவார்கள்.

**7.ல் சூரியன்:**

ஜாதகர் சிவந்த நிறம் உடையவர். மெல்லிய மயிரைக் கொண்டவர், மிகக் குறைந்த அளவு நண்பர்கள் இருப்பார்கள். அனைவருடனும் பழகுவதில் சிரமம். திருமணம் தாமதமாகும். திருமணத்தில் சிக்கல், அதிக அளவு பிரயாணம் செய்வார்கள். பெண்களால் ஏற்படும் நஷ்டம் மற்றும் அவமதிப்புகளை எதிர் கொள்ளம்திறன் உடையவர். அரசு கோபத்திற்கு ஆளாவார், மனைவி அடிக்கடி கோபப்படும் குணம் கொண்டவர்.

**8.ல் சூரியன்:**

எட்டாம் பாவத்தில் சூரியன் உச்சம் பெற்றால் ஜாதகருக்கு ஆயுள் தீர்க்கம். இனிமையாகவும், சரளமாகவும் பேசக் கூடியவர். கெட்டால் தலை, மற்றும் முகத்தில் காயங்களால் கஷ்டப்படுவார். கண்கள் பாதிப்பு ஏழ்மை நிலை ஏற்படும். எட்டாம் அதிபதி அல்லது பதினொன்றாம் அதிபதியுடன் சேர்ந்திருந்தால் திடீர் தனவரவு உண்டு. குழந்தைகள் மிகவும் அற்பம். பெரும்பாலும் ஆண் குழந்தைகள்.

**9.ல் சூரியன்:**

ஜாதகர் தன் தகப்பனிடமிருந்து சற்று விலகி இருப்பார். மூத்தவர்களுக்கும், குருமார்களுக்கும் மரியாதை செய்வார். சூரியனுடன், சந்திரன் சேர்ந்தால் கண்நோய், சுக்கிரன் சேரின் உடல் நலக் குறைவு, பொதுவாக குறிக்கோளை அடையும் குணம், தலைமை தாங்கும் குணம் சிறப்பாக இருக்கும். ஆன்மீக நாட்டம் மிக்கவர்.

**10.ல் சூரியன்:**

ஜாதகர் தன் அனைத்து முயற்சியிலும் வெற்றி பெறுவார். உடல் பலம், மகிழ்ச்சி மிக்கவர். புத்திர பாக்கியம், வாகனங்கள், புகழ், புத்தி கூர்மை, செல்வம் மற்றும் அதிகாரம் மிக்கவராக இருப்பார். அரசு உத்தியோகத்தில் இருப்பார். பூர்வீக சொத்து கிடைக்கும், இசை ஆர்வம் மிக்கவர். கவர்ச்சி மிக்கவர். சூரியன், புதன் சேர்ந்திருந்தால் விஞ்ஞான அறிவு மிகுந்திருக்கும். சூரியன்,குரு சேர்ந்திருந்தால் விலை உயர்ந்த ஆபரணங்கள் கிட்டும். சூரியன்,சுக்கிரன் சேர்ந்திருந்தால் பணக்கார மனைவி. சூரியன்,சனி சேர்ந்திருந்தால் கவலை வெறுப்பு மிக்கவர்.

**11.ல் சூரியன்:**

ஜாதகர் செல்வந்தராகவும், தீர்க்காயுளுடனும் வாழ்வார். நல்ல மனைவி, மக்கள், பணியாட்களைப் பெற்றிருப்பார். அரசு மரியாதையைப் பெறுவார். அதிக முயற்சி இன்றி எளிதில், எல்லாவற்றிலும் வெற்றி பெறுவார். நல்ல கொள்கையுடன் வாழ்வார். சகல விதமான தோஷங்களும் நீங்கும்.

**12.ல் சூரியன்:**

ஜாதகர், வாழ்க்கையில் வெற்றி பெற மிகவும் கஷ்டப்படுவார். அனைவராலும் தவிர்க்கப்படுவதாக உணர்வார். பார்வைக் குறைவு இருக்கும். நல்ல உடல் பலத்துடனும் புத்திர பாக்கியத்துடனும் இருப்பார். தந்தையுடன் கருத்து வேறுபாடு இருக்கும். செல்வநிலை சிறப்பில்லை. பணி செய்யுமிடத்தில் அனைவராலும் பாராட்டப்படுவார். மறைமுக எதிரிகள் அதிகம் உண்டு. குடும்பத்தார் ஒத்துழைப்பு கிடைக்காது. உயர் அதிகாரிகளின் தொல்லை இருக்கும்.

## சந்திரன்

**1.ல் சந்திரன்:**

கவர்ச்சியான தோற்றம், மனமகிழ்ச்சி, அதிகமான மன உணர்வுகள், கற்பனைகள், சஞ்சலபுத்தி, சுயமாக முடிவு செய்யும் திறன் இல்லாமை, வளர்பிறை சந்திரன் சிவந்த நிறம் மற்றும் தோற்றப் பொலிவு தரும். தேய் பிறைச்சந்திரன் உடல் நலக் குறைவைத் தரும். மகிழ்ச்சி, நகைகள் சேர்க்கை, எல்லாவித சுகபோக பொருட்களை அனுபவித்தல், புகழ் பெருகுதல்.

**2.ல் சந்திரன்:**

பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர், குடும்ப பாசம் மிக்கவர். மிகவும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை, பெண்கள் மூலம் செல்வம் சேரும். சிவந்த நிறம் உடையவர், கவர்ச்சிகரமான முகம். பிறருடன் ஜாதகர் சகஜமாக பழகமாட்டார். தர்ம சிந்தனை உடையவர்.

**3.ல் சந்திரன்:**

அடிக்கடி தொழில் மாற்றம் ஏற்படும், சுறுசுறுப்பான மனநிலை உள்ளவர், அடிக்கடி பிரயாணம் மேற்கொள்ளுதல், அழகிய மனைவி அமைவார், ஆன்மீக நாட்டம் உள்ளவர். மனைவிக்கு அனைத்திலும் துணையாக இருப்பார், குழந்தைகளிடம் பாசம் மிக்கவர் ஆவார். சந்திரன் கெட்டால் அமைதியற்ற மனநிலை. நாத்தீகர், மனசாட்சி இல்லாதவர்.

**4.ல் சந்திரன் :**

நிலம், வீடு உடையவர், உறவினர்களினால் சந்தோஷம் அடைவார். மகிழ்ச்சி அதிகம். தலைமைப் பதவி, அரசு மூலம் லாபம், வாகன யோகம், பிரபலமடைதல், பெருமை ஆகிய சுப பலன்கள் ஏற்படும். சந்திரன் கெட்டால் பிறருடன் தகராறு, தாயாரிடம் இருந்து பிரிவினை, இல்லற சுக குறைவு, சந்தோஷம் இல்லாமை ஏற்படும். குரு பார்த்தால் அசுப பலன் குறைந்து சுப பலன் நடைபெறும்.

**5.ல் சந்திரன்:**

தெளிவான மனம் உள்ளவர், குழந்தைகளினால் சந்தோஷம் உள்ளவர், நிலங்கள், இரத்தினங்கள் சேர்க்கை உண்டு, ஜாதகர் மிகவும் கண்டிப்பானவர் அதிகம் கற்றவர். உண்மை பேசுபவர். தெய்வ பக்தி மிக்கவர். எதிரிகளை வெல்பவர். சூதாட்டத்தில் ஆர்வம் மிக்கவர். ஜாதகரின் குழந்தை புகழ் மிக்கதாக இருக்கும். யூக வணிகம் செய்பவர், மகிழ்ச்சி மிக்கவர்.

**6.ல் சந்திரன்:**

பாலாரிஷ்ட தோஷம் ஏற்படும். செவ்வாய் அல்லது சனியால் பாதிக்கப்பட்டால் குணப்படுத்த முடியாத நோய் உண்டாகும். எதிரிகள் அதிகம் இருப்பார்கள். சந்திரன் பலமானால் தம் பணிகளில் திறனும் வெற்றியும் ஏற்படும். சமையல் கலை வல்லுனராக இருப்பார்.

**7.ல் சந்திரன்:**

இளமையில் திருமணமாகும், செல்வ சேர்க்கை, சொத்துச் சேர்க்கை ஏற்படும். ஜாதகர் நற்குணம் உடையவர். எளிதில் பொறாமை கொள்பவர், இளம் வயதில் தாயார் காலமாவார். ஜாதகரின் மனைவி அழகிய தோற்றம் உடையவர். ஆனால் ஜாதகர் பிறபெண்களை விரும்புவார். குறுகிய மனம் கொண்டவர். ஆனால் அனைவருடனும் நன்கு பழகுவார். வளர்பிறைச் சந்திரனாக இருந்தால் உடல் பலம் மிக்கவர். நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர். தேய்பிறைச் சந்திரனாக இருந்தால் எப்பொழுதும் எதிரிகளிடம் தகராறு செய்வார்.

**8.ல் சந்திரன்:**

ஜாதகர் மனக்குழப்பங்கள் மிக்கவர் மிகவும் மன நிலை பாதிப்பு உடல் நலன் குறைவு ஏற்படும். சிறுவயதிலேயே தாயை இழப்பார். கண்பார்வை குறையும், பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். கூட்டாளியால் லாபம் கிடைக்கும் சிறுநீரகத்தில் நோய் உண்டாகும்.

**9.ல் சந்திரன்:**

ஜாதகர் அதிர்ஷ்டசாலி, வாழ்க்கையில் நல்ல வளர்ச்சியிருக்கும், அதிக புத்திரர்கள், உறவினர்கள் நண்பர்கள் இருப்பர். பெருந்தன்மையான குணம் இருக்கும். செவ்வாய், புதன் சனி ஆகியோர் சந்திரனைப் பார்த்தால் அரசனாவார். சந்திரனுடன் செவ்வாய் சேர்ந்தால் தாய்க்கு விபத்து ஏற்படும். சனி சேர்க்கை மிக அதிகமான பாதிப்பு கொடுக்கும். பொதுவாக ஒன்பதாம் பாவத்தில் சந்திரன் இருந்தால் தர்ம சிந்தனையுடையவர். வெளிநாட்டுப் பிரயாணம், சொத்து சேர்க்கை ஏற்படும். ஆன்மீக நாட்டம், தான தர்மம் செய்யும் குணம், மறையியல் கல்வி கற்றவராக இருப்பார்.

**10.ல் சந்திரன்:**

ஜாதகர் செல்வந்தர். புத்திக்கூர்மை, தைரியம், ஆன்மீக நாட்டமுடையவர். தன் முயற்சிகளில் எல்லாம் வெற்றி பெறுவார். விலை உயர்ந்த ஆடை ஆபரணங்கள், மற்றும் அழகிய பெண்களின் நட்பு கிடைக்கும், கலைத்திறன், நற்குணம் மிக்கவர். பிறருக்கு உதவும் எண்ணம் கொண்டவர். குருவும், சந்திரனும் சேர்ந்து இருந்தால் புராதனக் கலைகளிலும், ஜோதிடத்திலும் வல்லமை மிக்கவர். சந்திரனைச் சனிபார்த்தால் தீய எண்ணம் கொண்டவர். அச்சுத் தொழில், புத்தக விற்பனைத் தொழில் அமையும். அதிகமான நண்பர்கள், வசதி மிக்க வாழ்க்கை அமையும். ஆன்மீகப் பணிசெய்யும் அமைப்பில் இருப்பார்.

**11.ல் சந்திரன்:**

ஜாதகர் பண்பாளராகவும், தாரள சிந்தையுடையவராயும், செல்வந்தராகவும், நல்ல மனைவி, மக்களைப் பெற்றவராயும் வாழ்வார். மிக அமைதியான குணம் கொண்டவர். வியாபாரத்தில் நல்ல லாபமும், புகழுடனும் இருப்பார். அதிகமான நில புலன்களையும், பிறரிடமிருந்து சகல விதமான உதவிகளையும் பெறுவார். அனைத்திலும் எளிதாக வெற்றி பெறுவார். அதிகமான நண்பர்கள், வாகனங்கள், அதிர்ஷ்டம் இருக்கும். பெண் நண்பர்களும் அதிகமாக இருப்பர்.

**12.ல் சந்திரன்:**

பெயர், புகழ் பாதிக்கப்படும், குறுகிய புத்தி, கடின மனம், பார்வைக்குறைவு, ஆழ்ந்த மனக்கவலை, வெளிநாட்டில் சிறப்பு, ஆன்மீகம், தர்மம் செய்வதில் சிறப்பில்லை.

## செவ்வாய்

**1.ல் செவ்வாய்:**

திருடர்களாலும் விஷத்தாலும் பாதிக்கப்படுதல், உடல் முழுவதும் காயங்கள் ஏற்படல், தாய் தந்தையிடம் இருந்து பாசம் இன்மை. அதிக கோபம் உடையவர். கண்நோய் தலை நோய் உடையவர். நெருப்பினால் கண்டம் உண்டு. இளமையான தோற்றம், சக்திவாய்ந்த உடல் அமைப்பு, நோயில் இருந்து விரைவில் குணம் அடைதல், சிக்கலான சூழ்நிலையை எளிதில் எதிர்கொள்ளுதல், அபாய செயல்கள் மற்றும் சவால்களை ஏற்று வெற்றி பெறுதல், மூடத்தனமான சிந்தனை, அலைச்சல் சிறிய விஷயத்தையும் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளல், சுய நலம் மிக்கவர், தற்புகழ்ச்சி மிக்கவர்.

**2.ல் செவ்வாய்:**

தாராளமான மனம் கொண்டவர் ஆனால் ஊதாரி அதிகமான செலவு செய்பவர், வெளிப்படையான கபடமற்ற மனம் கொண்டவர். சட்டரீதியாக பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும்.

**3.ல் செவ்வாய்:**

உடன் பிறப்புகளுக்கு அசுப பலன் ஏற்படும் பிரயாணத்தில் விபத்து ஏற்படுதல், தைரியம் மிக்கவர், குடும்பத்தில் கருத்து வேறுபாட்டால் மனவருத்தம். மன அமைதி குறைவு. காதில் நோய் ஏற்படுதல், அல்லது செவிடு.

**4.ல் செவ்வாய்:**

பொதுவாக செவ்வாய் நான்காம் பாவத்தில் இருப்பது சுப பலனைத் தருவதில்லை. இருதய நோய், மார்புவலி, அடிக்கடி வாகன விபத்து ஏற்படல், கல்வியின்மை, தாயார் உறவினர்கள், நண்பர்கள், முதலியோரிடமிருந்து சந்தோஷமின்மை ஏற்படும், ஆனால் அரசியலில் வெற்றி உண்டு. தாயாருடன் தகராறு உருவாகும். ராகு, கேது சேர்ந்தால் தற்கொலை எண்ணம் உண்டாகும். ஜாதகருக்கு சொந்த வீடு இருக்கும். இருப்பினும் மகிழ்ச்சி இல்லை.

**5.ல் செவ்வாய்:**

ஜாதகரின் மனைவி கவலைமிக்கவர். நண்பர்கள், குழந்தைகளுக்கும் கவலை அதிகம். எப்பொழுதும் மன சஞ்சலம், மன பலம் குறைவு, மறைமுக எதிரிகள் அதிகம் குழந்தைகளால் அதிர்ஷ்டம் இல்லை, முதுகுவலி, வயிற்று வலியால் உடல்நலம் பாதிக்கப்படுவார்கள். பெண்கள் ஜாதகத்தில் ஐந்தாம் பாவத்தில் செவ்வாய் இருந்தால் புத்திரபாக்கியம் தாமதப்படும். ஆண் வாரிசு பிறக்கும், ஜாதகர் சாகச காரியங்களை செய்வார். நல்ல உடற்கட்டுடன் விளையாட்டு வீரராய் இருப்பார்.

**6.ல் செவ்வாய்:**

செல்வம், புகழ், சொத்துக்கள் சேர்க்கை அதிகார பதவி, பதவி உயர்வு, சிறந்த உடல்நலம், குழந்தைகளை நேசித்தல், தாய் மாமனுக்கு உடல் நல குறைவு. செவ்வாய் கெட்டால் விபத்துக்கள், தீக்காயம், முதலாளியுடன் தகராறு, வெட்டுக்காயம், வயிற்று வலி உண்டாகும்.

**7.ல் செவ்வாய்:**

ஜாதகர் குறுக்குப் புத்தியுடையவர், பெண்களை ஏமாற்றும் எண்ணம் உடையவர். திருமண வாழ்க்கை சண்டை சச்சரவு, கோபம் நிறைந்தது. சூதாட்டத்தில் ஆர்வம் உள்ளவர், புத்திக்கூர்மை, தைரியம் மிக்கவர், வாழ்க்கையில் போராட்டம் அதிகம். திருமண வாழ்வில் பிரச்சனைகள்,

**8.ல் செவ்வாய்:**

ஜாதகருக்கு ஆயுள் குறைவு, சுபர் சம்பந்தம் ஏற்பட்டால், பலன்மாறும். களத்திரத்திற்கும் ஆயுள் குறைவு. மிகக் குறைந்த அளவு எண்ணிக்கையில் குழந்தைகள் உண்டு. உறவினர்களை வெறுப்பார். இல்லற வாழ்க்கை சண்டை சச்சரவு மிக்கதாகவே இருக்கும். மூல நோய் போன்ற நோய்கள் ஏற்படும். ஒரு

கூட்டத்திற்கு தலைவராவார். வழக்குகளை வெல்வார். உயில் மூலம் சொத்து கிடைக்கும்.

**9.ல் செவ்வாய்:**

அதிகாரமுள்ள பதவி வகிப்பார் மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும், ஆனால் கீழ்படிதல் இல்லா குழந்தைகள், செவ்வாயுடன் புதன் அல்லது குரு சேர்ந்தால் ஆன்மீக சம்பந்தமான கல்வி பயில்வார். சுக்கிரன் சேர்ந்தால் வெளிநாட்டில் வசிப்பார். சனி சேர்ந்தால் கெட்ட குணம் உள்ள பெண்களிடம் நட்பு இருக்கும். பொதுவாக ஒன்பதாம் பாவத்தில் செவ்வாய், சுயநலவாதி, அதிகமான கஷ்டபடுதலைக் கொடுக்கும். சுதந்திரமான மனம் கொண்டவர். திருமண பந்தத்தை புனிதமாக மதிப்பார். தூய்மையான வாழ்க்கை அமையும். கெட்டால் நீண்ட பயணத்தைக் தவிர்க்க வேண்டும். வெளிநாட்டில் அல்லது வெளியூரில் விபத்து ஏற்படும்.

**10.ல் செவ்வாய்:**

கொடுமையான எண்ணம் கொண்ட அதிகாரியாகவும், தைரியமாகவும் முடிவெடுப்பார். கடுமையான மனம் கொண்டவர். அதிகமாகச் செல்வம் சேர்ப்பார். புதன் சேர்ந்தால் திறமை மிக்க விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப வல்லுனராவார். குரு சேர்ந்தால் மக்களுக்குத் தலைவராவார். சுக்கிரன் சேர்ந்தால் வெளிநாட்டில் வியாபாரம் செய்வார். சனி சேர்ந்தால் கடுமையானவர். மேலும் புத்திரபாக்கியம் இருக்காது.

**11.ல் செவ்வாய்:**

ஜாதகர், சரளமாகவும், வேகமாகவும் பேசக் கூடியவர். புத்திக் கூர்மை உள்ளவராகவும், செல்வந்தராகவும் இருப்பார். அதிக நில புலன்கள், சொத்துக்களைப் பெற்றிருப்பார். உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களிடம் நட்பு பெற்றிருப்பார். இளமையான தோற்றம், இளமையான உணர்வு, அதிகமான மகிழ்ச்சியுடன் வாழ்வார்.

**12.ல் செவ்வாய்:**

மனைவியை இழக்கக்கூடும். சுயநலம் மிக்கவர், உடல் உஷ்ணம் நோய், வெறுப்புணர்வு அதிகம் இருக்கும். பணநஷ்டம் ஏற்படும். சூரியன் பார்த்தால் நெருப்பினால் விபத்து, தீயவர்களால் கெடுதி, கொடூரகுணம், வீண் விரையம் செய்பவர். அறுவை சிகிச்சை செய்ய நேரிடும். சுய நலம் மிக்கவர். இளமையில் திருமணம் செய்தால் விவாகரத்து ஏற்படும் வாய்ப்பு உண்டு.

## 2.புதன், குரு, சுக்ரன் பலன்கள்

### புதன்

**1.ல் புதன்:**

இலக்கினத்தில் புதன் திக்பலம் பெறுவார், அமைதியற்ற மனம், கிரகிக்கும் திறன், அதிகமான பேச்சு, நகைச்சுவை, இனிய வார்த்தை உடல் நலம் நன்றாக இருக்கும். புகழ் பெருகும். கல்வியில் சிறந்தவர். மரியாதை மிக்கவர். நுண் கலைகளில் ஆர்வம் உள்ளவர்.

**2.ல் புதன்:**

சமயம், மதம், தத்துவம் ஆகியவற்றை விரும்பிப் படிப்பார். வியாபாரத் தொடர்பாகவும், பிரசங்கம் மூலமாகவும் சம்பாத்தியம் ஏற்படும். செல்வந்தர், மிகவும் புத்தி கூர்மை, சிறந்த தகவல் தொடர்புதிறன், சிறந்த வாக்கு வன்மை, தர்ம காரியங்களுக்கு அதிகம் செலவளிப்பார். பணம் சம்பாதிப்பதிலும், அதனை சேமிப்பதிலும் மிகவும் கெட்டிக்காரர்.

**3.ல் புதன் :**

பிறருக்காக நல்ல செயல்கள் புரிவார்கள். ஆனால் அவர்களுக்குள் மகிழ்ச்சி இருப்பதில்லை. மிகவும் புத்தி கூர்மை, அதிகம் எழுதுதல், படித்தல் இருக்கும். ஒரு வேலையை எடுத்துக் கொண்டால் முடிக்கும் வரை அயராமல் பணிபுரிவார்கள். சாமர்த்தியசாலி. எல்லா வியாபாரத்திலும், சூதாட்ட விளையாட்டுக்களிலும் வெற்றி பெறுவார்கள். அதிகமான சகோதரர், சகோதரிகளைப் பெற்றிருப்பார்கள். சுதந்திரமான எண்ணம் கொண்டவர்கள். நண்பர்களாலும், உறவினர்களாலும் விரும்பப்படுவார்கள்.

**4.ல் புதன்:**

புத்தி கூர்மை, கல்வி அறிவு மிக்கவர்கள், ராஜ தந்திரி, அரசாங்கத்தை தைரியமாக விமர்சிப்பார்கள். பெரிய குறிக்கோளைக் கொண்டவர்கள். அடிக்கடி வசிப்பிடத்தை மாற்றுபவர்கள். சிறந்த உடல் நலம் உடையவர்கள். தந்தை சுயநலவாதி, சிறந்த வாகனங்கள் பெற்றிருப்பார்கள். நுண் கலைகள் மற்றும் இசையில் ஆர்வம் மிக்கவர்கள். அடிக்கடி வெளிநாட்டுப் பயணம் செய்வார்கள். நகைச்சுவை மிக்கவர்கள், நன்மதிப்பு, மரியாதை, பெற்றிருப்பவர்கள்.

**5.ல் புதன்:**

ஜாதகர் கற்றவர். மகிழ்ச்சி மிக்கவர், அதிக குழந்தைகள் உடையவர், பிறருக்கு ஆலோசனை கூறுபவர், மந்திரி ஆகும் தகுதி உண்டு. மிக அதிகமான புத்தி கூர்மை உள்ளவர்கள் மந்திர சாஸ்திரங்களை கற்கும் ஆர்வம் கொண்டவர். சிறந்த கற்பனா சக்தி, நிர்வாகத்திறன் உள்ளவர்கள், புத்திரபாக்கியம் தாமதம் ஆகும்.

**6.ல் புதன்:**

நினைவுத் திறன் குறைவு. உடல் நலம் சிறப்பில்லை. தாய் மாமனுக்கு அசுப பலன் ஏற்படும். சமயோசித புத்தி குறைந்திருக்கும்.

**7.ல் புதன்:**

நற்குணங்கள் மிக்கவர், புத்திசாலி, அழகிய ஆடைகளை அணிபவர், சட்டஞானம் மிக்கவர், வியாபாரத் திறன் மற்றும் தந்திரங்களை அறிந்தவர், நன்கு, எழுதும் திறன் உடையவர், எழுத்தாளர், இளமையில் அனைத்தும் வெற்றி, இளமையிலேயே செல்வந்தரின் மகளை மணப்பார். வானியல், ஜோதிடம், மந்திரங்களைக் கற்பார். நல்ல உடல் நலத்துடன், அழகிய தோற்றமுடையவராய் இருப்பார். அசுப கிரகங்களால் கெட்டால் குறுக்குப்புத்தி, ஏமாற்றும் குணம் உடையவர். சொந்தத்தில் மனைவி அமையும். அல்லது விளம்பரம் மூலமாகவும் மனைவி அமையும். மனைவி மேல் பாசம் மிக்கவர்.

**8.ல் புதன்:**

ஜாதகருக்கு நற்குணங்கள் அதிகம் இருக்கும். பூர்வீக சொத்துக் கிடைக்கும். கல்வி உதவித் தொகையைக் கொண்டு பல பாடங்களில், பலதுறை கல்வி கற்பார். ஆயுள் தீர்க்கம், உடல் பலம் குறைவு, மனோ தத்துவம், மறையியலில் ஆர்வம் மிக்கவர், கணிதத்தில் வல்லுனர், மேடை பயம் உண்டு. வாக்கு வன்மை சிறப்பில்லை.

**9.ல் புதன்:**

ஜாதகர் நன்கு கற்றவர், செல்வந்தர். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகம் இருக்கும். அறிவியல் சம்பந்தமான அறிவு இருக்கும், எதையும் ஆய்வு செய்யக் கூடிய குணம். சந்திரன் சேர்ந்தால் அதிக சந்தோஷம், இசையில் நாட்டம் இருக்கும். குரு சேர்ந்தால் மிகுந்த புத்திக்கூர்மை. பொதுவாக புதன் ஒன்பதாம் பாவத்தில் இருப்பது ஜாதகர் நட்பு மற்றும் மகிழ்ச்சியுடன் பழகுவார். கல்வி கற்க அல்லது சிறப்புறையாற்ற வெளி நாட்டிற்குச் செல்வார். நற்குணங்கள் மிக்கவர், தத்துவம், கலாச்சாரம், அரசியலில் ஆர்வம் இருக்கும்.

**10.ல் புதன்:**

மகிழ்ச்சி மிக்கவர், நேர்மையானவர். அதிகமான கல்வியறிவு கொண்டவர். கல்வி அறிவால் புகழும், அனைத்து முயற்சிகளிலும் வெற்றியும் பெறுவார். பார்வைக் குறைபாடு இருக்கும். வானவியல், கணிதத்தில் வல்லவராக இருப்பார். சுக்கிரன் சேர்ந்தால் அழகான மனைவி, செல்வந்தர் குருசேர்ந்தால் மகிழ்ச்சியின்மை, புத்திரபாக்கியம் இல்லை. அரசு ஊழியர்களுடன் நட்பு இருக்கும். சனி சேர்ந்தால் நகல் எடுக்கும் தொழில், பிழை திருத்தும் தொழில் செய்து ஏழையாக இருப்பார்.

**11.ல் புதன்:**

ஜாதகர் பலவிதமான கலைகளைப் பயில்வார். மிக்க புத்திகூர்மை உடையவர், செல்வந்தராகவும், மகிழ்ச்சியுடன், உண்மையானவராகவும் வாழ்வார். நம்பிக்கையான பணியாட்களைப் பெற்றிருப்பார். பொறியியல் துறையில் வெற்றியும், விருத்தியும் அடைவார்.

**12.ல் புதன்:**

தீயவர்களுடன் நட்பு இருக்கும். ஏழ்மை நிலை, தவறான சிந்தனை, மகிழ்ச்சியின்மை, புத்திர பாக்கியம் குறைவு, மனநிலை தடுமாற்றம், சோம்பேறித்தனம், கவிதை எழுதும் திறன், பிறருக்கு உதவும் தன்மை, அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை ஆராய்வதில் சிறந்த தன்மை.

## குரு

**1.ல்குரு:**

இலக்கினத்தில் குரு திக்பலம் பெறுவார் செல்வந்தர், உயர்ந்த ஆடை அணிகலன்கள் உடையவர், மகிழ்ச்சி மிக்கவர். சீரான உடல் நலம் கொண்டவர். வாகன சுகம் உடையவர். சிறந்த உடல் நலத்திற்காக உடற்பயிற்சி செய்வார். செல்வம், புகழ், அதிர்ஷ்டம், நீண்ட ஆயுள் உள்ள பெற்றோர். கீழ்படிதலுள்ள குழந்தைகள், இனிமையான பேச்சு, கௌரவமான நடவடிக்கை.

**2.ல் குரு:**

கவி எழுதும் திறன், சிறந்த எழுத்தாளர், ஜோதிடர், விஞ்ஞானி ஆக இருப்பார். அனைத்து முயற்சிகளிலும் வெற்றி. சிறந்த மனைவி மக்கள், குடும்ப சூழ்நிலை சிறப்பு. அனைவரிடமும் அன்பாகப் பழகுவார். குரு அமர்ந்திருக்கும் இராசிக்குத் தக்கவாறு செல்வம் சேரும். உண்மையே பேசுவார், இனிமையான பேச்சு, பிறர் தன்மையை அறியும் திறன். பெண் ஜாதகம் என்றால் கணவருக்கு முன் மாரகம் ஏற்படும்.

**3.ல் குரு:**

எல்லாவற்றிலும் நல்லதே நினைப்பார்கள், தத்துவ எண்ணம் உடையவர்கள். நல்ல குணம் உள்ள சகோதரர்கள் உடையவர்கள் சற்று கவலையும் இருக்கும். குடும்பத்தையும், குழந்தைகளையும் விரும்ப மாட்டார்கள். உடல் சற்று உஷ்ணமாக இருக்கும். அதனால் உடல் நலக்குறைவு இருக்கும். நண்பர்கள் குறைவாக இருப்பார்கள். வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள மாட்டார்கள்.

**4.ல் குரு:**

தத்துவத்தில் வல்லவர்கள், நன்கு கற்றவர்கள், மகிழ்ச்சியானவர்கள், அரசு ஆதரவு பெற்றவர்கள். செல்வச் செழிப்பு, சந்தோஷம், அனைத்திலும் வெற்றி, எதிரிகளுக்கு பயத்தைக் கொடுப்பவர். மத நம்பிக்கை அதிகம்,

மதிக்கத்தக்கவர், அதிர்ஷ்டசாலி, குடும்பத்தில் அமைதி மகிழ்ச்சி தவழும். ஆன்மீகத்தில் உயர்ந்த நிலையை அடைவார்கள்.

**5.ல் குரு:**

தத்துவ சாஸ்திரம், சட்டம், மந்திர சாஸ்திரம் கற்பார்கள், மிகுந்த புத்தி கூர்மை உள்ளவர்கள், அரசருக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டும் குருவாக இருப்பார். நல்ல நண்பர்களையும், வாகனங்களையும், நற்குணங்களையும் கொண்டிருப்பார்கள். அதிக குழந்தைகள், தெய்வ பக்தி உள்ளவர்கள் குழந்தை, நண்பர்களால் மகிழ்ச்சி உடையவர்கள். உள் உணர்வு மிக்கவர்கள். புத்திரபாக்கியம் தாமதப் படலாம், அதனால் கவலை உண்டாகும்.

**6.ல் குரு:**

எதிரிகளை வெல்வார்கள், பிறரை குணப்படுத்தும் திறன், ஏழ்மை, உடல் நலன் கெடும்.

**7.ல் குரு:**

நற்கும் மிக்கவர், இளகிய மனம் உடையவர், அழகிய தோற்றம் சிறந்த உடல் நலம் உடையவர், நற்குணம் கொண்ட மனைவி அமையும், திருணத்திற்குப் பின்னரும் கல்வி கற்கும் வாய்ப்பு கிட்டும். மற்றவர்களுக்காக இரக்கப்படுவார். அடிக்கடி தீர்த்த யாத்திரை மேற்கொள்வார். நல்ல சந்ததிகளை உடையவர். ஜாதகர் தந்தையை காட்டிலும் சிறந்த குணம் கொண்டவர். வாழ்க்கையில் அனைத்திலும் விருத்தி ஏற்படும்.

**8.ல் குரு:**

மகிழ்ச்சி குறைவு, ஆனால் பெருந்தன்மையான மனம் கொண்டவர். ஆயுள்தீர்க்கம். சரளமான பேச்சில்லை. கெட்ட பழக்க வழக்கங்கள் அதிகம். மரணம் சுமூகமாக அமையும். செல்வந்தர், மறைமுக சொத்துக்கள் இருக்கும்.

**9.ல் குரு:**

ஜாதகர் தத்துவம் மற்றும் சட்டத்தில் வல்லுனராவார். சுபர் சம்பந்தம் ஏற்பட்டால் அதிகமான சொத்து சேர்க்கை. சந்திரன், செவ்வாய் சம்பந்தப்பட்டால் ராணுவ அதிகாரி ஆவார். கல்வி கற்கவோ, சிறப்புறை நிகழ்த்தவோ வெளிநாடு செல்வார். பொதுவாக குரு ஒன்பதாம் பாவத்தில் இருப்பது பெருந்தன்மையான மற்றும் தயாளகுணம் இருக்கும். அரசியல் உயர்பதவி, தந்தைக்கு உதவுதல், ஆன்மீக நாட்டம், குழந்தைகளிடம் அதிகமான பாசம், சிறந்த உள்ளுணர்வு இருக்கும்.

**10.ல் குரு:**

அரசாங்கத்தில் உயர்பதவி வகிப்பார். செல்வந்தர். நற்குணம் மிக்கவர். ஆன்மீக வழியில் வாழ்க்கையைத் கடைப்பிடிப்பவர். புத்திக் கூர்மை, மகிழ்ச்சி மிக்கவர். உயரிய குறிக்கோள் கொண்டவர். சுக்கிரன் சேர்ந்திருந்தால் அரசின்

மிக உயர்ந்த பதவியும், கற்றவர்களைக் காக்கும் பொறுப்பையும் பெற்றிருப்பார். ராகு சேர்ந்திருந்தால் ஒவ்வொரு நடவடிக்கையிலும் அனைவரையும் துன்புறுத்துவார். செவ்வாய் சேர்ந்திருந்தால் கல்வி, ஆராய்ச்சி மையங்களுக்குத் தலைவராக இருப்பார்.

**11.ல் குரு:**

ஜாதகர் தீர்க்காயுளுடன் வாழ்வார். குறைந்த அளவு புத்திர பாக்கியம் இருக்கும். புத்திசாலியாகவும், தைரியம் மிக்கவராகவும், செல்வந்தராகவும் இருப்பார். இசையில் ஆர்வம் இருக்கும். அதிகமான நண்பர்களைப் பெற்றிருப்பார். வாழ்க்கையில் அனைத்திலும் வளர்ச்சி உள்ளவர், அதிகாரம் கொண்டவர் வாகன சேர்க்கையுடன் வாழ்வார். தந்தைக்கு தீர்க்காயுள், கடவுள் அருள், நல் அதிர்ஷ்டம் பெற்றிருப்பார்.

**12.ல் குரு :**

வெளிநாடு வாழ்க்கை, வெகுதூரப்பயணம், ஆன்மீக நாட்டம் குறைவு. தீய எண்ணம் தீய செயல்கள் செய்தல், வாழ்க்கையில் பின்பகுதியில் தன்மை சீர்திருத்திக்கொள்வார். ஆடை, ஆபரணங்கள் வாகனங்கள் மீது அதிக விருப்பம் உள்ளவர். மனம் மோட்சத்தை அடைய நினைக்கும். தியானத்திற்கு சிறப்பு. புதையல் கிடைக்க வாய்ப்புண்டு. செல்வ நிலை சிறப்படையும்.

## சுக்கிரன்

**1.ல் சுக்கிரன் :**

அழகிய தோற்றம், எதிர்பாலரால் விரும்பப்படுதல், தீர்க்க ஆயுள், நாகரீகமான தோற்றம், முகஸ்துதியை விரும்புதல், வசதியான வாழ்க்கை வாழ ஆசைப்படுதல். சிறந்த ஆடை அணிகலன் கொண்டவர். சிறந்த உடல் நலம் உடையவர். அடிக்கடி சுய கட்டுப்பாடு இழந்து விடுவார்.உணர்ச்சிவசப்படுதல்,

**2.ல் சுக்கிரன்:**

விலையுயர்ந்த அழகிய பொருட்கள் உடமையாக்கிக் கொள்ளும் எண்ணம், அதற்காக அதிகமாக செலவழித்தல், இனிமையாக பேசுபவராக இருப்பார்.

**3.ல் சுக்கிரன்:**

மன நிலை சிறப்பாக இருக்கும். ஆனால் உடல் நலம், சக்தி, குறைவாக இருக்கும். பாடுவதில், இசையில், நாட்டியத்தில் ஆர்வம் அதிகம் இருக்கும். பொருளாதார நிலை சிறப்பில்லை. ஏழ்மை, குழந்தைகளால் மகிழ்ச்சி இல்லை. பயந்த சுபாவம், கொண்டவர் புரளியை கிளப்புபவராய் இருப்பார்.

**4.ல் சுக்கிரன்:**

இசைத்திறன் மிக்கவர்கள், நளினமான நடவடிக்கை, தாயிடம் அன்பு, அதிகமான நண்பர்கள், வீடு, வாகனம், உடையவர்கள். வீட்டில் மகிழ்ச்சி, அமைதி நிலவும்.

**5.ல் சுக்கிரன்:**

கவிதை எழுதும் திறன் கொண்டவர்கள் அதிகமான நண்பர்கள் உள்ளவர்கள், அழகான குழந்தை, மனைவி மூலம் அதிகமான மகிழ்ச்சி, புத்திக்கூர்மை, செல்வச் சேர்க்கை உள்ளவர்கள், அனைவராலும் மதிக்கப்படுதல், பெண் குழந்தைகள் அதிகம் யூகவணிகத்தில் வெற்றி அடைதல், புகழை விரும்புதல், ஆடம்பர பொருட்களில் ஆர்வம் அதிகம் உள்ளவர்கள்.

**6.ல் சுக்கிரன்:**

பொருளாதார சிறப்பு. மனைவிக்கு உடல்நலம் சிறப்பில்லை, நீர் ராசியில் கெட்டால் மது அருந்தும் பழக்கம் ஏற்படும்.

**7.ல் சுக்கிரன்:**

திருமண வாழ்க்கையில் மகிழ்ச்சி அதிகம். சொல் பேச்சை கேட்கும் மனைவி அமையும். எதிலும் வெற்றி கொள்ளும் திறன், காந்தக் கவர்ச்சி உள்ளவர். எதிர்பாலருடன் நன்கு பழகுவார். நோயின் காரணமாக உடல் சக்தி குறைய வாய்ப்புண்டு. அடிக்கடி பிரயாணம் செய்தல், ஜாதகரை அனைவரும் நேசிப்பர். சிறந்த வாழ்க்கை அமையும். காதல்வயப்படுதல், பெண்கள்பழக்கம்.

**8.ல் சுக்கிரன்:**

ஜாதகர் மிக்க செல்வந்தர். பொருள் சேர்க்கையுடன் வண்டி, வாகனம், வசதிமிக்க வாழ்க்கை உடையவர். ஜாதகரின் தாய்க்கு உடல் நலம் சிறப்பில்லை. இளமை வாழ்க்கையில் ஏமாற்றம் அதிகம் உண்டு. உச்சம் பெற்றால் மிக அதிகமான செல்வச் சிறப்பு. நீசம் பெற்று சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகரின் தாய்க்கு ஆயுள் குறைவு மனைவிக்கு உடல் நலம் சிறப்பில்லை. திருமணம் தாமதமாகும். பூர்வீக சொத்து கிடைக்கும் திருமணத்தால் சொத்து கிடைக்கும்.

**9.ல் சுக்கிரன்:**

ஜாதகர் அதிர்ஷ்டசாலி, சிறந்த கல்வி, மனைவி மக்கள், புகழ் சந்தோஷத்துடன் வாழ்வார். சூரியன் சம்பந்தம் ஏற்பட்டால் பணிவான பேச்சு. ஆனால் அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்படும். சனி சம்பந்தப்பட்டால் ராஜதந்திரி ஆவார். சுக்கிரனுடன் சூரியன், சந்திரன் இருவரும் சம்பந்தப்பட்டால் பெண்களால் கஷ்டம் அல்லது பண நஷ்டம் ஏற்படும் சூரியன், சனி சம்பந்தம் ஏற்பட்டால் குற்றவாளியாவார். அரசு மரியாதை ஆன்மீக நாட்டம், சுயநலம், வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும், மணவாழ்க்கை சிறப்பில்லை.

**10.ல் சுக்கிரன்:**

ஜாதகர் நிலம், வீடுகள் மூலம் அதிகமாகச் சம்பாதிப்பார். பெண்களிடம் ஆர்வமாகப் பழகுவார். அனைவருடனும் சகஜமாகவும், நட்புடனும் பழகுவார். சனி சேர்ந்திருந்தால் பெண்கள் விரும்பும் அழகு சாதனப் பொருட்கள் வியாபாரம் செய்வார். கல்வி தடைப்படும். பெரியோர்களை மதிப்பார்.

**11.ல் சுக்கிரன்:**

சலன மனம் கொண்டவர். அதிகமான லாபம், அனைத்து வகை வசதி, சுகபோகம் பெற்றிருப்பார். பெண்கள் விஷயத்தில் பலவீனமானவர். புகழ் உடையவராகவும், அதிக நண்பர்களை உடையவராகவும் இருப்பார். நாடகம், இசை, பெண்கள் மூலமாக லாபங்களைப் பெறுவார்.

**12.ல் சுக்கிரன்:**

உறவினரால் வெறுக்கப்படுவார். வாழ்க்கையில் வசதி, வெற்றி இல்லாததாலும் ஏழ்மையினாலும் ஜாதகரின் வாழ்க்கை கவலைக் குறியது. அதிகம் பொய் பேசுவார். கண்பார்வை குறைவு. சுக்கிரன் உச்சம் பெற்றால் சுயபலன்கள் நடைபெறும். கலைத்திறன் மிக்கவர். இளமையில் திருமணம் செய்தால் கஷ்ட நிலை. தீர்க்காயுள்.

## 3.சனி,ராகு,கேது,பலன்கள்

### சனி

**1.ல் சனி:**

சரியாக, நேரப்படி வேலை செய்தல், நாத்திகம் கவலை, வசதியின்மை, தடை, மெதுவாக செல்வ சேர்க்கை, ஒல்லியான உடல். தீர்க்க ஆயுள், சுய சிந்தனைமிக்கவர், அனைத்து முயற்சிகளிலும் வெற்றி பெறபாடுபடுதல். முதுகுத் தண்டு நோயால் உடல்நல குறைவு, பதவி இழப்பு, மேலதிகாரிகளை அவமதித்தல், விஷபார்வை உடையவர், பார்வையாலேயே சத்ருக்களை அழிப்பவர்.

**2.ல் சனி:**

குடும்பவிருத்தி, மெதுவான ஆனால் நிலையான செல்வச்சேர்க்கை, பொருளாதார சிக்கல், கடன், அழகற்ற தோற்றம். குடும்ப குழப்பம், சிந்தனை தடுமாற்றம் மிக்கவர். பிரச்சனையான குடும்பம்,

**3.ல் சனி:**

தைரியசாலி, செல்வந்தர், சகோதரம் இன்மை இருந்தாலும் சகோதரர்களால் கவலை. கொடூரமனம் உள்ளவர் அரசிடமிருந்து பாராட்டு கிடைக்கும். உள்ளூரில் மக்களுக்கு தலைமை ஏற்கும் நிலை உருவாகும், பிறரைக் காப்பாற்றுதல், பல முறை முயன்று தோல்வி கிடைத்த பின்பே வெற்றி கிடைக்கும்.

வயதுக்குத் தகுந்த வறுமானம், அனுபவம் கூடும். எப்பொழுதும் துக்கமான அவநம்பிக்கையான, கவலையான மனநிலை இருக்கும்.

**4.ல் சனி:**

இளமையில் நோய்வாய்படுவார்கள். தாயன்பு இல்லாதவர்கள், மகிழ்ச்சி இல்லை, வாதம் மற்றும் பித்த நோயால் பாதிப்பு ஏற்படும். பூர்வீக சொத்து இல்லை. வீடு மற்றும் வாகனத்தால் துயரங்கள் உண்டு. உறவினர்களால் வெறுக்கப்படுவார்கள். தனிமையான வாழ்க்கையை விரும்புவார்கள். தொழில் வளர்ச்சியில் தடை ஏற்படும், கல்வியில் தடை, பாதிப்பு, தாய்க்கு உடல் நலம் கெடும். குடும்ப வாழ்க்கை சிறப்பில்லை.பிராணிகள் வதை, அரசியல் ஈடுபாடு,

**5.ல் சனி:**

கொடூரமனம் கொண்டவர்கள், உடல் பலவீனம் மிக்கவர். ஏழ்மை, பிறரால் வெறுக்கப்படுதல் குழந்தைகளால் கவலை, நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் தகராறு, குடும்ப வாழ்க்கையில் கவலை மனக்குழப்பம், திருமணதாமதம், குழந்தைகள் அடிக்கடி நோய் வாய்படுதல் ஆகிய பலன்கள் நடைபெறும். குழந்தை இன்மை,

**6.ல் சனி:**

எதிரிகளை வெல்லுதல், அதிகாரம், லாபம், எதிரிகளுக்கு நஷ்டம் ஏற்படும்.சுப பலன்களை செய்யும்,

**7.ல் சனி:**

ஜாதகர் மனைவியின் கட்டுப்பாட்டில் இருப்பார். மனைவி அழகு குறைந்தவர். வெளிநாட்டில் மதிப்பு, மரியாதை, கவுரவம் கிடைக்கும், வயிற்றுவலி மற்றும் காது நோய் உடையவர். நோயாளியான மனைவி, புகழுடன் பிரபலமடைவார். ஆனால் குடும்ப வசதி இல்லை. பொருளாதார சிக்கல். அரசியல், ராஜதந்திரங்களில் வெற்றி கிடைக்கும். இரண்டுக்கு மேற்பட்ட மனைவிகள்,

**8.ல் சனி:**

ஆயுளுக்கு மிகவும் சிறப்பு. ஆனால் வாழ்க்கையில் பலவிதமான பொறுப்புகளை கொடுக்கும். தன்கடமைகளை சரியாக நிறைவேற்றுவார். கண்பார்வையில் பாதிப்பு ஏற்படும். குறைந்த அளவு புத்திரம் கிடைக்கும். ஆஸ்துமா போன்ற நுரையீரல் நோயால் பாதிப்பு ஏற்படும். கொடூர மனம் உடையவர்.

**9.ல் சனி:**

ஜாதகர் தனிமை விரும்பி, அநேகமாக திருமணம் காலதாமதமாக நடைபெறும். ஜாதகர் தைரியசாலி. சூரியன் சேர்ந்தால் தந்தையுடன் கடுமையான கருத்து வேறுபாடு. குழந்தைகளுடன் தகராறு, ஜாதகருக்கு வயிற்று நோய் ஏற்படும். புதன் சம்பந்தப்பட்டால் செல்வந்தர், ஆனால் பிறரை ஏமாற்றுவார்.

குடும்ப வாழ்க்கை சரியில்லை. தர்ம ஸ்தாபனம் துவங்குவார். தந்தை நிலை சிறப்பின்மை, சனி தசாபுத்திகளில் தந்தைக்கு ஆபத்து, அதிக அலைச்சல், மகிழ்ச்சியற்ற குடும்ப வாழ்க்கை பிரயாணங்களில் துன்பங்கள் ஏற்படும், கண் பார்வை குறைவு ஏற்படும்.

**10.ல் சனி:**

ஜாதகர் அதிகாரி அல்லது மந்திரியாவார். விவசாயத்தில் ஈடுபடுவார். செல்வந்தர், தைரியம், புகழ்மிக்கவர், நேர்மைமிக்கவர், முதுமையில் புனிதப் பிரயாணங்களை அதிகம் மேற்கொள்ளுவார். ஜாதகரின் தொழில் திடீரென ஏற்ற இறக்கமாக இருக்கும். சனி எட்டாம் அதிபதியுடன் சேர்ந்து, அசுபர் ராசியில் இருந்தால் உயர் அதிகாரிகளுடன் பகை ஏற்படும். ஆள்அடிமைகள்உண்டு,

**11.ல் சனி:**

ஜாதகர் அதிகமான பணியாட்களைப் பெற்று, சிறந்த வருமானம் பெற்றிருப்பார். மிகக் குறைந்த நண்பர்கள் இருப்பார்கள். அரசு மூலம் வருமானம் நீண்ட நாட்கள் ஆரோக்கியத்துடன் வாழ்வார். அரசியலில் ஈடுபட்டு அதிகார பதவி பெற்று அதிக வருமானம், பிரபலம், புகழ் பெறுவார். சந்திரன், சம்பந்தப்பட்டால் மருத்துவராகவும், சூரியன் சம்பந்தப்பட்டால் வெற்றிகரமான அரசியல்வாதியாகவும் இருப்பார்.

**12.ல் சனி:**

சோம்பல், பணவிரயம், பார்வை குறைவு, அங்கஹீனம், அதிகமான எதிரிகள், வியாபாரத்தில் நஷ்டம், எப்பொழுதும் எதிர்மறை சிந்தனை. ரகசியமாக தீயசெயல்கள் செய்தல் வெட்கமின்மை, புத்திரபாக்கியம் குறைவு, வயோதிகத்தினால் கஷ்டம். குடும்பத்தினரிடமிருந்து பிரிதல், விபத்தால் நஷ்டம். மணவாழ்க்கையில் மகிழ்ச்சி இன்மை, பாதம் அல்லது கண்பாதிக்கப்படுதல். சிறைக்கு செல்லுதல்,

## ராகு

**1.ல் ராகு:**

நண்பர்கள் அற்றவர். சுயசிந்தனை அற்றவர் உடல் நலக்குறைவு, குடும்பத்தைப் பிரிந்து குறிக்கோளற்று சுற்றித்திரிபவர். அனைத்து உறவினர்களும் எதிரிகளாவர். பெண் ஆசை அதிகம் உடையவர். மிக்க கருமியாக இருப்பார். உடல் பலவீனம், பலவிதமான குடும்ப குழப்பங்களை எதிர்கொள்ளுதல். வாக்குவன்மை, குறிக்கோள் அற்ற தன்மை. பல் நீண்டு இருத்தல். சுயநலம், ஆழ்ந்த சிந்தனை குட்டை உருவம். கண்டிப்பான குணம், குடும்பத்தில் தலைமை ஏற்றல், ரகசியமாக பணம் சேர்த்து வைத்தல்.

**2.ல் ராகு :**

முறையற்ற வழியில் சம்பாதித்தல், கல்வியில் தடை, அதிகாரம் செலுத்தும், மற்றும் ஏமாற்றும் உறவினர்கள், குடும்ப பொறுப்புகளால் கஷ்டப்படுதல். மண வாழ்க்கை சிறப்பில்லை.

**3.ல் ராகு:**

வெளிப்பார்வைக்கு தைரியசாலி, திடீரென்று எதிர்பாராத செய்தி கிடைக்கும். சகோதரர்களுக்கு அசுப பலம் நடைபெறும். இவருடைய எண்ணங்கள், செயல்களை பிறர் கடுமையாக விமரிசிப்பார்கள்.

**4.ல் ராகு:**

முட்டாள் தனம் உடையவர்கள், குறைந்த நண்பர்கள், ஏமாற்றும் எண்ணம் கொண்டவர்கள், ஏமாற்றிய பின் வருத்தப்படும் நிலையும் உடையவர்கள். ஊருக்குத் தலைமை ஏற்கும் நிலை, கீழ்த்தர மக்களுடன் நட்பு, மனைவிக்கு உடல்நலம் பாதிப்பு ஏற்படும். அதிக பெண் குழந்தைகள் உண்டு, கடின மனம், இரக்கமின்மை, உறவினர்களுடன் சிறந்த உறவு இல்லாமை, பிடிவாதம் மிக்கவர்கள், மண வாழ்க்கை சிறப்பில்லை.

**5.ல் ராகு:**

வயிற்றுவலியால் பாதிப்பு, பிறரால் தவறாக கருதப்படுவார். நண்பர்கள் குறைவு, இதய நோய் உள்ளவர், கடுமையான மனம், ஞாபகமறதி உடையவர்கள், புத்திரர்களை இழக்கும் நிலை ஏற்படலாம். அடிக்கடி உணர்ச்சி வசப்படுதல், குறைந்த புத்திரம், முதலில் பெண் குழந்தை பிறக்க வாய்ப்பு உண்டு ராகுதிசையில் ஏதாவது ஒரு தீய பழக்கத்திற்கு அடிமை ஆகும் நிலை உருவாகும்.

**6.ல் ராகு:**

எதிரிகள் தோல்வி அடைவார்கள், நரம்பு சம்பந்தப்பட்ட நோய் ஏற்படும் வசதி வாய்ப்புகள் உண்டாகும், கெட்டால் துரதிர்ஷ்டம், தீய நடத்தை ஏற்படும்.

**7.ல் ராகு:**

குடும்பத்தை மதிக்கமாட்டார், குடும்ப பழக்க வழக்கங்களை மீறுபவர். மனைவிக்குக் கர்ப்பப்பை நோய் உண்டு. அதிகம் சாப்பிடுபவர். நீரழிவு நோய் உண்டு. பேய் பிசாசுகளினால் பாதிப்பு ஏற்படும், குறிக்கோளற்ற வாழ்க்கை, தீய வழிகளில் பணம் செலவழிப்பார். மண வாழ்க்கை சிறப்பில்லை.

**8.ல் ராகு:**

ஜாதகர் நோயாளி, மெலிந்த உடல் உடையவர், பொதுவாக பொது மக்களிடமிருந்து தனித்து இருப்பார். பலவித கஷ்டங்கள் சூளும். குடும்பத்தில் சண்டை சச்சரவு ஏற்படும். சந்திரன் ஒரு அசுப கிரகத்துடன் சேர்ந்து இருந்து, ராகு 5, 8,12, ல் இருந்தால் மனநோயால் பாதிக்கப்படுவார். ஜாதகர் நோயாளி,

மெலிந்த உடல் உடையவ்ர். ஆயுள் சிறப்பில்லை. முடக்குவாத நோய் ஏற்படும். குறைந்த அளவு புத்திர பாக்கியம் உண்டு.

**9.ல் ராகு:**

ஜாதகர் மனைவிக்கு அடங்கியவர். கவலைமிக்கவர். பணிவற்றவர். நன்னடத்தை அற்றவர். தந்தை, கடவுள், மதம் இவற்றை எதிர்ப்பார். ஆனால் செல்வந்தராகவும், புகழ்மிக்கவராகவும் ஆகிவிடுவார். அனைவருக்கும் துன்பம் விளைவித்தல், குரூரமான பேச்சு, சுய நலம், கொடூர மற்றும் வஞ்சக குணம் கொண்டவர் பிறரை ஏமாற்றுவார். ஆனால் பிறரிடமிருந்து எல்லாம் கிடைக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்.

**10.ல் ராகு:**

கவிதை, கதை இவற்றில் ஆர்வம் மிக்கவர். அதிகமாகப் பிரயாணம் செய்பவர், புகழ் பெற்றவர். குறைந்த புத்திர பாக்கியம், தைரியமானவர், அதிகமான பாவச் செயல்களைப் புரிபவர்.

**11.ல் ராகு:**

ஜாதகர் ராணுவம், கப்பற்படை போன்றவற்றில் பெரிய பதவி வகிப்பார் நன்கு கற்றவராகவும், புகழ்மிக்கவராகவும் இருப்பார். குறைந்த அளவு புத்திர பாக்கியம், காதில் நோய் ஏற்படும். வெளி நாட்டில் அதிக அளவு சம்பாதிப்பார். நல்ல திறமைசாலி, தீர்க்காயுள், மனம், மற்றும் புலன்களைக் கட்டுப்படுத்துவார். ஆன்மீக நாட்டம் கொண்டவர். வெட்கம் இல்லாதவர்.

**12.ல் ராகு:**

நன்னடத்தை அற்றவர். ஆனால் பிறருக்கு உதவும் தன்மை. வாழ்க்கையில் வளர்ச்சி உண்டு. கண்பார்வை பாதிப்பு. உடல் நலக்குறைவு. குடும்பத்தை விட்டுப் பிரியும் நிலை. வரவுக்கு மிஞ்சிய செலவு. நீரினால் விபத்து. ரகசியமாக தீய செயல்கள், மத நம்பிக்கை இன்மை. அதிக விரயம். கொள்கையற்ற நிலை. மாந்திரீகம் போன்ற ரகசிய கலைகளில் வெற்றிபெறுதல், இனம் தெரியாத நோய்கள், தூக்கக் குறைவு,

## கேது

**1.ல் கேது:**

உடல் நலம் சிறப்பில்லை. கெட்ட சிந்தனை, அலைச்சல், சாமியார், குடும்பத்தில் குழப்பம். எதிரிகளால் தொல்லை, மனக் குழப்பம், உயரமான தோற்றம், திருடும் குணம், தைரியம். மருத்துவத்தால் குணம்செய்ய இயலாத நோய்கள் தாக்கக்கூடும். மரியாதை குறைவு, மன சஞ்சலம் மிக்கவர். உறவினர்களுக்கு அதிகமான தொல்லை தருபவர். நாத்திகம் பேசுதல்,

**2.ல் கேது:**

ஏழ்மை, திக்கிப் பேசுதல், அனைவரிடமும் தகராறு செய்யும் குணம், அரசாங்கத்தால் சொத்துக்கள் பறிக்கப்படும், கல்வியில் தடை ஏற்படும். மண வாழ்க்கைக்கு தடை ஏற்படும்.

**3.ல் கேது:**

பலசாலி, வீரதீர சாகசம் செய்வார், ஆனால் பயம் மிக்கவர். மன குழப்பங்களும், பகற்கனவும் அதிகம் உள்ளவர்.

**4.ல் கேது:**

தாயன்பு அற்றவர்கள், சொத்துக்கள், வாகனங்களில் மகிழ்ச்சி இல்லை. அதிருப்தி, தோல்வி, வெளி நாட்டில் வசிப்பவர்கள். வாழ்க்கையின் இறுதியில் புதிய அனுபவம் கிடைக்கும். திடீரென்று மாற்றங்கள் ஏற்படும்.

**5.ல் கேது:**

புத்திரர்களை இழக்கும் நிலை. வயிற்று நோய், வினோதமான உணர்வு, ஆன்மீக ஈடுபாடு இருக்கும், குழந்தைகளிடமிருந்து பிரிவு, நிலையற்ற மனம், கவலை மிக்க மனநிலை, மனக் குழப்பம் அதிகம் இருக்கும்.

**6.ல் கேது:**

எதிரிகள் அதிகம், அனைத்திலும் வெற்றி, புகழ், தாய்மாமனுடன் உறவு நிலை சிறப்பில்லை. வாகனம், அதிர்ஷ்டம், புகழ், அதிகாரம், பிரபலம் உண்டாகும்.

**7.ல் கேது:**

ஜாதகரின் மனைவி குறுக்குப்புத்தி உடையவர், மகிழ்ச்சியற்ற திருமணம், பாபச் செயல்கள் புரிபவர், சூதாடுவார், மனைவி நோயாளி, சிறு நீர்க்குழாயில் நோய், வயிற்றில் புற்றுநோய் ஏற்படும். உடல் சக்தி குறையும், மனைவி கடுமையான வார்த்தைகள் பேசுவார். மனைவியை இழக்க நேரிடும்.

**8.ல் கேது:**

சுபர் சம்பந்தப்பட்டால் அதிக செல்வம், ஆயுள் தீர்க்கம், அசுபர்களால் பாதிக்கப்பட்டால் பிறர் செல்வத்தைக் கவர்வார். தீராத நோய்கள் ஏற்படும். அல்லது மனநோய் ஏற்படும். வயிற்றில் நோய் ஏற்படும். நண்பர்கள் குறைவு, அனைத்திலும் தோல்வி, சூதாடுபவர், பாவச் செயல் செய்பவர்,சிறுநீரக உறுப்பில் நோய், மனைவிக்கு ஆயுள் குறைவு, கடுமையாகப் பேசும் மனைவி, நீரில் கண்டம் ஏற்படும்.

**9.ல் கேது:**

உடனடியாக உணர்ச்சிவசப்படுபவர். அடிக்கடி மனத்தளர்ச்சி கொள்வார. நல்ல திறமை மிக்கவர். தன் திறமையை பிறரைச் சுரண்டுவதற்கு பயன்படுத்துவார். தைரியசாலி. பெற்றோர்களை மதிக்க மாட்டார். செல்வச் சேர்க்கை ஏற்படும் துறவி போன்ற வாழ்க்கை, தர்ம சிந்தனை, தாராள மனம்,

மனைவி குழந்தைகளிடம் பாசம் அதிகம், இளமையில் தந்தையை இழத்தல், பூர்வீக சொத்து இழத்தல், ஆண் குழந்தைகளையே விரும்புதல், அதிர்ஷ்டம் குறைவு ஆனால் நற்குணம் மிக்கவர். ஆன்மீக நாட்டம் உடையவர்.

**10.ல் கேது:**

ஜாதகர் பலம் மிக்கவர் தைரியசாலி, புகழ் மிக்கவர், தீய செயல்கள் புரிபவர். எல்லா முயற்சிகளிலும் கஷ்டங்களை எதிர் கொள்வார். பலம் பெற்றிருந்தால், புத்திக் கூர்மை, மகிழ்ச்சி மிக்கவர். ஆன்மீக ஈடுபாடு புனித யாத்திரை அதிகம் மேற்கொள்வார்.

**11.ல் கேது:**

பொருளாதார ஏற்ற இறக்கம், லாட்டரி, குதிரைப்பந்தயம், பங்கு மார்க்கட், நற்குணம் கொண்டவர். தன் முயற்சிகளில் எல்லாம் வெற்றி பெறுவார். தரும காரியங்களில் ஈடுபடுவார். சிறந்த தோற்றம், உடல் ஆரோக்கியம், பலவிதமான வருமானங்கள். விருப்பங்களும் நிறைவேறும்.

**12.ல் கேது:**

அலைபாயும் மனம், வெளிநாட்டில் வசிக்கும் நிலை. பூர்வீக சொத்து அழியும்நிலை. அதிகபிரயாணம், தொழில் மற்றும் வசிப்பிடத்தை அடிக்கடி மாற்றுதல், செல்வசெழிப்பு வசதியான வாழ்க்கை, மத நம்பிக்கை, மோட்சம், எதிரியை வெல்லுதல், அரசு மரியாதை. தீயச்செயல், தீயசெலவு செய்தல், செல்வம் அழிதல். உடல் நலப் பாதிப்பு, ஆசிரமத்தில் வசிக்கவும் நேரலாம்.

## 4.யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ பலன்கள்

### யுரேனஸ்

**1.ல் யுரேனஸ்**

சுதந்திரம், உண்மை, உள்ளுணர்வு, புதியன கண்டுபிடித்தல், ஏற்றுக்கொள்ளாதத் தன்மை, இயற்கைக்குமாறான பழக்கம், சோதிடம், மாயவித்தை, ஆன்மநிலைத் தொடர்பு, திருமணம், பிரபலமின்மை, அறிவியல் மற்றும் சமயம்சார்ந்த கல்வி, கற்பூர புத்தி, வெடிபொருள்.

**2.ல் யுரேனஸ்**

நிலையில்லாத அதிர்ஷ்டம், புதிய கண்டுபிடிப்புகளில் இலாபமடைதல், இயந்திரம், வங்கி, இரயில், சங்கீதம்,மின் ஆற்றல்.

**3.ல் யுரேனஸ்**

குழந்தையிடம் இருந்து தனிமை, அறிவுத்திறன், கவலை, எதிர்பாராத திடீர் செய்திகள், அலைச்சல், விபத்து, வீரச்செயல், ஆவல், ஞானம், நரம்புத்தளர்ச்சி.

**4.ல் யுரேனஸ்**

வெளிநாட்டில் அதிர்ஷ்டம், பூர்வீக சொத்துக்களில் பிரச்சனை, மனைவி மற்றும் சொந்தக்காரர்களிடம் எதிர்ப்புணர்வு, நிலையில்லாத பணப்புழக்கம், திருட்டுகளினால் பொருள் இழப்பு, ஏமாற்றுதல், எதிர்மாறான தீர்மானம்.

**5.ல் யுரேனஸ்**

கலையுணர்வு, கமுக்கமான காதல், மாற்றம், கட்டுப்படாமை, முதல் குழந்தைக்கு தீங்கு, புதிய படங்களை பார்த்தல், குழந்தை பிறப்பில் அபாயம், கெட்ட அமைப்புடன் இருத்தல், எழுத்துக்கள், பதிப்புகளினால் துன்பம், சதி ஆலோசனை, யூகத்தொழில், நம்பிக்கை துரோகம்.

**6.ல் யுரேனஸ்**

நோயுடல், தீராத நோய், மனக்குழப்பம், ஒழுக்கம் தவறுதல், பைத்தியம், மெய்யியல் சிந்தனை, மாணுவித்தை, மின் ஆற்றல்.

**7.ல் யுரேனஸ்**

மகிழ்ச்சியான கலையுணர்வு, திடீரென தனிமையாகுதல், அறிவான வாழ்க்கைத் துணை, திருமணத்திற்குப் பின்பு தவறாக புரிந்து கொள்ளும் தன்மை, விரைவான திருமணம், வெளிநாட்டவர்களால் இழப்பு ஊராட்சியாளர்களிடம் பிரச்சனைகள், ஒப்பந்தங்கள், வழக்குகள்.

**8.ல் யுரேனஸ்**

திடீர் முடிவுகளை ஏற்படுத்தும், பங்குதாரர் அல்லது திருமணத்தின் மூலமாக எதிர்பாராத இலாபமடைதல், கெட்டிருந்தால், கவலை, துன்பம், பொருளாதார நெருக்கடி, புரியாத நோய்கள்.

**9.ல் யுரேனஸ்**

சுதந்திரம், புதியவை கண்டுபிடித்தல், உள்ளுணர்வுப் பூர்வமான திட்டமிட்டு செயலாற்றுதல். அலைச்சல், திருமணத்தின் மூலமாக உறவினர்களின் பகை, மறைபொருள் கலையில் ஆர்வம், மெய்யியல், சமயம், தத்துவம், முன்னேற்றமான எண்ணம், ஆய்வாளர்கள்.

**10.ல் யுரேனஸ்**

சுதந்திரம் புதியன கண்டுபிடித்தல், கட்டுப்படாமை, ஒழுக்கம் தவறுதல், தோல்வி, அரசு மற்றும் பொதுமக்களால் துன்பம், குடும்பத்திலிருந்து பிரிதல், பொறியியல், இயந்திரவியல், நிரூபர்.

**11.ல் யுரேனஸ்**

அறிவான நண்பர்கள், புதிய கண்டுபிடிப்புகள், எழுத்தாளர், அரசுத்துறை, நிர்வாகி, நிறுவனங்களின் மூலமாக அதிர்ஷ்டம், அழகான வாழ்க்கை, முன்னேற்றம்.

**12.ல் யுரேனஸ்**

மறைபொருள் விசாரணை, மறைமுகத்தால், விலங்கினங்களினால் தொல்லை, தனியாக வாழ்தல், மருத்துவமனை.

## நெப்டியூன்பாவகப்பலன்

**1.ல் நெப்டியூன்**

ஆவியுலக சிந்தனை, கனவுகள், மெய்மறந்த நிலை, கலை ஆர்வம், உணர்ச்சி வயப்படல், ஆன்ம சக்தி, கலையில் ஆர்வம், திரவப்பொருள் மற்றும் கப்பல் ஏற்றுமதியால் இலாபமடைதல்.

**2.ல் நெப்டியூன்**

பொருள்களினால் இலாபம், மறைகலைத்தன்மை, பொருளாதார முன்னேற்றம், கெட்டிருந்தால் வியாபாரம் கெடுதல், ஏமாற்றப்படுதல், நன்றாக இருந்தால், மருத்துவ சேவை மற்றும் சமூகத் தொண்டு புரிதல்.

**3.ல் நெப்டியூன்**

அருள்சிந்தனையால் ஏற்படும் தொடர்புகள், உயர்ந்த குறிக்கோள், சொத்துக்களினால் தொந்தரவு, அலைச்சல், ஏமாற்றமடைதல் உண்டாகும்.

**4.ல் நெப்டியூன்**

ஆன்மீகத்தன்மையில் இருத்தல், அடிக்கடி இடம் மாறும் தன்மை.

**5.ல் நெப்டியூன்**

அழகாக நீந்துபவர், வேகத்துடன் கூடிய அன்புமயமானவர், புலன் உணர்வு, கடல் ஏற்றுமதி, பங்குச்சந்தை, எண்ணெய் வியாபாரத்தில் இலாபமடைதல்.

**6.ல் நெப்டியூன்**

வேலையாட்களினால் இழப்பு, நீண்ட நாட்பட்ட நோய்கள், அதிகமாக உடல் துன்பங்களைத் தரும் புகையிலை, மதுப்பழக்கம் போன்றவை கூடாது.

**7.ல் நெப்டியூன்**

நோயுள்ள மனைவி, ஏமாற்றம், துயரம், பொறாமை, சில குழப்பங்கள். மண வாழ்க்கை பாதிப்பு.

**8.ல் நெப்டியூன்**

மனைவியால் இலாபமடைதல், விஷத்தினால் ஆபத்து.

**9.ல் நெப்டியூன்**

மெய்யியல், நீண்ட தூரப் பயணம், மனைவியின் உறவினர்களிடம் வழக்கு, ஆன்மீகக் கலை.

**10.ல் நெப்டியூன்**

பேராவல், தலைமை, புகழ், மதிப்பு, கலை மற்றும் அறிவியல் ஈடுபாடு, பூர்வீக சொத்து, நீர்ப் பொருள், மருத்துவமனை, கமுக்கமான சமூக சிந்தனை, மீன், கடல் வாழ்க்கை, இசை.

**11.ல் நெப்டியூன்**

நல்ல நண்பர்கள், மீன் வாணிபம், இசை, இரவு நேரவிடுதி, நீச்சல், கவிஞர் போன்ற துறையினர்.

**12.ல் நெப்டியூன்**

மறை கலை மற்றும் அறிவியல் கலையில் ஆய்வு, துப்பறியும் பணி, சிறை, மருத்துவமனை, போன்றவற்றில் பணிபுரிதல், இதில் கெட்டிருந்தால் ஏமாற்றுதல் அல்லது ஏமாறுதல் மறைமுக எதிரிகள் ஏற்படும்.

**புளுட்டோ பாவகப்பலன்**

**1.ல் புளுட்டோ**

துணிச்சலானவர், புதிய வழிமுறைகளைக் கடைபிடிப்பவர், நல்ல எண்ணமுடையவர், திறமையானவர், எதையும் செய்பவர்.

**2.ல் புளுட்டோ**

பாதுகாப்பானவர், செல்வத்தை விரும்புபவர்.

**3.ல் புளுட்டோ**

பகுத்தறியும் தன்மையுடையவர், புலன் விசாரணைகள் மூலம் பல செய்திகளை அறிந்து கொள்வர், புதியனவற்றை கண்டுபிடிப்பர்.

**4.ல் புளுட்டோ**

சுய பாதுகாப்பானவர், வெளிவட்டாரங்களில் நன்மதிப்பு பெருபவர், உண்மையான இன்பங்களை அனுபவிப்பவர்.

**5.ல் புளுட்டோ**

சுதந்திர எண்ணமுடையவர், வாழ்வில் அர்த்தத்துடன் பல அறிய செயல்களை செய்பவர், நற்சிந்தனைகளுடன் கூடியவர்.

**6.ல் புளுட்டோ**

நோயுடன் கூடியவர், துன்பமானவர், உடல் நிலைக் கோளாறினால் முன்னேற்றங்கள் இல்லை.

**7.ல் புளுட்டோ**

காதலில் வெற்றி கொள்பவர், மனைவிக்கு தீங்கானவர், உணர்ச்சி வயப்படுதல், உடலில் நோய் ஏற்படுதல். மண வாழ்க்கை முறிவு.

**8.ல் புளூட்டோ**

மறைகலைகளில் நாட்டம், சுயநலம், ஆன்மீகச் சிந்தனை, எதிர்பாரா திருப்பம், துன்பங்கள், வருத்தங்கள்.

**9.ல் புளூட்டோ**

சிந்தனையாளர், தத்துவவாதி, ஆன்மீகம், உலகவியல் ஆய்வாளர், விரிவடைந்த அறிவு, புதிய பாதைகளை வகுப்பவர்.

**10.ல் புளூட்டோ**

தனிப்பட்ட நன்மையைக் கருதுபவர், புதிய கண்டுபிடிப்பு, மானுட நேயச் செயல்கள், மக்களால் போற்றப்படுபவர்.

**11.ல் புளூட்டோ**

நினைத்ததை சாதிப்பவர், வாழ்வில் முன்னேற்றம் அடைபவர், கடமை, பொறுப்பு, மகிழ்ச்சி அனைத்தும் உடையவர்.

**12.ல் புளூட்டோ**

ஆன்மீகச் சிந்தனை, குழப்பங்கள், அச்சங்கள், வெறுப்புகள், துன்பங்கள், ஒழுங்கற்ற செயல்கள்.

## குறிப்பு

## கூறு – 4 நட்சத்திரப்பலன்கள்

### 1.முதல் ஒன்பது நட்சத்திர பலன்கள் ( 1 To 9)

#### 1. அசுவினி

சூட்சுமமான புத்திக் கூர்மையும், தீர்க்க ஆயுளும், நீண்ட அழகிய கண்களும், ஆபரணம் பூணுவதில் அதிக விருப்பமும், எடுத்த காரியத்தை எப்படியும் முடிக்கும் திறமையும், நண்பர்களிடம் சுமுகமாக நடந்து கொள்ளும் சுபாவமும், சில தீய நண்பர்களின் சேர்க்கையும் உண்டு. நிதானமாகச் செலவு செய்யும் குணம் கொண்டவர்கள்.

#### 2. பரணி

சுவையான ஆகாரங்களை ரசித்துச் சாப்பிடுவார்கள். தூக்கப் பிரியர்கள், சத்துருக்கள் அதிகம் உடையவர்கள், நீண்ட ஆயுள் உடையவர்கள், திட சித்தம் இல்லாதவர்கள்; பரந்த நெற்றியுடனும் சுருள் முடியுடனும் பார்ப்பதற்கு நன்றாக இருப்பார்கள். எந்தவிதக் கஷ்டத்தையும் மனதில் போட்டுக் கொண்டு குழம்ப மாட்டார்கள்.

#### 3. கார்த்திகை

சுற்றத்தாரை விரும்பி வரவேற்கும் குணம் உள்ளவர்கள். நல்ல உடலமைப்பும் முகத் தோற்றமும் பெற்றிருப்பார்கள். சுவையான உணவை ரசித்துத் சாப்பிடுவார்கள். பேரும் புகழும் இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சி, புறக் கழுத்தில் காதுக்கு அருகில் மச்சம் காணப்படும். பிறருக்குத் தெரியாமல் பாபச் செயல்களைச் செய்வதில் மனம் செல்லும். கற்ற கல்வியே போதுமானது என்பது போன்ற மனோபாவம் சிலரிடம் காணப்படும்.

#### 4. ரோகிணி

சுகபோக வாழ்வை அநுபவிப்பார்கள். தாங்கள் கடுனமாக உழைத்துச் சம்பாதிப்பதை விட, பிறர் செல்வத்தை அநுபவிக்கும் அதிர்ஷ்டசாலிகளாக விளங்குவார்கள்.

#### 5. மிருகசீரிஷம்

உற்சாகமான பேச்சும் அன்பும் நிறைந்தவர்கள். பாபச்செயல் செய்யத் தயங்குவார்கள். ஒரு தடவை கூறினாலும் மனத்தில் பதித்துக் கொள்வார்கள். தாயிடம் பக்தி மிகுந்தவர்கள். இனிமையாகப் பழகும் சுபாவம் உள்ளதால் நிறைய நண்பர்கள் இருப்பார்கள். படிப்போ, பணமோ, பதவியோ குறைவாக இருந்தாலும் நிறைய உள்ளது போல் காட்டிக்கொள்வதில் கெட்டிக்காரர்கள்.

#### 6. திருவாதிரை

ஆசார சீலர்களாகவும் வியாபாரம் செய்வதில் நிபுணர்களாகவும் இருப்பார்கள். எடுத்த காரியத்தைச் சிறப்பாக முடிக்க முயல்வார்கள். கர்வம் இருக்கும். பாப காரியங்களைச் செய்வார்கள். செய்த நன்றி பாராதவர்கள்.

### 7. புனர்பூசம்

உணவை நன்றாக ரசித்துச் சாப்பிடுவதில் விருப்பம் உள்ளவராக இருப்பார்கள். நல்ல குணங்கள் இருக்கும். பொய் பேச மாட்டார்கள். ஊக்கத்துடன் எந்தக் காரியத்திலும் ஈடுபடுவார்கள். உழைப்புக்குத் தயங்காத உறுதி இருப்பதனால் லட்சுமி கடாட்சம் பெற்று சிறந்து விளங்குவார்கள். எப்போதும் கலகலப்பாக இருப்பார்கள். நிறைய நண்பர்களைப் பெற்றிருப்பார்கள். ஆபத்தில் உதவும் கருணை உள்ளம் இருக்கும். மெல்லிய குரலில் கவர்ச்சியாகப் பேசுவார்கள்.

### 8. பூசம்

ஊகித்தறியும் திறமையும் புத்திசாலித் தனமும் கொண்டிருப்பார்கள். கொஞ்சம் முன்கோபி, உறவினர்களுக்கு உதவுவார்கள், ஜோதிட சாஸ்திரத்தில் தேர்ந்திருப்பார்கள். கறுப்புக் கண்கள் உள்ளவர்கள் கௌரவத்தை விட்டுக் கொடுக்காதவர்கள், தைரியசாலி, எதையும் சமாளிக்கும் உடையவர்கள், மத்திய வயதைக் கடந்ததும் தனித்து வாழப் பிரியப் படுவார்கள்.

### 9. ஆயில்யம்

தர்ம சிந்தனையும் நேர்மையும் பேச்சு வன்மையும் சாமர்த்தியமும் இருக்கும். பெரிய மனிதர்களின் பாராட்டும் நட்பும் பெற்றவர்கள். பார்வை சுமுகமாக இருக்காது. வெளியூர் பிரயாணங்களில் ஆர்வம் உள்ளவர்கள். விரோதியை சுலபத்தில் விட்டுவிட மாட்டார்கள், விசுவாசமாக தம் பணியைச் செய்வார்கள். காமகுணம் அதிகம் உண்டு.

## 2.இரண்டாவது ஒன்பது நட்சத்திர பலன்கள் ( 10 To 18)

### 10. மகம்

உறவினர்களையும், அண்டியவர்களையும், காப்பாற்றும் தயாள சிந்தை பெற்றிருப்பார்கள். நுண்கலைகளில் சிறந்த வித்வான்களாகவும், பணக்காரர்களாகவும், நிர்வாகத் திறன், மிகுந்தவர்களாகவும், சமயத்துக்கேற்றாற்போல் வளைந்து கொடுத்துச் செல்லும் இயல்பு கொண்டவர்களாகவும் விளங்குவார்கள். பேச்சில் பிறரைக் கவர்வார்கள். முன்கோபம் இருக்கும். மனைவியிடம் மிகவும் பிரியமாக நடந்து கொள்வார்கள். காமகுணம் அதிகம் இருக்கும், சிற்பம், ஓவியம் போன்ற கலைகளைப் பிரியத்துடன் பயில்வார்கள்.

### 11. பூரம்

எப்போதும் ஆடை ஆபரணங்களுடன் கவர்ச்சியாக இருக்க விரும்புவார்கள். தர்மம் செய்யப் பிரியப்படுவார்கள். தங்களிடம் வேலை செய்யும் பணியாளர்களுக்கு நிறையக் கொடுத்து அவர்களுடைய மகிழ்ச்சியைக் கண்டு, தாங்கள் மகிழ்ச்சி அடைவார்கள். சங்கீதம் ஓவியம் போன்ற நுண்கலைகளில் ஈடுபாடு காணப்படும். நடிப்புத் துறையிலும் சிறந்து விளங்குவார்கள். வரவுக்கு

மேல் செலவு செய்துவிட்டு, பிற்காலத்தில் தவிப்பார்கள். சபல சித்தம் கொண்டவர்கள்.

### 12. உத்திரம்

சுய மதிப்பும் கண்ணியமும் நிறைந்தவர்களாக காணப்படுவார்கள். தர்ம சிந்தனை கொண்டவர்கள். திறமைசாலி, காமகுணம் கொஞ்சம் அதிகம் இருக்கும். இயற்கைக்கு அதிகமான உடல் உஷ்ணம் உடையவர்கள். தன் தேகத்தைக் கவனிக்காமல் பிறருக்கு உதவுவார்கள். தன்னடக்கமும், இறையுணர்வும் கல்வியில் ஆர்வமும் மிகுந்தவர்களாக இருப்பார்கள்.

### 13. ஹஸ்தம்

பேரும் புகழும் பெற்று சுகமாக வாழ்வார்கள். ஆழ்ந்த யோசனை உள்ளவர்கள். அண்டியவர்களைக் காப்பாற்றுவார்கள். இரக்கச் சுபாவத்துடன் பாப புண்ணியம் பார்த்துக் காரியங்களைச் செய்வார்கள். பெண்களுடன் பழகுவதிலும் அழகாகப் பேசுவதிலும் தேர்ந்தவர்கள். குரு பக்தியும் தெய்வ பக்தியும் நிறைந்தவர்கள். எதிரிகளைத் தோல்வியுறச் செய்வதில் சமர்த்தர்கள். எடுத்த காரியத்தை எப்படியும் முடித்தே தீர வேண்டும் என்ற விடா முயற்சியுடன் எந்தவித இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் உழைப்பவர்கள். எந்தக் காரியத்தையும் தீர்க்கமாக யோசித்தே செய்வார்கள்.

### 14. சித்திரை

பெண்களிடம் சரளமாகப் பழகுவார்கள். காமகுணம் அதிகம் காணப்படும். அழகான நீண்ட கண்களும் இனிய பேச்சும் வசீகரப் பார்வையும் கொண்டவர்கள். வாசனைப் பொருள்களைத் தாராளமாக உபயோகிப்பார்கள். எல்லோரிடமும் அன்பாக நடந்து கொள்வார்கள். கனிவாகப் பேசிக் காரியத்தைக் சாதித்துக் கொள்வதில் சமர்த்தர்கள்.

### 15. சுவாதி

நல்ல போக பாக்கியம் அமைந்தவர்கள், கொடையாளி, அகன்ற கண்களும், மார்பும் பெற்றவர். புகழ் பெற்றவர், இறையுணர்வு, உறவினர்களுக்குத் உதவி செய்து காப்பார்கள். அறிவுச் சாதுர்யம் நிறைந்தவர்கள், சுதந்திரமாக வாழும் மனப் போக்கு உள்ளவர்கள், தாங்களும் சௌகரியமாக வாழ்ந்து பிறரும் அப்படி வாழ வேண்டும் என்று விரும்புவார்கள். விசால இதயம் படைத்தவர்கள், கம்பீரமான தோற்றம் கொண்டவர்கள், மத்திய வயதைத் தாண்டியதும் புனிதத் தலங்களைத் தரிசிக்கப் பிரியப்படுவார்கள்.

### 16. விசாகம்

அறிவாளிகளிடமும் பண்டிதர்களிடமும் பக்தியுடன் நடந்து கொள்வார்கள். தீர்க்காயுள் உள்ளவர்கள், உதாரகுணம் மிக்கவர்கள். எல்லாக் காரியங்களிலும் சிந்தித்துச் செயல்படுவார்கள். உறவினர்களுக்கு ஒரளவு உதவுவார்கள், நண்பர்களின் கூட்டத்தில் மகிழ்ச்சி காண்பார்கள், தெளிவாகவும்

கவர்ச்சியாகவும் பேசுவார்கள். உடம்பில் அதிகக் கவனம் செலுத்த மாட்டார்கள், அடிக்கடி நோய் வாய்ப்படுவார்கள்.

### 17. அனுஷம்

பொதுவாக அனைவரிடமும் அன்பாகப் பழகக் கூடியவர்கள். ஆழ்ந்த சிந்தனை உடையவர்கள். சுகபோகிகள். பசி பொறுப்பாது. புகழ் உடையவர்கள். உடம்புக்கு ஒற்றுக் கொள்ளாவிட்டாலும் வாய்க்கு ருசி என்று சாப்பிட விரும்புவார்கள். பல பெண்களிடம் நெருங்கிப் பழகுவார்கள், பேச்சுக் கவர்ச்சியாலும் அழகிய நடையுடை பாவனைகளாலும் பெண்களை மயக்குவார்கள்.

### 18. கேட்டை

கூர்மையான பார்வையையும் குத்தீட்டிபோல் சுடு சொற்களை வாரி வீசுபவர்களாகவும் இருப்பார்கள். பழகுவதற்கு இனிய குணம் கொண்டவர்கள். எப்பொழுதும் நட்பினர் கூட்டம் இவரைச் சூழ்ந்து இருக்கும். உண்மையைப் பேசுதலும் உண்மையைப் பிறரிடம் நாடுதலும் இவருடைய சிறப்புக் குணங்கள், நியாயத்திற்காகப் போராடுபவர். நீண்டு எடுப்பாகத் தெரியும் அழகிய நாசியும் இயல்பான அமைப்பான கண்ணும் கொண்டவர்கள். எதையாவது நினைத்து ஏங்கிக் கொண்டே இருப்பார்கள்.

## 3.மூன்றாவது ஒன்பது நட்சத்திர பலன்கள் ( 19 To 27)

### 19. மூலம்

விழிப்பாய் இருப்பார்கள். உள்ளத்தில் ஏதாவது ஒரு திட்டம் தீட்டிக் கொண்டே இருப்பார்கள். தர்மவானாகவும், செல்வம் மிக்கவராகவும், கௌவரத்தோடு பழகுபவராகவும், சுற்றத்தாரோடு அநுசரித்து வாழ்பவராகவும் விளங்குவார்கள். காமம் மிக்கவர்களாகவும், கர்வியாகவும், பிறருடைய பொருளைக் கவரும் உள்நோக்கு உடையவர்களாகவும், எதற்கெடுத்தாலும் சலித்துக் கொள்ளும் மனப் போக்கினராகவும் வாழ்வார்கள்.

### 20. பூராடம்

சற்று உயரமானவர்கள். கூர்மையான விரல் நுனிகளை உடையவர்கள், எந்தச் செயலானாலும் துணிச்சலுடன் ஈடுபடுவார்கள். எதையும் கூர்ந்து கவனித்துத் தேர்ந்து செயல்படக் கூடியவர்கள், புகழோடு இருப்பவர்கள், புத்திமான்கள்.

### 21. உத்திராடம்

உலகியல் தெரிந்தவர்கள். பொதுவாக எல்லா விஷயங்களையும் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்கள். தூய்மையை விரும்பக் கூடிய ஆசார சீலர்கள். விரதங்களைக் கடைப்பிடிப்பவர்கள். நற்குணங்கள்

நிறைந்தவர்கள். எடுத்தெறிந்து பேசாமல் இன்சொல் பேசுதலையே லட்சியமாகக் கொண்டவர்கள். இவர்களுடைய பேச்சில் நகைச்சுவை மிகுந்திருக்கும். செயல் வீரர்கள்.

## 22. திருவோணம்

விதவிதமான வாசனைப் பொருள்களைப் பூசிக்கொள்வார்கள். விதவிதமான மலர்களை விரும்புவார்கள். பருத்த சரீரத்தைப் பெற்றவராவார்கள். பிற பெண்களை விரும்புகின்ற மனத்தைக் கொண்டவர்கள். நல்ல பாக்கியம் உடையவர்கள். பெரும் போக்கான தன்மையுடையவர்கள். உறவினர்கட்கு உறைவிடமாக இருப்பவர். வாக்கு சாதுர்யம் கொண்டவர்கள், சுகபோகி, பிரயாணம் செய்வதில் அதிகப்பற்றுடையவர்கள், சபல மனம் உள்ளவர்கள், உறுதியான நெஞ்சுரம் இல்லாதவர்கள். மிக்க விவேகம் வாய்ந்தவர்கள்.

## 23. அவிட்டம்

நற்குணமுள்ளவராகத் திகழுவார்கள். இவர்களது முகம் பொலிவுடையதாயிருக்கும். விடா முயற்சி செய்பவர்கள். அதிகமாக வெப்பமுடைய தேகத்தை உடையவர்கள். மற்றவர் மீது பழி சுமத்தும் குணமுடையவர்கள். நீதிமன்றம் சென்று வழக்காடுவதற்கும் அஞ்ச மாட்டார்கள். விடாபிடியாக வாதம் செய்வார்கள்.

## 24. சதயம்

உற்சாகமான பேச்சும் அன்பும் நிறைந்தவர்கள். எதிரிகளுடன் தயங்காமல் போராடி இறுதியில் வெற்றி பெறுவார்கள். எதிலும் வேகமும் துடிதுடிப்பும் நிறைந்தவர்கள். அதிகமான ஆர்வத்தினால் முன் பின் யோசனையின்றி சக்திக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்ய முற்படுவார்கள். பரிமளிக்கும்படி பேசுவதிலும் நடப்பதிலும் சமர்த்தர்கள். எந்தச் சூழ்நிலையிலும் எக்காரணத்தைக் கொண்டும் யாருக்கும் கட்டுப்பட மாட்டார்கள்.

## 25. பூரட்டாதி

எப்பொழுதும் கலகலப்பாக இருப்பார்கள். ஆபத்தில் கை கொடுத்து உதவும் கருணை உள்ளம் படைத்தவர்கள். விருப்பு வெறுப்பின்றிப் பழகும் சுபாவத்தில் அதிகமான நண்பர்களை உடையவர்கள். பெண்களுக்கு அடங்கி வாழும் தாழ்வு மனப்பான்மை உடையவர்கள். பேச்சில் கலகலப்பு இருந்தாலும் மனதில் எப்பொழுதும் கவலைகள் குடி கொண்டிருக்கும். பொருள் சேர்ப்பதில் அதிகமான திறமை மிகுந்தவர். உழைப்புக்குத் தயங்காத உறுதி உள்ளவர்கள். நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவர்கள். சபல சித்தம் உடையவர்கள். சிறந்த ஓவியர்களாகவும் கலை ஆர்வம் உள்ளவர்களாகவும் சிலர் வாழ்வில் உயர்வார்கள்.

## 26. உத்திரட்டாதி

எப்பொழுதும் மகிழ்ச்சியாகக் காணப்படுவார்கள். பிறரை மகிழ்விப்பது இவர்களுக்குக் கை வந்த கலை. அதிகமான புத்திக்கூர்மையும், சரளமான பேச்சுவன்மையும் உடையவர்கள். அதிகமான நண்பர்கள், சுகம் நிறைந்தவர்கள். அலட்டிக் கொள்ளாமல் காரியங்களைச் செய்து முடிப்பவர், சோம்பல் என்பதே இவர்களிடம் காண முடியாது, தீரமான சுபாவத்தால் இவர்கள் சத்துருக்களை அனாயஸமாக வெல்ல முடியும். தர்ம சிந்தனையும் நற்பணிகளில் அதிகமான ஈடுபாடும் இவர்களிடம் மிகுந்து காணப்படும்.

## 27. ரேவதி

அதிகமான சரீர அழகை பெற்றவர்கள். ஜனங்களுக்குப் பிரியமானவரும், சரளமாகப் பேசும் திறமையும் வாய்ந்தவர்கள். பேச்சினால் பிறரைக் கவரக்கூடிய தனித் தன்மையைப் பெற்றவர்கள். அதிகமான நண்பர்கள், ஜனங்களுக்கும் மிகவும் பிரியமானவர்கள். அதிகமான பராக்கிரமும் நிறைந்தவர்கள், தானும் சுகமாக வாழ வேண்டும், பிறரும் சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். அதிகமான அறிவாற்றலும் எதையும் சிந்தித்துச் செயல்படும் யோசனையும் உடையவர்கள், புத்திக் கூர்மை அதிகமாக உள்ளதால் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள். எதிலும் கண்டிப்பானவர்கள், பிறருடைய பொருள் மீது ஆசைப்பட மாட்டார்கள்.

## 1. (1 To 36 ) பாதங்களின் பலன்கள்

### அசுவினி நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்

#### 1. முதல் பாதம்

முதல் பாதத்திற்குச் செவ்வாய் அதிபதி. முரட்டுச் சுபாவம் கொஞ்சம் அதிகம் உடையவராக இருப்பர். திருட்டுக் குணம் சிறிது நிலவும். சுயமாகச் சம்பாதித்துச் செல்வம் சேர்ப்பர். ரசித்து வாழ ஆசைப்படுவர். போர் வீரனைப் போன்ற அஞ்சா நெஞ்சம் இருக்கும். பிற பெண்களின் மீது அதிக ஈடுபாடு தோன்றும்.

#### 2. இரண்டாம் பாதம்

இரண்டாவது பாதமானால் சுக்கிரனின் அம்சம், செல்வம் சேர்ப்பதிலும் தர்மம் செய்வதிலும் விருப்பம் இருக்கும். கலையில் ஈடுபாடும், புகழில் விருப்பமும் காணப்படும்.

#### 3. மூன்றாம் பாதம்

மூன்றாம் பாதம் புதனின் அம்சம், சாமர்த்தியம் அதிகம்; நண்பர்கள் அதிகம். கல்வியில் ஈடுபாடு, சுகமான வாழ்வு, எதிரியை வெற்றி கொள்ளும் சாமர்த்தியம்.

**4. நான்காம் பாதம்**

நான்காவது பாதத்துக்குச் சந்திரன் அதிபதி; கடவுள் பக்தி அதிகம் இருக்கும். தர்மம் செய்வதில் ஆர்வம் உண்டு. தர்ம ஸ்தாபனங்களைத் திறமையோடு நேர்மையுடன் நடத்துவர்.

**பரணி நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**5. முதல் பாதம்**

பரணியின் முதல் பாதத்துக்குச் சூரியன் அதிபதி சுகமான வாழ்க்கை நடத்துவதில் ஆர்வம் உள்ளவர்கள். அழகாக இருப்பார்கள். எதையும் அறிந்ததுபோல் காட்டிக் கொள்வது மட்டும் இல்லை; பிறரையும் அப்படியே நம்ப வைப்பதிலும் சமர்த்தார்கள்.

**6. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்குப் புதன் அதிபதி; பண விஷயத்தில் அதிகச் சிக்கனமாக இருப்பார்கள். குழந்தை அதிகம் இருக்காது. மனைவி மக்களுடன் மகிழ்ச்சியான வாழ்வு அமையாது.

**7. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்குச் சுக்கிரன் அதிபதி, எல்லாரையும் பாதுகாக்கும் தனவான்கள் போல் விளங்குவார்கள். பிறர் ரசிக்கும் படியாகப் பேசுவார்கள். எப்பொழுதும் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படுவார்கள். சிறந்த புத்திமான்கள்.

**8. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்குச் சுக்கிரன் அதிபதி, பொறாமை, நன்றி மறத்தல் முதலிய குணங்கள் காணப்படும். சிகையை அதிகம் வளர்ப்பதிலும் தம்மை அலங்கரித்துக் கொள்வதிலும், அதிக ஈடுபாடு இருக்கும். எடுத்த காரியத்தைத் திடத் சித்தத்துடன் நிறைவேற்ற மாட்டார்கள். குழந்தைகள் ஓரளவு அதிகம் பிறக்கும்.

**கார்த்திகை நட்சத்திர பாதங்களும் குணாதிசயங்களும்**

**9. முதல் பாதம்**

கார்த்திகை நட்சத்திரத்தில் முதல் பாதத்துக்கு குரு தலைவர். இந்த அம்சத்தில் பிறந்தவர்கள் பண வசதி உள்ளவராகவும் சமர்த்தராகவும் இருப்பார்கள். கௌரவமும் புகழும் உண்டாகும்.

**10. இரண்டாம் பாதம்**

இரண்டாம பாதத்துக்குச் சனி தலைவர். இவர்கள் பாப காரியங்களை செய்வார்கள். பிற மாதரிடம் ஈடுபாடு உள்ளவராக இருப்பார்கள்.தம் குடும்பத்தைவிட வெளியிடங்களில் பற்று மிகுந்திருக்கும்.

**11. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதமும் சனியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதே ஆகும். கார்த்திகையின் மூன்றாம் பாதத்தில் பிறந்தவர்கள் அதிகப் புத்திசாலியாகவும் இருக்க மாட்டார்கள். நல்ல ஒழுக்கமும் காணப்படாது; விரும்பத் தகாத சிநேகிதர்கள் இருப்பார்கள்.

**12. நான்காம் பாதம்**

நான்காம் பாதம் குருவின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. இது மிகவும் சிறந்தது. கல்வி கேள்விகளில் சிறந்து காணப்படுவார்கள். அடக்கமும் விநயமும் நிறைந்திருக்கும். அன்பாகப் பேசுவார்கள். தர்ம சிந்தனையும் இரக்கச் சுபாவமும் காணப்படும்.

**ரோகிணி நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**13. முதல் பாதம்**

முதல் பாதத்துக்குச் செவ்வாய் தலைவர். முதல் பாதத்தில் பிறந்தவர்கள் சபல சித்தம் கொண்டவர்களாக இருப்பார்கள். எதிலும் குறை காண்பார்கள். சிவந்த நிறமேனி; போலீஸ், சேனை முதலிய துறைகளில் பணிபுரிவார்கள்.

**14. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்தில் பிறந்தவர்களுக்குத் தலைவர் சுக்கிரன், அடக்கமான குணம்; நல்ல ஒழுக்கம்; கலைகளை ஓரளவு அறிந்திருப்பவர்கள். எப்பொழுதும் மகிழ்ச்சிகரமாக இருப்பார்கள்.

**15. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்குப் புதன் தலைவர். அறிவில் சிறந்து கல்வி கேள்விகளில் உயர்ந்து விளங்குவார்கள். ஜாதகமும் நன்கு அமைந்திருந்தால் கவிஞர்களாக விளங்குவார்கள். எதிரிகளின் சுபாவத்தை அறிந்து சாதுர்யமாக நடந்து கொள்வார்கள். கணிதத்தில் சிறந்த அறிவு பெற்றிருப்பார்கள்.

**16. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்குச் சந்திரன் தலைவர். புத்தி சாதுரியமும் அடக்கக் குணமும் பெற்றவர்கள். பிறரின் பொருளைத் தன்னுடையதாகப் பாவித்து அனுபவிக்கும் அதிர்ஷ்ட சாலிகள்.

**மிருகசீரிஷம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**17. முதல் பாதம்**

முதல் பாதத்துக்குச் சூரியன் தலைவர். எடுத்தக் காரியத்தை எப்படியும் முடிக்கும் துணிவும் மனதிடமும் இருக்கும். அரசனைப் போன்ற சுபாவம்; தன் சக்திக்கு மீறிய காரியங்களை இழுத்து விட்டுக் கொண்டு திணறி வருந்தி முடிப்பார்கள்.

**18. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்குப் புதன் தலைவர். புதன் வித்தியாகாரகன் ஆனதால் சிறந்த கல்விமானாகத் திகழ்வர். எதையும் ரசித்துத் சுவைப்பார்கள். புண்ணிய காரியங்களைச் செய்வார்கள். ஆனால், முன்கோபம் கொஞ்சம் இருக்கும்.

**19. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதம் சுக்கிரனின் அம்சம். அண்டியவர்களைக் காப்பார்கள்; உதார குணமுடையவர்கள்; வசீகரத் தோற்றமும் கவர்ச்சியான பார்வையும் பெற்றிருப்பார்கள். இனிமையான பேச்சும் பெண்களிடம் சரளமாகப் பழகும் குணமும் அமைந்திருக்கும்.

**20. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்குச் செவ்வாய் தலைவர். முன்கோபமும் படபடப்பும் நிறைந்தவர்கள்; நல்லவர்களைப் பகைத்துக் கொள்வார்கள். வரைமுறையற்ற காதல் லீலைகளில் ஈடுபடுவார்கள்.

**திருவாதிரை நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயமும்**

**21. முதல் பாதம்**

திருவாதிரையின் முதல் பாதத்துக்கு குரு பகவான் தலைவர். அதனால் தயாள சிந்தனையும் தெளிந்த அறிவும் பெற்றிருப்பார்கள். கொஞ்சம் முன் கோபமும் அவ்வப்போது தெரியும்.

**22. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்குச் சனி தலைவர். பிறரை அழ வைத்து வேடிக்கை பார்ப்பதிலும், பிறரின் துன்பத்தைக் கண்டு ரசிப்பதிலும் நாட்டம் காட்டுவார்கள். கோள் சொல்வதிலும் சமர்த்தர்கள்.

**23. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்குச் சனியே தலைவர். முரட்டுச் சுபாவமும் தணிந்து போகாது மூர்க்கத்தனமும் குடி கொண்டிருக்கும். பாபமான காரியங்களைத் தயக்கம் இல்லாமல் செய்வார்கள்.

**24. நான்காம் பாதம்**

திருவாதிரையின் நான்காம் பாதம் குருவினுடையது. தர்மம் செய்வதில் ஆர்வம், உள்ளவராகவும் பொது மக்கள் சேவையில் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்குவார்கள். இறை வணக்கத்தில் பெரிதும் ஈடுபடுவார்கள். புண்ணியத் தல யாத்திரை மேற்கொள்வார்கள். பண்புள்ள ஒரு சில மனிதர்களிடமே இவர்கள் நேசம் பாராட்டுவார்கள்.

**புனர்பூசம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**25. முதல் பாதம்**

புனர்பூச நட்சத்திரத்தில் முதல் பாதத்துக்குச் செவ்வாய் தலைவர். தெய்வ பக்தியும் பெரியோரிடம் மரியாதையும் கொண்டிருப்பார்கள். வாய்த் துடுக்குப் பேச்சினால் கெட்டவன் என்ற பெயரையும் சம்பாதிப்பார்கள்.

**26. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்கு அதிபதி சுக்கிரன். சுகபோகியாக விளங்குவார்கள். அலங்காரப் பிரியர்களாக இருப்பார்கள். பிறர் தங்களைப் பார்த்து மெச்ச வேண்டும் என்று கவர்ச்சியாக உடை அணிந்து கொள்வார்கள். பாலையும், பால் சம்பந்தமான இனிப்புகளையும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

**27. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதம் புதன் அம்சம்; வாக்குச் சாதுர்யமும் படிப்பில் கெட்டிக்காரராகவும் இருப்பார்கள். பார்க் அழகாகத் தோன்றுவார்கள். காம சேஷ்டைகளில் அதிகக் கவனம் செலுத்துவார்கள். பிறருக்கு உதவி செய்ய மாட்டார்கள். எப்போதும் ஏதாவது ஒன்று மாற்றி ஒரு நோய் வந்து கொண்டே இருக்கும்.

**28. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்குச் சந்திரன் தலைவர். செல்வச் செழிப்பு உள்ளவராகவும் பார்ப்பதற்கு அழகாகவும் பிறரிடம் மிரியாதையாகப் பழகும் தன்மை கொண்டவராகவும் விளங்குவார்கள்; கவர்ச்சியாகப் பேசுவார்கள்.

**பூசம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**29. முதல் பாதம்**

பூசத்தின் முதல் பாதத்திற்கு சூரியன் தலைவர். எடுத்த காரியங்கள் விரைவில் முடிப்பார்கள். தனிமையை விரும்புவார்கள்.

**30. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்குப் புதன் தலைவர். பார்வைக்கு அழகாக இருந்து, பிற மாதரின் மனத்தைக் கவருவார்கள். பெண்ணாசை, பணத்தாசை இரண்டும் அதிகம் காணப்படும். அந்தக் கவலைகளினால் மேனி இளைத்துக் காட்சியளிப்பார்கள். அன்பாகப் பழகுவார்கள்.

**31. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்கு சுக்கிரன் தலைவர். எடுத்த காரியத்தை எப்பாடு பட்டாவது முடிப்பதில் சூரராக இருப்பார்கள். அமைதியும் கவர்ச்சியும் நிறைந்த முகம். வாழ்க்கையைச் சுகமாகக் கழிக்க விரும்புவார்கள்.

**32. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்கு செவ்வாய் தலைவர். பிறருடைய பொருளைக் கவர்ந்து செல்வதில் சூரர்களாக இருப்பார்கள். கலகம் செய்வதில் சமர்த்தர்கள். ஓரளவுக்கு மட்டமான குணம் காணப்படும்.

**ஆயில்யம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**33. முதல் பாதம்**

முதல் பாதம் குருவின் அம்சம். புது விசயங்களைக் கண்டுப்பிடிப்பதில் ஆர்வம் காட்டுவார்கள். தைரியசாலி, சத்தியமும் நுண்ணிய அறிவுத்திறனும் கொண்டவர்கள்.

**34. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்கு சனி தலைவர். எப்போதும் ஏதாவது யோசனையில் கஷ்டப்படுவார்கள்; எத்தனை சாப்பிட்டாலும் நைப்பாசை இருக்கும். பாப காரியங்களைத் தயங்காமல் செய்வார்கள். சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டும், அற்பர்களின் கூட்டுறவிலும் செல்வம் சேர்க்க விரும்புவார்ள்.

**35. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்கும் சனிதான் அதிபர். குரோத குணத்துடன் பொய் பேசுவதில் சமர்த்தர்களாகவும் இருப்பார்கள். அநியாய வழிகளில் செல்வம் சேர்ப்பார்கள். தவறான காரியங்களைத் தயங்காமல் செய்வார்கள். நல்ல புத்திமதியைக் கேட்டாலும் தீயவழியிலேயே நடப்பார்கள். கடைசி காலத்தில் வாத நோய் வந்து துன்புறுவார்கள்.

**36. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்குக் குரு அதிபதி. இந்தப் பாதத்தில் குழந்தைகள் பிறந்தால் பெற்றோருக்குக் கண்டம் ஏற்படும், பிறரால் வளர்க்கப் படுவார்கள்.

## 2. (37 To 72 ) பாதங்களின் பலன்கள்

**மகம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**37. முதல் பாதம்**

முதல் பாதத்துக்குச் செவ்வாய் தலைவர். அரசரைப் போன்ற செல்வாக்குடைய பெரிய மனிதர்களின் சினேகம் இருக்கும். எல்லாவித லட்சணங்களும் அமைந்து பேச்சில் வல்லவர்களாக இருப்பார்கள்.

**38. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்கு சுக்கிரன் தலைவர். இந்த இரண்டாவது பாதத்தில் பிறந்தவர்கள் அண்டியவர்களுக்கு அபயம் அளிக்கும் குணமும், புத்திசாலித்

தனமும் நுண்கலைகளில் அதிக ஈடுபாடும் காணப்படும். எதையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்கள்.

**39. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்குப் புதன் தலைவர். மிக்கக் கஞ்சத்தனம் உள்ளவராகவும் இல்லற வாழ்க்கையில் அதிக நாட்டம் இல்லாமல் வாழ்பவராகவும் இருப்பார்கள். பெண்களைக் கண்டாலே ஓரளவு வெறுப்பார்கள். ஏற்றுக் கொண்ட காரியத்தை எப்படியும் முடிப்பதில் சூரராக விளங்குவார்கள். மனத்தில் ஆசை இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருப்பார்கள்.

**40. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்திற்கு சந்திரன் தலைவர். இதில் பிறந்தவர்களிடையே பொறாமை உணர்வு காணப்படும். பிறர் செய்த உதவியை உடனே மறந்து விடுவார்கள். எதைப் பற்றியாவது சதா எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். வீண் பெருமை பேசி, நடக்கக் கூடிய காரியங்களையும் கை தவறிப் போகச் செய்துவிட்டு பிறர் மேல் எரிந்து விழுவார்கள்.

**பூரம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**41. முதல் பாதம்**

இந்த நட்சத்திரத்தின் முதல் பாதத்துக்கு சூரியன் அதிபதி. அதனால் ராஜாவைப் போன்று மனம் விசாலமாக இருக்கும். பொருள்களைச் சமயம் பார்த்துக் கொடுத்து வாங்குவதில் திறமைசாலிகளாக விளங்குவார்கள். கண் பார்வையில் குறை இருக்கும். தேக திடம் வாய்ந்தவராக விளங்க மாட்டார்கள்.

**42. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்குப் புதன் தலைவர். படிப்பும் கீர்த்தியும் இருந்தாலும், வாழ்வில் ஏதாவது குறை இருந்தே தீரும். குடும்ப சுகம் இருக்காது. இவர்களால் பிறருக்கு நன்மை ஏற்படாது.

**43. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதம் சுக்கிரன் அம்சம். பார்ப்பதற்கும் பேசுவதற்கும் கவர்ச்சியாக விளங்குவார்கள். சிற்பம் சங்கீதம் போன்ற கலைஞானம் காணப்படும். கணிதத்தில் தேர்ச்சியுடன் விளங்குவார்கள்.

**44. நான்காம் பாதம்**

நான்காவது பாதத்துக்குச் செவ்வாய் அதிபதி; சுகமான வாழ்வு அமையாது. குடும்பத்தில் ஏழ்மை நிலவும். பல குழந்தைகளைப் பெற்று அவர்களால் நன்மை ஏற்படாமல் வருந்துவார்கள்.

**உத்திரம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**45. முதல் பாதம்**

இந்த நட்சத்திரத்தின் முதல் பாதம் குருவினுடைய அம்சம். சாஸ்திர ஞானமும் அறிவும் காணப்படும். சுய வேலை செய்தும் வாழ்வார்கள். உபகாரி; கபடு இல்லாத மனசு உடையவர்கள்.

**46. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்குச் சனி தலைவர். வாழ்க்கை வறுமையில் கழியும். சபல சித்தம்; பிறரின் கஷ்டத்தைப் பார்த்து உதவி செய்ய எண்ண மாட்டார்கள்.

**47. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்கும் சனியே அதிபதி. நன்றி மறந்த மகனாக விளங்குவார்கள்; நியாயமில்லாத முறையில் எதிர்வாதம் செய்வார்கள். கர்வமும் வீண் ஆடம்பரமும் காணப்படும். ஆனால், வாழ்க்கையில் ஏதாவது ஒரு லட்சியத்தைக் கடைப்பிடித்து முன்னுக்கு வருவார்கள்.

**48. நான்காம் பாதம்**

நான்காம் பாதம் குருவினுடையது. பிறர் புகழ் வாழ்வார்கள். வித்தையும் அடக்கமும் வாய்ந்தவர்கள். அறிவு மிகுந்த, பண்பு மிக்க புத்திரர்களைப் பெறுவார்கள். எதற்கும் கவலைப்பட்டு வாழ்க்கையில் துன்பத்தைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்.

**ஹஸ்தம் நட்சத்திர பாதங்களும் குணாதிசயங்களும்**

**49. முதல் பாதம்**

முதல் பாதம் செவ்வாயின் அம்சத்தைப் பெற்றது. உடல் வலுவும் மனோதிடமும் நிறைந்தவர்கள்; துணிந்து பல காரியங்களையும் செய்வார்கள். உண்மையே பேச விரும்புவார்கள்.

**50. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதம் சுக்கிரனிம் அம்சம். இதமாகவும் கவர்ச்சியாகவும் பேசி நடந்து கொள்வார்கள்; எல்லோருக்கும் நல்லவராக விளங்க வேண்டும் என்று விரும்புவார்கள். சிறிது மந்த புத்தி வாய்க்கப் பெற்றவர்கள்.

**51. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்குப் புதன் தலைவர். அறிவாளியாகவும் பல மொழிகளைக் கற்பதில் ஆர்வம் உள்ளவராகவும் விளங்குவார்கள். வர்த்தகத்தில் திறமைசாலி. தர்ம குணம் அதிகம் கொண்டவர்கள்.

**52. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்குச் சந்திரன் தலைவர். பணக்காரராக இருப்பார்கள். அரசுப் பணிகளில் சிறந்து விளங்குவார்கள். நண்பர்களுக்கும்

உறவினர்களுக்கும் தயங்காமல் உதவி செய்வார்கள். சிறிது முன் கோபம் உள்ளவர்கள்.

**சித்திரை நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**53. முதல் பாதம்**

சித்திரை நட்சத்திரத்தின் முதல் பாதத்துக்குச் சூரியன் தலைவர். அதிகாரம் நிறைந்த பதவியில் இருப்பார்கள். எல்லோரையும் அடக்கி ஆள வேண்டும் என்ற அவா இருக்கும். ஆனால், ஸ்திர புத்தி உள்ளவர்கள் என்று சொல்ல முடியாது.

**54. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்குப் புதன் தலைவர். படிப்பும் அறிவும் சிறந்து காணப்பட்டாலும் ஆண்மையும் வசீகரமும் குறைந்து காணப்படும். இறையுணர்வு மிகுந்தவர்கள்; இனிமையாகப் பேசுவார்கள்.

**55. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்குச் சுக்கிரன் தலைவர். இரக்கச் சுபாவம் உள்ளவர்கள். பிறருக்கு ஆபத்துச் சமயத்தில் உதவ முன் வருவார்கள். அறிவாளிகளிடம் மரியாதையாக நடந்து கொள்வார்கள்; பேரும் புகழும் அடைய முற்படுவார்கள். இரக்கச் சுபாவம் மிகுந்தவர்கள்.

**56. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்கு அதிபதி செவ்வாய். துணிச்சல் மிகுந்தவர்கள்; தைரியமாக எதையும் சமாளிப்பார்கள்; திருடர், கொள்ளைக் கூட்டம் போன்றவற்றுக்குத் தலைமை தாங்கி நடத்தும் திறமை இருக்கும். நெஞ்சத்தைச் வெளிக் காட்டுவார்கள். அறுவை சிகிச்சையில் நிபுணர்களாகவும் விளங்குவார்கள்.

**சுவாதி நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**57. முதல் பாதம்**

முதல் பாதத்துக்குக் குரு தலைவர். இதில் பிறந்தாருக்குச் செல்வ வளம் மிகுந்திருக்கும். புத்திசாலியாகவும், தைரியசாலியாகவும் விளங்குவார்கள். சாதுர்யமாகப் பேசுவார்கள். பல மொழிகளைக் கற்று கவிதை இயற்றும் திறமையும் இவர்களிடம் காணப்படும்.

**58. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்குச் சனி தலைவர். நன்றியறிவு பொருந்திக் காணப்படுவார்கள். சில சமயங்களில் நீதிக்கும் நேர்மைக்கும் முரணாகவும் நடந்து கொள்வார்கள்.

**59. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்கும் சனியே தலைவர். இவர்களுக்குப் பகைவர்கள் அதிகம் இருப்பார்கள். எப்போதும் மனத்தை விட்டுப் பேசாமல் மனத்துக்குள் குமைந்து கொண்டே இருப்பார்கள். கோபம் கொண்டவர்கள்; எதையும் மூர்க்கத்தனமாக எதிர்ப்பார்கள். டாம்பீகச் செலவு செய்து விட்டுப் பிற்காலத்தில் வருந்துவார்கள். மீளாத கடன் தொல்லையிலும் சிக்கித் தவிப்பார்கள்.

**60. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்குக் குரு தலைவர். நல்ல நடத்தையும் பிறர் புகழக்கூடிய முறையிலும் வாழ்க்கை நடத்துவார்கள். நிறைய நண்பர்கள் இருப்பார்கள். தன்னைப் பற்றிப் பிறர் குறைவாகப் பேசி விட்டால் தாங்க மாட்டார்கள். ரோஷம் மிகுந்தவர்கள்; செல்வ வசதி இருக்கும். பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துவார்கள்; இறையுணர்வு மிக்கவர்கள்.

**விசாகம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**61. முதல் பாதம்**

முதல் பாதத்துக்குச் செவ்வாய் தலைவர். சௌக்கியமாக வாழ்வார்கள். பணக்காரர்கள்; பருத்த மார்பும் விரிந்த புயங்களும் காணப்படும்; தைரியம் மிகுந்தவர்கள்; கண்கள் சிவந்து விளங்கும்.

**62. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்குச் சுக்கிரன் தலைவர். சிறந்த யோகத்தைக் கொடுக்கும். வாழ்க்கையைச் சுகமாக நிம்மதியாகக் கழிக்க விரும்புவார்கள். எந்தக் கவலையையும் எண்ணிக் குழம்ப மாட்டார்கள்; நியாயமாகச் சம்பாதிப்பார்கள்; இரக்கக் குணம் காணப்படும்.

**63. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்குப் புதன் தலைவர்; கணிதத்தில் நிபுணராக விளங்குவார்கள்; அழகாகப் பேசிப் பிறரைக் கவர்வார்கள். தான தர்மம் செய்வார்கள்; கண் சம்பந்தமான நோய் காணப்படும்; படிப்பிலும் சூட்டிகையாக விளங்கிப் பட்டங்கள் பெற்றிடுவார்கள்.

**64. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்குச் சந்திரன் தலைவர். பொருளைச் சேர்ப்பதிலும் அதைச் செலவு செய்வதிலும் மிகவும் கவனமாக இருப்பார்கள். மனைவியிடம் அன்பாய்ப் பழகுவார்கள். உற்றார் உறவினர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக இருந்தாலும் செயலில் துடிப்பு காட்ட மாட்டார்கள்.

**அனுஷம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**65. முதல் பாதம்**

முதல் பாதத்தில் பிறந்தவர்கள் புத்திக் கூர்மை படைத்தவர்கள். சூரிய ஆதிக்கம் பெற்றவர்கள்.

**66. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்தில் பிறந்தவர்கள் வித்யாகாரகனான புதனின் ஆதிக்கம் பெற்றவர்கள். வீணை வாசிப்பதில் ஆர்வம் கொண்டு பயின்றால் பேரும் புகழும் பெறக் கூடியவர்கள். சரீர அழகு உடையவர்கள்.

**67. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதம் சுக்கிரனுடையது. பிறரை ஆதரிக்கும் நல்ல குணம் உடையவர்கள்.

**68. நான்காம் பாதம்**

நான்காம் பாதம் செவ்வாய்க்குரியது. வறுமையும் கெட்ட பெயரும் ஏற்படும்.

**கேட்டை நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**69. முதல் பாதம்**

முதல் பாதத்திற்கு அதிபர் குரு பகவான். இப்பாதத்தில் பிறந்தவர்கள் நகைச்சுவை மிக்கவர்கள்: கர்வமும் உண்டு. எழுத்தாளர்களாக இருப்பார்கள்.

**70. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்திற்கு சனி தலைவர். எப்போதும் பிறரை தன் பக்கம் இழுப்பதிலேயே நாட்டம் இருக்கும். கோபம் மிகுதி ஏதாவது ஒரு உடல் நலிவு இருந்து கொண்டே வாட்டும்.

**71. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்தில் பிறந்தவருக்கும் சனி பகவானே தலைவர். ஏதாவது ஒரு அங்கஹீனம் ஏற்பட வாப்புண்டு. கண் பார்வை பாதிக்கப்படலாம்; தொண்டுள்ளம் கொண்டவர்கள்.

**72. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்திற்கு மீண்டும் குரு அதிபதி. சாஸ்திர ஈடுபாடு, தெய்வ வழிபாடு, தர்மச் செயல்கள் குறிப்பிடத்தக்கன. காது பாதிப்புக்கு உள்ளாகக் கூடும்.

## 3. (73 To 108 ) பாதங்களின் பலன்கள்

### மூலம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்

**73. முதல் பாதம்**

முதல் பாதத்தில் பிறந்தவருக்குச் செவ்வாய் அதிபதி ஆகிறார். பிறருடைய பொருளை இச்சிக்கும் குணம் இருக்கும். வறுமை இவரை வாட்டும். தந்தைக்கும் இவருக்கும் ஆகாது.

**74. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்கு அதிபதி சுக்கிரன். சுகவாசி. தாய்க்கு ஆகாதவர். இனிப்புப், பண்டங்களை அதிகமாக விரும்புவார்கள்; தயாள குணம்; வாகன யோகம் உள்ளவர்கள்.

**75. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதம் புதனுக்கு உரியது. வணக்கத்தோடு பேசினாலும் எதற்கும் வாதிடுபவர்கள் பணக்காரார்கள். அதே சமயம் செலவாளிகள்.

**76. நான்காம் பாதம்**

நான்காம் பாதம் சந்திரனுடையது. அரசுப் பணியில் முக்கிய இடம் பெறுபவர்கள். தலைமை ஸ்தானம் வகித்து, ஒரு கூட்டத்தையே நிர்வகிக்கும் ஆற்றல் படைத்தவர்கள். பெண் பித்தர்கள். குரலும் பெண்மைக் குரலே.

### பூராடம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்

**77. முதல் பாதம்**

முதல் பாதம் சூரியனுக்குரியது. உழைப்பதற்கு அஞ்சாதவர்கள். ஆயினும் உழைக்கும் அளவிற்குச் சுகம் பெற மாட்டார்கள்.

**78. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்கு அதிபதி புதன். ஆதரிக்கும் குணமும், இனிமையான பேச்சும், எடுப்பான தோற்றமும் இவரது குணங்களாக அமைகின்றன.

**79. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்தின் அதிபதி சுக்கிரன் குற்றங்குறைகளுக்கு இடமின்றி ஒழுக்க சீலராக வாழ்வார்கள். சஞ்சல குணம் உள்ளவர்கள்.

**80. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்தின் அதிபதி செவ்வாய். உக்ர குணம் கொண்டவர்கள். பிறர் மீது ஆதிக்கமும் அதிகாரமும் செலுத்துவார்கள். பொய்களை அள்ளி வீசி உண்மை என்று சாதித்துவிடுவார்கள். தன்னிடம் யாரும் மிகவும் நெருங்கி விடாமல் எப்போதும் எச்சரிக்கையாக இருக்கக் கூடியவர்கள். சற்றும் கவலைப்படாது, தகாத செயல்களில் தைரியமாக ஈடுபடுவார்கள்.

**உத்திராட நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**81. முதல் பாதம்**

முதல் பாதம் குருவினுடையது. இதில் பிறந்தவர்கள் சாஸ்திரத்தைக் கரைத்துக் குடித்தவர்கள். தான் படித்ததைப் பிறருக்கு விளக்கும் ஆற்றல் படைத்தவர்கள். குருவினிடத்தில் விசுவாசம் கொண்டவர்கள், தெய்வ பக்தி மிகுந்தவர்கள், தான் எடுத்துக் கொண்ட செயல்களைத் திறமையுடன் முடிப்பவர்கள்.

**82. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்திற்கு அதிபதி சனி பகவான். இதில் பிறந்தவர்கள் வீணான செயல்களில் ஈடுபட்டு செல்வத்தை இழந்து தவிப்பார்கள். இழிந்த குணமுடையவர்களிடம் சேர்ந்து கொண்டு தீய செயல்களைச் செய்வார்கள்.

**83. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்துக்கு சனி அதிபதி. பிறருக்குத் துன்பம் தருவதில் மகிழ்ச்சி அடைவார்கள். அதனால் பழிக்குப் பழி என்ற முறையில் இவர்கள் வாழ்விலும் துன்பமே தொடரும். உடம்பைப் பெருக்கவைத்துக் கொண்டு எப்போதும் ஏதாவது ஒரு நோயால் அவஸ்தைப் படுவார்கள்.

**84. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்குக் குரு பகவான் தலைவராகிறார். நற்குணம், நற்செயல்கள் நிறைந்திருக்கும். எதையும் தெளிவாக அறிந்து துணிவாகப் பேசக் கூடியவர்கள். ஊக்கமும் உற்சாகமும் கொண்டவர்கள்.

**திருவோணம் நட்சத்திர பாதங்களும் குணாதிசயங்களும்**

**85. முதல் பாதம்**

முதல் பாதத்திற்குச் செவ்வாய் அதிபதி. கலகப் பிரியர்கள், வயிற்று நோயால் வருந்துபவராவர்கள்.

**86. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்துக்குச் சுக்கிரன் தலைவர். சுகபோகி; காமப் பற்றுடையவர்கள். அதிகமான வேலையாட்களை வைத்து அன்பாலே அவர்களைக் கட்டுப்படுத்தி வேலை வாங்கி விடுவார்கள். தந்திரமாகப் பேசுபவராவார்கள்.

**87. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்திற்குப் புதன் தலைவர். கலகப் பிரியர்கள்; மிக்க ஊதாரியாவார். ஓவியம் வரைவதில் ஆற்றல் மிக்கவர்கள். புத்திக் கூர்மை உள்ளவர்கள், யோகி; தர்மம் செய்பவர். வணிகம் செய்வதில் கெட்டிக்காரர்.

**88. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்திற்குச் சந்திரன் தலைவராவார். பண வசதி உள்ளவர்கள். மனைவியிடம் அதிகமான அன்பு செலுத்துவார்கள். தாயாரிடம் அதிகமான பக்தியும் பரிவும் பாசமும் கொண்டவர்கள். உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள்

**அவிட்டம் நட்சத்திர பாதங்களும் குணாதிசயங்களும்**

**89. முதல் பாதம்**

முதல் பாதத்திற்கு சூரியன் தலைவராவார். உடல் பருத்தவராயிருப்பார்கள்.

**90. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதம் புதனுடையதாகும். இதில் பிறந்தவர்கள் தோற்றப் பொலிவு மிக்கவராய்த் திகழ்வார்கள். நல்ல திறனாற்றல் மிக்க பேச்சாளியாவார்கள். நியாயத்திற்கு கட்டுப்பட்டவராவார்கள். கல்வியறிவு உடையவர்கள்.

**91. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதம் சுக்கிரனுடையதாகும். இதில் பிறந்தவர்கள் அச்சமற்றவர்கள். பிறரது அச்சத்தைப் போக்க வல்லவராவார்கள். நல்ல குணம் கொண்டவராவார்கள். சமயோசிதமாக எக்காலத்திலும் வேலை செய்பவர்கள்.

**92. நான்காம் பாதம்**

நான்காம் பாதம் செவ்வாயினுடையது. இதில் பிறந்தவர்கள் மிகக் கொடிய குணத்தைப் பெற்றவர்கள்; உடல் பருத்தவராவார்கள். மது பானத்தில் விருப்பமுடையவர்கள்.

**சதயம் நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**93. முதல் பாதம்**

முதல் பாதத்திற்கு குரு தலைவர். தயாள சிந்தனையும், தெளிந்த அறிவும், தெய்வ பக்தியும் பெரியவர்களிடம் மரியாதையும் கொண்டவர்கள். பிறருக்கு உதவி செய்வதையே குறிக்கோளாகத் கொண்டிருப்பார்கள்.

**94. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்திற்குச் சனி தலைவர். ஏதாவது ஒரு மனக் குறைவினால் கஷ்டப்படுவார்கள். பாப காரியங்களை செய்வார்கள். சமூக விரோத செயல்களில் ஈடுபடுவார்கள். பல விதங்களிலும் பொருள் சேர்க்க முற்படுவார்கள். இனம் தெரியாத பயமும், அதைரியமும் உள்ளவர்கள்.

**95. மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்திற்கு சனி தலைவர். படிப்பில் அதிகமான நாட்டம் இருக்காது. பிறரைக் கெடுப்பதிலும், சூழ்ச்சிகள், பாப காரியங்களில் ஈடுபடுதல்.

அதிகமான குழந்தைகள், பொருளாதார நெருக்கடியை சந்திப்பார்கள். பொய் பேசுதல். புத்திமதி கேளாமை,தீய வழி நடப்பார்கள்.

**96. நான்காம் பாதம்**

நான்காம் பாதத்திற்கு குரு அதிபதி. பார்ப்பதற்கு அழகானவ, லட்சணமாகவும், தயாள சிந்தனையும் இரக்கமான சுபாவமும் உடையவர்கள். நேசமான சுபாவத்தினால் அதிகமான நண்பர்களைத் தடையின்றி அடைவார்கள்.

**பூரட்டாதி நட்சத்திர பாதங்களும் குணாதிசயங்களும்**

**97. முதல் பாதம்**

முதல் பாதம் செவ்வாய்ப் பகவானுடைய அம்சம் ஆகும். பெரியோர்களிடம் மரியாதையும், அதிகமான தெய்வ பக்தியும் கொண்டிருப்பார்கள். சிலர் அதிகாரப் பிரியர்களாகவும் திகழ்வார்கள். எந்த விதச் சூழ்நிலையையும் சமாளிக்கும் மனோதிடம் கொண்டவர். வாய்த் துடுக்குப் பேச்சினால் கெட்டவன் என்ற பெயரையும் சுலபமாகச் சம்பாதிப்பார்கள். அதிகமான கோபம் இருக்கும்.

**98. இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்திற்கு சுக்கிரன் அதிபர். சுகபோகியாக விளங்குவார்கள். அலங்காரப்பிரியர்களாக இருப்பார்கள்; பிறர் தன்னைப் பார்த்து மெச்ச வேண்டும் என்ற எண்ணம் இருக்கும்.

**99. மூன்றாம் பாதம்**

இது புதனுடைய அம்சமாகும். அதிகமான பேச்சு சாமர்த்தியமும் கெட்டிக்காரத்தனமும் இவர்களிடம் குடி கொண்டிருக்கும். நயமான பேச்சினாலும் கபடமான சுபாவத்தினாலும் பிறரைக் கவரக் கூடியவர்கள். அதிகமான யோசனை உள்ளவர்கள். கணக்கில் திறமைசாலிகளான இவர்கள் பொருள் விஷயத்தில் அதிகமான ஜாக்கிரதை உள்ளவர்கள்.

**100.நான்காம் பாதம்**

நான்காம் பாதம் சந்திரன் அம்சமாகும். அதிகமான பணச் செழிப்பு உள்ளவர்களாக ஒரு சிலர் தென்படுவார்கள். சரீர காந்தியும் கவர்ச்சியான உடலமைப்பும் கொண்டவர்கள். விரும்பத் தக்க குணங்களினால் இவர்களை யாவரும் மதித்துக் கௌரவிப்பார்கள். தாயாரிடம் அதிகமான பக்தியும் பாசமும் உடையவர்கள்.

**உத்திரட்டாதி நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**101. முதல் பாதம்**

முதல் பாதத்திற்கு, சூரியன் தலைவர். இதில் பிறந்தவர்கள் அதிகமான சக்தி வாய்ந்தவர்கள்; துடிதுடிப்பும் வேகமும் உள்ளவர்கள். அதிகமான கோபம் உள்ளவர்கள். பிறர் இவர்களிடம் அடங்கி வாழ வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள்.

**102.இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்திற்குப் புதன் தலைவர். அறிவில் சிறந்து கல்வி கேள்விகளில் பிரகாசிப்பார்கள். சிலருக்கு ஜோதிடத்தில் ஞானம், திறம்படச் செயலாற்றும் திறமை, வேலையில் காட்டப்படும் ஆர்வமும் வேகமும் சரீர நலத்தில் காட்டமாட்டார்கள். உடல் இளைத்து நலிந்து காணப்படும்.

**103.மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிரன் அதிபர். எக்காரியத்திலும் மன ஈடுபாடும் நுண்ணிய கலைகளில் அதிகமான ஆர்வமும் கொண்டவர்கள். செய்யும் காரியத்தை முழு மனதுடன் திறம்படவும் அழகுடனும் செய்து முடிப்பார்கள். சாப்பாட்டுப் பிரியர்கள். எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும் சுறுசுறுப்புடனும் காணப்படுவார்கள்.

**104.நான்காம் பாதம்**

நான்காம் பாதத்துக்குச் செவ்வாய் அதிபர். இவர்கள் அதிகார தோரணை வாய்ந்தவர்கள். ஆனாலும் இரக்கச் சுபாவமும் பெருந்தன்மையும் உடையவர்கள். துடிதுடிப்பும் வேகமும் உள்ளதால் இவர்களில் ஒரு சிலர் இரத்த அழுத்த நோயாலும் பாதிக்கப்படுவார்கள்.

**ரேவதி நட்சத்திரப் பாதங்களும் குணாதிசயங்களும்**

**105.முதல் பாதம்**

முதல் பாதத்திற்கு குரு பகவான் தலைவர். இந்த அம்சத்தில் பிறந்தவர்கள் அதிகமான பொருள் வசதி உள்ளவர்களாகவும் சாமர்த்தியசாலிகளாகவும் இருப்பார்கள். இவர்களுக்கு அதிகமான கௌரவமும் புகழும் வாழ்க்கையில் தொடர்ந்து இருக்கும். தர்ம சிந்தனையும் தெய்வ பக்தியும் நிறைந்தவர்கள்.

**106.இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்திற்கு சனி தலைவர். இவர்கள் தங்கு தடையின்றி பாப காரியங்களைச் செய்வார்கள். பிற மாதரிடம் ஈடுபாடு உள்ளவராக இருப்பார்கள். கெட்ட வழிகளில் பொருளைச் செலவழிப்பார்கள். தன் குடும்பத்தை விட வெளி இடங்களில் அதிகமான பற்றும் ஈடுபாடும் உடையவர்கள்.

**107.மூன்றாம் பாதம்**

மூன்றாம் பாதமும் சனியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதே. மூன்றாம் பாதத்தில் பிறந்தவர்கள் அதிக புத்திசாலியாக இருக்க மாட்டார்கள். நல்ல ஒழுக்கம் கிடையாது. பார்வைக்கு அழகாக இருப்பார்கள். புத்தி மந்தமாக இருக்கும்.

**108.நான்காம் பாதம்**

நான்காம் பாதம் குருவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. இவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள். நேர்மையான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பார்கள். தான தர்மங்களைச் செய்வார்கள்.

குறிப்பு

…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..
…………………………………………………………………………………..

**கூறு – 5 கிரகங்களின் பார்வை மற்றும் சேர்க்கை பலன்கள்**

**1. கிரக பார்வை பலன்கள்**

| கோள்கள் | விஷேச பார்வை | பொது பார்வை | விஷேச பார்வை |
|---|---|---|---|
| சூரியன் | – | 7 | – |
| சந்திரன் | – | 7 | – |
| செவ்வாய் | 4 | 7 | 8 |
| புதன் | – | 7 | – |
| குரு | 5 | 7 | 9 |
| சுக்ரன் | – | 7 | – |
| சனி | 3 | 7 | 10 |
| ராகு | 3 | 7 | 11 |
| கேது | 3 | 7 | 11 |
| யுரேனஸ் | – | 7 | 11 |
| நெப்டியூன் | 8 | 7 | 12 |
| புளுட்டோ | – | 7 | 9 |

அனைத்து கோள்களுக்கும் 7ம் பார்வை பொதுவானது ஆகும். எனவே 7ம் பார்வை மட்டும் உள்ள சூரியன், சந்திரன், புதன், சுக்ரன், ஆகிய கோள்களுக்கு தனியாக பார்வைப்பலன்கள் தரவில்லை. அவர்களின் இயற்கை சுபர், அசுபர் அடிப்படையில் பலன்களைதரும்.,

**செவ்வாய் 4,7,8**

4ம் பார்வை சொத்து, வாகனம், வெகுமதிகள், புதையல், கால்நடைகள், வீடு, நிலம், காடு, தோப்புகள், வளர்ப்பு பிராணிகள், வாகனயோகம், மண்வகைகள், மின்சாரப்பொருட்கள், அலங்கார விளக்குகள், இடிபாடுகள், உறவுகள், நற்பெயர், நம்பிக்கை, துப்பாக்கி, ஞாபகபொருட்கள், பழமையான பொருட்கள், சிறுவணிகம், சித்தவைத்தியம், மூலிகைபொருட்கள். செவ்வாய் வலிமையாக இருப்பின் மேற்கண்ட காரகங்கள் மூலம் நற்பலன்களை செய்யும்.

செவ்வாய் கெட்டிருப்பின் (6, 8, 12ல், நீசம், பகை) மேற்கண்ட காரகங்களுக்கு அசுப பலன்களை செய்யும்.

**8**ம் பார்வை வெட்டுபடல், வாகனவிபத்துகள், இயந்திர பாதிப்பு, விசஜந்துகளால் கடிபடல், தீராத நோய்கள், ஊனம், துர்நாற்றம், அவமானம், பெருஞ்சண்டைகள், மாங்கல்யம், மனைவியின் சொத்து, சீர்வரிசைகள், ங்கள், புதையல், கிரிமினல்கள், பில்லிசூன்யம், உடல் உறுப்பு பாதிப்பு, ஆயுதங்கள், உரிமை பிரச்சனைகள், செவ்வாய் வலிமையாக இருப்பின் மேற்கண்ட காரகங்கள் மூலம் நற்பலன்களை செய்யும்.

செவ்வாய் கெட்டிருப்பின் (6, 8, 12ல், நீசம், பகை) மேற்கண்ட காரக அசுப பலன்களை செய்யும்.

**குரு 5,7,9**

**5**ம் பார்வை கற்பனை, அறிவு, காதல், விரும்பும் பொருள், கலைகள், ஜோதிடம், ஆன்மீகம், குலதெய்வம், மதிப்பு, குழந்தை, செல்வம், புதையல், இன்பம், யோகம், தாய்மாமன், வயிறு, புத்தகம், வித்தை, புண்ணியம், கற்பித்தல், எழுத்துகள், சுவைகள், சூதாட்டம், போட்டி, பகுத்தறிதல் உயிரணு, குரு வலிமையாக இருப்பின் மேற்கண்ட காரகங்கள் மூலம் நற்பலன்களை செய்யும்.

குரு கெட்டிருப்பின் (6, 8, 12ல், நீசம், பகை) மேற்கண்ட காரகங்களுக்கு துற்பலன்களை செய்யும்.

**9**ம் பார்வை ஆனந்தமான வாழ்வு, குலதெய்வவழிபாடு, யோகங்கள் அனுபவித்தல், சிவபூஜைகள், இயந்திர சுகம், பொருட்கள் சேர்க்கை, விருதுகள், மந்திரிகள், அமைதியான வாழ்வு, நிறைவான செல்வம், உயர்கல்வி, மந்திரஉபவாசம், தர்மம் செய்தல், கொடைகள், பாக்கியம், ஐஸ்வரியம், சாஸ்திரவித்தைகள், வேதங்கள், அன்னதானம், வேள்விகள், யாகங்கள், கடல்பயணம், தீர்த்தயாத்திரைகள், கோவில் திருப்பணி, அஷ்டமகாசித்துகள், புண்ணியம், மருந்து பொருட்கள், மனஒழுக்கம், ஆராய்ச்சிகள், சட்டபோதனைகள், நூல்வெளியிடுதல், ஞானிகள், சித்தர்கள். குரு வலிமையாக இருப்பின் மேற்கண்ட காரகங்கள் மூலம் நற்பலன்களை செய்யும்.

குரு கெட்டிருப்பின் (6, 8, 12ல், நீசம், பகை) மேற்கண்ட காரகங்களுக்கு எதிர்மாறான பலன்களை செய்யும்.

**சனி 3,7,10**

**3**ம் பார்வை உடன் பிறப்புகள், வாலிபம், தனிமை, கலையும் கரு, சகோதரபிரிவுகள், ஒப்பந்தம், தைரியம், சிற்றின்பம், விலங்குபயம், சொல்பேச்சு கேளாமை, கடுக்கண், தாது, மூலம், ஜீவன், முன்னோர்கடன், கனவுகள், ரோட்டோரம், சகபிரயாணி, மதகடமைகள், பயிற்சிகள், அச்சுமை, தூதுவர், பஞ்சாயத்து, கையெழுத்து, சமையல், வதந்திகள், சங்கதிசொல்லுதல், குத்தகை பொருட்கள். சனி வலிமையாக இருப்பின் மேற்கண்ட காரகங்கள் மூலம் அசுப பலன்களை செய்யும்.

சனி கெட்டிருப்பின் (6, 8, 12ல், நீசம், பகை) மேற்கண்ட காரகங்களுக்கு நற்பலன்களை செய்யும்.

10ம் பார்வை செய்தொழில், புண்ணிய செயல், சாதுர்யம், வஞ்சகம், நேர்த்தியான செயல்கள், யோகப்பயிற்சிகள், புனித ஸ்தலங்கள், கடமையை செய்தல், சாஸ்திரம் அறிதல், வருமானம், ஆண்டிகள், போதை மூலிகைகள், அடிமைகள், அரசு உத்யோகம், கர்மகாரியங்கள், வணிகம், முத்திரைகள், தொண்டு நிறுவனம், குலப்பெருமைகள், சடங்குகள், சனி வலிமையாக இருப்பின் மேற்கண்ட காரகங்கள் மூலம் சுப பலன்களை செய்யும்.

சனி கெட்டிருப்பின் (6, 8, 12ல், நீசம், பகை) மேற்கண்ட காரகங்களுக்கு அசுப பலன்களை செய்யும்.

**ராகு,கேது 3,7,11**

3ம் பார்வை உடன் பிறப்புகள், பிணைப்பு, பிரிவுகள், ஒப்பந்தம், வெகுமதி, உயிரணுக்கள், சிற்றின்பம், மனஉறுதி, விலங்குபயம், விஷம், சிறுபயணம், கனவுகள், காதுகள், அலைச்சல்கள், சாகசங்கள், மேஜிக், பயிற்சிகள், சந்திப்பு, தூதுவர், புரளிசொற்கள், வதந்திகள், ராகு, கேதுக்கள் வலிமையாக இருப்பினும் சரி கெட்டிருப்பினும் சரி எப்போதும் மேற்கண்ட காரகங்கள் மூலம் அசுப பலன்களையே செய்யும்.

11ம் பார்வை பதவி உயர்வு, கீர்த்தி, புகழ், சந்தோஷம், வெற்றிகள், அறநெறி, ஆதாயங்கள், சன்மானம், புதையல், அதிர்ஷ்டம், திரவியலாபம், பொருள் சேர்க்கை, தீயவிருப்பம், பிறரை நம்புதல், பிறர் மூலம் சேரும் பணம், அன்பளிப்பு, ஆதரவாளர்கள், அபிவிருத்தி, கடித போக்குவரத்து மிக நீண்ட பொருட்கள், புதிய தீர்மானங்கள், ராகு, கேதுக்கள் எப்போதும் மேற்கண்ட காரகங்கள் மூலம் அசுப பலன்களையே செய்யும்.

**யுரேனஸ் 7,11**

11ம் பார்வை சுதந்திரமாக செயல்படுதல், எண்ணங்கள், அதிகாரம் செலுத்துதல், பொறுப்புணர்வு, புதுமை, விவாதம், ஆராய்ச்சி, உயர் பதவி, கௌரவம், புதிய மருந்து கண்டுபிடிப்பு, புகழ், முன் உணர்வுகள், அதீதகற்பனை, வித்தியாசமான செயல்கள், எதிர்பாராத திடீர் மாற்றங்கள், சனியின் குணத்தில் இரண்டு மடங்கு கொண்டவர், அடிக்கடி மனமாற்றம், கண்டுபிடிக்க முடியாத தன்மைகள், வழக்கத்திற்கு மாறான செயல்கள், முறைகேடான எண்ணங்கள், சாதனைகள், மனோவசியம், எச்சரிக்கை உள் உணர்வுகள், தவறாக புரிதல், மணம் புண் படும்படி பேசுதல்.

**நெப்டியூன் 7,8,12**

8,12ம் பார்வை கவிதை ஞானம், நிபுணத்தன்மை, ஆராய்ச்சி, ஆன்மீகம், உள்மனதை இயக்குதல், நடிப்பு தன்மை, கலைகளில் சிறப்பு போதைதன்மை, அக்கரை மின்மை, தனித்தன்மை, விமர்சனம், முன் கூட்டி அறியும் தன்மை,

துரோகம், திட்டமிடுதல், ரகசிய தன்மை, இழிவான செயல்கள், நுண்ணறிவு, வேகமான ரீஆக்ஷன், நிழல் உலக சிந்தனை, எளிதில் புரிந்து கொள்ள முடியாத தன்மை,

**புளுட்டோ 7,9**

**9**ம் பார்வை சிறுவயது மரணம், தீராத நோய்கள், வைரஸ் காய்ச்சல்கள், உடல் துர்நாற்றம், அவமானம், கணக்கில் வராத பணங்கள், புதையல், சட்ட விவகாரம், அரசுக்கு எதிரான காரியங்கள், அடிமைபடுதல், உயிர்களை துன்புறுத்துதல், முறையில்லா மகிழ்ச்சி, குறுக்குபுத்தி, கிரிமினல்கள், கொள்ளையடித்தல், அணுஆயுதங்கள், பெரிய பெரிய வாகனம், நம்பிக்கை மோசடி, நிலநடுக்கம், பூகம்பம், ஹோர்மார்கட்டிங்

## 2.இரண்டு கிரக சேர்க்கை பலன்கள்

**சூரியனும் சந்திரனும்** சேர்ந்திருந்தால், ஜாதகர் ஸ்திரீகளுக்கு வசப்பட்டவராவர். அழகில்லாதவராவர், கபடகிருத்தியங்களைச் செய்கின்றவராவர், மிகவும் தனமுள்ளவராவர், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை விற்பனை செய்பவராவர், காரியங்களில் நிபுணத் தன்மை உள்ளவராவர்.

**சூரியனும் செவ்வாயும்** சேர்ந்து இருந்தால், ஜாதகர் சாகச கர்மத்தைச் செய்கின்றவராகவும், அறிவில்லாதவராகவும், பலமும் பராக்கிரமுள்ளவராகவும், பொய் பேசுகின்றவராகவும், பாபபுத்தியுள்ளவராகவும், கொல்லுதல் முதலியவற்றில் பிரியமுள்ளவராகவும், மிகுந்த குரூரத் தன்மை உடையவராகவும் இருப்பார்.

**சூரியனும் புதனும்** சேர்ந்திருந்தால் சேவகாவிருத்தியுள்ளவராகவும், ஸ்திரமில்லாத தனத்தோடு கூடியவராகவும், இஷ்டமாகிய வார்த்தைகளைப் பேசுகின்றவராகவும், புகழ் பெற்றவராகவும் ராஜாவிற்கும் சத்ஜனங்களுக்கும் இஷ்டனாகவும், பலம் சௌந்தர்யம் வித்தை இவைகளுடையவராகவும் இருப்பார்.

**சூரியனும் குருவும்** சேர்ந்திருந்தால் மிக தர்மங்களை செய்கின்றவராகவும், ராஜாவிற்கு மந்திரியாகவும், உறவினர்களுடன் நல்உறவு கொண்டு அவர்களினால் கிடைக்கப்பட்ட தனலாபமுடையவராகவும், ஆசிரியர் என்ற பெயரை வகிக்கின்றவராகவும் இருப்பர்.

**சூரியனும் சுக்கிரனும்** சேர்ந்திருந்தால் ஆயுதங்களைப் பிரயோகிக்கும் சமர்த்தராகவும், வயோதிகத்தில் கண்ணிற்குப் பார்வை குறைந்திருக்கின்றவராகவும், போர்க்களத்தில் பிரயோகிக்கும் வித்தைகளில் நிபுணராகவும், மனைவியின் உறவினரால் கிடைத்த தனங்களோடு கூடினவராகவும் இருப்பார்.

**சூரியனும் சனியும்** சேர்ந்திருந்தால் தாது விஷயங்களாகிய கர்மங்களில் சாமர்த்திய முள்ளவராயும், தர்ம சுபாவமுடையவராயும், தன்னுடைய கர்மத்தில் பிரியமுள்ளவனாயும், பத்தினிக்கும் புத்திரர்களுக்கும் (நாசம்) சம்பவிக்குங்காலத்தில் நன்கு கவனிப்பவராகவும் தனது வம்சத்திற்குத் தக்க குணங்களினால் சுத்தவாராயும், அற்ப சீலராயும் இருப்பார்.

**சூரியன் யுரேனஸ்** தனிமையும், சுதந்திரமும் விரும்புவர் ஆராய்ச்சி எண்ணம் கொண்டவர். அறிவியல் அறிஞர் கலை, அறிவியல், தொழில் நுட்பம் ஆகிய ஏதேனும் ஒன்றில் ஆய்ந்தறியும் மனம் உடையவர் மறைகலைகள், மின் உற்பத்தி, எதிர்பாராத இயற்கை சீற்றங்கள் போன்றவற்றை யுரேனஸ் ஆள்வதால் இவற்றில் ஆர்வம் உடையவராக இருப்பர். விமானம் ஒட்டுதல், விண்வெளி ஆய்வுகள், கம்ப்யூட்டர், தொழில் முறைகள் போன்றவற்றில் இருப்பர். பல்வேறு புதிய கண்டுபிடிப்புகளையும், கருத்துக்களையும் உலகிற்கு கொடுக்கும் வல்லமை பெற்றவர்கள், பகுத்தறிவுடன் கூடிய காரண, காரியவாதச் சிந்தனை உடையவர். எப்பொழுதும் உழைத்துக் கொண்டிருக்கும் தன்மையுடையவர். அதனால் பல்வேறு தோல்விகளைக் கண்டாலும் இறுதியாக தனது முயற்சியில் வெற்றியைப் பெறுபவர்.

**சூரியன் நெப்டியூன்** உண்மையான ஆத்மபலம் கொண்ட அறிவுடையவர். ஆன்மீக ஈடுபாடும், அறிவாற்றலும் உடையவர், மற்றவர்களை வசியம் செய்வதில் வல்லவர். மந்திர, தந்திரக்கலைகளில் ஈடுபாடு உடையவர். ஒரு சிலர் பிறரை ஏமாற்றுவதிலும், நம்பிக்கைக்கு புறம்பாக செயல்படுவதிலும் ஈடுபடுவர். இதனால் செல்வங்களையும் சேர்ந்திடுவர். போதையை ஏற்படுத்தும் அனைத்துப் பொருட்களுக்கும், விஷப்பொருட்களுக்கும், கப்பல், இயல், இசை, நாடகம், திரைப்படம் போன்ற கலைகளில் நாட்டமுடையவர்கள். கடின உழைப்பினால் போதை தரும் பொருட்களுக்கு அடிமையாவர். தீய கோள்கள், தீய பார்வையில் இருந்தால் பகல் கனவு, தாழ்ந்த நிலை, போன்ற தகாத நிலையை அடைவர்.

**சூரியன் புளுட்டோ** கொள்கை வாதி, தற்பெருமையுடையவர் உணர்ச்சி வயப்படுபவர், எதையும் விமர்சிக்கும் தன்மையுடையவர், மருத்துவர், நோயை எதிர்க்கும் வல்லமையுடையவர், வாழ்வதற்கே வாழ்க்கை என்ற கருத்துடையவர். நட்பினால் பாதிப்படைபவர். உணர்வுடையவர், பாலுறவில் ஆர்வமிகுதியுடையவர் ஒரு சிலர் மதத்தலைவராக இருப்பார். தந்தையின் உறவு நன்றாக இருக்காது. பெண்கள் சாதகத்திற்கு திருமணவாழ்வில் கணவருக்கு புளுட்டோ கோளின் தன்மை ஏற்படுவதால், நற்பலன்களை எதிர்பார்க்க முடியாது.

**சந்திரனும் செவ்வாயும்** சேர்ந்திருந்தால் சூரராகவும், யுத்தத்தில் பிரதாப சக்தியுள்ளவராகவும், மல்யுத்தத்தில் சமர்த்தவராகவும், இரத்த சம்பந்தமான வேதனையால் பீடிக்கப்பட்ட சரீரமுள்ளவராகவும், மண், தோல், தாதுக்கள்

இவைகளினாலே சித்திரப் பணிகளைச் செய்கின்றவராகவும், மந்திர உச்சாடனம் முதலாகிய பிரயோகத்தில் சமர்த்தராகவும் இருப்பார்.

**சந்திரனும், புதனும்** சேர்ந்திருந்தால் காவியம் கதை இவைகளில் அதிக சாமாத்தியமுள்ளவராகவும், தனவானாகவும், பெண்கள் விரும்பத்தக்க அழகான பிரகாசமான முகமுள்ளவராகவும் தர்ம காரியங்களில் பிரீதியுள்ளவராகவும், நல்ல குணங்களோடு கூடியவராகவும் ஆவர்.

**சந்திரனும் குருவும்** சேர்ந்திருந்தால் அதிக உறவினர்களுடையவராகவும், தன்னுடைய கற்றத்தாருக்கு சகாயத்தையும் சன்மானத்தையும் செய்கின்றவராகவும், மக்களுக்கு தலைவராகவும், தேவர்கள், பிராமணர்கள் இவர்களுடைய இஷ்டத்தை அநுசரிக்கின்றவராகவும் இருப்பார்.

**சந்திரனும் சுக்கிரனும்** சேர்ந்திருந்தால் நல்ல மாலைகள், வெண்மையான வஸ்திரங்கள், இவைகளைத் தரிக்கின்றவராகவும், கிரியைகளையும், விதிகளையும் அறிகின்றவராகவும், கவிகளில் பிரியமுள்ளவராகவும், மிகவும் சோம்பலுள்ளவராகவும், கிரய விக்கிரயங்களில் (கொடுக்கல் வாங்கல்) அல்லது வியாபாரத்தில் திறமையுள்ளவராகவும் இருப்பார்.

**சந்திரனும் சனியும்** சேர்ந்திருந்தால் வயோதிகம் வாய்ந்த மனைவியோடு கூடியவராகவும், யானைகளையும், குதிரைகளையும் காப்பாற்றுகின்றவராகவும், கெட்ட சுபாவமுள்ளவராகவும், எல்லாருக்கும் தீயவராகவும், பணமில்லாதவராகவும் இருப்பார்.

**சந்திரன் யுரேனஸ்** எப்பொழுதும் சுறுசுறுப்புடன் செயல்படுபவர், சுதந்திரமானவர், சிறந்த ஆராய்ச்சி மற்றும் தேடுதல் எண்ணமுடையவர், புதியனவற்றை கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகள். புதுமைவிரும்பி, பழைய கருத்துக்களுக்கு இடம் கொடுக்காதவர், தற்பெருமையுல்லவர், நான் என்ற அகந்தையுள்ளவர், குறைவான நண்பர்களை உள்ளவர், பொது நலச் சேவையுடையவர், எதிர்பாலினரிடத்தில் கவர்ச்சியுள்ளவர், சமரசத்தை விரும்புவர், தாயுடனும், மனைவியுடனும் சுமூகமான உறவு இல்லை. நம்பமுடியாதவர், சோதிடத்தில் திறமை பெறுவர், அறிவியல், தந்திரக்கலை, கம்ப்யூட்டர் போன்றவற்றில் திறமை பெறுவர், வாழ்வில் ஏமாற்றம், இறக்கம் இருக்கும்.

**சந்திரன் நெப்டியூன்** வாழ்நாள் முழுவதும் உணர்ச்சி பூர்வமாக இருப்பவர். சிலநேரங்களில் மெய்யியலுடன் இருப்பர். எச்சரிக்கையானவர், ஆன்மீக உணர்வு, தற்காப்பு எண்ணங்கள் உடையவர், இருவரும் தந்திரம், சோதிடம், மயக்கும் கலைகளில் நாட்டமுடையவர், இவற்றினால் வருமானமும் ஏற்படும். குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கை முறை உள்ளவர். தோல்வி ஏற்பட்டால் தாங்கிக் கொள்ளமாட்டார். உணர்ச்சி வயப்படும் குணமில்லாததால் எதிர்பாராத நிகழ்வுகளில் மனநிலை பாதிப்பிற்குள்ளாவார்.

எளிமையான வாழ்வை நடத்துபவர், ஆரவாரமற்ற சூழ்நிலையை விரும்புவர், துன்பங்களை பொறுப்பவர், அன்பும், பண்பும் உடையவர், நல்ல உழைப்பாளி, தாயின் அன்பைப் பெறுபவர். பெண்களை காதலிப்பதை விரும்புவார். மனைவி நிலையற்ற தன்மை உடையவராகவும், ஒரு சிலருக்கு மதுப்பழக்கமுள்ள மனைவியாகவும் அமைவார். மனைவியினால் பல்வேறு துன்பங்களை அனுபவிப்பவர்.

**சந்திரன் புளுட்டோ** எப்பொழுதும் தீவிரத் தோற்றமுடையவர், மனோதத்துவ நிபுணர் உணர்ச்சிவயமானவர், பொறாமையும், பழிவாங்கும் எண்ணமும் உடையவர், பிறர்வாழ பொறுக்காதவர், இயற்கை மருத்துவர், அக்குபஞ்சர் போன்ற நோய் தீர்க்கும் முறைகளை அறிந்து அவற்றின் மூலம் நோய்களைத் தீர்ப்பவர், காமத்துடனும் கூடியவர்.

சுய ஒழுக்கமும், ஆன்மீகத்தில் ஈடுபாடும் உடையவர், தனக்குள்ளே வரையரைகளும், மறுவரையரைகளும் செய்து கொள்பவர், மனித மேன்மைக்காக பாடுபடுவர், கணவன் மனைவிக்கும் மனைவி, கணவருக்கும் அடங்கி நடந்து கொள்வர்.

**செவ்வாயும் புதனும்** சேர்ந்திருந்தால் ஸ்திரீகளுக்குப் பிரியமில்லாதவராகவும், ஆனால் துஷ்ட ஸ்திரீகளுக்கும், விதவைகளுக்கும் பிரியமுள்ளவராகவும், கொஞ்சம் தனம் மாத்திரம் உள்ளவராகவும், சுவர்ணம் இரும்பு முதலானவைகளைக் கொண்டு தொழில் செய்கின்றவராகவும், ஔஷதங்களைச் செய்கின்றவராகவும், அதைக் கிரயம் செய்வதில் சாமர்த்தியமுள்ளவராகவும் இருப்பார்.

**செவ்வாயும் குருவும்** சேர்ந்திருந்தால், சிற்ப வித்தையிலும், வேதத்திலும், சாஸ்திரத்திலும், அறிவுள்ளவராகவும், வாக்கு சாமர்த்தியமுள்ளவராகவும், புத்திசாலியாகவும், அஸ்திரப் பிரயோகத்தில் பிரீதியுடையவராகவும் இருப்பார்.

**செவ்வாயும் சுக்கிரனும்** சேர்ந்திருந்தால் புகழ் மிக்கவராகவும், சங்கத் தலைவராகவும், கணித சாஸ்திரத்தை அறிகின்றவராகவும், பரஸ்திரீகளை அடைகின்றவராகவும், துர்க்குணமுள்ளவராகவும், சூது விளையாடுகின்றவராகவும், பொய் பேசுகின்றவராகவும், கபட தந்திரமுள்ளவராகவும் இருப்பார்.

**செவ்வாயும் சனியும்** சேந்திருந்தால் தாது விஷயங்களாகிய கர்மங்களிலும், இந்திர ஜாலவித்தையிலும், திருட்டுத் தொழிலில் சாமர்த்திய முள்ளவராகவும், மிகவும் வஞ்சன சீலனாகவும், தர்மமில்லாதவராகவும், விஷ வித்தையைக் கொண்டு அல்லது விஷப்பிரயோகத்தாலும், ஆயுதப் பிரயோகத்தாலும் தனலாபம் அடைந்தவராகவும், கலகப்பிரியராகவும் இருப்பார்.

**செவ்வாய் யுரேனஸ்** விமானப் பயிற்சி, சர்க்கஸில் பார்விளையாட்டு சண்டைப் பயிற்சி, ஸ்டண்டு, போர்த் தளவாடங்களைச் செலுத்துதல்

போன்றவற்றில் வேலை அமையும். அதில் சாகசங்களைச் செய்து பேரும், செல்வமும், புகழும் பெறுவார், ஆனால் வாழ்க்கையில் பல ஆபத்துக்களை சந்திப்பவர், சிறந்த பொறியாளராக, ஆர்க்கிடெக்டாக, மெக்கானிக்காக, பணி ஆற்றுவார், சிறந்த ஆராய்ச்சியாளராகவும் இருப்பார், தலைமைதாங்கி, கட்டுப்பாட்டுடன் நடத்திச் செல்வதில் திறமை உடையவர், இந்நிலை அரசியல்வாதிகளுக்கு ஏற்ற அமைப்பாகும். அறிவாற்றல் உடைய வாழ்க்கைத் துணைவரையே விரும்புவார். எதற்கும் துணிந்து செயல்படுபவர், அடிக்கு அடி, உதைக்கு உதை என்ற கொள்கையுடையவர் கொட்டினால்தான் தேள் என்று நினைக்கும் தீவிரவாதி, சுதந்திரப்பிரியர், உடனுக்குடன் செயல்படுபவர், தாமதம் என்பது இவரது அகராதியில் இல்லை. கராத்தே, குத்துச்சண்டை, மல்யுத்தம் போன்ற பயிற்சிகளில் கலைகளில் ஈடுபடுபவர், மற்றவர்களின் பேச்சுக்கு கட்டுப்படாதவர், தம் வழியே சிறந்த வழி என்று எண்ணுபவர்.

**செவ்வாய் நெப்டியூன்** தன்னம்பிக்கை குறைவாக உடையவர், டெலிபதி, ஆவி உலகத்துடன் பேசும் கலை, சோதிடம், மாந்திரிகம் ஆகியன அறியும் திறமையுடையவர், அதிக உழைப்பும், ஓய்வின்றிச் செயலாற்றுவதும் உடல்நலத்தைக் கெடுத்துவிடும் என்பதை உணர்ந்து செயல்பட்டால் நோய் வருமுன் காக்கலாம். போதைப் பொருள்களுக்கு அடிமையாவதைத் தவிர்ப்பது உத்தமமாகும். காதல் விவகாரம் பலபிரச்சனைகளை ஏற்படுத்தும். கற்பனை உலகில் சஞ்சரிப்பவர், மனம் அடிக்கடி மாறும் குணம் கொண்டதால், அதற்கேற்பவே செயல்பாடும் கொண்டவர், அதாவது, மனநிலைக்குத் தகுந்தாற்போல் செயல்படுபவர், எளிதில் உணர்ச்சிவசப்பட்டுக் களைப்படைந்துவிடுவார், தற்பெருமை அதாவது ஈகோ உடையவர், கலையார்வம் கொண்டவர், இசை, சினிமா, தொலைக்காட்சி, நாடகம் ஆகியவற்றில் ஆர்வம் கொண்டவர், அவற்றில் பணியாற்றும் நிலையும் ஏற்படும் இத்தொழிலால் மக்களின் மகத்தான ஆதரவைப் பெறுவார்.

**செவ்வாய் புளுட்டோ** மிகுதியான வலிமையும், நினைத்ததை சாதிக்கும் வல்லமையும் பெறுவர், சுறு சுறுப்பும், துணிச்சலும், தீவிரமும் உள்ளவர், நிறைய சாதிக்கும் குணம் உள்ளவர், முன்னேற்றமான, வலிமையான முரட்டுத்தனமான இணைவாகும்.

**புதனும் குருவும்** சேர்ந்திருந்தால் நடனம், சங்கீதம் முதலாகிய நிருத்தப் பிரயோகத்தில் நிபுணராகவும், அறிவுள்ளவராகவும், சங்கீத சாஸ்திரத்தில் பழக்கமுள்ளவராகவும், புத்திமானாகவும் சுகமுள்ளவராகவும் இருப்பார்.

**புதனும் சுக்கிரனும்** சேர்ந்திருந்தால் மிகவும் தனமுள்ளவராகவும், நீதி சாஸ்திரம் அறிந்தவராகவும், பல தரத்திலுள்ள சித்திர வேலைகளைச் செய்கின்றவராகவும், வேதம் அறிந்தவராகவும், நல்ல வாக்குள்ளவராகவும், சங்கீதத்தை அறிகின்றவராகவும், நகைச்சுவையில் பிரியமுள்ளவராகவும், சுகந்த திரவியங்களிலும், புஷ்பமாலைகளிலும் பிரீதியுள்ளவராகவும இருப்பார்.

**புதனும் சனியும்** சேர்ந்திருந்தால் குணவானாகவும், டாம்பீகனாகவும், மிகவும் வஞ்சிக்கின்ற சுபாவ முள்ளவராகவும், சத்கவியாகவும், சாஸ்திரீயங்களாயும் லௌகீகங்களாயும் உள்ள வியாபாரங்களை மீறுகின்ற குணமுள்ளவராகவும், நிபுணராகவும் நல்ல வாக்குள்ளவராகவும் இருப்பார்.

**புதனுடன் யுரேனஸ்** பிடிவாத குணமுடைய தன்னம்பிக்கைவாதி, எதுவும் நேர்மையாகவே நடைபெற வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவர், சுயகட்டுப்பாடுடையவர், ஆன்மீகச் சிந்தனையும் பெறுபவர், தம் செயலால் பலரது கவனத்தையும் கவரும் செயல்வீரர். சுதந்திரப்பிரியர், வருங்காலம் அறியும் திறமைசாலி, சிறந்த அறிவாற்றலுடையவர், சடங்கு, சாத்திரங்கள், சட்டதிட்டங்கள் ஆகியவற்றில் அதிக நம்பிக்கை இல்லாத பகுத்தறிவுவாதி, எதையும் புதிய கண்ணோட்டத்திலே பார்ப்பவர், பரிசோதனை செய்த பிறகே எதையும் ஆமோதிப்பவர்.

**புதன் நெப்டியூன்** சொந்த வாழ்க்கையில் பல ஏற்ற இறக்கங்களை உடையவர், சொன்ன சொல்லைக் காப்பாற்ற இயலாதவர், சமயம் நேர்ந்தால் பொய்யும் சொல்பவர், சந்தர்பவாதியே, சோதிடம், மெஸ்மெரிசம், போன்றவற்றில் தொழில் அமையும். தியானத்தில் ஆர்வமிக்கவர், ஆன்மீக உணர்வு, தெய்வபக்தி, ஆகியன அதிகமுடையவர். சிறந்த கற்பனை வளமிக்க கவிஞர், சிறந்த கலை ஆர்வமிக்கவர், இசை ஞானம் பெற்றவர், புகழ்பெற்ற கவிஞராவார், சிறந்த கதாசிரியர், எழுத்தாளர், திரைப்பட வசனகர்த்தா, சிறந்த நடிகராகவோ, புகைப்படக் கலைஞராகவோ, பெயின்டராகவோ ஆவார்கள்.

**புதன் புளூட்டோ** மற்றவர்களை ஈர்க்கும் பேச்சுடையவர், நன்றாக சிந்தித்து பேசுதல் வேண்டும், இவர் பேச்சு மறக்க முடியாததாகும். கல்வியில் நல்ல தேர்ச்சி பெறுவர், எப்பொழுதும் ஒத்துப்போகும் தன்மையும், நல்லதையே சிந்திப்பதும் இவரது செயலாகும், மனவளக் கலையில் தேர்ச்சியுடையவர், திறமையானவர், மக்கள் தொடர்புகளில் வல்லவர், ஆழமான அறிவுடன் செயல்களை எளிதில் முடிப்பவர், தன்னுடைய மன நிலைப்படி வாழ்பவர், எதிர்மறை சிந்தனைக்கு உட்பட்டால் (தீய கோள்களின் பார்வைகள்) பல்வேறு தவறுகள் ஏற்படும். சோதிடம், மாயவித்தை, மெய்ப்பொருளியல், மறைகலை, தத்துவங்கள் போன்றவற்றை ஆழ்ந்து கற்றுக் கொள்வர்.

**குருவும் சுக்கிரனும்** சேர்ந்திருந்தால் சூரராகவும், தனசம்பத்து விருத்தியுடையவராகவும், நகரம், தன் சுற்றத்தார், கிராமம், சங்கம் இவைகளுக்குத் தலைவராகவும், மிகுந்த சுகியாகவும், தேஜஸ் உள்ளவராகவும் இருப்பார்.

**குரு யுரேனஸ்** ஆன்மீகச் சிந்தனையில் ஆர்வமுள்ள நண்பர் பலர் அமைவர், பிரயாணம் செய்வதில் தீராத ஆசையுடையவர், நிலையான கொள்கையுடையவர், உலக நன்மைக்காகப் பாடுபடும் பெருந்தகையாளர்,

எதிர்பாராத நிலைகளில் வெற்றி பல பெறுபவர், தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனப் பொது நோக்குடையவர். அன்பு, பாசம், ஆன்மீகம், சமாதானம் ஆகியவற்றால் எதையும் சாதித்துவிடலாம்.

அறிவாற்றல் உடையவர், விரைவில் முடிவெடுக்கும் திறமைசாலி, பார்வையாலே பலரையும் கவரும் கவர்ச்சியுடையவர், உண்மையே வெற்றிபெறும் என்னும் எண்ணம் கொண்டவர், ஆன்மீக உலகில் சஞ்சரிப்பவர், எதிர்பாராத பல சந்தர்ப்பங்களை (அதிர்ஷ்டம்) பெறுபவர், சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் சமூக சேவகம், விஞ்ஞானம், சோதிடம் ஆகியவற்றில் தேர்ச்சியுடையவர், புதிய மாற்றத்தை விரும்பி அவற்றை நடைமுறையில் கொண்டுவரப் பாடுபடுபவர், சிறந்த நிபுணராய், ஆராய்ச்சியாளராய், விஞ்ஞானியாய் புகழ் பெறுவார்.

**குரு நெப்டியூன்** சிறந்த கற்பனை வளமிகுந்தவர், எந்தச் சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாகவே இருப்பார், குற்றம் குறை காணாதவர், குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்றே நினைக்கும் மன்னிக்கும் மனப்பான்மை உடையவர், மதுவுக்கு அடிமையானால் ஈரல்நோய் ஏற்பட்டு ஈரல் பாதிப்படையும், அதனால் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வாமை நோயால் துன்பப்படுவார், எந்த நோய் என்று கண்டுபிடிப்பதே சிரமமாகும். எதையும் சரியாகச் சிந்திக்காமல் செயல்படுவதால் பல துன்பங்களைத் தாங்க வேண்டிய நிலை ஏற்படும். இரக்க மனப்பான்மை கொண்டவர். அநியாயத்திற்குத் துணை போகாதவர், இறைவனிடம் மாறாத பக்தியுடையவர்.

நல்லெண்ணமும், அன்பும், மிக்க பாசமும் மாறாத நம்பிக்கையுமுடைய பண்பாளர் பொறுமைசாலியும், அனைவரையும் அனுசரித்துப்போகும் குணமும், விட்டுக் கொடுத்துப் போகும் தன்மையும் கொண்ட கனவன், கலை ஆர்வமிக்கவர், இசை, சினிமா, தொலைக்காட்சி, புகைப்படம், மாஜிக் ஆகியவற்றுள் ஒன்று தொழிலாக அமையும். கப்பல் படையில் பணியாற்றும் நிலையும் ஏற்படும். மீன்பிடிக்கும் தொழிலும் செய்வார். நோய் தீர்க்கும் மருத்துவராகவும் பிரபலமான மருத்துவமனை நடத்துபவராகவும் இருப்பார்.

**குரு புளுட்டோ** சோதிடம், மெய்பொருளியல், மறைகலைகள் போன்றவற்றை கற்பவர், தன்னம்பிக்கையும், முன்னேற்றமான சிந்தனையும், விரிந்து பார்க்கும் தன்மையும் கொண்டவர், உண்மை மற்றும் ஆன்மீகம் போன்றவற்றை தத்துவார்த் ரீதியாக அணுகுபவர் ஆவார்.

**சுக்கிரனும் சனியும்** சேர்ந்திருந்தால் மரங்களையறுத்துத் தொழில் செய்யும் வியாபாரத்தில் சமர்த்தராகவும், சித்திரம் எழுதுவதில் நிபுணராகவும், கல்பணியில் பழக்கமுள்ளவராகவும், மண் சம்பந்தமான வேலை செய்பவராகவும், மல்யுத்தத்தில் சமர்த்தராகவும், சஞ்சாரியாகவும், பசுக்கூட்டங்களை காக்கின்றவராகவும் இருப்பார்.

**சுக்ரன் யுரேனஸ்** எத்தனை திருமணம் செய்து கொண்டாலும், திருமண வாழ்க்கையில் பூரணத் திருப்தியைத் தராது. இசை ஞானியாக, பாடகியாகப் புகழ்பெறுவார், நடனம், சினிமா, தொலைக்காட்சி ஆகியவற்றில் புகழ் பெறும் நடிகர், நடிகையாகத் திகழ்வார்கள், ஒளிப்பதிவாளராகவோ, புகைப்படக் கலைஞராகவோ சித்திரம் வரைபவராகவோ திகழ்வார்கள், அனுசரித்துப் போகும் தன்மை குறைவாகும். அதனால் திருமண வாழ்க்கையில் தோல்வியாக அமையலாம். சோதிடர்கள், மெஸ்மரிஸ்ட், மாந்திரிகர் இவர்களின் நட்பும் ஏற்படும். புன்சிரிப்பால், கவர்ச்சியால் அனைவரையும் கவர்ந்திடும் வசீகரமுடையவர்கள், சுதந்திரப்பிரியர், காதல் வசப்படுபவர், அதுவும் திடீர்க் காதலாகவும் அமையும். எவ்வளவு விரைவில் காதல் ஏற்பட்டதோ அதே வேகத்தில் மறைந்துவிடும். அதனால் பல காதல் விவகாரங்களில் திண்டாடும் நிலையும் ஏற்படும். அவரது கவர்ச்சியே பலரையும் கவர்ந்திடுவதால் கனவுக் கன்னியாகவும், பலரைத் திருமணம் செய்து கொள்ளும் நிலையும் ஏற்படும்.

**சுக்ரன் நெப்டியூன்** ஆழ்நிலைத் தியானத்தில் தனியாத ஆர்வமுடையவர், இசை, ஒளிப்பதிவு ஆகிய இவற்றில் திறமையானவராய் இருப்பார், அவை தொழிலாக அமையும் பலராலும் விரும்பப்படுபவர், பலன் கருதாது அன்பு செலுத்துபவர், பெண்களுக்கு இவ்வித கிரகநிலை இருக்குமானால் குடிப்பழக்கத்திற்கு அடிமையாவர், காதலால் ஏற்படும் திருமணம் நிலையானதாய் அமையாது. பெற்றோர் நிச்சயித்த திருமணமே வெற்றி பெறும்.

வஞ்சனையின்றி மனத்தளவில் அன்பு செலுத்துபவர். மற்றவர்களை என்றும் புண்படுத்தாதவர், எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் நேர்மையையே விரும்புபவர். என் கடன் பணி செய்வதே என்ற எண்ணம் கொண்டவர். ஆன்மீகச் சிந்தனை, உண்மையென தெய்வ பக்தியுடையவர், மதுவின் மேல் ஆசையுடையவர், பால்போல் மனம் உடையவர்.

**சுக்ரன் புளுட்டோ** காதல் வாழ்க்கையில் பல அனுபவங்களை பெறுவர், மணவாழ்வும் மகிழ்ச்சியாக இருக்காது, புளுட்டோவின் யதார்த்தமான, தத்துவார்த்த சிந்தனைகள் மனைவியை மகிழ்ச்சி யூட்டுவதில்லை, சுமாரான பலன்கள் நடைபெறும்.

**சனியுடன் யுரேனஸ்** சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்டவர், வாழ்க்கையில் பல வெற்றிகளையும் பெறுபவர், ஆன்மீக ஈடுபாடுடையவர், விஞ்ஞான ஆய்வு, ஆராய்ச்சி ஆகியவற்றில் ஈடுபடுபவர்கள், தொழிலாளர் தலைவராகும் வாய்ப்பு கிட்டும். இளமைக் காலத்தில் பல தொல்லைகளையும், கட்டுப்பாட்டையும் பெறுபவர், ஓய்வின்றி உழைப்பவர், எந்தத் தொழிலை ஏற்றாலும் அதில் முதன்மையாக திகழும் திறமைசாலி, சுயமான சிந்தனை, நல்ல அதிர்ஷ்டம் ஆகியன இவர்களின் சொத்தாகும். வாழ்க்கையில் பலமாற்றங்களைச் சந்திப்பவர், ஆராய்ச்சித் துறையில் பணியாற்றும் நிலையையும் பெறுவார், எதையும் நேர்மையுடன் வெளிப்படையாகவே பேசுவார். மனிதநேயத்தை விரும்பும்

ஆன்மீகவாதி, தந்தையின் உதவியையும் இளமைக் காலத்தில் பெற இயலாதவர், சிறு சிறு விபத்துக்களை எதிர் நோக்குவார்.

**சனியுடன் நெப்டியூன்** பல நிறுவனங்களின் இயக்குநர்களாகவும் இருப்பார்கள், தந்தையின் உடல் நிலையும் பாதிக்கப்படும், தீராத வியாதியால் தந்தையும் பல வேதனை அடைவார், உள்மனத்திலே இறை உணர்வு கொண்டவர், இளமைக் காலத்தில் மனப் பயத்தால் உடல்நிலை பாதிக்கப்படும் பழைய உணவுகளைத் தவிர்ப்பது நலம். அது உடல் நலத்தைப் பாதிக்கும் விஷம் கலந்த உணவு வகைகளை அருந்தும் நிலைகூட ஏற்படலாம். எதிர்பாராத நிலையில் எதிரிகளால் தாக்கப்படும் நிலையும் ஏற்படும்.

தன்னம்பிக்கை, புத்துணர்ச்சி, வருங்காலத்தை அறியும் சக்தி அனைத்தும் பெறுபவர், எளிதில் முடிவெடுப்பதில் கோளாறுடையவர், உண்மையான தெய்வபக்தியுடையவர், சடங்கு, சாஸ்திரங்கள் கப்பல் தொழில், மீன்பிடிக்கும் தொழில், எண்ணெய், காஸ் ஆகியவை தொழிலாக அமையும், போட்டோத் தொழில், மாஜிக்

**சனி புளுட்டோ** பல்வேறு திருப்பங்கள் உடையவர், கூடுதல் சுமைகளுடன் வாழ்க்கையை நடத்துபவர், பணியாலும் தொந்தரவுகள் ஏற்படும், எச்சரிக்கையாக இருந்தால் நன்மைகளைப் பெறலாம், உடல் நலக்கோளாறுகளும் ஏற்படும்.

## 3.மூன்று கிரக சேர்க்கை பலன்கள்

### சூரியன் சந்திரன் செவ்வாய்

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருக்கும் போது பிறந்தவர் லெட்சுமில்லாதவலும், பாபகர்மங்களில் பிரியமுள்ளவரும், பல்வகை யந்திரங்களை உண்டாக்கும் சாமர்த்தியம் உள்ளவரும், மாரணகர்மங்களினால் சத்துருக்களை நாசம் செய்யும் திறமையுள்ளவரும், கல்பணி முதலான கர்மங்களைச் செய்கின்றதில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவரும் ஆவர்.

### சூரியன் சந்திரன் புதன்

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிருந்தால் தேஜசு உள்ளவராய், புத்திசாமர்த்தியமுள்ளவராய், சாஸ்திரங்களிலும் கலா வித்தைகளிலும் வல்லவராகவும் சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்கள் சாப்பிடுவதில் பிரியமுள்ளவராய், ராஜாவினுடைய செய்கையைச் செய்கின்றவராய்த் தீரராய் இருப்பார்.

### சூரியன் சந்திரன் குரு

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருப்பின் அதிக கோபமுள்ளவராகவும், கபட கிருத்தியங்களில் சாமர்த்தியராகவும், பிறரைச் சேவித்து வசீகரிக்கத்தக்க திறமையுள்ளவராகவும், வெளிதேச சஞ்சாரத்தில் சந்தோஷமுள்ளவராகவும், ஸ்திர புத்தியுடையவராகவும் இருப்பார்.

### சூரியன் சந்திரன் சுக்கிரன்

இவர்கள் மூவரும் சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால், சாமர்த்தியசாலியாகவும், சாஸ்திரங்களில் நிபுணராகவும், பிறர் சொத்தை அபகரிப்பவராகவும், பல பெண்களை விரும்புபவராகவும் இருப்பார்.

### சூரியன் சந்திரன் சனி

இவர்கள் கூடி ஒரு இராசியில் இருந்தால், விவாதத்தில் திறமையுடையவராகவும், அறிவில்லாதவராகவும், அன்னியர்களுடைய ஆதரவில் ஜீவிக்கின்றவராகவும், தரித்திரராகவும் இருப்பார்.

### சூரியன் செவ்வாய் புதன்

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருப்பின் பிரசித்தனாகவும், மல்யுத்தத்தைச் செய்கின்றவராகவும், விசாரமில்லாது இருக்கின்றவராகவும், குரூரராகவும், லஜ்ஜையில்லாதவராகவும், சம்பத்து மனைவி புத்திரன் இவைகள் இல்லாதவராகவும் இருப்பார்.

### சூரியன் செவ்வாய் குரு

இவர்களொருமித்து ஒரு இராசியிலிருந்தால் வாக்கு சாமர்த்தியமுடையவராகவும், அதிகமான சம்பத்துக்களுடையவராகவும்,

ராஜாவிற்கு மந்திரியாகவோ சேனாநாயகராகவோ இருக்கத்தக்கவராகவும், சத்தியமான வார்த்தையைப் பேசுகின்றவராகவும், மிகவும் குரூரராகவும் இருப்பார்.

**சூரியன் செவ்வாய் சுக்கிரன்**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியில் இருந்தால் கண்ரோகமுள்ளவராகவும், குலசிரேஷ்டராகவும், சௌபாக்கியம் உள்ளவராகவும், வாக்கு சல்லாபத்தோடு கூடினவராகவும், தனம் முதலிய சம்பத்துக்கள் உடையவராகவும் இருப்பார்.

**சூரியன் செவ்வாய் சனி**

இவர்கள் ஒன்று கூடி ஒரு இராசியில் இருந்தால் அங்கக் குறைவுள்ளவரும், தனமில்லாதவரும், எப்போதும் வியாதியால் இம்சைப்படுகின்றவரும், பந்துக்கள் இல்லாதவரும், மிகவும் அறிவில்லாதவருமாவர்.

**சூரியன் புதன் குரு**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் நேத்திர ரோகமுள்ளவரும், அதிகமான சம்பத்தையுடையவரும். சாஸ்திரங்களிலும், கலாவித்தைகளிலும் காவியங்களிலும், சபையிலும், சிற்பவேலைகளிலும் நிபுணயத்தன்மையுள்ளவரும், எழுத்து வேலைகளிலும் எழுதுவதிலும் சமர்த்தரும் ஆவார்.

**சூரியன் புதன் சுக்கிரன்**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருப்பின் மிகவும் துன்பமுள்ளவராகவும், அதிகம் நிந்திக்கத்தக்க வார்த்தைகளைப் பேசுகின்றவராகவும், பல திக்குகளிலும் சஞ்சாரம் செய்பவராகவும், குருக்கள்மாரோடு வேறுபட்டவராகவும், ஸ்திரீ நிமித்தம் துக்கிக்கின்றவராகவும் இருப்பார்.

**சூரியன புதன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் நபும்சகத் தன்மையுள்ளவராகவும் (அதாவது புருஷ்னாயின் பௌருஷ மில்லாதவனாகவும், ஸ்திரீயாயின் ஸ்திரி தன்மையில்லாதவளாகவும்) எல்லோருக்கும் விரோதியாகவும், எல்லோராலும் ஜெயிக்கப்படுகின்றவராகவும், பந்துக்களால் தள்ளிவிடப்பட்டவராகவும் இருப்பார்.

**சூரியன் குரு சுக்கிரன்**

இவர்கள் ஒரு இராசியில் ஒன்று சேர்ந்திருப்பின் நேத்திரத்தில் சக்தியில்லாதவராகவும், சூரராகவும் அறிவுள்ளவராவும், தரித்திரராகவும், ராஜாவுக்கு மந்திரியாகவும், பிறர் காரியங்களில் பிரியமுள்ளவராகவும் இருப்பார்.

**சூரியன் குரு சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் சமமில்லாத சரீரத்தையுடையவராகவும், பூஜிக்கத்தக்க யோக்கியமுடையவராகவும், சொந்த ஜனங்களுக்கு விரோதியாகவும், நல்ல மனைவியும், புத்திரனும், பந்துக்களுமுள்ளவராகவும், ராஜப் பிரியராகவும், பயமில்லாதவராகவும் இருப்பார்.

**சூருயன் சுக்கிரன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் சத்துருக்களின் பயத்தால் பீடிக்கப்பட்டவராகவும், மானமில்லாதவராகவும், கலாவித்தைகள் காவியங்கள் இவைகளில் ஞானமில்லாதவராகவும், குஷ்டரோகியாகவும் இருப்பார்.

**சந்திரனும் செவ்வாயும் புதனும்**

ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் பாபத் தொழிலைச் செய்கின்றவராகவும், நீசர்களுடைய ஆசாரம் கடைபிடிக்கின்றவராகவும், பந்துக்களும் சொந்த ஜனங்களுமில்லாதவராகவும், தனித்து இருப்பார்.

**சந்திரன் செவ்வாய் குரு**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருந்தால் விரணமான சரீரத்தோடு கூடியவரும், ஸ்திரீலோலரும், கள்ளரும், அழகுள்ளவரும், ஸ்திரீகளுக்குச் சம்மதமுள்ளவரும், அதிகக் கடினமான கோபத்தோடு கூடினவரும் ஆவர்.

**சந்திரன் செவ்வாய் சுக்கிரன்**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருந்தால் தீயகுணமுள்ள தாயையும் மனைவியையும் உடையவராகவும், நிலைத்து ஓரிடத்திலும் இருக்காதவராகவும், அல்லது சஞ்சாரியாகவும், குளிர்ச்சி பயமுள்ளவராகவும் இருப்பார்.

**சந்திரன் செவ்வாய் சனி**

இவர்கள் சேர்ந்து ஒரு இராசியிலிருப்பின் பாலியத்திலேயே தாயைப் பறிகொடுத்தவரும், குரூரம், அதமரும், அற்பகுணம், விஷமகுணம் உடையவராகவும், ஜனங்களால் வெறுக்கப்படுகின்றவரும் ஆவர்.

**சந்திரன் புதன் குரு**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் தனவானும், சமர்த்தனும், அல்லது ஆரோக்கிய முள்ளவரும், சொல்விற்பன்னரும், தேஜசுள்ளவரும், பிரசித்திமானும், வலிதான கீர்த்தியை உடையவரும், அதிக புத்திரர்களும் சகோதரர்களும் பந்துக்களுமுள்ளவரும் ஆவர்.

**சந்திரன் புதன் சுக்கிரன்**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராயிலிருந்தால் வித்தியாப்பியாசத்தினால், நல்ல புத்தியுடையவராயிருந்த போதிலும் நீசர்களைப்போல் ஆசாரத்தை அனுஷ்டிக்கின்றவராகவும், பொறாமையுள்ளவராகவும் (அதாவது பிறருடைய

உயர்வை சகிக்காதவர்), தன விஷயத்தில் அதிக பேராசையுள்ளவராகவும் இருப்பார்.

**சந்திரன் புதன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் கபட மில்லாதவராகவும், அங்கக் குறைவுள்ளவராகவும், வித்வானாகவும், வாக்கு சாமர்த்தியமுள்ளவராகவும், அதிகம் பூஜிதனாகவும், ராஜாவாகவோ, ராஜசமானனாகவோ இருப்பவராகவும் இருப்பார்.

**சந்திரன் குரு சுக்கிரன்**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் நற்குணமுள்ள தாயையுடையவராகவும், அறிவுள்ளவராகவும், கலாவித்தைகளில் சமர்த்தராகவும், அதிக சாஸ்திரங்களில் பழக்கமுள்ளவராகவும், வெட்க சுபாவமுள்ளவராகவும், குணசீலராகவும் இருப்பார்.

**சந்திரன் குரு சனி**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருந்தால் சாஸ்திரங்களுடைய சூட்சுமார்த்தத்தை அறிகின்றவராகவும், வயதான பெண் களையடைகின்றவராகவும், ரோகம் அல்லது கோபம் இல்லாதவராகவும், கிராமம் சங்கம் இவைகளுக்குத் தலைவராகவும் இருப்பார்.

**சந்திரன் சுக்கிரன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் புண்ணியத்தின் காரணமாக எழுத்தாளராகவும், கிரந்தகர்த்தாவாகவும், சிறந்த வாசகர்களை யுண்டாக்குகின்றவராகவும், புரோகிதராகவும், தைவக்ஞராகவும் இருப்பார்.

**செவ்வாய் புதன் குரு**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருப்பின் நல்ல கவியாகவும், ராஜாவாகவோ ராஜசமானனாவோ ஆகுபவராகவும், குணவதியும் யௌவனமுமுடைய மனைவியோடு கூடினவராகவும், பிறருடைய காரியத்தில் மிகவும் உற்சாக முள்ளவராகவும், சங்கீத சாஸ்திரத்தில் சமர்த்தராகவும் இருப்பார்.

**செவ்வாய் புதன் சுக்கிரன்**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருந்தால் குலசிரேஷ்டமில்லாதவராகவும், அங்கக்குறைவு உள்ளவராகவும், சபலராகவும், துஷ்டராகவும், நன்றாகவும் அதிகமாகவும் பேசுந்திறமையுடையவராகவும், உற்சாகசீலராகவும் இருப்பார்.

**செவ்வாய் புதன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருப்பின் சேவகத் தொழிலைச் செய்கின்றவராகவும், கருங்கண்ணனாகவும், வேறு தேசத்தில்

வசிக்கின்றவராகவும், முகரோகியாகவும், பொழுது போக்கில் பிரியமுள்ளவர்களுடன் ஒருமித்து விளையாடுகின்றவராகவும் இருப்பார்.

**செவ்வாய் குரு சுக்கிரன்**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருந்தால் ராஜாவிற்கு இஷ்டனாகவும், நல்ல புத்திரர்களோடு கூடினவராகவும், எப்போதும் அழகிய ஸ்திரீகளோடு கூடி அதிகமான சுகங்களை அனுபவிக்கின்றவராகவும், எல்லா ஜனங்களுக்கும் ஆனந்தங்களை உண்டுபண்ணுகின்றவராகவும் இருப்பார்.

**செவ்வாய் குரு சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் ராஜாவிற்குக் சமமானவராகவும், தேகத்தில் விகாரமான முறிவோ, விரணமோ இவற்றில் ஏதாவதொன்று உள்ளவராகவும், நீசர்களுடைய ஆசாரத்தைச் செய்கின்றவராகவும்,. பந்துக்களால் நிந்திக்கப்பட்டவராகவும், தயையில்லாதவராகவும் இருப்பார்.

**செவ்வாய் சுக்கிரன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் தீய குணமுள்ளவரின் புத்திரராகவும், ஒரு சிறிதும் சுகமநுபவிக்காதவராகவும், எப்பொழுதும் வேறு தேசங்களில் வசிக்கின்றவராகவும் இருப்பார்.

**புதன் குரு சுக்கிரன்**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியில் இருந்தால் வளைவுள்ள சரீரத்தை உடையவராகவும், சகல சத்துருக்களையும் பிரயாசையின்றி ஜெயிக்கின்றவராகவும், ராஜாவாகவோ, அரசருக்கு சமமானவராகவும், சௌபாக்கியமுள்ளவராகவும், பெரும் புகழோடு கூடினவராகவும், சத்திய வாக்குள்ளவராகவும் இருப்பார்.

**புதன் குரு சனி**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருப்பின் வீடு முதலான ஸ்தானங்கள், தனம், ஐசுவரியம் இவைகளுள்ளவராகவும், வித்வானாகவும், அதிகமான போகங்களும் சுகங்களுமுள்ளவராகவும், தனது மனைவியிடத்தில் மிகவும் பிரீதியுடையவராகவும், தைரியம் உள்ளவராகவும், மிகுந்த சுகியாகவும். நல்ல அதிருஷ்டமுள்ளவராகவும் இருப்பார்.

**புதன் சுக்கிரன் சனி**

இவர்கள் ஒன்று கூடி ஒரு இராசியில் இருந்தால் அதிகமாகப் பேசுகின்றவராயும், துர்க்குணமுள்ளவராயும், பொய் பேசுகின்றவராயும், பரஸ்திரீகளிடத்தில் பிரீதியுடையவராயும், கலா வித்தைகளில் நிபுணராயும், சொந்த தேசத்திலேயே வசிக்கின்றவராயும் இருப்பார்.

**குரு சுக்கிரன் சனி**

இவர்கள் ஒன்றுகூடி ஓரிடத்திலிருங்குங் காலத்தில் ஜனித்தோர், நீச குலத்தில் பிறந்தவராய் இருந்தாலும் எல்லாவிடங்களிலும் பரவியிருக்கின்ற கீர்த்தியோடு கூடின அரசராகவும், மிகவும் நல்ல சுபாவ குணமுள்ளவராகவும் இருப்பார்.

## நான்கு கோள்களின் சேர்க்கைப் பலன்கள்

**சூரியன் – சந்திரன் – செவ்வாய் – புதன்**

எழுத்தர், பிறர் பொருளை அபகரிப்பவர், தடையில்லாத பேச்சுடையவர். நோயுள்ளவர், மாயவித்தைகள் செய்பவர். (செப்படி, இந்திராஜாலம், மகேந்திர ஜாலம்) பிறரை ஏமாற்றி வஞ்சிப்பவர்.

**சூரியன் – சந்திரன் – செவ்வாய் – குரு**

செல்வந்த, பெண்களுக்கு விருப்பமில்லாதவர், அழகுள்ளவர், ஒழுக்கமுடையவர். (நீதியுடையவர்) துக்கிமில்லாதவர். தனித்திறமை பெற்றவர்.

**சூரியன் – சந்திரன் – செவ்வாய் – சுக்கிரன்**

பெரியோர்களுக்கு விருப்பமான வார்த்தைகளைப் பேசுபவர். சுகமுள்ளவர். திறமையானவர். செல்வம் சேர்ப்பதில் வேகமுடையவர். கைத்தொழில், ஆண் மக்கட்பேறு, நல்ல மனைவி இவையுடையவர்.

**சூரியன் – சந்திரன் – செவ்வாய் – சனி**

அழகில்லாத உடலையுடையவர், குற்றமானவர், செல்வமில்லாதவர், பிறரிடம் கேட்டு வாங்கி உண்பவர், கைத்தொழிலற்றவர்.

**சூரியன் – சந்திரன் – புதன் – குரு**

பொற்கொல்லர், அல்லது பொன் தொடர்புடைய அணிகளைச் செய்பவர், நீண்ட கண்களுடையவர். சிற்ப தொழில் செய்பவர். செல்வந்தர், வீரர், நோயற்ற உடலுடையவர்.

**சூரியன் – சந்திரன் – புதன் – சுக்கிரன்**

உடல் பகுதியில் (ஊனமுற்றவர்) குறைவுள்ளவர், சௌபாக்கியமுள்ளவர், பேச்சு திறமையுள்ளவர், உயரம் குறைந்தவர், அரசருக்கு விருப்பமானவர்.

**சூரியன் – சந்திரன் – புதன் – சனி**

பெற்றோரின் கருத்துகளுக்கு மாறுபட்டவர். செல்வம், சுகம் இல்லாதவர், எப்பொழுதும் அலைந்து கொண்டிருப்பர். பிறரிடம் கேட்டு வாங்கி (பிட்சை) உண்பவர். மெய்யற்ற வார்த்தைகளைப் பேசுபவர்.

**சூரியன் – சந்திரன் – புதன் – சுக்கிரன்**

வனங்கள், விலங்குகள் மற்றும் நீர்நிலைகளில் வாழக்கூடியவர். சிலர் அவற்றில் தலைவராகவும் இருப்பர். சுகமானவர். தனித்திறமை (நிபுணர்) யானவர். அரசர்களினால் மதிக்கப்படுபவர்.

**சூரியன் – சந்திரன் – குரு – சனி**

கண்களில் நோயுள்ளவர். கூர்மையான அறிவுடையவர், கூடுதலான மக்கட்பேறும், செல்வமும் உள்ளவர். பெண்களினால் இலாபமடைபவர். அனைத்து இன்பங்களையும் பெறுபவர்.

**சூரியன் – சந்திரன் – சுக்கிரன்– சனி**

பெண்களைப் போன்று பழக்க வழக்கங்கள் உள்ளவர். உடல் வலிமையற்றவர். எப்பொழுதும் ஐயத்துடன் இருப்பவர். (மனவல்மையற்றவர்).

**சூரியன் – செவ்வாய் – புதன் – குரு**

வீரர், சாத்திரங்களின் சூத்திரங்களை உருவாக்குபவர். செல்வமும், மனைவியும் இல்லாதவர், கூடுதலான துக்க முடையவர், பல ஊர்களுக்கு செல்பவர் (நிலையில்லாதவர்).

**சூரியன் – செவ்வாய் – புதன் – சுக்கிரன்**

பல பெண்களிடம் நாட்டமுடையவர். திருடர், உடல் உறுப்புகள் ஒழுங்கில்லாதவர். தீய எண்ணமுடையவர். வலிமை குறைந்தவர்.

**சூரியன் – செவ்வாய் – புதன் – சனி**

போர் புரிபவர் (போர் வீரர்) அறிவாளர், தீயவர், தீய நடவடிக்கையுள்ளவர், கவியரசர், அரசராகவோ, அல்லது அமைச்சராகவோ இருக்கத்தக்கவர்.

**சூரியன் – செவ்வாய் – குரு – சுக்கிரன்**

அனைத்து செல்வங்களும் நிறைந்தவர். உலக மக்களால் போற்றப்படுபவர், அரசருக்கு விருப்பமானவர், புகழபெற்றவர், நீதி சாத்திரங்கள், அறிவியல் படி நடப்பவர்.

**சூரியன் – செவ்வாய்–குரு – சனி**

வெறி பிடித்தவர், சிந்தனையில்லாதவர், தன் குழுக்களுக்கு தலைவர், பட்டிமன்றம் அல்லது வழக்காடு மன்றங்களில் பங்கேற்பவர். தனது விருப்பத்திற்கேற்றவாறு செயல்களைச் செய்பவர். தனது உறவினர் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்திருப்பவர். அரசருக்கு விருப்பமானவர்.

**சூரியன் – செவ்வாய் – சுக்கிரன்–சனி**

உடல் ஊனமுற்றவர் அல்லது உடலில் குறையுள்ளவர். தீய செயல்களைச் செய்பவர். கண்கள் இரண்டும் மாறுபாடுடைய தன்மையுடையவர்.

உறவினர்களால் பகையை அடைபவர் துவங்குகின்ற செயல்கள் அனைத்தும் தோல்வி அடையும்.

**சூரியன் – புதன் – குரு – சுக்கிரன்**

செல்வந்தர், பற்பலசுகங்களை அனுபவிப்பவர். செயல்களைச் செய்வதில் வல்லவர். உறவினர்கள் உள்ளவர்.

**சூரியன் – புதன் – குரு – சனி**

அலியின் தன்மையுள்ளவர். மதிக்கப்படுபவர். கலகம் செய்வதில் விருப்பமுள்ளவர். உடன்பிறப்புகள் உள்ளவர். சோம்பலுள்ளவர். (மிதமான செயலுடையவர்)

**சூரியன் – புதன் – சுக்கிரன்– சனி**

பெரும் பேச்சாளர், அனைத்து செல்வங்களும் பெற்றவர். அறிவுள்ளவர். சுகமானவர். எதிலும் வெற்றி பெறும் திறனும், தூய்மையும் உடையவர். உறவினர்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றவர்.

**சூரியன் – குரு –சுக்கிரன்–சனி**

பெருவிருப்பமுடையவர். (பேராசை) கவிஞர், முக்கியமானவர், தொழிலாளர் மற்றும் கீழ்நிலை மக்களின் தலைவராக இருப்பர். முதலாளிக்கு விருப்பமுடையவர்.

**சூரியன் – செவ்வாய் – புதன் – குரு**

அனைத்து சாத்திரங்களிலும் தனித்தன்மை பெற்றவர். மந்திரம் மற்றும் மாயவித்தைகளில் திறமையுடன் செயல்படுபவர். அறிவுக்கூர்மையும், சக்தியும் உள்ளவர்.

**சூரியன் – செவ்வாய் – புதன் – சுக்கிரன்**

கலகத்தில் விருப்பமுள்ளவர். எப்பொழுதும் உறங்கிக் கொண்டிருப்பவர். இழிவானவர் (நீசர்) விலைமாதரின் கணவர். துன்பம் உள்ளவர். உறவினர்களை வெறுப்பவர். சுகமற்றவர்.

**சந்திரன் – செவ்வாய் – புதன் – சனி**

வீரர், பெற்றோருக்கு தீங்கு செய்பவர். தீய வம்சத்தில் பிறந்தவர். மிகுதியான மக்கட் செல்வங்களும், மனைவிகளும் உறவினர்களும் உடையவர்.

**சந்திரன் –செவ்வாய் – குரு – சுக்கிரன்**

நற்குணமுள்ள மனைவியுடையவர். அனைத்து துன்பங்களையும் ஏற்றுக்கொள்பவர். அனுதாபப்படுபவர். பண்டிதர், மிகுதியான உறவினர்களும், சுகங்களும் உள்ளவர்.

**சந்திரன் – செவ்வாய் – குரு – சனி**

காது கேளாதவர், செல்வந்தர், வீரர், திமிர் உடையவர், வாக்குத்திறமையானவர், அறிவுடையவர், உதவும் மனப்பாங்குடையவர். நல்ல நிலையுடையவர்.

**சந்திரன் – செவ்வாய் – சுக்கிரன்–சனி**

கற்பிழந்த பெண்ணின் கணவர், நுண்ணிய பார்வை உள்ளவர். (பாம்பின் பார்வை). முகத்தெளிவுள்ளவர்.

**சந்திரன் – புதன் –குரு - சுக்கிரன்**

பண்டிதர், கற்றறிந்தவர், பெற்றோரில்லாதவர். நல்ல அழகுடையவர். அனைத்து செல்வங்களும் பெற்றவர். செல்வந்தர், பகைவரில்லாதவர்.

**சந்திரன் – புதன் – குரு – சனி**

தர்மங்களைச் செய்பவர், தலைவர் அழகுள்ளவர். உறவினர்களுக்கு விருப்பமானவர். அறிவுடையவர். அரசருக்கு நல்ல அமைச்சராகவும், கவிகள் எழுதுவதில் தலைசிறந்தவராகவும் இருப்பர்.

**சந்திரன் – புதன் – சுக்கிரன்–சனி**

பல பெண்களைக் கூடுபவர். தீய நடவடிக்கையுள்ள மனைவியுடையவர். உறவினர் இல்லாதவர். அறிவுள்ளவர். பொது மக்களால் வெறுக்கப்பட்டவர்.

**சந்திரன் – குரு – சுக்கிரன்–சனி**

பிறந்த சில நாட்களில் அன்னையை இழந்தவர். தோலில் நோயுள்ளவர் சொறி, சிரங்கு, பெருந்துன்பம், அலைச்சல், மிகுதியான பேச்சாளர், உண்மைக்கு மாறான செயல்கள் உடையவர்.

**செவ்வாய் – புதன் – குரு – சுக்கிரன்**

பெண்களுடன் கலகம் செய்பவர், செல்வந்தர், மக்களால் போற்றப்படுபவர், நற்குணமுடையவர், உடலில் நோயற்றவர்.

**செவ்வாய் – புதன் – குரு – சனி**

வீரர், கலைகளில் புலமையுள்ளவர், பேச்சுத்திறமையுள்ளவர். செல்மில்லாதவர், உண்மையும், தூய்மையுமானவர், நன்றாக பேசுபவர் இன்ப, துன்பங்களை ஏற்றுக்கொள்பவர், அறிவாளி.

**செவ்வாய் – புதன் – சுக்கிரன் – சனி**

மற்போர் வீரர், பெற்றோரை விடுத்து மற்றவர்களால் வளர்க்கப்பட்டவர். கட்டுடல் உடையவர். போரில் வல்லமையுடையவர், புகழ்பெற்றவர், நாய்களோடு (வேட்டையாடுபவர்) விளையாடுபவர்.

**செவ்வாய் – குரு – சுக்கிரன்–சனி**

புகழ்பெற்றவர், செல்வந்தர், பெண்களிடத்தில் ஆதிக்கம் செலுத்துபவர். அறியசெயல்களைச் செய்பவர், தடுமாற்ற எண்ணமுடையவர். தீய குணமுடையவர்.

**புதன் – குரு – சுக்கிரன்–சனி**

பெண்களிடத்தில் அன்புள்ளவர், கீழப்படிந்துள்ள பணியாட்களுடையவர், சிரார்த்தம் போன்ற கர்மச் செயல் நடைபெறும் இல்லத்தில் உணவருந்த விருப்பமுடையவர் அறிவுடையவர்.

## ஐந்து கோள்களின் சேர்க்கைப் பலன்கள்

**சூரியன் – சந்திரன் – செவ்வாய் – புதன் – குரு**

துக்கத்துடன் கூடியவர். கூடுதலாகப் பணிகள் செய்பவர். மனைவியை விட்டுப் பிரிந்திருப்பவர். அதனால் மேலும் துன்பம் அனுபவிப்பர்.

**சூரியன் – சந்திரன் – செவ்வாய் – புதன் – சுக்கிரன்**

மற்றவர்களுடைய வேலைகளைச் செய்வதில் விருப்பமுடையவர். உறவினர்கள் மற்றும் நண்பர்களால் வலுவிமிழந்தவர். அலிகளோடு நட்புறவு கொள்பவர்.

**சூரியன் – சந்திரன் –செவ்வாய் – புதன் – சனி**

குறைவான ஆயுள், சிறையில் இருத்தல், செல்வமில்லாதவர், மனைவி, மக்கட்பேறு ஆகிய சுகங்கள் இல்லாதவர், சுகங்களற்றவர்.

**சூரியன் – சந்திரன் –செவ்வாய் – குரு – சுக்கிரன்**

சிலர் பிறவியிலேயே பார்வை இழந்தவர். மிகுதியான துன்பமுடையவர். பெற்றோர்களால் பராமரிக்கப்படாதவர். இசையில் விருப்பமுள்ளவர்.

**சூரியன் – சந்திரன் –செவ்வாய் – குரு – சனி**

போர் நுணுக்கங்களை அறிந்தவர். அனைத்து செயல்களிலும் நிபுணராக இருப்பர். பிறர் பொருள்களை கவர்பவர் வெளியார்களை தொந்தரவிற்குள்ளாக்குபவர், சிலர் கருமியாகவும், தீயவராகவும் இருப்பர்.

**சூரியன் – சந்திரன் –செவ்வாய் – சுக்கிரன் – சனி**

வெட்கம், மானம், செல்வம் இல்லாதவர். குறையற்ற நடவடிக்கைகள் உள்ளவர். பல பெண்களைக் கூடுபவர்.

**சூரியன் – சந்திரன் –புதன் –குரு- சுக்கிரன்**

இயந்திரங்களை உருவாக்குபவர், பெருஞ்செல்வமுடையவர். அரசரிடத்தில், அமைச்சராவோ அல்லது படைத்தலைவராகவோ இருப்பர். புகழுடையவர். பெயர் பெற்றவர்.

**சூரியன் – சந்திரன் –புதன் –குரு – சனி**

ஐயமுடையவர், அன்பைப் பெற்றவர், வெறிக் குணமுடையவர், தீயவர், ஏமாற்றுவதில் வல்லவர். உணவிற்காக மற்றவர்களை சார்ந்திருப்பவர்.

**சூரியன் – சந்திரன் –புதன் – சுக்கிரன்–சனி**

உயரமானவர், உடலில் மயிர்கற்றை அதிகம் உள்ளவர். இறப்பில் விருப்பமுள்ளவர், சுகம், செல்வம், மக்கட்பேறுகள் இல்லாதவர்.

**சூரியன் – சந்திரன் –குரு – சுக்கிரன் – சனி**

திறமையான பேச்சாளர், மாயவித்தைகளில் வல்லவர், நிலையற்ற எண்ணமுடையவர், பெண்களிடத்தில் விருப்பமுள்ளவர், அறிவாளி, பகைவர்கள் உள்ளவர். ஐயமில்லாதவர்.

**சூரியன் – செவ்வாய் – புதன் – குரு– சுக்கிரன்**

சிற்றின்பத்தில் விருப்பமுடையவர், மிகுதியான குதிரைகளும், மனிதர்களுமுடையவர். படைத்தலைவர். துக்கமில்லாதவர், அரசர்க்கு விருப்பமானவர், நற்பேறுடையவர் அதிர்ஷ்டம் உள்ளவர்.

**சூரியன் – செவ்வாய் – புதன் – குரு – சனி**

எப்பொழுதும் துக்கத்துடன் இருப்பவர். நோயாளி, ஒவ்வொரு வீடாகச் சென்று பிச்சை எடுத்து வாழ்பவர். கிழிந்ததும், அழுக்கானதுமான ஆடைகளை உடுத்துபவர்.

**சூரியன் – செவ்வாய் – புதன் – சுக்கிரன் – சனி**

பல நோய்களில் பாதிக்கப்பட்டவர், பகைவர்கள் உள்ளவர், தனது குலமரியாதையையும், நாட்டிலிருந்தும், இல்லத்திலிருந்தும் விலகியவர். எப்பொழுதும் துன்பமுடையவர். நிலையற்ற மனதினால் சுற்றிக்கொண்டிருப்பவர்.

**சூரியன் – புதன் – குரு – சுக்கிரன் – சனி**

நிறைய சாத்திரங்களை கற்றுணர்ந்தவர். அவற்றில் அறிவு கூடியவர். உறவினர்களுக்கு விருப்பமானவர். குருவிற்கும், மக்களுக்கும் விருப்பமானவர், தர்மம் செய்பவர். தயாள குணமுள்ளவர்.

**சூரியன் – செவ்வாய் – குரு – சுக்கிரன் – சனி**

நீரினால் இயங்கப்படும் இயந்திரங்களைத் தயாரிப்பதில் வல்லவர். கணிமங்கள், பாதரசம் போன்ற வேதியியல் பொருட்களைத் தயாரிப்பவர். புதிய

மருந்துகளை கண்டுபிடிப்பவர். இவற்றை கண்டுபிடிப்பதில் மற்றவர்களின் விருப்பத்தையும் பெற்றவராவார்.

**சூரியன் – புதன் – குரு – சுக்கிரன் – சனி**

பல சாத்திரங்களை கற்றவர். பெரியோர்களிடத்தில் அன்புள்ளவர். இரக்கமுள்ளவர். செல்வம், உண்மையுள்ளவர். நண்பர்களுக்கு உதவுபவர்.

**சந்திரன் – செவ்வாய் – புதன் – குரு – சுக்கிரன்**

பணிவும், மரியாதையும் உடையவர். நோயற்ற உடலுடையவர். மகிழ்ச்சியும், உண்மையும், செல்வமும், அறிவும் உள்ளவர். உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் உதவுபவர்.

**சந்திரன் – செவ்வாய் – புதன் – குரு – சனி**

இரவில் பார்வையற்றவர். உணவிற்காக மற்றவர்களை சார்ந்திருப்பவர். உறவினர்களிடத்தில் மதிப்பில்லாதவர். செல்வமில்லாதவர்.

**சந்திரன் – செவ்வாய் – புதன் – சுக்கிரன் – சனி**

பகைவர்களை நிரம்பப் பெற்றவர். நண்பர்களுக்கு நல்லவர். மற்றவர்களுக்கு உதவுபவர். மானமுள்ளவர். குறும்புத் தனமானவர்.

**சந்திரன் – புதன் – குரு – சுக்கிரன் – சனி**

அரசருக்கு அமைச்சர் அல்லது அவருக்கு இணையானவர் (பிரதிநிதி) மக்கள் தலைவர் மக்களால் போற்றப்படுபவர்.

**செவ்வாய் – புதன் – குரு – சுக்கிரன் – சனி**

நல் இதயமுள்ளவர், அரசருக்கு விருப்பனானவர், பெரும் உறக்கமுடையவர், துன்பமில்லாதவர், ஏழ்மையுடையர், வெறிக்குணமுடையவர்.

## 6. பொதுவான பலன்கள்

கிரகங்களின் தன்மை, அவைகளின் பலம், இராசிகளின் தன்மை, அவற்றில் கிரகங்கள் சஞ்சரிக்கும் போது எப்படி பலன்கள் மாறி விடுகின்றன, அதன் காரணம் என்ன என்பதையெல்லாம் அறிய வேண்டும். அப்போது தான் ஜோதிட சாஸ்திரத்தின் நுணுக்கம் நன்கு புரியும். பலன் சொல்லுவதும் எளிது.

இந்த நிலைக்கு வரும் முன் சில முக்கிய விஷயங்களை பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அவற்றில் ஒன்று கிரக காரகத்துவம் என்றால் என்ன என்பதாகும். கிரகங்களின் காரகத்துவங்கள் பற்றி அறிய சற்று விரிவான விளக்கம் கொடுக்கப்படுகிறது.

ஜாதகம் என்பது கர்ம வினையை எடுத்துக் காட்டும் கிரகங்களின் படம் என்பதை ஏற்கனவே பார்த்தோம். கர்ம வினையினால் தான் ஜனனமும், சுகமும், துக்கமும் ஏற்படுகிறது. கர்ம வினை என்ற சொல் வரும் போது முற்பிறப்பும் கூடவே வந்துவிடுகிறது. அடுத்த பிறப்பிலும் இந்த ஜன்மத்தின் கர்ம வினை தொடரவே செய்யும். இதைப் பற்றி புரிந்து கொள்ள மனித வாழ்வில் இருக்கும் ஏற்றத் தாழ்வுகள், வியாதி, இல்வாழ்க்கை, குழந்தைகள் இப்படி பல விஷயங்களை நன்கு கவனித்தால் புரியும். இன்னும் எதிர்பாராத திடீர் நிகழ்ச்சிகளான விபத்து, மரணம், கொலை, வெற்றி, படுதோல்வி இவைகளைப் பார்த்தாலும் தெளிவாகும். கர்ம வினையையே விதி, தலையெழுத்து, அதிர்ஷ்டம், துரதிர்ஷ்டம் என்றொல்லாம் குறிப்பிடுகின்றனர். கர்ம வினையை கிரகங்கள் எடுத்துக்காட்டுகின்றன என்பதில் ஐயமில்லை.

உலகத்தில் ஜடப் பொருள்களும், உயிர்ப் பொருள்களும் விண்வெளியில் இயங்கும் கிரக நிலைகளுக்கேற்ப மாறுதல்கள் அடைகின்றன. அதிகம் வெயில் அடித்தால் குளம், குட்டை, ஏரிகள், வறண்டு

விடுகின்றன. மரம், செடிகள் காய்ந்துவிடுகின்றன. ஆடு, மாடுகள் தண்ணீருக்குத் தவிக்கின்றன. இந்த நிலைமை நீடித்தாலோ பஞ்சம், பசி, பட்டினி, அதிக மழை பெய்தாலோ, வெள்ளம், குளம், ஏரிகள் உடைப்பு, பசி, பட்டினி.

எல்லாம் நல்லபடியாக வாழ்வில் இயங்க பருவ மழையும் இதர பருவங்களும் உதவுகின்றன என்றால் மிகையாகாது. இதனால்தான் விண்வெளி அண்டத்தில் நடப்பவை நாம் வாழும் கண்டத்தையும் பாதிக்கின்றன. இதைத்தான் சுருக்கமாக, வேதாந்திகள் அண்டத்தில் உள்ளது எல்லாம் பிண்டத்தில் உண்டு என்று கூறினார்கள்.

அதிக வெயில் புற உலகில் காய்ந்து நம் உடலில் அதிகமாக வியர்வையைச் சுரக்கச் செய்கிறது. ஆதலால் தண்ணீர் தேவை அதிகமாகிறது. தாக உணர்ச்சி மனதில் ஏற்படுகிறது. வெயில் நம் உடலையும், உள்ளத்தையும் பாதிக்கிறது. இதனால் வெளி உலகு, உடல், உள்ளம் என்ற மூன்று நிலைகள் ஏற்படுகின்றன. இன்னொரு உதாரணம் கொண்டு விளக்குவோம். வஸந்த

காலத்தில் எல்லா தாவரங்களுமே பூத்துக் குலுங்குகின்றன, சில கனிகளும் தருகின்றன. பூக்கள் மணம் பரப்பி மனதில் மகிழ்ச்சியையும், உடலில் தெம்பையும் உண்டாக்குகின்றன. நாம் அல்லாமல் இருக்கும் வெளி உலகத்தில் ஏற்படும் மாறுதல்கள் நம் உடலையையும் உள்ளத்தையும் பாதிக்கவே செய்கின்றது. நம் விருப்பு வெறுப்புகளைக் கேட்டுக் கொண்டா இவையெல்லாம் நடக்கின்றன ? இல்லையே, புற உலகம், உடல், உள்ளம். இவையெல்லாம் கிரகங்களால் பாதிக்கப்படுகின்றன என்பது நன்கு புலனாகிறது அல்லவா! இவற்றிற்கு காரணமாக இருப்பவை வானவெளியில் இயங்கும் கிரகங்களே.

இந்த கிரக இயக்கங்களை இராசி மண்டலத்தில் உள்ள நட்சத்திரங்களோடு தொடர்புபடுத்தி நம் உள்ளமும், உடலும் எவ்வாறு இயங்குகின்றன, பாதிக்கப்படுகின்றன என்று கூறுவதே ஜோதிடம் ஆகும். நமது கர்மத்துக்கு காரணமாக உடலும், உள்ளும், கிரக மாறுதல்களால் இயங்குவதால் கிரகங்கள் நேரிடையாக கர்ம வினைக்குக் காரணமாகின்றன. எனவே மனிதனின் கர்ம வினையை எடுத்துக்காட்டக் கூடிய கிரகங்கள், எதை எதை பாதிக்கின்றன என்று வரும் போது வெளி உலகு, உடல், உள்ளம், ஆகியவற்றை பாதிக்கின்றன என அறியலாம்.

இதுவரை கிரகங்கள் புறநிலை, உடல், உள்ளம் இவற்றையெல்லாம் பாதிக்கின்றன என்றறிந்தோம். ஒவ்வொரு கிரகமும் சிலவற்றை வெகுவாய் அதிக அளவில் பாதிக்கிறது. அதாவது சில விஷயங்களுக்கு ஒரு கிரகம் பொறுப்பேற்கிறது. இந்த பொறுப்பு ஏற்கும் தன்மையை "காரகத்துவம்" என்று குறிப்பிடுகிறோம்.

ஜோதிட நூல்களில் இது பற்றிய நீண்ட விளக்கங்கள் உண்டு. பொதுவாக பிதுர் காரகன் (தந்தை) சூரியன், மாதுர் காரகன் (தாய்) சந்திரன், சகோதர காரகன் (உடன் பிறப்பு) செவ்வாய், தாய் வழி மாமன் (மாதுலன்) காரகன் புதன், புத்திர காரகன் குரு, களத்திர காரகன் (கணவன், மனைவி) சுக்கிரன், ஆயுள் காரகன் சனி, தகப்பன் வழி பாட்டன் காரகன் இராகு, தாய் வழி பாட்டன் காரகன் கேது என்ற கொள்கை உண்டு.

**சூரியன்**

நவநாயகர்களின் தலைவர் சூரியன் எதற்குக் காரணமாகி, எவற்றையெல்லாம் பாதிக்கிறார் என்றும் புறநிலையிலும், அக நிலையிலும் சூரியன் எவ்வாறு செயல்படுகின்றார் என்பதையும் காணலாம்.

சூரியன் ஒளிக்கு அதிபதி. ஒளி இல்லையேல் உலகம் இல்லை. சிருஷ்டி இல்லை, உயிர் இல்லை. ஒளி என்று வரும் போது உஷ்ணத்திற்கு அதிபதி என்றாகிவிடுகிறது. உஷ்ணம் இல்லையேல் உயிர் தத்துவமே இல்லை. சூரியன் பரமாத்மாவின் ஒரு அம்சம். சூரியன் பிராணனைக் கொடுக்கக்கூடியவர் இதனால் சூரியனை ஆத்மகாரகன் என்று கூறுகிறோம்.

**சந்திரன்**

சூரியனைச் சார்ந்து நிற்பவர் சந்திரன். அதாவது சூரியனுடைய கிரகணங்களை ஆகர்ஷித்து நிலாவாக அளிப்பவர். அதனால் சந்திரன் இரவுக்கு அதிபதியாகின்றார். பகலுக்கு அதிபதி சூரியன் என்றால் இரவுக்கு அதிபதி சந்திரன். பகல் இல்லையேல் இரவில்லை. குளிர்ச்சிக்கு அதிபதி சந்திரன்.

ஏற்கனவே உயிர்ச் சக்திக்கு அதிபதி சூரியன் என்று பார்த்தோம். உயிர்ச் சக்தி இயங்க உடல் அவசியம். இந்த உடலை அளிப்பவர் சந்திரன். உயிர்ச் சக்தி (உடலில்) பரிணமித்து வசிக்கத் தாய் அவசியம். தாய் இல்லாமல் எந்த சிருஷ்டியுமில்லை.

ஆத்ம காரகன் சூரியன் என்றால் மதி காரகன் சந்திரன். மதி மனிதனுக்கு மிக அவசியம் ஏனெனில் ஞானம் பெறவும் கூடத்தான். சாதாரண சிந்தனைகளிலிருந்து (சத்) சித்தானந்த நிலை பெறும் வரை எல்லாம் மதியால் தான்! இதனால் மதி காரகன் (மனத்திற்கு காரகன்) சந்திரன் ஆகிறார்.

மேலும் குட்சும சரீரத்திற்கு காரணமாகிறவரும் சந்திரனே, இறந்த பின் குட்சும சரீரம் பெற்று பிதுர்க்கள் சந்திரலோகத்தில் வசிப்பதாக ஐதீகம் அதனால்தான் சந்திரன் சூரியனோடு சம்பந்தப்படும் நாளான அமாவாசை அன்று பிதுர்க்களுக்கு தர்ப்பணம செய்யப்படுகிறது. சிலர் விரதமும் அனுஷ்டிக்கின்றனர்.

ஜோதிட சாஸ்திரத்திலும் சரி, பஞ்சாங்கத்திலும் சரி திதி மிக முக்கியமானது. வான வீதியில் சந்திரன் சூரியனை விட்டு விலகிப் போகும் தூரமே திதியாகும் அமாவாசைக்குப் பிறகு படிப்படியாக விருத்தியாகி வருவதை வளர்பிறை என்றும், பௌர்ணமிக்குப் பிறகு படிப்படியாக ஒளி குன்றி வருவதை தேய்பிறை என்றும் அழைக்கின்றோம்.

மேலும் சந்திரன் நிலையைக் கொண்டு பண்டிகைகள், அட்சய திரிதியை, நல்ல காரியங்கள், உற்சவங்கள், சிரார்த்த திதிகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. உதாரணமாக விநாயக சதுர்த்தி, ரிஷி பஞ்சமி, நாக பஞ்சமி, கந்த சஷ்டி, ரத சப்தமி, கோகுலாஷ்டமி, ராம நவமி, விஜய தசமி, வைகுண்ட ஏகாதசி, நாக சதுர்த்தசி, சித்திரா பௌர்ணமி போன்றவை திதியை அனுசரித்தே கொண்டாடப்படுகின்றன.

**செவ்வாய்**

செவ்வாய்க்கும் மனித வாழ்வுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரு சிலரைத் தவிர உலகில் மிருகக் தன்மையோ, அகங்காரமோ இல்லாத மனிதரே கிடையாது. கீழ் நிலையில் மிருகத் தன்மைக்கு அதிபதி செவ்வாய், உயிர் நிலையில் அகங்காரத்திற்கு அதிபதி செவ்வாய். மிருகத் தன்மை என்று வரும் போது உணர்ச்சிகளின் வேகம், சக்தி இவற்றால் உந்தப்பட்டு மனிதன் செயல்படுகிறான், அப்போது அறிவுக்கு அங்கே வேலையில்லை. மேல் நிலையில் அகங்காரம் மேலோங்கி செயல்படும்போது விவேகத்திற்கு இடமில்லை. அதன்

விளைவாக ஞானத்திற்கும் வழியில்லை. இந்த இரண்டு நிலைகளின் எல்லைக்குள் தான் மனித வாழ்வு நடைபெறுகிறது.

இரண்டுமே வாழ்வில் உள்ள பற்று சுயநலம் காரணமாக ஏற்படுகிறது. இரண்டுமே வாழ்விற்கு ஆதாரமானது. இந்த ஆதாரத்தில்தான் வாழ்வே ஓடுகிறது. அளவிற்கு மீறி இவை செயல்படும்போது வாழ்வில் அனர்த்தம் ஏற்படுகிறது. உணர்ச்சிகளின் வேகம் செயல்படும்போது, ஆசைகள் ஏற்படுகின்றன. அவை நிறைவேறாவிட்டால் கோபம், ஆசையை பூர்த்தி செய்து கொள்ளும் வெறி இவை எல்லாம் செவ்வாயால் ஏற்படுகின்றன.

**புதன்**

மனிதன் சிந்திக்கும் திறன் உடையவன் – அதனால் பகுத்தறிவும் தன்மையும் வந்து விடுகிறது. ஒரு மனிதனிடம் மிருகத் தன்மையும், மனிதத்தன்மையும், இவற்றிற்கு மேலாக விவேக தன்மையும் (சிந்தனையால் பகுத்தறியும் தன்மை) என்று கூறப்படும் மூன்றுமே உண்டு. இக் காரணத்தால் ஜீவராசிகளின் உலகில் மனிதன் விசேஷ நிலையும் தன்மையும் பெறுகிறான்.

மனிதனை இயக்கச் செய்வது எண்ணங்களே, எண்ணங்களே செயலாக உருவெடுக்கின்றன. மனிதனின் எண்ணங்களின் அடிப்படைக்கு மூளை காரணமாகும். மூளை எனும் போது சிந்தனை, பகுத்தறிவும் திறன் இவை மனதில் உருவாகின்றன. புத்தியும், விவேகமும் இவற்றோடு தொடர்பு கொண்டவையே, வேதாந்த நூல்கள், ஆகாசத்தில் மனது – எண்ணங்கள் செயல்படுகின்றன என்று கூறுகின்றன. தூய சித்தத்திற்கு அதிபதி புதன், தூய சித்தம் என்று வரும் போது பால் உணர்ச்சிக்கு அல்லது லிங்கபேதத்திற்கு இடமில்லை. எனவே புதன் நபும்சகன் என்றழைக்கப்படுகிறார், நடைமுறையிலும் தீவிர சிந்தனையாளர்கள் தன்மை மறந்து நடந்து கொள்வதும் இதன் அடிப்படையிலேயே.

எனவே மனித சமுதாயத்தை இயக்கும் எண்ணங்களுக்கு அடிப்படை புதனே என்றாகிறது. புதனைப் பொதுவாக புத்தி காரகன் என்றழைப்பார்கள். புத்தி என்று வரும் போது கல்வி, ஞானம், விவேகம், அனுபவம் எல்லாம் சேர்ந்ததேயாகும். புத்தியோடு தெடர்பு கொண்ட வித்தைக்கும் அதிபதி புதனே. மேலும் புத்தியின் அடிப்படையிலேயே ஒருவரின் வாசனையும் அமைகிறது. வாசனை என்றால் பார்வை, ருசி, வாசனை, சப்தம், ஸ்பரிசம் இவை எல்லாம் சேர்ந்த நிலையில் ஏற்பட்ட அனுபவச் சாயல் என்று கூறலாம்.

புதன் சதா சலனம் உடையவர். உள்ளத்தைத் பிரதிபலித்துக் காட்டும் தன்மையை உடையவர். இதர கிரகங்களோடு சேர்ந்து மாறும் தன்மை உடையவர்.

**குரு**

கஷ்டங்களைக் கொடுப்பவர் சனி, அதிர்ஷ்டத்தைக் கொடுப்பவர் குரு என்ற கொள்கை ஜோதிடத்தில் உண்டு. அதனால் தான் குரு பார்த்தால் கோடி தோஷம் விலகும் என்ற பழமொழியும் ஏற்பட்டது. சுபக் கிரகங்களின் வரிசையில்

குரு முதலிடம் பெறுகிறார். எனவே சௌபாக்கியத்திற்கு அதிபதி குரு, சௌபாக்கியம் என்பதே அதிர்ஷ்டம்தான்.

சிந்தனையின் அடிப்படையில் எண்ணமும் செயலும், அமைய புதன் காரணமாக இருப்பதைப் பார்த்தோம். ஆத்ம சக்தியின் அடிப்படையில், வாழ்வின் ஏற்றமும், வியாபகமும் அமையக் குரு காரணமாகிறார், ஏற்றம் என்பதனை வளர்ச்சி என்றும், வியாபகம் என்பதை விரிவாக்கம் என்றும் கூறலாம்.

ஸ்தூல ரீதியிலும் வளர்ச்சி, வியாபகம் இரண்டிற்கும் காரணம் குரு, நடைமுறை உதாரணமாக ஒரு பெண் கருவுற்றிருக்கிறாள் என்பதை 3 மாதங்களில்தான் நிச்சயமாகக் கூறமுடியும். மூன்றாம் மாதத்தில் கருவின் வளர்ச்சிக்கு கரு அதிபதி ஆகிறார். அந்த மாதத்திலிருந்துதான் தாயின் உடலில் கூட பலவித வெளிப்படையான மாறுதல்கள் ஏற்படுவதைப் பார்க்கலாம். கருவுற்று இருக்கிறாள் என்பதைக் கண்கூடாகப் பார்க்கமுடியும். மூன்றாம் மாதத்தில்தான் கருவிற்கு அங்குரம், கை, கால்கள் உண்டாவதாக ஜோதிட சாஸ்திரம் கருவின் வளர்ச்சி பற்றி கூறுகிறது.

உள்ளத்தைப் பொறுத்தவரையில் மனித உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் ஒழுங்குபடுத்தி, சீராக இயங்கச் செய்யும் திறன் குருவுக்கு உண்டு. உணர்ச்சிகளும் எண்ணங்களும் சீர்ப்பட்டால்தான் மெய்யுணர்வு ஏற்படும். அப்போது உணர்ச்சியோ எண்ணமோ தீவிரமாக இருக்காமல் ஒரு நிலை ஏற்படும் அப்போதுதான் எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் மனப்பக்குவம் ஏற்படும். இந்த நிலையில் நியாயம் ஏற்படுகிறது. எனவே நீதி ஸ்தலங்கள், சட்டம், ஒழுங்கு, நீதிபதிகள், வக்கீல்கள், சட்டக் கல்லூரிகள், மனித உணர்ச்சிகளை, எண்ணங்களைச் சீர்படுத்த உதவும் மதச் சடங்குகள், பூஜைகள், ஹோமங்கள், தியானம் ஆத்ம விசாரணைகள் இவற்றிற்கெல்லாம் அதிபதி குரு.

மேற்கண்டவைகளை நற்கருமங்கள் என்றும் கூறலாம். அவற்றை வளப்படுத்தும் கோவில்கள், மடாலயங்கள், ஆதினம், வேதபாடசாலைகள், ஆகமசாலைகள், அன்னதான சத்திரங்கள், இயற்கை வைத்திய சாலைகள் வைத்தியர்கள், ஆஸ்பத்திரிகள் இவையும், நற்கருமங்களை வளப்படுத்தும் கொடை வள்ளல், பஜனை மடம், புரோகிதர், ஆச்சாரியர், குரு, புராண வசனம் பேசுவோர், தர்ம ஸ்தாபனங்கள் இவையெல்லாம் குருவின் ஆதிக்கத்தில் செயல்படுபவை.

சுருங்கச் சொன்னால் தர்மத்திற்கு அதிபதி குரு, வாழ்வில் இல்லற தர்மம் மிக முக்கியமானது. அதில் பிரவேசிப்பதே திருமணம் என்றழைக்கப்படுகிறது. அதனால்தான் பெண்களுக்கு முக்கியமாக குரு பலன் அல்லது வியாழ நோக்கம் வந்துவிட்டதா என்று கேட்கின்றனர். கல்யாணம் பற்றி அறியும் போது, முதல் கேள்வியாக இல்லறத்தோடு தொடர்பு கொண்டது வம்ச விருத்தி அல்லது இன விருத்தி. எனவேதான் வம்ச விருத்திக்கு அதிபதியாக குருவை

அழைக்கின்றனர். ஆணும், பெண்ணும் உணர்ச்சி, எண்ணங்களை, ஒரு தர்மத்திற்குக் கட்டுப்பட்டு கூடி வாழ்ந்து, குலவிருத்தி செய்யவேண்டும் என்ற நியாயமான அடிப்படையே இதன் காரணம் எனவேதான் கல்யாணம் ஆகும் போது குரு பலன், அப்புறம் புத்ர பாக்கியம் என்று பார்க்கிறோம்.

**சுக்கிரன்**

சுக்கிரன் நளினமான உணர்ச்சிகளுக்கும், ரசனைக்கும் அதிபதி நளினமும் ரசனையும் வரும் போது அமைதியான சூழ்நிலை அங்கே உருவாகும். எந்த உணர்ச்சிகளாயினும் முதலில் சிந்தனையின் மூலம்தான் வெளிப்படும். பிறகு சொல், செயல், உடல் ஆகிய மூன்றில் எதன் மூலமும் வெளிப்படலாம்.

நம் முன்னோர்கள் சுக்கிரனை மிகப் பொருத்தமாக களத்திர காரகன் என்றழைக்கின்றனர். இவ்வுலகில் ஆணும் பெண்ணும் வாழ துணை அவசியம். இத்துணையினால் இருவரும் பயன் பெற்று இல்லற வாழ்வும் சுமுகமும் ஏற்படுகிறது. இல்லறம் இன்றி நல்லறம் இல்லை. இல்லறத்திற்கு அதிபதி சுக்கிரன்.

அழகு, காதல், காமம், திருமணம், சுகம், ஐஸ்வரியம், ஆபரணம், சங்கீதம், பண்பு, நட்பு, கலைகள், ஆர்வம், உபாசனை, இவற்றிற்கு அதிபதி சுக்கிரன். இவற்றிற்கும் பெண்மைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. எனவேதான் சுக்கிரனைப் பெண் கிரகமாகக் கொள்கிறோம்.

அசுர குரு என்று சுக்கிரன் அழைக்கப்படுகிறார். திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் வந்தபோது, அதைப் பரிமாற விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து அவர்களை மயக்கி, தேவர்களுக்கே வழங்கினாள். மோகினியின் அழகில் மயங்கிப்போய், அழகை ரசித்து, அமிர்தத்தைப் பற்றிக் கூட கவலைப்படாமல், அசுரர்கள் தங்களையே மறந்து விட்டனர். மோகம் அவர்களை ஆட்கொண்டு விட்டது. அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணந்தான் தலைதூக்கி நின்றது. அமரத்துவம் அளிக்கும் அமிர்தத்தைப் பற்றிய சிந்தனையே எழவில்லை. மெய்யுணர்வுக்கும், ஆத்ம சிந்தனைக்கும் அதிபதி குரு. மோகத்திற்கும், அனுபவிக்க வேண்டும் என்ற ஆவேசத்திற்கும் அதிபதி சுக்கிரன். முந்தியது பரலோக இச்சை அல்லது சுகம். பிந்தியது இகலோக இச்சை அல்லது சுகம். பரலோக சிந்தனைக்குப் பற்று அறுபட வேண்டும், பாசம் ஒழிய வேண்டும். இகலோக சிந்தனைக்கு, வாழ்விற்கு பற்று அவசியம். பற்றில் தான் வாழ்வு ஆரம்பமாகிறது. பாசத்தில் அமிழ வேண்டும்.

தேவ குரு ஆத்ம சிந்தனையைத் தூண்டினால் அசுர குரு பந்தத்தில் ஆழ்த்துகிறார். ஆத்மீக உணர்ச்சிக்கு நேர் எதிரிடையான பற்று, பாசம், மோகம், ஆவேசம், எல்லாமே அசுர சக்திகள் தான். அதற்கு அதிபதி சுக்கிரன், அசுர குரு என்றழைக்கப்படுகிறார்.

உணர்ச்சிகள் பூர்வமாக (மோகம், ஆவேசம்) உயிரை இயக்குபவர் சுக்கிரன். மேலும் பாசம், மோகம் என்று வரும் போது தியாகமும் சுலபமாக அங்கே இடம்பெறும். அந்த ரீதியில் பலிச் சக்கரவர்த்தி வாமனனுக்கு மூன்று அடி மண் அளந்து கொடுத்து தாரை வார்க்கும் போது, வாமனனின் சூதை உணர்ந்து சுக்கிரன் வண்டாக உருவெடுத்து கெண்டியின் துவாரத்தை அடைத்து நீர் வராமல் தடுக்க, வாமனன் தர்ப்பைப் புல்லால் குடைய, சுக்கிரனின் ஒரு கண் பழுது பட்டதாக புராணக் கதை உண்டு.

**சனி**

கிரகங்களிலேயே வலுவுள்ளவர் சனி. பூமியிலிருந்து வெகு தொலைவில் உள்ளவரும் சனி. ஒரு இராசியில் சுமார் இரண்டரை வருஷ காலம் சஞ்சாரம் செய்பவரும் அவரே. எனவே மிகவும் மந்தகதி உடையவர் என்பதால் மந்தன் என்ற காரணப் பெயரும் பெறுகிறார். மிகவும் மெதுவாக ஆனால் நிச்சயமான பலன்களைக் கொடுக்கக் கூடியவர்.

கிரகங்களிலே ஈஸ்வரன் என்ற பட்டப் பெயர் பெறுகிறவர் சனிதான். மிகக் கொடிய பலன்களைக் கொடுப்பவராகவும் கருதப் படுகிறார். அதனால் தான் வேறு எந்தக் கிரகங்களுக்கும் இல்லாத ஏழரை நாட்டுச் சனி, அஷ்டமத்துச் சனி, ஜன்மச் சனி, அர்த்தாஷ்டமச் சனி, கண்ட சனி என்ற பட்டப் பெயரும் பெறுகிறார்.

அளவில்லா கஷ்டத்தைக் கொடுத்தாலும் அதே சமயம் அளவற்ற நன்மை பலவற்றையும் செய்ய வல்லவர் ஆகிறார். புராணக் கதையின் பிரகாரம், எல்லா கிரகங்களும் ஈஸ்வரனிடத்து மனிதனுக்கு இன்பம், சுகம், யோகம், செல்வம், அறிவு, அதிகாரம், தைரியம் இவற்றை எல்லாம் கொடுக்கும்படி வேண்டி நிற்க, சனி மட்டும் மனிதனுக்கு கஷ்டங்களைக் கொடுத்து திணறச் செய்து ஈஸ்வரனான உன்னை நினைக்கச் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டாராம். அதனால் மகிழ்ந்து சனிக்கு ஈஸ்வரன் என்ற பட்டப் பெயரும், பொதுஜனங்கள் வழங்குவார்கள் என்று ஈஸ்வரனும் கொடுத்ததாகச் சொல்லுவார்கள். மனித வாழ்வுக்கு ஆதாரம் ஆயுசுதான். சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத முடியும். அது போல் ஆயுசு இல்லையெனில் எவ்விதப் பலனும் இல்லை. உலகத்தில் எல்லாருமே நீடித்துத்தான் வாழ விரும்புகின்றனர். அதற்கு ஆதாரமான ஆயுளைக் கொடுப்பவர் சனியே. அந்த வகையிலும் அவர் ஈஸ்வரனே.

கர்மத்தை அனுபவிக்கச் செய்பவர் சனியே. வினைக்கு ஏற்பதான் வாழ்வு அமைகிறது. வினையை எல்லோரும் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். நம் வினையாலேயே நம் வாழ்வில் நன்மையும், தீமையும் ஏற்படுகிறது.. யாரும் இதற்கு விதிவிலக்கல்ல. கடவுள் கூட இதற்கு விதிவிலக்கல்ல! இராமாவதாரத்தில் வாலியை மறைந்து கொன்ற காரணத்தினால் கிருஷ்ணாவதாரத்தில் ஒரு

வேடனால் அதே போல் மறைந்து பாதத்தில் அடிக்கப்பட்டு அவதார லீலையை கண்ணன் முடித்துக் கொள்கிறார்.

எண்ணம், சொல், செயல், சரீரம், புலன்கள் இவற்றினால் எவ்வளவோ பாவங்கள் செய்கிறோம். அதற்குரிய தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். துலா இராசி, தராசு வடிவம் கொண்டது. பாவ புண்ணியங்களை எடைபோட்டு அதற்குத் தக்கப்படி தண்டனை வழங்கப்படுவது துலா இராசியில்.

மேலும் இராசி மண்டலத்தில் ஏழாவது இராசி துலாம். ஜோதிடத்தில் ஏழாவது இராசி அஸ்தமன ஸ்தலம் எனப்படும். லக்னம் உதய ஸ்தானம். அதற்கு நேர் வீடு ஏழாவது வீடு ஆகும். இராசி மண்டலத்தில் நவக் கிரக அதிபதியான சூரியன் மேஷத்தில் உச்சம். சனீஸ்வரன் ஏழாவது வீடான துலாத்தில் உச்சம். சனியும் சூரியனும் பகைவர்கள். சூரியன் உயிரைக் கொடுக்கிறார். அதை நீடிக்கச் செய்வது சனியின் சூரியனும பகைவர்கள். சூரியன் உயிரைக் கொடுக்கிறார். அதை நீடிக்கச் செய்வது சனியின் வேலை. அதாவது ஆயுளை வளரச் செய்பவர்.

ஸ்தூல சரீரத்திற்கு அஸ்திவாரம் போன்றது எலும்பு. எனவே தான், உடலைப் பொறுத்த வரையில் எலும்பு, பற்கள், கணையம், இவற்றிற்கு சனி அதிபதி ஆகிறார். மேலும் ஒளி, உஷ்ணத்திற்கு அதிபதியான சூரியனின் பகைவர். ஆதலால் குளிரினால் ஏற்படும் வியாதிகளான சளி, ஜலதோஷம், ஜன்னி, வாதம், விழுதல், விபத்து, மயக்கம் இவற்றிற்கெல்லாம் சனி காரணமாகிறார்.

மனதைப் பொறுத்தவரையில் திட சித்தம், தனிமை, தன் உணர்வு (அகங்காரம் அல்ல), உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி புலனடக்கம், பொறுமை, தீவிர சிந்தனை, சீர்தூக்கிப் பார்த்தல், சிக்கனம், தூய்மை, சத்தியம், எச்சரிக்கையாய் இருத்தல், எளிமையான சுபாவம். நடைமுறையில் நல்ல அனுபவ தேர்ச்சி இவற்றையெல்லாம் சனி கொடுக்கிறார். இதுவும் காரணமாகத்தான், கஷ்டப்படும் போது இவை துணைபுரிகின்றன. இவற்றையெல்லாம் கொடுத்துவிட்டுத்தான் சனி சோதனை செய்கிறார். திட சித்தம் வந்துவிட்டால் எப்பேர்ப்பட்ட கஷ்டங்களையும் தாங்கிக் கொள்ளலாம்.

மேலும், அனுபவ ரீதியாகப் பார்க்குமிடத்து மனிதனின் சிறுமையை உணர்த்தி தனக்கு மீறிய சக்தி உண்டு என்று உணர்த்துபவர் சனியே. அதை உணர்த்த மனிதனுக்கு முதலில் ஏமாற்றத்தைக் கொடுக்கிறார். ஏமாற்றத்தால் பல கஷ்டங்கள் வருகின்றன. அப்போது விதியை உணர்கிறான். ''ஆண்டவா நல்ல வழியை விடப்பா'' என்று மனம் கசிந்து பிரார்த்தனை செய்கிறான். அந்த நிலையில் ஒரு படி உயர்ந்தவன் ஆகி விடுகிறான் மனிதன், அதாவது (கஷ்டங்களினால் சலித்துபோய்) சரணாகதி நிலைக்கு வந்துவிடுகிறான். அதிலிருந்து நல்லகாலம் ஆரம்பமாகிறது. அந்தத் திருப்பம் வரும் வரை சனி

விடமாட்டார். பிறகு ஈஸ்வரன் போல் வரம் அளித்துக் காப்பாற்றுவார். ஆத்ம வைத்தியம் செய்பவர் சனி.

**ராகு – கேது**

இதுவரை சூரியன் முதல் சனி வரை ஏழு கிரகங்களின் காரகத்துவத்தைப் பற்றி விளக்கமாகப் பார்த்தோம். இனி இராகு, கேது என்றழைக்கப்படும் சாயா (நிழல்) கிரகங்கள் பற்றியும் அறிய வேண்டியது அவசியமாகும்.

சந்திரன் பூமிக்கு வெகு அருகாமையில்ர உள்ள கிரகமாகும். இதனால் மற்ற எல்லா கிரகங்களின் கிரணங்களைத் தாங்கி பூமியில் ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கு காரணமாகிறது. எனவே ஜோதிட சாஸ்திரத்தில் சந்திரா லக்னத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பூமி சூரியனைச் சுற்றி வருகிறது. சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறது. சந்திரன், பூமி இரண்டும் சேர்ந்து சூரியனை சுற்றி வருகின்றன. சந்திரன் பூமியைச் சுற்றி வர ஒரு மாதம் ஆகிறது. அதனால் தான் தேய் பிறையும், வளர்பிறையும் சந்திரனுக்கு ஏற்படுகிறது. சூரியனுக்கும், பூமிக்கும் இடையில் சந்திரன் வருவதே அமாவாசையாகும்.

பூமி சூரியனைச் சுற்றி வரும் பாதையும் (சூரியன் வீதி) சந்திரன் பூமியைச் சுற்றி வரும் பாதையும் (சந்திரன் வீதி) ஆகாயத்தில் ஒரே மார்க்கமாக இருக்கின்றன. ஆயினும் அவை ஐந்து டிகிரி அல்லது ஐந்து பாகை தூரம் விலகியிருக்கின்றன இதனால்தான் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று சந்திர கிரகணம் உண்டாவதில்லை. மேற்கண்ட சூரிய வீதியும் சந்திர வீதியும் ஆகாயத்தில் சந்திக்கும் நிலைகள் இரண்டு. வடக்கு சந்திப்பு ஒன்று, தெற்கு சந்திப்பு ஒன்று. வடக்கு சந்திப்பு (நிலை) க்கு இராகு என்றும், தெற்கு சந்திப்பு (நிலை) க்கு கேது என்றும் பெயர்.

இந்த சந்திப்பு நிலைகள் மிக வலுவுள்ளவை. எனவே அவற்றை முறையே இராகு, கேது என்ற கிரகங்களாகப் பாவித்து நம் முன்னோர்கள் நவக்கிரகங்கள் ஒன்பது என்று கணக்கிட்டனர். விம்சோத்தரி தசையில் இராகுவிற்கு பதினெட்டு வருஷங்களும் கேதுவிற்கு ஏழு வருஷங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே ஜோதிட சாஸ்திரத்தில் அவை கிரகங்களே. இதன் காரணமாக, இந்த கிரகங்களுக்கு சாயா கிரகங்கள் என்ற பெயர் உண்டு.

பூமியானது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சுற்றி வருவதினாலும், சூரியனைச் சுற்றி வருவதினாலும் மேற்கண்ட இரு சந்திப்புக்களின் இடம் இராசிக்கு இராசி மாறிக்கொண்டே வருகிறது. இப்படி மாறுவதினால் ஒரு குறிப்பிட்ட இராசியிலிருந்து மறுபடியும் அந்த இராசிக்கு இராகு வருவதற்கு சுமார் 18 வருடம் ஆகிறது.

இராகு, கேது என்ற சாயாக் கிரகங்களின் கதியில் (போக்கில்) விசேஷம் உண்டு. அதாவது அவை இராசி மண்டலத்தை அப்பிரதட்சிணமாகச் சுற்றி வருகின்றன. மற்றவை எல்லாம் பிரதட்சிணமாகச் சுற்றி வருகின்றன. மேஷத்தில்

இராகு என்றால், அது பெயரும் அடுத்த இராசி மீனம். பிறகு கும்பம், மகரம் என்று பெயர்ந்து கொண்டே போகும். இராகு நின்ற இராசிக்கு நேர் ஏழாவது இராசியில் எப்போதும் கேது நிற்கும். அதாவது 180 டிகிரி தள்ளி நிற்கும். மேஷத்தில் இராகு இருக்கும் போது துலாத்தில் கேது இருக்கும். மீனத்திற்கு இராகு பெயரும் போது, கன்னிக்கு கேது பெயருவார். பிறகு சிம்மம், கடகம் என்று பெயர்ந்து செல்வார். இவை சாயா கிரகங்கள் ஆதலால் இவைகளுக்கு வக்ர கதி கிடையாது.

மேஷம், ரிஷபம், கடகம், மகரம் இந்த இராசிகளில் இராகு இருக்கும் போதும், அதன் தசை நடக்கும் போதும் விசேஷ பலன் ஏற்படும் என்ற பொது விதி உண்டு. இதே போல கேதுவிற்கும் வலிவு கொடுக்கும் இராசிகள், கன்னி, துலாம், விருச்சிகம், தனது ஆகும் – சிலர் மகரத்தையும் சேர்த்துக் கொள்வதுண்டு.

எந்த கிரகங்களுடன் சேர்ந்து இருக்கின்றனவோ அவற்றின் பலனையே கொடுப்பவர்கள். இராகு கேதுகள் விருச்சிகத்தில் உச்சமும் ரிஷபத்தில் நீசமும் அடைகின்றன என்பது பெரும்பாலோர் கருத்தாகும். எந்த கிரகங்களின் சேர்க்கையோ, பார்வையோ இல்லாவிடின் தான் இருக்கும் வீட்டின் பலனையே கொடுப்பார்கள்.

இராகுவை பெண் என்றும், கேதுவை அலி என்றும் கூறப்படுகிறது.

## ஜாதகத்தை ஆராயும் முறை

**பலன் கூறும் கலை**

ஜாதகத்தில் உள்ள விஷயங்களில் முக்கியமானவை மூன்று. அவை 1. கிரகங்கள், 2. இராசிகள். 3. 12 பாவகங்கள். 12 இராசிகளில் அமைந்துள்ளன. இராசி என்பது சரியாக 30 பாகை ஆகும். பாவகம் என்பது ஒரு இராசியில் ஒரு குறிப்பிட்ட பாகையில் தொடங்கி 30 பாகைக்கு அதிகமாகவும் அல்லது குறைவாகவும் இருக்கலாம். ஒரு ஜாதகத்தில் முதலில் நாம் நிர்ணயம் செய்வது இலக்கினத்தை. இலக்கினம் மற்றும் பாவகங்களை முடிவு செய்தபின் நவ கிரகங்களையும் பாவகங்களில் அமைக்கிறோம். ஒரு வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட கோள்கள் இருக்கலாம். ஒரு வீட்டில் ஒரு கோள் மட்டும் இருக்கலாம். ஒரு வீட்டில் கோள் இல்லாமலும் இருக்கலாம். கோள்களுக்கு தனித்தன்மை உண்டு. அவை அமர்ந்த வீட்டின் தன்மையும் சேர்த்து இலக்கினத்திற்கு ஏற்ப, வேறு பல குணங்களைக் காட்டுகின்றன.

**கோள்களின் குணத்தைக் கீழ் கண்ட விஷயங்கள் நிர்ணயிக்கின்றன.**

1. கோள் அமர்ந்த பாவகம்
2. கோள் அமர்ந்த இராசி
3. உடன் இருக்கும் கோள்கள்
4. பார்க்கும் கோள்கள்

கிரகங்களின் தன்மைகளை அவை அமர்ந்த வீடுகளைப் பொறுத்து அறியலாம். என்ன திசை நடக்கிறதோ அதைப் பொறுத்தும் பலன்களில் மாற்றம் இருக்கும். எந்த கிரகம எப்படி பலன் தரும் என்பது திசை குறிப்பிடும்.

கிரகங்களின் அடிப்படைத் தன்மைகளைத் நன்கு தெரிந்து கொண்டால் ஜாதகரின் வாழ்வில் நடக்க இருக்கும் முக்கிய சம்பவங்களைத் தெளிவாக தெரிந்து கொள்ளலாம்.

**கோள்களின் பலம்**

ஒவ்வொரு கோளும் இராசிகளில் இருக்கும் பொழுது உச்சம், மூலத்திரிகோணம், ஆட்சி, நட்பு, பகை, நீசம், என வெவ்வேறு மாதிரியான பலன் தருகின்றன. இதுவே கோள்களின் பலம் எனப்படும்.

சூரியனும் சந்திரனும் ஒரு இராசிக்கு மட்டும் அதிபதியாகின்றன. செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்கள், இரு ராசிக்கு அதிபதிகள் ஆகின்றன. இராகு, கேது என்ற நிழல் கிரகங்களுக்கும் யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ ஆகியவைகளுக்கும் சொந்த வீடு இல்லை.

| கிரகம் | ஆட்சி | உச்சம் | நீசம் | பார்வை | தன்மை |
|---|---|---|---|---|---|
| சூரியன் | சிம்மம் | மேஷம் | துலாம் | 7 | அசுபர் |
| சந்திரன் | கடகம் | ரிஷபம் | விருச்சிகம் | 7 | சுபர் |
| செவ்வாய் | மேஷம், விருச்சி | மகரம் | கடகம் | 4,7,8 | அசுபர் |
| புதன் | மிதுனம், கன்னி | கன்னி | மீனம் | 7 | சுபர் |
| குரு | தனுசு, மீனம் | கடகம் | மகரம் | 5,7,9 | சுபர் |
| சுக்கிரன் | ரிஷபம், துலாம் | மீனம் | கன்னி | 7 | சுபர் |
| சனி | மகரம், கும்பம் | துலாம் | மேஷம் | 3,7,10 | அசுபர் |
| இராகு | – | விருச்சிகம் | ரிஷபம் | 3,7,11 | அசுபர் |
| கேது | – | விருச்சிகம் | ரிஷபம் | 3,7,11 | அசுபர் |
| யுரேனஸ் | – | – | – | 7,11 | அசுபர் |
| நெப்டியூன் | – | – | – | 7,8,12 | சுபர் |
| புளுட்டோ | – | – | – | 7,9 | அசுபர் |

**கோள்களின் சம்பந்தம்**

**1.**இரு கிரகங்கள் சேர்ந்திருப்பது, **2.**பரிவர்த்தனை பெறுவது, **3.**ஒன்றையொன்று பார்ப்பது, **4.** ஒரு கிரகம் மற்றொரு கிரகத்தின் வீட்டில் நிற்பது. **5.** ஒரு கிரகம் மற்றொரு கிரகத்தின் சாரத்தில் நிற்பது.

**கோள்கள் பலன் அளிக்கும் தன்மை:**

1. ஒரு கோள் அமர்ந்துள்ள ஸ்தானம், பிற கோள்களின் சேர்க்கை பிற கோள்களிடமிருந்து பெறும் பார்வை ஆகியவற்றிற்கு தக்கவாறு பலன் அளிக்கும்.
2. ஒரு கோள் இரண்டு ஆதிபத்தியம் பெற்றிருந்து, அதில் ஒன்று சுப ஆதிபத்தியமாகவும், மற்றொன்று அசுப ஆதிபத்தியமாகவும் அமைந்தால், அந்த கோள் தன் மூலதிரிகோண வீட்டின் பலனையே முதன்மையாக அளிக்கும்.
3. ஒரு கோள் ஆட்சி பெற்றிருந்தால், அது மூலதிரிகோண வீடாக இல்லாவிட்டால் ஆட்சி வீட்டின் பலனையே முதன்மையாக அளிக்கும்.
4. இயற்கை சுப கிரகம், பாவக பலனை விருத்தி செய்யும், இயற்கை அசுப கிரகம், பாவக பலனை கெடுத்துவிடும்.
5. ஒரு கிரகம், வர்க்க பலம், ஷட்பலம் பெற்றிருந்தாலும், சுப ஸ்தானங்களில் நின்றிருந்தாலும் சிறப்பான பலன் அளிக்கம்.
6. இராசியின் தன்மைக்கு தக்கவாறு, ஒரு கிரகம் கொடுக்கும் பலன் மாறும். (ஆண் இராசி, பெண் இராசி, சரம், ஸ்திரம், உபயம், நெருப்பு, நிலம், காற்று, நீர்)

**கோள்களின் ஆதிபத்தியம்**

1. 1,5,9 அதிபதிகள் (திரிகோணம்) ஆதிபத்திய சுபர்கள் ஆவார்கள். எப்போதும் சுப பலன்களை அளிப்பார்கள்.
2. 1,4,7,10 அதிபதிகள், (கேந்திரம்) இயற்கை அசுபரானால் சுப பலன்களை அளிப்பார்கள்.
3. 1,4,7,10 அதிபதிகள், (கேந்திரம்) இயற்கை சுபரானால் சுப பலன்களையும் அளிப்பதில்லை. அசுப பலன்களையும் அளிப்பதில்லை.
4. 3, 6, 11 அதிபதிகள் அசுப பலன்களை அளிப்பார்கள். 3ம் அதிபதியை விட 6ம் அதிபதியும், 6ம் அதிபதியை விட 11ம் அதிபதியும் அதிக அசுப பலன்களை அளிப்பார்கள்.
5. 8ம் அதிபதி, 3, 7, 11 ஆதிபத்தியங்களில் ஒன்றை இன்னொரு ஆதிபத்தியமாக பெற்றால், மிகவும் தீய பலன்களை அளிப்பார். ஆனால் இன்னொரு ஆதிபத்தியமாக திரிகோண, கேந்திர ஆதிபத்தியம் பெற்றால் சுப பலன்களை அளிப்பார்கள்.
6. திரிகோணாதிபதிகள் கேந்திரத்தில் நின்றாலும், கேந்திராதிபதிகள் திரிகோணத்தில் நின்றாலும் அதிகமான சுப பலன்களை அளிப்பார்கள்.
7. நீசம் பெற்ற கிரகம், உச்சம் பெற்ற கிரகத்துடன் சேர்க்கைப் பெற்றிருந்தால், நீச குணம் குறையும்.

8. இலக்கினாதிபதி நிற்கும் பாவகமும், பார்க்கும் பாவகமும் பலம் பெறும். அசுப ஸ்தானங்களில் நின்றால், அசுபத் தன்மையை நீக்கும், ஆனால் இலக்கினாதிபதி பலம் இழப்பார்.

**ஸ்தான பலம் மற்றும் பார்வை பலம்**

1. ஒரு கிரகம் அல்லது பாவகம் சுபர்களால் பார்க்கப்பட்டால் அதன் பலம் கூடும், அசுபர்களால் பார்க்கப்பட்டால் பலவீனமாகும்.
2. ஒரு பாவகத்தில் அதன் அதிபதி ஆட்சி பெற்று அமர்ந்திருந்தாலோ அல்லது பாவகத்தை பார்த்தாலோ, அந்த பாவகத்தின் சுப பலன்கள் சிறப்பாக செயல்படும்.
3. ஒரு பாவகத்தில் ஒரு அசுப கிரகம் அமர்ந்திருந்து, இன்னொரு அசுபரால் பார்க்கப்பட்டால், அந்த பாவகம் மிகவும் பலவீனமாகிவிடும்.
4. ஒரு பாவகத்தில் ஒரு அசுப கிரகம் அமர்ந்திருந்து, ஒரு சுப கிரகத்தால் பார்க்கப்பட்டால், அசுபத் தன்மை குறையும்.
5. ஒரு பாவகத்தில் ஒரு சுப கிரகம் அமர்ந்திருந்து, ஒரு அசுப கிரகத்தால் பார்க்கப்பட்டால், சுபத் தன்மை குறையும்.
6. ஒரு கிரகம் கேந்திரம், திரிகோணம், ஆட்சி, உச்சம், நட்பு ஆகிய ஸ்தானங்களில் அமர்ந்திருப்பது சிறப்பு.
7. ஒரு பாவகம் 6, 8, 12ம் அதிபதிகளால் பார்க்கப்பட்டால், அந்த பாவம் பலவீனமாகிவிடும்.
8. எல்லா கிரகங்களும் 6, 8, 12 ல் அமர்ந்திருப்பது மிகவும் சிறப்பில்லை.
9. 3, 6, 11 அதிபதிகள் அசுப பலன் கொடுப்பவை என்றாலும், அவை திரிகோணத்தில் நின்றாலும், திரிகோண அதிபதிகளுடன் சம்பந்தப்பட்டாலும் அதன் அசுப பலன் குறையும்.
10. 3, 6, 8, 12 அதிபதிகள் 3, 6, 8, 12 ல் மறைந்தால் தீய பலன் தருவதில்லை.
11. ஆறாம்பாவம் அசுப ஸ்தானம் என்றும், உபஜெய ஸ்தானம் என்றும் இரண்டு விதமாக கூறப்படுகிறது. ஆறாம் பாவத்தை சுப கிரகம் பார்த்தால் உபஜெய ஸ்தானமாகவும், அசுப கிரகம் பார்த்தால் அசுப ஸ்தானமாகவும் கொள்ள வேண்டும்.
12. ஒரு கிரகம் 6,8,12 ல் மறைந்தாலும், அது ஆட்சி, உச்சம் பெற்றிருந்து, ஒரு சுப கிரகத்தால் பார்க்கப்பட்டால், அது சுப பலன்களை கொடுக்கும்.
13. ஒரு கிரகம் நீசம் பெற்றிருப்பது அஸ்தமனம் அடைந்திருப்பது, கிரக யுத்தத்தில் தோற்றிருப்பது ஆகிய நிலைகள் சிறப்பில்லை.

மாரகர் என்ற வகையில். 7 ஆம் ஆதிபத்தியம் பெற்ற சுபக்கோள் வலியவராவார். இந்த வகையில் சந்திரனைவிட சுக்கிரனும், அடுத்து புதன், குரு, இவர்களும் வலுவானவர்கள்.

சுபர் திரிகோணாதிபத்யம் பெற்றும் பாபரான கேந்திராதிபதியுடன் சேர, வலுத்த ராஜயோக முண்டு. ஆனால், சப்தமாதிபதி புத்தி அந்தரங்களில் ஆரம்பத்தில் ராஜயோகமும் பின்னால் அசுபமும் (மாரகமும்) ஏற்படும்.

கன்னி மிதுனத்துக்குப் புதனும், தனுசு மீனத்துக்கு குருவும் சுபர், முன்னதுக்குக் குருவும், பின்னதிற்கு புதனும் 7 ஆம் அதிபதி என்ற வகையில் பாபர், மாரகர்.

சூரிய சந்திரர்களுக்கு 8 ஆம் ஆதிபத்ய தோஷம் கிடையாது.

2, 7க்கு உடையவர்களாக குரு, சுக்ரன், புதன், சந்திரன், வந்தால் இவர்கள் மாரகர்களே. இவர்களுடய தசா புத்தி அந்தரங்களில் முதலில் யோககாரக பலனும், பின்னால் மாரக பலனும் தருவர். குருவைவிட சுக்கிரனுக்கு மாரகத்துவக் கெடுதி குறைவு.

2, 7 ஆம் இடங்கள் மாரக ஸ்தானங்கள். இதில் 2 ஆம் இடம் வலு உள்ளது. ஆனால் வெறும் மாரகர் தனித்திருந்தால், மாரக பலன் தரமாட்டார். வேறு ஒரு பாவியுடன் சேர்ந்தால் தான் மாரகம் செய்யத் தகுதி உடையவர் ஆகிறார்.

குரு முதலான சுபர்கள் 2, 7 ஆம் ஆதிபத்தியம் பெற்று பரிவர்த்தனமும் பெற்றால் நிச்சயம் மாரகர் ஆவர்.

சனி மாரகர்களுடன் சேர்ந்தால் மாரகர் வலுவைப் பெற்றுத் தானே மாரகத்தைச் செய்கிறார்.

மாரகர் கேந்திராதிபதியானால் நிச்சயம் கெட்ட பலனே கிட்டும்.

## தேர்வில் வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள ஜாதகங்களுக்கு பலன் எழுதும் முறை

ஒரு ஜாதகத்திற்கு பலன் அறியும் விதத்தை படிப்படியாக கற்று தேர்ந்துள்ளீர்கள். ஜோதிடம் என்பது படிப்பது மட்டும் அல்ல, செயல் முறையும் உள்ளடக்கியது. எனவே பல்வேறு ஜாதகங்களை ஆராய்ந்தால் பலன் உரைப்பது எளிதாகிவிடும்.

ஜோதிடவியல் பட்டயப்படிப்பு தேர்வில் வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள ஜாதகங்களுக்கு கீழ்கண்ட சில வழிமுறைகளை கடைப்பிடித்து பலன் எழுதப்பட வேண்டும்.

1. வினாத்தாளில் கொடுக்கப்பட்டு உள்ள ஜாதகத்தில் உள்ளபடி, ஜாதகரின் பெயர், பிறந்த தேதி, நட்சத்திரம், தசா இருப்பு, இராசி, நவாம்சம் ஆகியவற்றை அப்படியே எடுத்து எழுத வேண்டும்.
2. ஜாதகரின் தற்கால வயது கணக்கிட வேண்டும்.
3. ஜனன கால தசை முதல் தற்பொழுது நடைபெறும் தசை, புத்தி வரை தசைகளை பட்டியலிட வேண்டும்.
4. நவகிரக பாதசார அட்டவணை அமைக்க வேண்டும்.
5. ஜாதகரின் ஜென்ம லக்னம், இராசி, நட்சத்திரம் பற்றி சிறு குறிப்பு எழுத வேண்டும்.

கேள்வி தாளில் கேட்கப்பட்ட தலைப்புக்கு தகுந்தவாறு

ஜாதக யோகங்கள், அவயோகங்கள், பொது பலன்கள், கல்வி, ஜீவனம், களத்திரம், புத்திரம், ஆரோக்கியம், ஆயுள் ஆகிய பாவக பலன்களை விரிவாக ஆராய்ந்து எழுத வேண்டும்.

தசா – புத்தி – கோச்சார பலன்களை எழுத வேண்டும்.

இறுதியாக ஜாதகருக்கு உங்கள் ஆலோசனை வழங்க வேண்டும்.

## குறிப்பு

## குறிப்பு